வரு.74 இல. 27 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
24 பக்கங்கள் 80/-
2022 ஜுலை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
July 03 Sunday, 2022













பொதுநலவாய விளையாட்டு போட்டி; 24
114 இலங்கை வீரர்கள் பங்கேற்பு

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ரூ.10,000

## 200 பில்.ரூபாவை ஒதுக்கியது அரசாங்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 32 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் அதற்கான செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் ஒரு குடும்பத்திற்கு 7,500 - 10,000 ரூபா வீதம் நிதி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் உதவிகளை பயன்படுத்தி மேற்படி 32 இலட்சம் குடும்பங்களுக்கும்

04

# வேலை நிறுத்தத்தில் ஈடுபடின் பணியிலிருந்து நீக்கப்படுவர்

## தபால் திணைக்களம் அதிரடி நடவடிக்கையில்

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடும் தபால் ஊழியர்களுக்கு எதிராக பணியிலிருந்து விலகியதன் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தொழிற் சங்கங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக தபால் மாஅதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் மாத்திரமே திறக்கப்படும் என தபால் மாஅதிபர்

04

## எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வுகாண

# கனிய எண்ணெய் விநியோகஸ்தர் சங்கத்துடன் பிரதமர் ஆராய்வு



எரிபொருள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தினருக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்குமிடையே நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. எரிபொருள் கிடைக்காமையால் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில், இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்களினால், இதன்போது பிரதமருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன நிரப்பு நிலையங்களில், 90 சதவீதமானவை தற்போது மூடப்பட்டுள்ளன.

கையிருப்பில் உள்ள

04

## ஜுலை 13-14 ஜுலை 28-31 ஆகஸ்ட் 10-15 ஆம் திகதிகளுக்கிடையில்

# எரிபொருட்களுடன் 03 கப்பல்கள் வருகின்றன

## லங்கா IOC நிறுவனம் நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

**ஒவ்வொரு கப்பலும் தலா 30,000 மெ.தொன் பெற்றோல் மற்றும் டீசலை தாங்கியவாறு மொத்தம் 90,000 மெ.தொன் எரிபொருளுடன் வந்தடைய உள்ளதாக அறிவிப்பு**



பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றிக் கொண்டு 3 கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக லங்கா IOC நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜூலை 13 மற்றும் 14 க்கிடையில் ஒரு கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது எரிபொருள் கப்பல் ஜூலை 28 அல்லது 31 ஆம் திகதியும் மூன்றாவது எரிபொருள் கப்பல் ஆகஸ்ட் 10 அல்லது 15 ஆம் திகதியும் இலங்கை வரும் எனவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

மொத்தம் 90,000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் பெற்றோல் தாங்கிய மூன்று கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளன. ஒவ்வொன்றும் தலா 30,000 மெட்ரிக் டன் எரிபொருளை தாங்கி வரவுள்ளதாக

04



இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் கைத்தொழில் அமைச்சர் ஸ்ரீ பசுபதி குமார் பராஸை, இலங்கைக்கான இந்திய தூதுவர் Milinda Moragoda நேற்று முன்தினம் (01) புதுடில்லியில் சந்தித்தபோது, உணவு பதப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தித் துறைகளில் அதிக ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கான மேலதிக வழிகளை ஆராய இலங்கையும் இந்தியாவும் ஒப்புக்கொண்டன.



எரிபொருள் பற்றாக்குறை உச்சநிலையில் உள்ளது;
எதிர்வரும் நாட்களில் 05 வீதமான தனியார் பஸ்களே சேவையில் 04

# துவிச்சக்கர வண்டியில் சென்று அரசியல் செயற்பாடுகள்

## யாழில் கஜேந்திரன் M.Pயின் முன்மாதிரி



யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் (Selvarajah Kajendran) துவிச்சக்கரவண்டி மூலமாக தனது அரசியல் செயற்பாடுகளை தொடர்ந்து வருகின்றார்.

செல்வராஜா கஜேந்திரன் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கும் படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

இலங்கையில் தற்போது நிலவும் கடுமையான எரிபொருள்

04

# கந்தக்காடு கைதி கொலை; நான்கு சார்ஜன்ட்கள் கைது

## தப்பிச்சென்றவர்களில் 57 பேர் தலைமறைவு



கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்த புனர்வாழ்வு கைதியின் மரணம் தொடர்பில் இராணுவம் மற்றும் விமானப்படையைச் சேர்ந்த நான்கு சார்ஜன்ட்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு அதிகாரிகளும் புனர்வாழ்வு மையத்தில் ஆலோசகர்களாக பணிபுரிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புனர்வாழ்வு நிலையத்தின் ஆலோசகர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்காக வெலிகந்த பொலிஸ்

04

# ஏ.டி.எம் இயந்திரங்களில் பணம் பெறும்போது அவதானம்

## மோசடி கும்பல் பறித்துச் செல்வதாக தகவல்



ஏ.டி.எம் இயந்திரங்களில் பணபரிமாற்ற சேவைகளில் ஈடுபடும் மக்கள் மிகுந்த அவதானத்துடன், செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பலர் வேலை வாய்ப்பினை இழந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் மோசடி நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

வங்கிகளில் பணத்தினை பெறுவதற்காக வரிசைகள் காத்திருக்கும் போது பின்னால் வரிசைகளில்

04

## மே.9 வன்முறை சம்பவம்

# இதுவரை 3,056 பேர் கைது ; 150 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்



நாடளாவிய ரீதியில் கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை மற்றும் கலவரச் சம்பவங்கள் தொடர்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி 857 சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 3 ஆயிரத்து 56 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஆயிரத்து 150 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எங்கள் கருத்து...

# கியூ வரிசையின் பின்னணியில் மறைந்துள்ள முறைகேடுகள்!

சமையல் எரிவாயு மற்றும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களுக்கான கியூவரிசை இன்னுமே முடிவுக்கு வந்தபாடாக இல்லை. பெற்றோல் நிலையங்களுக்கும், சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கும் முன்பாக மக்கள் நாட்கணக்கில் காத்துக் கிடக்கின்றார்கள். சலிப்பும் வெறுப்பும் எல்லை கடந்துவிட்ட நிலையில், ஏதோவொரு நம்பிக்கையில் அவர்கள் இவ்வாறு தவம் கிடக்கின்றார்கள்.

எரிபொருள் நிலையங்களின் முன்னால் இருந்து சில கிலோமீற்றர் தூரம் வரை வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டுள்ளன. அதே போன்று எரிவாயு நிலையங்களுக்கு முன்பாக ஆயிரக்கணக்கான சிலிண்டர்கள் வரிசையில் வைக்கப்பட்டு, இரும்புச் சங்கிலியால் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவை வாரக்கணக்கில் இவ்வாறு அங்கே வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அவை திருட்டுப் போய் விடலாமென்பதால் உரிமையாளர்கள் இரவிரவாக அவ்வப்போது அங்கே வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

எரிபொருளுக்கான இப்போராட்டம் முற்றாக முடிவுக்கு வருவது எப்போது? இன்றைய நாளில் மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எழுகின்ற ஏக்கம் நிறைந்த வினா இதுதான்! எரிபொருள் ஏற்றிய கப்பல்கள் சமீப காலமாக ஏராளமாக நாட்டுக்கு வந்துள்ளன. முன்னைய காலங்களைப் பார்க்கிலும் அதிகமான எரிபொருள் நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளது. ஆனாலும் எரிபொருளுக்கான பற்றாக்குறை இன்னுமே நீங்குவதாக இல்லை.

04

# லாப் GAS அதிக விலைக்கு விற்கப்படுவதாக தகவல்

## தமக்கு அறித்தருமாறு நிறுவனம் அறிவிப்பு



லாப் சமையல் எரிவாயுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சில்லறை விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் தொடர்பில் உடனடியாக அறியத் தருமாறு லாப் நிறுவனம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக லாப் எரிபொருள் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

04

## கடலில் பலத்த காற்று,கடல் சீற்றம்;

# மீனவர்கள் மற்றும் கடற்படைக்கு எச்சரிப்பு

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



தென்மேற்கு பருவக் காற்று காரணமாக மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும் நாட்டின் தென்பகுதியிலும் நிலவும் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

04

## ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மெ.தொன்

# முதல் தொகுதி GAS 05ஆம் திகதி வருகிறது

## 07 ஆம் திகதி முதல் விநியோகம் அரம்பம்



முதல் தொகுதியான 30,000 மெற்றிக் தொன் எரிவாயுவில் 3,700 மெட்ரிக் தொன் எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் முதல் தொகுதி எரிவாயு விநியோகத்தை எதிர்வரும் 7ஆம் திகதி முதல்

04

# நான்கு கோடி ரூபா தங்கத்துடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

## 16 தங்க கட்டிகளுடன் டுபாயிலிருந்து வந்துள்ளார்



நான்கு கோடி ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகளுடன் டுபாயில் இருந்து வந்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 16 தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மேலதிக விசாரணைகளை சுங்கப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சுகாதார துறையினருக்கு பெரும் சவாலான காலம்

# 15 ஆயிரம் இருதய நோயாளர்கள் அறுவை சிகிச்சைக்கு காத்திருப்பு



இன்றைய நிலையில் நாட்டில் சுமார் 15,000 இருதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ளதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரண பற்றாக்குறை, போஷாக்கான உணவு வகைகளை பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிரமங்கள் உள்ளிட்டவை காரணமாக நாட்டில் சுமார் 60 இலட்சம் பேர் மிகவும் மிகவும்

04

## விக்கல் வீராச்சாமி



அண்ணே, என்ன கடற்கரையில நிண்டு பலமா யோசிக்கிறீங்க, இந்தியா பக்கம் போற யோசனையோ...

இல்ல, வடக்கு கிழக்கில இருந்து ஆமி வெளியேற வேணும் எண்டு கூவுற சைக்கிள் தம்பிமார் ஆமியிடம் பெற்றோல் பொக்கன் எடுப்பாங்களா ??? இல்லையா ???

ஆறு மாதமாக அலைந்து மோப்பம் பிடித்த பொலிசார் மர்மங்களை தகர்த்தது எப்படி?



# நோர்வூட் நகைக் கொள்ளையின் சூத்திரதாரி ஒரு பெண்!

மலைவாஞ்ஞன்

நோர்வூட் நகரில் அடகு பிடிக்கும் நிலையம் ஒன்றை கொள்ளையிட்டு மூன்று கோடியே 54 லட்சம் ரூபா பெறுமதியான 177 பவுன் தங்க நகைகளுடன் நான்கு பேர் கடந்த 30 ம் திகதி ஹட்டன் கோட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆறுமாதகால வேட்டையின் பின்னரேயே இவர்கள் சிக்கினர்.

நோர்வூட் நகரில் அடகு பிடிக்கும் கடை உள்ளது. 2021 டிசம்பர் மாதம் 09 திகதி இக்கடையை உடைத்து அங்கிருந்த தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் கடந்த 2021 டிசம்பர் மதம் 11 ம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு கோடியே 75 லட்சம் ரூபா பெறுமதியான அடகு பிடித்த 175 பவுன் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்ட நோர்வூட் பொலிஸ் நிலையத்தார் சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்ய தவறியிருந்ததையடுத்து அடகு நிலைய உரிமையாளர் இது தொடர்பாக மேலும் ஒரு முறைப்பாட்டினை ஹட்டன் கோட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்தார்.

அதனைத் தொடர்ந்து இதனை விசாரிப்பதற்கு 2022.06.08 ம் திகதி கோட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவிடம் இப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு கோட்ட குற்றத்தடுப்பு பிரிவில் சந்திரசிறி தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால், உப பொலிஸ் பரிசோதகர் சந்திரசிறி, உப பொலிஸ் பரிசோதகர் தசநாயக்க பொலிஸ் சார்ஜன் கமல், ரணசிங்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான ரத்நாயக்க, பண்டார, மங்திலக, கொத்தலாவல, ரசிக்க, சமீர, லக்ஸ்மன், குணவர்தன, ஜயமின. பிரியதர்ஷினி, விதுரங்கி பிரியங்கனி, சாரதிகளான, சச்துர, அமில ஆகியோர் அடங்குகின்றனர்.

கொள்ளைச் இடம்பெற்ற தினத்தன்று இரவு அடகு நிலையத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்று தொடர்பாக பொலிஸாருக்கு ஆரம்ப சந்தேகம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து லொறியின் சாரதியைப் பின் தொடர்ந்துள்ளனர்.

இந் நிலையிலேயே இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த கோட்ட குற்றத்தடுப்பு பிரிவு கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற அன்றிரவு அவ்விடத்தின் அருகிலிருந்து இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் பதிவுகளை பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்தின் உதவியை நாடினர்.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இப்பதிவுகளை பரிசீலனை செய்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தொலைபேசி இலக்கங்களின் பதிவுகள் தொடர்பாக மேலதிக விசாரணைக்காக மீண்டும் தொலைபேசி கோபுர பதிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது பொலிஸாருக்கு ஒரு சில விசாரணைக்கு உதவும் குறிப்புகள் கிடைக்கின்றன. இக்கொள்ளையில் லொரி சாரதி சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அக்கடையில் பல வருட காலமாக வேலை செய்த பெண் ஒருவர் தான் இதனை திட்டமிட்டுள்ளார் என்றும் அத்தகவல்கள் பொலிசாரை உசார்படுத்தின.

இந்நிலையில் ஒரு தொலைபேசி இலக்கத்தில் நடைபெற்ற உரையாடல் பதிவுகளை பரிசீலித்தபோது கடையின் உள் இருந்தும் மற்றைய தொலைபேசி இலக்கம் கடையின் வெளியிலிருந்தும் உரையாடுவதாகவும் அமைந்திருப்பது கண்டறியப்பட்டது.

அவதானமாக உரையாடல்களை பரிசீலித்தபோது ஒருவரது உரையாடல் கடையின் உள்ளிருந்தும் மற்ற வருடைய உரையாடல் கடையின் வெளியிலிருந்தும் நடைபெற்றிருப்பது ருசுவானது. அதனைத் தொடர்ந்து கடை உள்ளிருந்து உரையாடியவரின் தொலைபேசி இலக்கத்தினை ஆராயும் போது குறித்த நபர் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பின் தொடரப்படுபவர் என்பதும் தெரியவந்தது. பொலிஸார் புதிய உற்சாகத்துடன் அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொண்டபோது பொலிஸாருக்கு பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அடகுக் கடையில் வேலை செய்யும் பெண் குறித்த அக்கடையில் கடந்த பல வருடங்களாக பணி புரிந்து வந்திருப்பவர் என்பதும் இவர் குடும்பத்தில் ஒருவரைப் போல் அக்கடையில் பணியாற்றி வருபவர் என்பதை பொலிஸார் அறிந்து கொண்டனர். இவரின் நடத்தை காரணமாக அப்பெண்ணை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று கடை உரிமையாளரின் மகன் வற்புறுத்தியிருக்கிறார்.

இதையடுத்து இந்த பெண்ணுக்கும் கடை உரிமையாளர் குடும்பத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

இதையடுத்து கடை உரிமையாளர்களை பலி தீர்க்க வேண்டும் என்று எண்ணிய அப்பெண் காலம் கனியும் வரை காத்திருந்துள்ளார். இந்நிலையில் உரிமையாளரின் உறவினரின் திருமண வீடு ஒன்றுக்கு செல்ல இருப்பதாக ஒரு தகவல் அப் பெண்ணுக்கு ஆறுமாதத்திற்கு முன்பே தெரிய வருகிறது. தான் எதிர்பார்த்திருந்து நேரம் தன்மடியில் வந்து விழுந்திருப்பதாக கருதிய அப்பெண் திட்டத்தை வகுக்க ஆரம்பிக்கிறார்.

இப் பெண்ணுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளன. மற்றொரு சந்தேக நபரான லொறி சாரதியுடன் மது அருந்தியபடியே பெண் தன்னுடைய மனதில் உள்ள திட்டத்தை கூறியதாகவும் அதனைத் தொடர்ந்து இதற்கு பொருத்தமாக மேலும் இருவர் அவசியம் என குறிப்பிட்டதாகவும் தெரியவந்தது. அதற்காக இந்தப் பெண் சுமார் ஐந்து லட்சம் ரூபா வரை செலவு செய்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

உரிமையாளர் திருமண வீட்டுக்கு செல்வதற்கு முன் அப்பெண் ரோசி தனக்கு சொந்தமான உடைமைகளை எடுத்துக் கொண்டு; அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

பிரிதொரு தினத்தன்று கடை உரிமையாளர் மற்றும் அவரது குடும்பம் கொழும்புக்கு சென்றுள்ளனர். ஏனைய நாட்களில் அவர்கள் வெளியில் செல்லும் போது ரோசி என்ற கடையில் வேலை செய்யும் அப் பெண்ணை நிறுத்தி விட்டு செல்வதே வழக்கம். எனினும் அன்று அவர் பொறுப்பாக கடையை பார்த்துக்கொள்ள மறுத்திருக்கிறார். தன்னுடைய உடைமைகளை எடுத்துச் சென்றதற்கு அதுவே காரணமாம்.

இதேசமயம் லொரி சாரதி தன்னுடைய உதவியாளரான க. ராஜசேகரனை கொழும்பிலிருந்து வரவழைக்கிறார். அவருக்கு உதவியாக தனது ஊரிலுள்ள மற்றுமொருவரை அவர் இணைத்துக் கொள்கிறார்.

இந்நிலையில் கடையில் பணிபுரிந்த ரோசி என்ற அந்தப் பெண் கடை உரிமையாளர் குடும்பத்தினர் கொழும்பு செல்வதற்கு முன் இரண்டாம் மாடியில் உள்ள ஜன்னலின் தாழ்ப்பாளை போடாமல் திறக்கக்கூடிய மாதிரி விட்டுவிடுகிறார்.

இந்த நிலையிலேயே கொள்ளைச் சம்பவம் 09ம் திகதி நடைபெறுகிறது. முதல் வேலையாக லொறி சாரதியும், உதவியாளரும் அவரால் கூட்டிவரப்பட்டவரும் சாரதியின் வீட்டில் மது அருந்தி தம்மைத் தயார்படுத்திக் கொண்டனர்.

அப்போது ரோசி என்ற சூத்திரதாரி லொறி சாரதியின் மாமியின் வீட்டில் அதாவது கடைக்கு பின்புறமாக உள்ள வீட்டில் இருக்கிறார். அனைவரும் திட்டமிட்டபடி எவரையும் அடையாளம் காண முடியாதபடி ஆடை அணிந்து கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டு அடகு கடைக்கு முன் வருகின்றனர்.

இரண்டு பேர் கடைக்கு பின்புறமாக உள்ள சாரதியின் வீட்டிலிருந்து பெற்றோல் நிரப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியை நோக்கி வருகின்றனர். லொரியை ஸ்டார்ட் செய்து கடையின் முன் நிறுத்துகின்றனர். அங்கே ரோசியும் வருகிறார்.

அவர்கள் லொறியின் மேல் ஏறி மின்கம்பம் வழியாக இரண்டாம் மாடியின் திறந்த ஜன்னலின் வழியாக கடையினுள் நுழைகின்றனர். ரோசியிடம் இருந்த மற்றுமொரு சாவியைக் கொண்டு அலுமாரியை திறந்து சகல அடகு நகைகளையும் ஒரு பைக்குள் போட்டு கயிற்றின் வழியாக கீழிறக்க ரோசி அப்பையை வாங்கிக்கொள்கிறார். பின்னர் கட்டடத்தை தீயிட்டு கொளுத்த முடிவாகிறது. எனினும் அக்கட்டடத்தை ஒட்டியதாக மருந்தகம் ஒன்று இருந்ததால் அந்த யோசனை கைவிடப்படுகிறது.

இதில் திடுக்கிடும் மற்றுமொரு சம்பவமும் தெரியவருகிறது. நகைகளைத் திருடிய பின்னர் கட்டடத்தை தீயிட்டு கொளுத்தி விட வேண்டும் என்பதே ரோசியின் திட்டம். அதில் ரோசி மற்றுமொரு திட்டத்தையும் உள்ளடக்கியிருந்தார்.

இவரின் திட்டப்படி கொள்ளையை 8 ஆம் திகதியே நடத்தியிருக்க வேண்டும். ஏனென்றால் ரோசி அவ்வீட்டில் உள்ள எரிவாயு சிலிண்டரின் குழாயை அறுத்துள்ளார். எரிவாயு கசிந்திருக்கும் நிலையில் கொள்ளையின் பின்னர் கட்டடத்தை நெருப்பு வைக்க சுலபமாக இருக்கும் என்பதே ரோசியின் திட்டமாக இருந்தது. சில சமயம் கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர்களும் தீயில் சிக்கி காலமாகிப் போனால் நகைகளை பங்கிட வேண்டிய அவசியமும் இருக்காது. கொள்ளைச் சம்பவமும் திசைதிரும்பி விடும். அப்போது அவர் மீது சந்தேகமும் ஏற்படாது என்று எண்ணியிருக்கலாம் என்பது பொலிசாரின் சந்தேகம்.

எனினும் 08ம் திகதி கொள்ளைச் சம்பவம் இடம்பெறாது 09 திகதி நடததால் எரிவாயு காற்றுடன் கலந்து வெளியேறி விட்டதால் கொள்ளையிட்டவர்கள் உயிர்தப்ப முடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கொள்ளையிட்ட நகைகளை லொறியில் போட்டுக்கொண்டு நேரடியாக மட்டக்களப்பு நோக்கிச் சென்றுள்ளனர். போகும் வழியில் இவர்கள் வழமையாக குளிக்கும் இடத்தில் உள்ள காட்டுப்பகுதியில் நகையை புதைத்து வைத்துவிட்டு திரும்பி வந்துள்ளனர்.

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் லொறிச் சாரதியிடம் சந்தேகத்தின் பேரில் வாக்குமூலம் பெறப்பட்டதனால் நகைகளை விற்பனை செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இந்நிலையில் மீண்டும் மட்டகளப்பு சென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை எடுத்து இதனை வேறு எங்காவது மறைத்து வைக்க முயல்கின்றனர். பின்னர் தங்க நகைகளை கொண்டு வந்து நோர்வூட் வெஞ்சர் பகுதியிலுள்ள வீட்டில் மறைத்து வைக்கின்றனர்.

பொலிசாருக்கு தொடர்ந்து இவர்கள் மீது சந்தேகம் காணப்பட்டதனால் இந்த தங்க நகைகளை விற்பனை செய்ய முடியவில்லை. இந்நிலையில் தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்களை கண்காணித்து வந்த பொலிஸார் கடந்த 30 திகதி அவ் வீட்டைச் சுற்றி வளைத்து சோதனையிட்டனர். தங்க நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை கண்டுபிடித்து தங்க நகைகளை மீட்டெடுத்தனர். சம்பவத்துடன் தொடர்புயை சந்தேக நபர்களான காந்தன் ராஜசேகரன், நாகன் ஸ்கந்தமுருகன், சரணமுத்து சுபராஜ், ரத்நாயக்க முதியன்சலாகே ரோசினி ஆகிய நான்கு பேரை கைதுசெய்து ஹட்டன் நீதவான் முன்னிலையில் பொலிசார் நிறுத்தினர். அவர்கள் அங்கே குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எதிர்வரும் 12 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

களவாடப்பட்ட தங்க நகைகள் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் என்பதனால் அவற்றை பத்திரமாக வைக்குமாறு கூறி கையளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளைச் சம்பவத்தில் திருடிச்சென்ற 179.59 எடை கொண்ட 54 தங்கச் சங்கிலிகள் 526.16 எடை கொண்ட 757 தோடுகள், 144.36 எடை கொண்ட 177 பெண்டன்கள், 404.71 எடை கொண்ட 404 மோதிரங்கள், 101.89 எடை கொண்ட 84 டசல்கள், 41.22 எடை கொண்ட பேஸ்கட்கள், 5.99 எடை கொண்ட 01 வளையல், 7.32 எடை கொண்ட நிக்ல்ஸ் 4.73 எடை கொண்ட தங்கத் துண்டுகள் ஆகியன இதன்போது மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜித டி அல்விஸ்



பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால்



பொலிஸ் கான்ஸ்டபிள் பிரியதர்ஷினி




உப பொலிஸ் பரிசோதகர் சந்திரசிறி

# சரித்திரங்களை மீட்டிச் செல்லும் மைக்கல் கொலினின் கவிதைகள்

வெளியீட்டு விழாவில் யாழ். அரசாங்க அதிபர் மகேசனின் நயவுரையிலிருந்து.... காதலும் மனிதாபிமானமும் கலந்து படைக்கப்பட்டுள்ள கவிஞர் மைக்கல் கொலினின் காதல் கவிதைகள் கல்லடிப் பாலம் முதல் கம்போடியா வரை சரித்திரங்களை மீட்டிச் செல்கின்றன என 'என் இனிய பட்டாம் பூச்சிக்கு' நூல் வெளியீட்டு விழாவில் நயவுரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் தெரிவித்தார்.













மட்டக்களப்பு பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்ற 'என் இனிய பட்டாம்பூச்சிக்கு' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் நூல் நயவுரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தொடர்ந்தும் தமது உரையில்:

சமகால இலக்கியத் தளத்திலே தொடர்ச்சியாக எழுதிக் கொண்டு வரும் கவிஞர் மைக்கல் கொலினின் கவிதைகளாகட்டும் சிறுகதைகளாகட்டும் அல்லது ஏனைய படைப்புகளாகட்டும் அவை சமூகத்தின் அவலங்களை அப்படியே படம் பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளன. கவிஞர், எழுத்தாளர் என இலக்கியத் துறையில் அகலக் கால் பதித்து செயல்பட்டு வருபவர் அவர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)



வீரமுனை ஸ்ரீசிந்தாயாதிரைப் பிள்ளையார் தேவஸ்தான மாம்பழத்திருவிழா 01.07.2022 வெள்ளிக்கிழமை சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சிவாச்சார்யார் தலைமையில் நடைபெற்றது.






# தேர்தலை இவ்வேளையில் நடத்துவது எந்தப் பலனையும் தரப் போவதில்லை!

## அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் சந்திப்பு

**'இன்றைய வேளையில் தேர்தலை நடத்துவது எந்தப் பயனையும் தரப் போவதில்லை. அவ்வாறு கோருபவர்களின் நோக்கம் நாட்டை மேலும் சீர்குலைப்பதாகும்' என்று கமநல, வனஜீ வராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இன்றைய நெருக்கடி நிலைமை தொடர்பாக அமைச்சர் எமக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார். 'நாட்டில் தற்பொழுது நிலவும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் அரசியல் இலாபங்களை மறந்தவாறு ஒன்றிணைய வேண்டும்' எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.**

**கே: பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இணைந்து இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கருதுகின்றனர். இது தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வாக அமையுமா?**

பதில்: உண்மையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே எங்களின் நோக்கமாக இருந்தது. அதற்கு எங்களால் முடிந்த அளவு முயற்சி செய்தோம். எனினும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அந்த வாய்ப்பைத் தவிர்த்து விட்டார். ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவும் அந்தச் சவாலை ஏற்கவில்லை. யாரும் ஆட்சியை ஏற்கத் தயாராக இல்லாத காரணத்தால் பிரதமர் இல்லாத நாடு இருந்தது. அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

அமைச்சரவையை நியமிக்க ஒரு வாரத்துக்கு மேல் சென்றது. அதனால்தான் நாங்கள் அமைச்சர் பதவிகளை ஏற்க முடிவு செய்தோம். இதுதான் நாட்டின் இன்றைய நிலை. இது எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடும் என அர்த்தப்படாது. இத்தருணத்தில் அரசாங்கத்துக்கு அனைவரும் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

**கே: அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு இது பொருத்தமான தருணம் அல்ல என சிலர் விமர்சிக்கின்றனர். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இந்த அரசியலமைப்புத் திருத்தம் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது. நாட்டில் உள்ள புத்திஜீவிகள் மற்றும் தொழில்துறையினர் 21 ஆவது திருத்தத்தை கூடிய விரைவில் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தனர். இந்தப் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகத் தீர்த்து வைக்க வேண்டும். இறுதியில் சர்வதேச உதவியைப் பெறுவதற்கு இது வழிவகுக்கும் என்பதுடன், எம் மீது சர்வதேச நம்பிக்கையை வளர்க்கவும் இது உதவும். அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவது அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் சமூக குழுக்கள் மற்றும் புத்திஜீவிகளின் கோரிக்கையாகும்.

**கே: நாட்டில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை ஓரளவுக்கு நீக்குவதற்கு 21 ஆவது திருத்தம் உதவும் என நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில்: தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை தொடர்பில் பாரிய பிரச்சினை எதுவும் இல்லை. அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் தற்பொழுது 113 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு காணப்படுவதால், அங்கு பெரும்பான்மை குறித்த பிரச்சினை இல்லை. எவ்வாறாயினும் பாராளுமன்றத்திற்கு வெளியில் பொதுமக்கள் போராட்டம் நடத்தியதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதைத்தான் நாம் உடனடியாக நிவர்த்தி செய்து சரி செய்ய வேண்டும்.

மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதும் அவர்களின் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் அரசின் பொறுப்பு என்று நான் நினைக்கிறேன். விவசாயத்துறை அமைச்சர் என்ற முறையில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகளை எப்படியாவது தீர்த்து வைப்பேன். விவசாயிகளுக்கு உரம் வழங்குவதே விவசாயத் துறையில் பெரும் பிரச்சினையாக இருந்தது. அதே போன்று நெல் சாகுபடியை மேற்கொள்ள விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்க வேண்டும். இந்த இரண்டு தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

பெரும்போகத்துக்குத் தேவையான உரத் தேவை நிவர்த்தி செய்யப்படும் அதேவேளை, சிறுபோகத்துக்குத் தேவையான உரமும் விரைவில் வழங்கப்படும். இதன் ஊடாக விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகளை ஓரளவுக்கு தீர்த்து வைக்க முடியும். எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவை மக்கள் எதிர்கொள்ளும் மற்றைய முக்கிய பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளுக்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் பொது மக்களின் எதிர்ப்புகளை நம்மால் குறைக்க முடியும்.

**கே: பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்குப் பதிலாக தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண வழியில்லை என்று ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகின்றன. தேர்தலுக்குச் செல்வது மக்களுக்குப் பாரிய சுமையாக அமையும் என பிறிதொரு தரப்பினர் கூறுகின்றனர்.** நீங்கள் இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்: நாங்கள் தேர்தலுக்குச் செல்லும் போது இந்தப் பிரச்சினை எப்படித் தீர்க்கப்படும் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களின் ஒரே நோக்கம் எப்படி அதிகாரத்தை உறுதிப்படுத்துவது என்பதுதான். நாட்டை மேலும் சீர்குலைப்பதே அவர்களின் முயற்சி. இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியும் 100 எம்.பி.க்களைப் பெறும் நிலையில் இல்லை. எனவே, தேர்தலுக்குப் பிறகு, நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மையைக் கூடப் பெற முடியாத நிலையற்ற அரசாங்கம் உருவாகி, அது நாட்டில் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். தற்போதைய அரசாங்கத்தில் குறைந்தபட்சம் 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

**கே: இத்தருணத்தில் மக்கள் தேர்தலை கோருகிறார்களா?**

பதில்: தற்போது நிலவும் சூழ்நிலையால் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே, எரிபொருள், எரிவாயு மற்றும் பிற பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. தேர்தலில் போட்டியிடப் போவது யார்? சில அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகள் தேர்தலை நடத்த நினைக்கின்றனர். ஆனால் இந்த நேரத்தில் தேர்தலை நடத்த மக்கள் குரல் எழுப்பினார்களா? அது அப்படியல்ல. தேர்தலை நடத்த 7,000 மில்லியன் ரூபா முதல் 8,000 மில்லியன் ரூபா வரை செலவிட வேண்டியுள்ளது. மேலும், அரசு திட்டமிட்டுள்ள அனைத்து வேலைகளையும் ஒத்தி வைத்து தேர்தலை நடத்துவதற்கு அதிக நேரம் செலவிட வேண்டியுள்ளது. எனவே, இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்துவதது எந்தப் பலன்களையும் தரப் போவதில்லை. ஒருவேளை, சில அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளும் முயற்சியாக அது இருக்கலாம்.

**கே: நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு அரசாங்கமும் அமைச்சரவையும் தீர்வு காண வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தைக் கூட்டுவதால் எந்தப் பயனும் இல்லை. நீங்களும் அதே கருத்தைக் கடைப்பிடிக்கிறீர்களா?**

பதில்: அந்தப் பொறுப்பு அரசுக்கு உள்ளது. அந்த பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது. ஆனால், அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஒரு புதிய பிரதமரும் அரசாங்கமும் இந்த நீண்டகால பிரச்சினைகளை சில வாரங்கள் அல்லது மாதங்களில் தீர்க்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. உண்மையில், நாம் ஒரு திவாலான நாட்டைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. உதாரணமாக, திவாலான நபரை இயல்பு நிலைக்கு மாற்ற எவ்வளவு காலம் எடுக்கும்? அதேபோன்று, நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப சிறிது காலம் எடுக்கும். எனவே, நாட்டை திவால் நிலையிலிருந்து விடுவிப்பதே புதிய அரசாங்கத்தின் முன் உள்ள சவாலாகும்.

**கே: நாட்டில் ஒரு உடனடி உணவு நெருக்கடி குறித்து ஊகங்கள் நிறைந்துள்ளன. விவசாய அமைச்சர் என்ற முறையில் பதில் சொல்ல விரும்புகிறீர்களா?**

பதில்: தற்போது உலகில் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதன் பாதிப்பை நாமும் சந்திக்க வேண்டும், அதை என்னால் மறுக்க முடியாது. அதனால்தான் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. தொடக்கத்தில், நெல் நிலங்கள் விவசாயிகளால் பயிரிடப்படாததால், நெல் பிரச்சினையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நான் விவசாய அமைச்சராக பதவியேற்ற போது, விவசாயிகள் 248 ஹெக்டெயர் நெற் பயிர்களை மட்டுமே பயிரிட்டிருந்தனர். அரிசித் தட்டுப்பாடு வந்து விடுமோ என்ற அச்சமும் இருந்தது.

இதனால், உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர். இதன் விளைவாக, பயிரிடப்பட்ட மொத்த நெற் பயிர்க் காணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே, இந்த ஆண்டு நவம்பர் இறுதியிலோ அல்லது டிசம்பர் மாதத்தின் நடுவிலோ அரிசி தட்டுப்பாடு ஏற்படாது. அரிசிப் பிரச்சினை இருந்தால், அது டிசம்பர் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி இறுதிக்குள் இருக்கும். இதுவே நமது கணிப்பு.

**எந்தக் கட்சியும் 100 எம்.பி.க்களைப் பெறும் நிலையில் இல்லை. எனவே நெருக்கடி மேலும் அதிகரித்து விடும்**



**இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே எங்களின் நோக்கமாக இருந்தது. ஆனால் சஜித் அதனைத் தவிர்த்து விட்டார். அனுரகுமார திஸாநாயக்கவும் அந்தச் சவாலை ஏற்கவில்லை**

---




# நாம் அறிந்து கொள்ளாத நிலைமையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தவறு!

முறைகளை மாற்றும் போராட்டங்களுக்கு சரித்திரம் உண்டு. அண்மைக்கால சரித்திரத்தில் நிர்வாக முறை மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புப் பற்றி பாரிய கருத்துகள் தோன்றின. 'ஜனநாயகமும் திறந்த பொருளாதார முறைமையும்' தவிர மாற்று சந்தர்ப்பங்கள் இல்லை என்ற நிலைமைக்கு சர்வதேசம் ஆளாகியுள்ளது. மாற்றத்திற்காக இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீர் சிந்திய அதிகளவான மக்களின் முயற்சியால் நிகழ்காலம் தோன்றியுள்ளது.

திரும்பவும் பழைய குழிகளைத் தோண்டி அவற்றில் விழுந்து ஏன் துயரத்துக்கு உட்பட வேண்டும்? உலகில் ஏனைய நாடுகள் பெற்றுக் கொண்ட அனுபவங்களை மீண்டும் நாமே பரிசோதித்துப் பார்ப்பதன் இரகசியம் என்ன? அனுபவம் வாய்ந்த நபர்கள், நிபுணர்கள் ஆணித்தரமாக விடயங்களைக் கூறும் வேளையில் சிறு குழுவினரின் கோஷத்துக்கு இரையாவதன் காரணம் குறித்து கேள்வி கேட்க வேண்டியுள்ளது.

குழப்பத்தால் நாட்டை முன்னேற்ற முடியும் என்றால் இன்று இப்பூமி சொர்க்கபுரியாகியிருக்கும். மோதல், குழப்பம் மற்றும் யுத்தங்கள் பாரிய அளவில் காணப்பட்டன. இடம்பெயர்வது ஏழைகளாவர். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் குரோதத்தால் மோதுகிறார்கள். அதனை முன்னின்று நடத்துபவர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். போராட்டம் நிரந்தரமானது, அது முடிவில்லாத வட்டமாகும். குறுகிய கருத்துக்களை முன்வைத்து அனுபவமற்ற இளைஞர்களை தவறாக வழிநடத்துவது குறித்து கேள்வி கேட்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு போராட்டங்கள் பாடங்களைக் கற்பித்துத் தந்துள்ளன. மக்கள் பல்வேறு வழிகளில் வேதனைக்குள்ளானார்கள். முறைகளை மாற்ற முடியும், ஆனால் உழைப்பாளிகள் மற்றும் நிர்வாகிகளுக்கு இடையேயான இடைவெளி பூச்சியமாக மாறாது. சமூக மற்றும் அரசியல் பிரிவுகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய நாடுகள் இன்றுள்ள இடம் அதற்கு சரியான சாட்சியமாகும்.

யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சிலரின் குறுகிய நிகழ்ச்சிநிரலுக்கு முழு சமூகமுமே இழப்பீடு செலுத்தத் தேவையில்லை. மாற்றுக்கருத்துகள் உள்ளன. ஜனநாயகத்துக்குள் கருத்துக்களை கொண்டிருக்க உரிமை உண்டு. அந்தக் கருத்துகளுடன் பாரிய கொள்கைகளை உருவாக்க முடியும். அர்ப்பணிப்பு குறித்து புதிய கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதற்கு கொள்கையாளர்களால் இயலாமல் இல்லை. தற்போதைய முறைமை பற்றி விமர்சனம் செய்து ஊழல் மற்றும் மோசடி குறித்து பாரிய எதிர்ப்பை உருவாக்க முடியும். அவ்வாறான நடவடிக்கைகள் நம்பிக்கையை குறைப்பதோடு நாட்டை உருவாக்குவதற்கான தைரியத்தையும் குறைக்கிறது.

இன்று இலங்கையும் அவ்வாறான உபாயத்துக்கு ஆளாகியுள்ளது. புதிய கொள்கைகள் புதிய முறைகள் மக்களுக்கு முன்வைக்கப்பட்டு அரசியலமைப்பு ரீதியாக ஆட்சியை பெற்றுக் கொள்வது தவறல்ல. அதிகாரத்துக்காக சந்தர்ப்பம் இழந்த அரசியல் அணியினர் நாட்டை நிலையற்றதாக்கி அழிவின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்வது தவறாகும்.

மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள சந்தர்ப்பத்தில் தற்போதுள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகளுக்கு அமைய முடிவுகளை எடுக்க வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். நாட்டுக்கு அந்நிய செலாவணி வரும் பாதைகள் தடைப்பட்டுள்ளன. அத்துடன் உல்லாசப் பயணத்துறை ஏற்றுமதி மற்றும் முதலீட்டு சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு க்கு முன்னால் அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்து வருகிறது. எரிபொருள், மருந்துகள், போதுமான அளவு உணவுகளை விலைக்கு வாங்க முடியாத நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. அது மோசமான குற்றமாகும்.

போராட்டமானது நாட்டை மேம்படுத்துவதற்காக இருக்க வேண்டுமே தவிர, ஏழை மக்களை மேலும் மேலும் கியூ வரிசைக்கு தள்ளுவதற்காக வல்ல. உடனடியாக முடிவுகளை எடுத்து பொருளாதார கட்டமைப்பை தயாரிக்க வேண்டியுள்ளதோடு, அது தாமதமாகும் ஒவ்வொரு நாளும் மோசமான நிலையே உருவாகும். பொதுமக்கள் மீண்டுமொரு முறை பாதையில் இறங்கி, எரியும் நிலைமைக்கு தள்ளப்பட்டால் அதனை கட்டுப்படுத்த முடியாது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

மாற்றங்கள் தேவை. ஜனநாயக முறைக்குத் தேவையான மாற்றங்களை உருவாக்கும் உரிமை உண்டு. அதிலும் வெளித்தடைகள் நாட்டின் இருப்புக்குத் தடையாகும், அமைதி மற்றும் சமாதானத்துக்கும் தடையாகும். மத மற்றும் தேசிய தலைவர்கள் இந்த விடயத்தில் நியாயமான சமநிலையில் இருக்க வேண்டும். ஊடகங்களின் பொறுப்பும் பாரியது. இன்று அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள அணியினரை தோல்வியடையச் செய்ய நாளை புதுப்போராட்டம் உருவாகக் கூடும். அது ஆபத்தாகும். அரசியலமைப்பைக் கொண்ட அரசுக்கு முறைகள் உண்டு, ஒழுக்கம் உண்டு. அவை செயலிழந்த பின்னர் அதனை மீள உருவாக்குவது இலகுவானதல்ல. கருத்துகளுக்கு இடமளிக்க வேண்டியுள்ளதோடு சிறிய அணியினரால் பெரும்பான்மையினரின் கருத்துகளை பலாத்காரமாக அடக்க இடமளிக்க முடியாது. சட்டத்தைக் கையில் எடுக்க இடமளிப்பது தவறாகும். எரிபொருள் நிரப்பு நிலையங்கள், எரிவாயு வரிசை என இன்று காணப்படும் நிலைமை பொதுமக்களுக்கு மகிழ்ச்சி அடையக் கூடியதாக உள்ளதா? அதனை நிர்வகிப்பது போராட்டக்காரர்கள் என கூறிக் கொள்ளும் சண்டியர்களே. ஏதோவொரு தவறு நாம் அறியாமல் நடந்து கொண்டிருக்கின்றது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

எரிபொருள் பற்றாக்குறை உச்சநிலையில் உள்ளது;

# எதிர்வரும் நாட்களில் 05 வீதமான தனியார் பஸ்களே சேவையில்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

எரிபொருள் பற்றாக்குறை உச்சநிலையில் உள்ளதால் தனியார் பஸ்கள் எதிர்வரும் நாட்களில் 5 சதவீதமளவிலே சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,..



போக்குவரத்து சேவையில் பஸ்கள் தாராளமாக ஈடுப்படுத்தப்படவில்லை ஆனால் பஸ் கட்டணம் மாத்திரம் நியாயமற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் தற்போதைய பஸ் கட்டண திருத்தம் காணப்படுகிறது.

நிறைவடைந்த 6 மாத காலப்பகுதியில் மாத்திரம் எரிபொருள் விலையேற்றத்திற்கமைய பஸ் கட்டணம் ஐந்து முறை அதிகரிக்கப்பட்டன.

வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தில் எரிபொருள் விலையேற்றம் குறித்து அவதானம் செலுத்தாமல் பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொண்டிருக்கலாம்.

பஸ் கட்டணத்தை அதிகரிக்காமல் எரிபொருள் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை குறித்து போக்குவரத்து அமைச்சர் அவதானம் செலுத்தவில்லை.

பொதுப்பயணிகள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தனியார் பஸ்கள் நேற்று 8 சதவீதமளவில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுப்படுத்தப்பட்டன.எதிர்வரும் நாட்களில் 5 சதவீதமளவில் தான் போக்குவரத்து நடவடிக்கையில் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுப்படுத்தப்படும் என்றார்.

# கிழக்கில் அடுத்த வாரம் மூன்று தினங்களே பாடசாலை நடைபெறும்

## கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனை

காரைதீவு குறூப் நிருபர்

சமகால எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினை காரணமாக ,கிழக்கு மாகாணத்தில் அடுத்த வாரம் மூன்று தினங்கள் பாடசாலைகளை நடத்துவது என்று முடிவாகி இருக்கின்றது.

திங்கள், வெள்ளி தவிர்ந்த செவ்வாய், புதன் ,வியாழக்கிழமை ஆகிய இடை மூன்று நாட்களிலும் பாடசாலைகள் முழு அளவில் நடைபெறும்.இந்த ஆலோசனையை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் முன்வைத்தார்.

கிழக்கு மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர் ,வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உடனான 'சூம்' Zoom தொழில்நுட்ப கூட்டத்தில் ஆளுநர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அந்தந்த வலய கல்வி பணிப்பாளர்கள் அவரவர் வலய what's app வாட்ஸ்அப் குழுவில் அதிபர் ஆசிரியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

செவ்வாய், புதன் ,வியாழக்கிழமை நாட்களிலே ஆசிரியர்களை முழுமையாக வரவைத்து, முழு நேரசூசி வழங்கி மாணவர்களை முழுமையாக வரவழைத்து, முழு அளவிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் .இதற்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார் .

இதேவேளை, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில பிழையான வழிநடத்தல்களை முன்னெடுக்க திட்டமிட்டு இருக்கின்றது அதனை பொருட்படுத்தாமல் அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த விடயத்திலே ஒத்துழைக்க வேண்டும்.

முடியுமானால் மூன்று மாவட்ட அரசாங்க அதிபர் உடன் பேசி எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். போக்குவரத்து பிரச்சினை உள்ள பாடசாலைகளுக்கு பொது போக்குவரத்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

வருகின்ற யூலை மாதம் திங்கட்கிழமை நான்காம் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமை 8ம் தேதி வரையிலான காலப்பகுதியில் இந்த மூன்று நாள் பாடசாலை இடம்பெறும்.

# மண்டபம் அகதி முகாமில் இலங்கைத் தமிழர் தற்கொலை

## தாய் கண்டித்தமையால் விபரீத முடிவு




தமிழகத்தில் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ராணி என்ற பெண் மகன், மூன்று பெண் பிள்ளைகளுடன் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகத்திற்கு சென்று மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கி வசித்து வருகின்றார்.

இந்நிலையில் இலங்கை அகதியான ராணி என்ற பெண்ணின் மகனான 22 வயதுடைய இளைஞர் நிரோஷன் கடந்த சில நாட்களாக வேலைக்கு செல்லாமல் நண்பர்களுடன் சேர்ந்து செல்போனில் கேம் விளையாடி சுற்றித் திரிந்துள்ளார்.

இதையடுத்து ஆத்திரமடைந்த ராணி தனது மகனை கேம் விளையாடுவதை விட்டுவிட்டு வேலைக்கு செல்லுமாறு கண்டித்துள்ளார்.

இதையடுத்து தாயின் கண்டிப்பால் மனம் உடைந்த ஈழத் தமிழர் இளைஞர் நிரோஷன் நஞ்சறுந்தியுள்ளார்.

இதையடுத்து மயக்க நிலையில் இருந்த நிரோஷனை அவரது நண்பர்கள் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த இளைஞரின் உடலை உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு கொண்டு வரும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இது குறித்து உயிரிழந்த இளைஞரின் சகோதரி பிரியா கொடுத்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேலைக்கு செல்லாமல் தனது செல்போனில் கேம் விளையாடுவதை தாய் கண்டித்ததால் விபரீத முடிவு எடுத்த இளைஞரால் பகுதியில் உள்ள மக்கள் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

# பொகவந்தலாவையில் குளவி கொட்டி ஒருவர் மரணம்

## மூவர் ஆபத்தான நிலையில்

**நோட்டன் பிரிஜ் நிருபர்**

பொகவந்தலாவ மேல் பிரிவு தோட்ட பகுதியில் உள்ள 17 ஆம் இலக்க வனப்பகுதியில் விறகு சேகரிக்க சென்ற நான்கு பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,..

17 ஆம் இலக்க வனப்பகுதிக்கு விறகு சேகரிக்க சென்ற போது மரத்தில் இருந்த குளவி கூட்டினை கழுகு வந்து கலைத்தமையினால் குளவிகள் கலைந்து வந்து கொட்டியுள்ளது.

குளவி கொட்டியதல் பாதிக்கப்பட்ட நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அதில் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் பொகவந்தலாவ கீழ் பிரிவு தோட்டத்தை சேர்ந்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சிக்கன் பத்மநாதன் என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சடலம் பொகவந்தலாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு குளவி கொட்டுக்குள்ளான மற்றைய மூன்று பேரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களை இலக்கு வைத்து போதைபொருள் விற்பனை

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்ய முற்பட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் (01) விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 32 கிராம் 68 மில்லிகிராம் கேரள கஞ்சா சுருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இராஜகிரியவில் உள்ள கல்லூரியொன்றுக்கு அருகில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்வதற்காக, சந்தேகநபர் இந்த கஞ்சா சுருள்களை தயாரித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இஸ்லாத்துக்கு எதிராக கருத்து கூறிய ஞானசாரர்

## வழக்கு விசாரணை ஆக.26க்கு ஒத்திவைப்பு

இஸ்லாம் ஒரு புற்று நோய் என ஞானசார தேரர் வெளியிட்ட கருத்துக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஆகஸ்ட் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (01) இந்த வழக்கின் சாட்சி விசாரணைகளும் அந்த வழக்கில் பகிரங்க மன்னிப்புக்கோர ஞானசார தேரர் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் பரிசீலனை செய்யப்படவிருந்தது.

இந்நிலையிலேயே நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு, நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் கடந்த 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைய இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே எதிர்வரும் ஆகஸ்ட் 26 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் பொரளை ஜும் ஆபள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் ரிகாஸ் ஹாஜியார் முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ( 3 ஆம் இலக்க அறை) முன்னிலையில் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கடந்த ஜூன் 8 ஆம் திகதி சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி முறைப்பாட்டாளர் தரப்பின் முதல் சாட்சியாளர் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

### முதல் தொகுதி GAS 05ஆம் திகதி...

ஆரம்பிக்கும் வகையில் புதிய வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிவாயு விநியோகத்தின் போது நாட்டுக்கு அந்நிய செலாவணியை கொண்டு வரும் நிறுவனங்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

### துவிச்சக்கர வண்டியில் சென்று...

தட்டுப்பாடு காரணமாக மக்கள் தற்போது மோட்டார் வாகன பயணங்களை நிறுத்தி விட்டு துவிச்சக்கர வண்டிக்கு மாறி வருகின்றனர்.

இந்தவொரு நிலையில் யாழில் துவிச்சக்கர வண்டிகள் 30 ஆயிரம் முதல் 50ஆயிரம் ரூபா வரை விற்பனையாகி வருகின்றது.

### எரிபொருளுடன் மூன்று...

தெரிவிக்கப்படுகிறது.அதன்படி, முதலாவது கப்பல் ஜூலை 13 முதல் 15ஆம் திகதிக்குள்ளும், 2ஆவது கப்பல் ஜூலை 29 முதல் 31ஆம் திகதிக்குள்ளும், 3ஆவது கப்பல் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியன்றும் வருகை தரும் என லங்கா IOC நிறுவனம் தெரிவித்துள்ளது.

### ஏ.டி.எம் இயந்திரங்களில் பணம்...

காத்திருப்பது போன்று சில மோசடி கும்பல்கள் பின்தொடர்ந்து அச்சுறுத்தி பணத்தினை களவாடி செல்லும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும், அது தொடர்பில் அவதானத்துடன், செயற்படுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க பகுதியில் ஏ.டி.எம் இயந்திரத்தில் பணத்தினை பெற்ற ஒருவர் அச்சுறுத்தப்பட்டு பணத்தை தர மறுத்த நிலையில், சரமாரியாக கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கனிய எண்ணெய் விநியோகஸ்தர்...

எரிபொருளை, அத்தியாவசிய சேவைகளுக்கு விநியோகிப்பதற்காக, எஞ்சியுள்ள 10 சதவீத நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், நேற்றைய கலந்துரையாடலில், வங்கிக் கடனை மீள செலுத்தல் மற்றும் ஊழியர்களுக்கு வேதனம் வழங்குதல் உள்ளிட்ட பிரச்சினைகளை, இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கம், பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க, பெரும்பாலும் 15 ஆம் அல்லது 16ஆம் திகதி நாட்டுக்கு எரிபொருள் கப்பல் வரும் என எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் சுமார் 200 நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்த நிலையில், நேற்று அந்தப் பணிகள் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில், எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் கடந்த தினங்களாக பகலிரவாக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

### லாப் GAS அதிக விலைக்கு...

லாப் சமையல் எரிவாயுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சில்லறை விலையைவிட அதிக விலைக்கு லாப் காஸ் சிலிண்டர் விற்பனை செய்து, நுகர்வோரை அழுத்தங்களுக்கு உள்ளாக்கும் வகையில் முறையற்ற இலாபம் உழைப்பது தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு லாப் சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் நிறுவனத்தின் நுகர்வோர் சேவை பிரிவின் 1345 என்ற துரித இலக்கத்துக்கு அறியத்தரவும்.

12.5 லாப் சமையல் எரிவாயு ஒன்றின் சில்லறை விலை 6,850 ரூபாவாகும் என்றும் தெரிவித்துள்ளது.

### கந்தக்காடு கைதி கொலை;...

நிலையத்திற்கு அழைக்கப்பட்டதை அடுத்து 35 மற்றும் 39 வயதுக்குட்பட்ட குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தக்காடு முகாமில் தடுப்பில் இருந்த ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் இராணுவத்தில் இருவரும், விமானப்படை அலுவலர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கந்தக்காடு முகாமில் கடந்தவாரம் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், 500க்கும் மேற்பட்டோர் தப்பியோடியிருந்தனர்.

இந்நிலையில், 667 பேர் மீளவும் கைதுசெய்யப்பட்டதுடன் 57 பேர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர்.

### 15 ஆயிரம் இருதய நோயாளர்கள்...

இக்கட்டான நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார். குழந்தைகளின் ஆரோக்கியம், கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியம் மற்றும் போஷாக்கு, தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியம் பாரியளவில் மோசமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## எங்கள் கருத்து...

### கியூ வரிசையின் பின்னணியில் மறைந்துள்ள முறைகேடுகள்!

ஒவ்வொரு கப்பலும் நாட்டுக்கு வருகின்ற வேளையிலும், எரிபொருள் தட்டுப்பாடு நீங்கி விடுமென்று செய்திகள் வருகின்றன. மக்கள் மனதில் நம்பிக்கையும் நிம்மதியும் பிறக்கின்றது. ஆனால் எத்தனை கப்பல்கள் நாட்டுக்கு வந்தாலும் எரிபொருள் கியூவரிசையும், தட்டுப்பாடும் நீங்கிவிடப் போவதில்லை என்பது மட்டும் உறுதியாகத் தெரிகின்றது.

இன்று நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறையின் பின்னணியில் ஏதோவொரு மர்மம் உள்ளதாக சந்தேகிக்கத் தோன்றுகின்றது. முன்னைய காலங்களை விட அதிக தொகை எரிபொருள் நாட்டுக்குள் விநியோகத்துக்கென அனுப்பப்படுவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறிருக்கையில் அன்றைய காலத்தில் இல்லாத எரிபொருள் தட்டுப்பாடு இன்றைய காலத்தில் நிலவுவது ஏன் என்ற வினா மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

இந்த சந்தேகத்துக்கு மேலும் வலுவூட்டுவதைப் போன்று பலவிதமான சம்பவங்கள் ஆதாரத்துடன் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. பெருந்தொகையாக பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை நாட்டில் ஆங்காங்கே அன்றாடம் கைப்பற்றப்படுகின்றன. ஒரு இடத்தில் மீட்கப்படுகின்ற எரிபொருள் அந்தக் கிராமத்தின் தேவைக்கே போதுமானதாகத் தெரிகின்றது. அதே போன்று இரு தினங்களுக்கு முன்னர் தனிநபர் ஒருவரின் வீட்டில் இருந்து எரிவாயு நிரப்பப்பட்ட நிலையில் 50 இற்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எரிபொருள் நிலையங்களில் கியூவரிசையில் காத்து நின்று பெற்றோல் பெற்றுக் கொண்டு அதனை ஐந்து மடங்கு விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஏராளமானோர் இன்று ஈடுபட்டு வருவதாக ஆதாரங்களுடன் தகவல்கள் வருகின்றன. இதன் காரணமாக எரிபொருள் நிலையங்களில் பெற்றோலுக்கான கியூவரிசையானது என்றும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இவ்வாறு வியாபார நோக்கத்தில் ஏராளமானோர் ஈடுபடுவதனால், தங்களது சொந்தத் தேவைக்கென நியாயமான முறையில் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பலர் உள்ளதையும் காண முடிகின்றது.

உண்மையில் இது அநீதியும், குற்றமும் ஆகும். அப்பாவிகள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கலாகாது. இத்தகைய முறைகேட்டுக்கு எவ்வாறாவது உடனடியாக முடிவு கட்டப்பட வேண்டும். இல்லையேல் கியூவரிசை என்பதே நிரந்தரமாகி விடுமென்பதே உண்மை!

### வேலை நிறுத்தத்தில் ஈடுபடின் ...

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தபால் தொழிற்சங்கங்கள் கடந்த 26 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

வேலைநிறுத்தம் காரணமாக, மத்திய அஞ்சல் பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு அஞ்சல் பிரிவு ஆகியவற்றில் கணிசமானளவு அனுப்பப்படாத அஞ்சல்கள் குவிந்துள்ளதாக கூறப்படுகிறது.

### குறைந்த வருமானம் பெறும்...

நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி செயற்திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர,..

மேற்படி செயற்திட்டத்திற்காக 200 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பிரதமரின் தலைமையில் இடம்பெற்றுள்ள வாழ்க்கைச் செலவு தொடர்பான குழு கூட்டத்திலும் அது தொடர்பில் கலந்துரையப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்கியிருக்கும் தெரிவு செய்யப்பட்ட 32 இலட்சம் குடும்பங்களுக்கே அந்த நிவாரணங்கள் வழங்கப்படும் என்றும் ஜூலை மாதம் முதல் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு அதற்கான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஒரு குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது 7,500 ரூபா முதல் 10,000 ரூபா வரை நிதியை பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியானது 200 பில்லியன் டொலர் நிதியையும் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 200 பில்லியன் டொலர்களையும் அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அந்த நிதியையும் பயன்படுத்தி மேற்படி நிவாரண செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மீனவர்கள் மற்றும்...

இதன் காரணமாக மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காற்று மேற்கிலிருந்து தென்மேற்கு திசையில் வீசும் மற்றும் காற்றின் வேகம் மணிக்கு (3040) கிலோமீற்றர் கொழும்பு அம்பாந்தோட்டையிலிருந்து காலி ஊடாக கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு (6070) கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம்.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு (5060) கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாம்.

கொழும்பு அம்பாந்தோட்டையிலிருந்து காலி ஊடாக கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு வரையான மற்றும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புக்கள் கொந்தளிப்புடன் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்கள் மிதமானதாக காணப்படும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் (சுமார் 2.5 – 3.0 மீ) அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அண்மித்த கரையோர கடற்பரப்புகளில் அலைகள் எழும்பும் சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே, கொழும்பிலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளுக்கு அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.



## பாண்டிச்சேரி சரக்கு கப்பற்சேவை

# மக்களின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான ஒரு வழிவகை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை

தற்போதைய நெருக்கடி நிலையில் பெரும்பாலான பொருட்கள் இந்தியாவில் இருந்தே கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு எடுத்துவரப்படுகின்ற பொருட்களை பாண்டிச்சேரியில் இருந்து நேரடியாக காங்கேசன்துறைக்கு எடுத்து வந்தால் கணிசமானளவு போக்குவரத்துச் செலவை கட்டுப்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பேட்டியில் தற்போதைய பொருளாதார நெருக்கடியை வடக்கு வாழ் மக்கள் எவ்வாறு சமாளிக்கின்றனர் என விபரிக்கின்றார்...

***தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை வடக்கு வாழ் மக்கள் எவ்வாறு தாங்குகின்றனர்? தெற்கு மக்களைப் போன்று வடக்கில் பொருளாதார நெருக்கடி பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்று கருதலாமா?***

தென்னிலங்கை மக்களுடன் ஒப்பிடுகின்றபோது, குறிப்பாக நகர்ப்புறங்களுடன் ஒப்பிடுகின்ற போது வடக்கின் வாழ்கைமுறை சற்று வித்தியாசமானது. கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் போது, மக்கள் தாமாக முயற்சித்து தம்மைச் சூழுவுள்ள வளங்களை பயன்படுத்தி தமது அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அனுபவம் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கின்றது.

அதேபோன்று கடந்தகால யுத்தம் ஏற்படுத்திய விளைவு வடக்கு கிழக்கு மக்களில் கணிசமானளவினரை புலம்பெயர வைத்திருக்கின்றது. அவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்கள் நாட்டிலே வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவினர்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றனர். அவ்வாறான உதவிகளை தொடர்ந்தும் நம்பி இருப்பது ஆரோக்கியம் இல்லை என்றபோதிலும், புலம்பெயர் தேசங்களில் வருகின்ற பொருளாதார உதவிகள் எமது மக்களை தாங்கிப் பிடிக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தினை சொல்ல வேண்டும். கடந்த காலத்தில் எமது பிரதேசத்தில் பலன்கொழிக்கும் பூமிகளாக இருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்றன. அதற்கு எமது மக்களின் புலம்பெயர்வும் ஒரு காரணமாகவும் பாதுகாப்புக் காரணங்களினால் பயன்படுத்தப்பட முடியாமல்போன காணிகள் இன்னுமொரு காரணமாகவும் இருக்கின்றது. அவ்வாறான நிலங்கள் மீண்டும் சரியாக பயன்படுத்தப்படுமாயின் எமது மக்கள் பொருளாதார நெருக்கடிகளை இன்னும் இலகுவாக சமாளிக்க முடியும்.

வனப் பாதுகாப்பு மற்றும் வனவள ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்ற எமது மக்களின் விவசாய நிலங்களை விடுவித்து அவற்றை விவசாய நிலங்களாக மாற்றுவதற்காக தொடர் முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டு வருவதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும், நகர்ப்புற நாகரீகத்தை நாடுகின்ற தற்போதைய தலைமுறையினரும், தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் முன்னேற்றத்தினைப் பயன்படுத்தி இலகு வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டிருகின்றவர்களும் எரிபொருள் தட்டுப்பாடு உட்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க தடுமாறி வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

***தமிழக அரசு வழங்கிய நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்களை பாரபட்சமற்று சென்றடைந்திருக்கின்றதா?***

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவும் வகையிலேயே தமிழக மக்களினால் நிவாரண உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்திற்கும் கணிசமானளவு நிவாரணப் பொதிகள் பகிர்ந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான பயனாளர்கள் மாவட்ட செயலகத்தின் ஊடாக அரச அதிகாரிகளினாலேயே தெரிவு செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இந்த நிவாரண உதவிகள் கிடைத்திருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும், முன்னுரிமை அடிப்படையில் ஒரு பகுதியினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றிலும் சில அரசியல்வாதிகளின் தான்தோன்றித்தனமான தலையீடுகளினால் சில இடங்களில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

***கச்சதீவு இந்தியாவிற்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளதாக தெரவிக்கப்படுகின்றதே?***

இல்லை. கொள்கை ரீதியில் அவ்வாறான தீர்மானங்கள் எவையும் டெல்லி தரப்பினாலோ அல்லது கொழும்பு தரப்பினாலோ மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக சில தமிழக அரசியல் தரப்புக்களினாலும், இலங்கையில் சுயலாப அரசியல்வாதிகள் சிலராலும் இந்த விடயம் ஊடகங்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது.

உண்மையிலேயே, கச்சதீவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் காரணமாக இலங்கைக்கே பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களே பாரிய பாதிப்பை சந்தித்துள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் காரணமாக பாரம்பரியமாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த, மீன் படுக்கைகள் இழக்கப்பட்டிருக்கின்றன.

யதார்த்தத்தினை புரிந்து கொள்ளாமல் கச்சதீவை இலங்கையிடம் கையளித்தமையினால் இந்தியாவிற்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இந்திய அரசியல்வாதிகளினால் சொல்லப்பட்டு வருவதுடன் தேவையற்ற குழப்பங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

***அவ்வாறு இந்தியாவிடம் கையளிக்கப்படுமானால், அது இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு அங்கீகாரம் அளிப்பதாக அமையாதா?***

இல்லையே.. கச்சதீவை வழங்குவது தொடர்பாகவே யாரும் சிந்திக்கவில்லையே. இந்நிலையில் தேவையற்ற விடயங்கள் தொடர்பாக நாம் ஏன் சிந்திக்க வேண்டும்.

***தெற்கில் அரசியல் நெருக்கடிகள் ஏற்படுகின்றபோதெல்லாம் தமக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாதது போன்று வடக்கு மக்கள் நடந்துகொள்கின்றார்களே?***

கடந்த காலங்களில் வடக்கிலும் தெற்கிலும் இருந்த சுயலாப அரசியல்வாதிகள் காலத்திற்கு காலம் தங்களுடைய அரசியல் நலன்களுக்காக மக்கள் மத்தியில் இனரீதியான நஞ்சுகளை விதைத்து வடக்கு மக்களுக்கும் தெற்கு மக்களுக்கும் இடையில் உள ரீதியான இடைவெளியை ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

இதனை பின்னர் பிரபாகரனும், பிரபாகரனுக்கு வக்காலத்து வாங்குகின்ற தரப்பினரும் வளர்த்தெடுத்தனர் வளர்க்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

இந்த இடைவெளிதான் எமது மக்களின் நியாயமான அபிலாசைகளைக்கூட தென்னிலங்கை மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலைமையையும், தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய ரீதியான வேலைத் திட்டங்களையும் வடக்கு மக்கள் தமக்கு எதிரான தீர்மானமாக நோக்குகின்ற சூழலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமை மாற்றமடையாத வரையில் எமது மக்களின் அபிலாசைகளையோ அல்லது உரிமைகளையோ பெற்றுக்கொள்ள முடியாது. எனவேதான், இரண்டு தரப்புக்களுடையேயும் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி வருகின்றேன்.

வலியுறுத்துவது மாத்திரமன்றி, கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றேன். எனது முயற்சிக்கு அரசியல் பரப்பில் கணிசமானளவு வெற்றியும் கிடைத்திருக்கின்றது. எனினும் மக்கள் மத்தியிலான தேசிய நல்லிணக்கம் என்பது மேலும் கணிசமானளவு முன்னேற வேண்டும் என்பதே என்னுடைய கணிப்பாக இருக்கின்றது.

இந்த இடைவெளியே வடக்கும் தெற்கும் இணைந்து பொதுவான கோரிக்கையை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுக்க முடியாமைக்கு காரணமாக இருக்கின்றனது.

இதுவொரு புறமிருக்க, எவ்வாறான விடயங்களில் இணைந்து செயற்பட வேண்டும் என்பது தொடர்பான தெளிவும் மக்களுக்கு இருக்க வேண்டும். நாடு என்ற அடிப்படையில் தேசிய ரீதியில் நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு போராட்டங்கள் நடத்தப்படுமாயின், அவற்றிற்கு வடக்கு கிழக்கு மக்களும் தங்களுடைய தார்மீக ஆதரவை வழங்குவார்களாயின் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான அந்நியோன்ய பரிமாற்றங்கள் அதிகரித்து தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதாகவும் இருக்கும்.

ஆனால், அரசியல் நோக்கங்களுக்காக நியாமற்ற கோரிக்கைகளை முன்வைத்து தெற்கில் மேற்கொள்கின்ற போராட்டங்களுக்கு வடக்கு கிழக்கு மக்கள் ஆதரவளிப்பாளர்களாயின் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

தற்போது பொருளாதார நெருக்கடிகளை காரணமாக முன்னிறுத்தி தெற்கில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்க வேண்டிய கடமை தற்போதைய அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை. அதேபோன்று, தற்போதைய அரசாங்கத்தின் சில தீர்மானங்களும் பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமாக அமைந்து விட்டன என்பதை எமது ஜனாதிபதியே வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றார்.

அதற்காக, பொருளாதார நெருக்கடிகளுக்கு தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளே முழுமையான பொறுப்பு என்ற குற்றச்சாட்டினையும் ஏற்றுக்கொள்ள முடியாது. சிறீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் உள்ளூர் உற்பத்தி பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கில் மேற்கொண்ட நடவடிக்கையை விமர்சித்து, 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய பொருளாதாரக் கொள்கையும், பின்னர் தொடர்ச்சியாக அரசாங்கங்கள் மேற்கொண்ட தீர்மானங்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமாக இருக்கின்றன.

இவ்வாறான நிலையில், தற்போதைய அரசு ஆட்சியில் இருப்பதன் காரணமாகவே பொருளாதார நெருக்கடிகளுக்கு நாடு முகங்கொடுத்துள்ளது என்பது போன்று, போராட்டம் நடத்துவதை அரசியல் நோக்கம் கொண்ட செயற்பாடுகளாகவே கருதவேண்டியுள்ளது. அவ்வாறான நியாயமற்ற கோரிக்கைகளுக்கு வடக்கு மக்கள் பங்களிக்காமல் விலகி இருப்பதனை இன ரீதியான அல்லது பிரதேச ரீதியான நிலைப்பாடாக கருதுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

***எரிபொருள் விலையதிகரிப்பு – தட்டுப்பாடு காரணமாக வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றை தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி..?***

எரிபொருள் விலையதிகரிப்பு என்பது சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சம்பந்தப்பட்டது. குறிப்பிட்ட அளவிற்கு மேல் அரசாங்கத்தினால் சர்வதேச ரீதியில் ஏற்படுகின்ற விலையதிகரிப்புக்களை தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

அதேபோன்று, அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு நாடாளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை என்ற அடிப்படையில், வடக்கு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த தட்டுப்பாட்டினை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. பல்வேறு தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதைவிட கடற்றொழிலாளரகள் மற்றும் விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை வழங்கும் நோக்கோடு இந்தியாவிடம் இருந்து சுமார் 3 இலட்சம் பரல்களில் மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதைவிட, பாண்டிச்சேரியில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு டீசல் மண்ணெண்ணை போன்ற எரிபொருட்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன். குறித்த சரக்குப் படகு சேவைக்கான அனுமதிகளை உரிய தரப்புக்கள் வழங்கியிருக்கின்ற போதிலும், பொருத்தமான முதலீட்டாளர்கள் மூலம் எரிபொருட்கள் உட்பட வடக்கு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொண்டு வருதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் வடக்கு மக்களுக்கு தேவையான எரிபொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகின்றேன்.

***இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான சரக்கு படகு போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படவிருப்பதாக சொல்கின்றீர்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்தவகையில் இது உதவும் என்று கருதுகின்றீர்கள்?***

தற்போதைய நெருக்கடி நிலையில் பெரும்பாலான பொருட்கள் இந்தியாவில் இருந்தே கொண்டு வரப்படுகின்றது. அவை இந்தியாவில் இருந்து பருத்தித்துறை, திருகோணமலை, காலி போன்ற பிரதேசங்களை கடந்து கொழும்பிற்கு கொண்டு வரப்படுகின்றது. பின்னர், வடக்கிற்கு தேவையானவற்றை பாரவூர்திகள் அல்லது புகையிரதம் மூலமாக வடக்கு எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு எடுத்துவரப்படுகின்ற பொருட்களை பாண்டிச்சேரியில் இருந்து நேரடியாக காங்கேசன்துறைக்கு எடுத்து வருவோமாயின் கணிசமானளவு போக்குவரத்துச் செலவை கட்டுப்படுத்த முடியும். அத்துடன் நியாயமான விலையில் தேவையானளவு பொருட்களை கிடைக்கச் செய்ய முடியும். இது எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கான ஒரு வழிவகையாக அமையும் என்று நம்புகின்றேன்.

பி. வீரசிங்கம்...



> புலம்பெயர் தேசங்களில் வருகின்ற பொருளாதார உதவிகள் எமது மக்களை தாங்கிப் பிடிக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

> எமதி பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்கள் சரியாக பயன்படுத்தப்படுமாயின் எமது மக்கள் பொருளாதார நெருக்கடிகளை இன்னும் இலகுவாக சமாளிக்க முடியும்

> வனப் பாதுகாப்பு மற்றும் வனவள ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்ற எமது மக்களின் விவசாய நிலங்களை விடுவிக்க நான் நடவடிக்கை எடுக்கின்றேன்.

> தமிழக அரசின் உதவி வழங்கலில் சில அரசியல்வாதிகளின் தான்தோன்றித்தனமான தலையீடுகளினால் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவும் தகவல்கள் உள்ளன.

> கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தால் இலங்கைக்கே பாதிப்பு.

> எவ்வாறான விடயங்களில் இணைந்து செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவும் மக்களுக்கு இருக்க வேண்டும்.

> தேசிய ரீதியிலான நியாயமான கோரிக்கைகளுக்கு, வடக்கு கிழக்கு மக்களும் தங்களுடைய தார்மீக ஆதரவை வழங்குவார்களாயின் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான அந்நியோன்யமும் தேசிய நல்லிணக்கமும் வலுப்படும்

> நியாயமற்ற கோரிக்கைகளுக்கு வடக்கு மக்கள் பங்களிக்காமல் விலகி இருப்பதனை இன ரீதியான அல்லது பிரதேச ரீதியான நிலைப்பாடாக கருதுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

# அரசியல் ஸ்திரத்தன்மை இன்றேல் பொருளாதார மீட்சி கிடையாது!

இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்குப் பொருளாதார உதவிகள் மாத்திரமன்ற, அரசியல் ஸ்திரத்தன்மையும் அவசியமானது என்ற கருத்துகள் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாகவே அரசியலமைப்பைத் திருத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருந்த போதும் நாட்டுக்குத் தற்பொழுது அவசியம் பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வு மாத்திரமே, அரசியல் ரீதியான தீர்வு எதுவும் அவசியம் இல்லையெனக் கூறும் ஒரு சாராரும் அரசாங்கத்தில் இருக்கத்தான் செய்கின்றனர்.

இருந்தபோதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதே அமைப்புக்களின் உதவியை நாடுவதாயின், நிச்சயமாக அரசியல் ஸ்திரத்தன்மை நாட்டில் காணப்பட வேண்டும். இது குறித்துக் கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம் துக்கான தனது தனிநபர் சட்டமூலத்தைக் கையளித்திருந்தார்.

இந்தத் தனிநபர் சட்டமூலங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டன. இருந்தபோதும் நீதி அமைச்சராக விஜயதாச ராஜபக்ஷ பதவியேற்றுக்



## துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைப்பதுடன், ஆணைக்குழுக்களை பலப்படுத்துவதே அரசியல் உறுதித்தன்மைக்கான வழி

அரசியலமைப்பு ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தி அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைப் பலப்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட 20 ஆவது திருத்தத்தை மாற்றியமைத்து, பாராளுமன்றத்துக்கும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அதிகாரத்தை வழங்கக் கூடிய வகையில் 19 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்கள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்தாடல்கள் வலுவடைந்துள்ளன.

இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் தனிநபர் சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தனிநபர் சட்டமூலமாக 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கையளித்திருந்தார். அத்துடன், தற்போதைய நீதி அமைச்சர் விஜதாச ராஜபக்ஷ எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது அரசியலமைப்புத் திருத்தத் கொண்டு அரசாங்கத்தின் சார்பில் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனையை சமர்ப்பித்தமையால் தனது தனிநபர் சட்டமூலத்தை மீளப் பெற்றுக் கொண்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் கட்சி சமர்ப்பித்த 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட

## அனைத்து அரசியல் கட்சிகள் தரப்பிலும் வலுவடையும் புதிய சிந்தனை!

மூலம் மீதான தனிநபர் சட்டமூலம் குறித்த உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் அண்மையில் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் உள்ள சில விடயங்கள் அரசியலமைப்புடன் உடன்படும் வகையில் அமையவில்லையென்பதால் அவ்வாறான விடயங்களை முன்வைப்பதாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மாத்திரமன்றி சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில் குறிப்பிட்டிருந்தது.

ரஞ்சித் மத்துமபண்டாரவின் தனிநபர் சட்டமூலம் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் எனப் பெயரிடப்பட்டிருப்பதால் அரசாங்கம் தயாரித்துள்ள அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் 22 ஆவது திருத்தச்சட்டமூலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு கடந்த அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், இது வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதனைப் பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் பதவியை

## அரசியலமைப்புத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகின்றது!

மாத்திரம் வகிப்பது, அமைச்சர்கள் நியமனத்தின் போது பிரதமரின் மதியுரையின் கீழ் நியமனங்களை மேற்கொள்வது, சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் இச்சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களைப் பலப்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

இதுஇவ்விதமிருக்க, பாராளுமன்றத்தின் செயற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றித் தொடர்ச்சியான கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக பாராளுமன்றத்தில் காணப்படும் குழுக்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் தற்பொழுது கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு), அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்க நிதி பற்றிய குழு, பொதுமனுக்கள் பற்றிய குழு ஆகியவற்றின் அதிகாரத்தைப் பலப்படுத்துவது குறித்த யோசனையை சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அண்மையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த யோசனை நிலையியற் கட்டளைகள் குறித்த குழுவில் கலந்துரையாடப்படவுள்ளது. இதில் கலந்துரையாடப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் நிலையியற் கட்டளைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களாகப் பதவி வகிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகரித்த பங்களிப்பைக் பெற்றுக் கொள்ளும் நோக்கில் துறைசார் மேற்பார்வைக் குழுக்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

**இலங்கையில் எரிபொருள் நெருக்கடி தற்போது ஆபத்தான கட்டத்தை நெருங்கி விட்டது. வாகன பாவனையாளர்களுக்கு போதுமான அளவு விநியோகிப்பதற்கென எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் டீசல், பெற்றோல் தற்போது கைவசம் கிடையாது. நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரும்பாலானவை மூடப்பட்ட நிலையில் கிடக்கின்றன.**

# இடுக்கண் களையும் நல்லெண்ணம் கொண்டதே இந்தியாவின் நட்பு!

எரிபொருள் நிலையத்துக்குள் எவரும் பிரவேசிக்க முடியாதவாறு அவற்றின் நுழைவாயிலுக்கு தடுப்பு நாடா கட்டப்பட்டுள்ளது. ஆனால் எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுக் கிடந்தாலும், வாகன உரிமையாளர்கள் ஏதோவொரு அசட்டுத்தனமான நம்பிக்கையில் தங்களது வாகனத்தை கியூவரிசையில் நிறுத்தி வைத்து விட்டு இரவுபகலாக வீதியில் காத்துக் கிடக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் உண்மை நிலைவரத்தை மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறி விட்டது.

'எரிபொருள் கையிருப்பைப் பொறுத்தவரை நாட்டின் நிலைமை கவலைக்குரியதாகவே உள்ளது. மக்கள் முடிந்தவரை பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. ஆனால் நாட்டின் அத்தியாவசிய சேவைகளை நாம் தடையின்றி முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதற்கான எரிபொருளை அரசாங்கம் கையிருப்பில் வைத்துள்ளது. எனவே மக்களின் பாவனைக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் நிலவுகின்ற நெருக்கடியானது தவிர்க்க முடியாததாகும்'.

இதுவே அரசாங்கத்தின் இப்போதைய நிலைப்பாடு ஆகும். அதேசமயம் நாட்டின் உண்மை நிலைமையும் இதுதான். மக்களின் அன்றாட வாழ்வை இயக்குவது எரிபொருள்தான் என்பது இப்போதுதான் நன்கு புரிகின்றது.

அந்நிய செலாவணிக் கையிருப்பு தீர்ந்து போனதால் எமது நாடு மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளதென்பது உலகுக்கே தெரிந்த விடயமாகி விட்டது. இதில் ஒளிவுமறைவுக்கு இடமே இல்லை. இலங்கைக்கு இன்றைய இக்கட்டான தருணத்தில் கைகொடுத்து உதவுவதற்கு சில நாடுகள் முன்வந்துள்ளன. ஆனாலும் அந்நாடுகளின் உதவிகள் எமது நாட்டை வந்தடைவது எப்போது என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை!

இலங்கையின் நெருக்கடி பாரதூரமானது. வெளியுலகில் இருந்து வருகின்ற உதவிகளை எமது நாடு எந்நேரமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. உடனடியான உதவிகள்தான் இலங்கைக்குத் தேவையாக இருக்கின்றன. இந்த விடயத்தில் இந்தியாவை மட்டுமே இவ்வேளையில் குறிப்பிட்டுக் கூற வேண்டியிருக்கின்றது.

'உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு' என்பது வள்ளுவப் பெருமானார் கூறியுள்ள வாசகம் ஆகும்.

அதாவது 'ஒருவனின் உடை கீழே நழுவி விழுகின்ற வேளையில், அவனது கை எத்தனை விரைவாக செயற்பட்டு அந்த உடையை பற்றிக் கொள்கின்றதோ, அத்தனை வேகமாக நண்பனின் இடர் வேளையில் விரைந்து உதவுவதே உண்மை நட்பு ஆகும்' என்பதே இக்குறளின் இலகுவான விளக்கம் ஆகும்.

மனிதனின் நெறியான வாழ்வுக்கு அரிய கருத்துகளை எழுத்து வடிவில் தந்து விட்டுச் சென்றுள்ள திருவள்ளுவப் பெருமான் உதித்த பூமி இந்தியா ஆகும். வள்ளுவப் பெருமானாரின் கூற்றுகளை நாம் நடைமுறையில் காண்பது போலவே இந்தியாவின் இன்றைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இவ்வேளையில் எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் விரைந்து வந்து உதவுகின்ற நாடு இந்தியாவாகவே உள்ளது. உணவு, எரிபொருள், விவசாயப் பசளைகள், மருந்துப் பொருட்கள் என்றெல்லாம் இவ்வேளையில் இந்தியா வாரி வழங்குகின்ற உதவிகள் எண்ணிலடங்காதவை ஆகும்.

இலங்கைக்கு இலகு முறையில் மீளச்செலுத்தக் கூடியதான கடனுதவிகளையும் இந்தியா பெருமளவில் வழங்கியுள்ளது. கொவிட் தொற்று வேளையில் தடுப்பூசிகளை உடனடியாகவே வழங்கி எமது நாட்டின் அச்சத்தைத் தணித்து உதவிய நாடு இந்தியா என்பதும் மறக்க முடியாத வரலாறாக இருக்கையில், இன்றைய பொருளாதார உதவிகளும் அவ்வாறானதுதான்.

இந்தியா இத்தனை உதவிகளை வழங்குகின்ற போதிலும் அதனைக் கொச்சைப்படுத்தும் வகையில் இலங்கையில் அரச எதிர்ப்பு சக்திகளும், சில ஊடகங்களும், இனவாத சக்திகளும் தொடர்ந்து செயற்பட்டு வருவதுதான் கவலைக்குரிய விடயம். ஆனாலும் இந்தியா இவ்வாறான ஆதாரமற்ற வீணான விமர்சனங்கள் குறித்து ஒருபோதும் அலட்டிக் கொண்டது கிடையாது. இந்தியாவின் உதவிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. தற்போது இலங்கைக்கு எரிபொருளை மேலும் வழங்குவதற்கான முயற்சிகள் இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட அதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். இந்தியாவுடன் மிக நெருக்கமான நட்புறவைக் கொண்ட இலங்கையின் தூதுவராக மிலிந்த மொரகொட திகழ்கின்றார். இந்திய மத்திய அரசின் உயர்மட்டத் தலைவர்கள் பலருடன் நட்புறவு கொண்டவர் மிலிந்த.

அது மாத்திரமன்றி, இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் இந்திய உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் மிலிந்த மொரகொட மேற்கொண்ட முயற்சிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆகும். அவரது முயற்சிகளின் பலாபலன்கள் இன்றைய வேளையில் மிகவும் அதிகம் எனலாம்.



## நான்கு கப்பல்களில் எரிபொருளை கொண்டு வருவதன் மூலம் பற்றாக்குறையை தீர்த்து வைப்பதற்கு இலங்கை முயற்சி

எமது நாட்டின் இன்றைய எரிபொருள் நெருக்கடியைத் தணிப்பதிலும் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தற்போது பெருமுயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அதாவது இலங்கைக்குத் தேவையான எரிபொருட்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

இலங்கை ரூபாவில் பணம் செலுத்தி இந்தியாவில் இருந்து எரிபொருள் பெறுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்திய எரிபொருள் அமைச்சர் ஹர்திப் சிங் பூரியுடன் இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.



## இந்திய எரிபொருள் அமைச்சருடன் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட பேச்சு

இந்தப் பேச்சுக்களின் பலனாக டீசல் அடங்கிய கப்பல் ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு இந்தியா உடன்பட்டுள்ளதாக அறிய வருகிறது. இன்னும் ஒரு வார காலத்தில் இந்தக் கப்பல் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பெற்றோல் அடங்கிய கப்பலொன்றை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பாக சிங்கப்பூருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்துள்ளது. இந்தக் கப்பலும் சில தினங்களில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க இலங்கை அரசுக்கு முழுமையான ஆதரவு வழங்குவதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளதென்பது இந்த உதவிகள் மூலம் தெளிவாகின்றது. இந்திய அரசாங்கத்தின் நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் விடயத்தில் இலங்கை அரசுக்கு இந்தியாவின் முழுமையான ஆதரவை கடந்த மே மாதத்தில் தெரிவித்திருந்தமையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கடந்த மாதம் புதுடெல்லியில் உள்ள நிதியமைச்சின் அலுவலகத்தில் நிர்மலா சீதாராமனைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் எரிபொருள் நெருக்கடியைத் தணிப்பதில் தொடர்ந்தும் உதவியளிக்கும் உறுதிப்பாட்டில் இந்தியா

எஸ்.சாரங்கன்...




**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பில் அரசாங்கத்தின் பொருளாதார மீட்சிக் கொள்கைத் திட்டமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்...**



# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது எவ்வாறு?

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை கடந்த சில நாட்களுக்கு முன்னர் சந்தித்துக் கலந்துரையாடிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். பொருளாதார வேலைத்திட்டத் தயாரிப்பு விரைவில் பூர்த்தியடைந்ததும் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதுடன், இதற்கு அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத் திட்டங்கள் குறித்து இதில் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக நடைபெற்ற சந்திப்பில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ.டி சில்வா, இரான் விக்கிரமரத்ன, அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருடன் பேராசிரியர் சரித்த ஹேரத் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்ததுடன், அவர்கள் தமது ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது முதல் நாட்டின் பொருளாதார நிலைமைகள் மற்றும் பிந்திய நிலைவரங்கள் குறித்து அடிக்கடி பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்தி வருகிறார். அது மாத்திரமன்றி, உண்மை நிலைமை நாட்டு மக்களுக்கு மறைக்காமல் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள அவர் கசப்பான உண்மை நிலைவரங்களைக் கூறி வருகின்றார்.

அத்துடன், நாடு தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் ஊடாக எடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர் கொண்டிருப்பதுடன், இதற்காக பாராளுமன்றம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் பலமுறை வலியுறுத்தியுள்ளார்.



## இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சாதகமான நிலையில்... தொடர்ச்சியாக நடைபெறும் பேச்சுக்களின் ஊடாக விரைவில் கடன் உதவியை பெற்றுக் கொள்ள முடியுமென நம்பிக்கை!

இவ்வாறான பின்னணியிலேயே பொருளாதார நெடிக்கடியை அரசாங்கம் எதிர்கொள்வது குறித்த வேலைத்திட்டம் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## பொருளாதார மீட்சிக் கொள்கை திட்டம் அரசினால் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

இது இவ்விதமிருக்க, கடந்த சில நாட்களுக்கு முன்னர் தேசிய பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் செய்தி முகாமையாளர்களைச் சந்தித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவர்களுக்கு நாட்டு நிலைமை குறித்து தெளிவான விளக்கமளித்திருந்தார்.

குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட தற்போதைய சூழல் பற்றி விளக்கமளிக்கப்பட்டிருந்தது. இச்சந்திப்பில் பிரதமருடன், பிரதமர் அலுவலகத்தின் பணியாட்தொகுதியின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் ருவான் விஜயவர்த்தன, பிரதமரின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

## நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒத்துழைப்புக் கோருகிறார் பிரதமர்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் முழுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் முன்பதிவு செய்யப்பட்ட பெற்றோல் தொகுதி இம்மாதம் 22 ஆம் திகதியே கிடைக்கவிருப்பதாக இங்கு கூறப்பட்டது.

இருந்தபோதும் அதற்கு முன்னர் வேறு மார்க்கத்தின் ஊடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும், இந்திய எண்ணெக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அவசரமா 5500 மெற்றிக் தொன் டீசலைப் பெற்றுக் கொண்டு அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவிருப்பதாகவும் சாகல ரத்நாயக்க ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு விளக்கமளித்தார்.

அதேநேரம், எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது. 3700 மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய லிற்றோ நிறுவனம் 20 மில்லியன் டொலர்களைப் பெற்றிருப்பதாகவும், இதற்கமைய இம்மாதம் 6ஆம் திகதி ஒரு தொகுதி எரிவாயு இலங்கைக்குக் கொண்டுவரப்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 30,300 மெற்றிக் தொன் எரிவாயு இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளது. 10000 மெற்றிக்தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக லிற்றோ நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதற்கமைய விரைவில் இந்த இறக்குமதி மேற்கொள்ளப்படும் என லிற்றோ நிறுவனத்தின் சார்பில் கூறப்பட்டுள்ளது.





இது இவ்விதமிருக்க, எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிக்கும் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும் என அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்திருந்தார். இதனால் தனியார் வாகனங்களின் போக்குவரத்து பெருமளவு குறைந்துள்ளது. பொதுப் போக்குவரத்து சாதனங்களை மாத்திரமே மக்கள் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டிருப்பதால் வீதிகளில் வாகனங்கள் கணிசமாகக் குறைவடைந்துள்ளன. அதேநேரம், பேருந்துகள் மற்றும் ரயில் வண்டிகளில் மக்கள் நெரிசல் அதிகரித்திருப்பதையும் காண முடிகிறது.

அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ள போதும் எரிபொருள் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதாக அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வைத்தியர்கள், பொலிஸார் மற்றும் கல்வித்துறையினர் எரிபொருள் நிலையங்களுக்குச் சென்று எரிபொருளைப் பெற முயற்சிக்கும் போது அங்கு ஏற்கனவே வரிசையில் நிற்கும் பொது மக்களால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டு முரண்பாடுகள் ஏற்படும் பல்வேறு சம்பவங்களை ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் அத்தியாவசிய சேவையில் உள்ளவர்களுக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிரமும் இன்றிப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ளன.

மறுபக்கத்தில், எரிபொருள் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி கறுப்புச் சந்தை வியாபாரங்கள் அதிகரித்துள்ளமை குறித்த முறைப்பாடுகளும் காணப்படுகின்றன. திட்டமிட்ட ஒரு சில குழுக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து தமது வாகனங்களில் குறிப்பாக முச்சக்கரவண்டிகளில் எரிபொருளை நிரப்பி, பின்னர் அவற்றை வெளியே எடுத்து கறுப்புச் சந்தையில் அதிக விலையில் விற்பனை செய்யும் செயற்பாடுகள் குறித்த தகவல்கள் காணப்படுகின்றன.

இருந்தபோதும் வைத்தியசாலைக்குச் செல்வது போன்ற அவசர தேவைகளுக்காக அதிக விலை கொடுத்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் நிலைக்குப் பலர் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, இவ்வாறான கறுப்புச் சந்தை செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி, தனியார் வாகனங்களின் பயன்பாட்டை விட பொதுப் போக்குவரத்து சாதனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதற்கான மாற்றுத் திட்டங்களும் செயற்படுத்தப்பட வேண்டும்.

## எரிபொருளை எத்தகைய வழியிலாவது நாட்டுக்குக் கொண்டு வந்து மக்களின் சிரமங்களைத் தணிப்பதற்கு மாற்றுவழிகளை ஆராய்கிறது அரசாங்கம்!



இதன் ஒரு அங்கமாக பேருந்துகள் மற்றும் ரயில் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். இதன் ஊடாக தனியார் வாகனப் பயன்பாட்டைக் குறைத்து பொதுப் போக்குவரத்து சாதனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க முடியும். இவ்வாறான திட்டங்களை அரசாங்கம் கொள்கை ரீதியாக எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். எதிர்காலத்திலாவது இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதிருக்க இது வழிவகுக்கும்.

எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ள நிலையில், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அண்மையில் கட்டாருக்குச் சென்று உயர்மட்ட சந்திப்புக்களில் கலந்து கொண்டிருந்தார்.

கட்டார் அரசாங்கத்திடமிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், ஜனாதிபதியும் விரைவில் மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்று நேரடியான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சாதகமான நிலையில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக நடைபெறும் பேச்சுக்களின் ஊடாக விரைவில் கடன் உதவியை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான உதவிகளின் ஊடாக நாட்டை ஓரளவு பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீட்க முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## கம்பனி தரப்பை எதிர்கொள்ள முடியாத சங்கத்தரப்பு

# சங்கங்கள் இரண்டுபட்டிருப்பதால் கொண்டாடி குதூகலிக்கும் கம்பனிகள்!

பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுக்கிடையே நிலவும் ஒற்றுமை இல்லா நிலைமையை கம்பனி தரப்பினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாக இவ்வார ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார் இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்.

வாஸ்தவமான சங்கதி. ஆனால் புதிய தகவல் அல்ல. இதைத்தான் கடந்த பல சகாப்தங்களாக சொல்லியும் எழுதியும் வருகின்றார்கள். ஆரம்பத்தில் இடதுசாரி, வலதுசாரி சித்தாந்தங்களை மையமாகக் கொண்டு தொழிற்சங்கப் பணிகளை ஆரம்பித்த சில தலைமைகள் பின்னர் அரசியல் ஆர்வம் கொண்டு தமது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டன.

இதனால் அவர்களை நம்பிய தொழிலாளர்கள் அம்போவென கைவிடப்பட்டனர். இதேவேளை ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டம், 1987களில் உருவாக்கம் பெற்ற மாகாண சபைகள் முறைமை போன்றவை பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் வீரியத்தை கட்டுப்படுத்தியது.

1989களில் இ.தொ.காவில் இருந்து பிரிந்து சென்ற பெ. சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியை ஆரம்பித்தார். இவரது தனிப்பட்ட ஆளுமை நம்பிக்கைளை உற்பவித்தது. அவரும் தொழிற்சங்க வாயிலாக அரசியலுக்கு உள்வாங்கப்பட்டார். அவர் வாழ்ந்தவரை மக்கள் அபிமானத்தை காப்பாற்றினார்.

உண்மையில் தலைமைத்துவ போட்டி, ஆதிக்கம், தனிமனித ஆராதனை காரணமாகவே தொழிற்சங்கப் பிளவுகள் ஏற்பட்டன.

இப்பிளவுகள் புதிய பரிமாணத்துக்கான வாயில்களாக அமையாததன் காரணமாக சுயநல தேவைகளுக்கான சந்தர்ப்பங்களாக மாற்றப்பட்டன. குறிப்பாக அரசியலை ஆதாயம் தரும் மார்க்கமாக எண்ணியவர்கள் தொழிற்சங்க தாற்பரியங்களைக் காவு கொடுக்கலாயினர். இதனால் தொழிற்பிரச்சினைகள் கிடப்பில் போடப்பட்டன.

வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு கிடைத்தமையினால் உரிமைகோரல் என்னும் முழக்கத்தின் பேரில் அவர்களை வாக்கு வங்கிகளுக்கான பலிகடாக்களாகவே மாற்றி விட்டுள்ளார்கள் இந்தத் தலைமைகள்.

**இ.தொ.காவிலிருந்து தமிழ் முற்போக்குக் கூட்டணி வரையிலான கட்சிகள் இதற்கான வகிபாகத்தை ஏற்றே ஆக வேண்டும். கடந்தகால சம்பள அதிகரிப்பு போராட்டங்களில் கூட தமது ஒற்றுமையை பிரதிபலிக்காமல் ஒண்டிக்கு ஒண்டி சண்டி என்ற போக்கிலேயே மலையகத் தலைமைகள் செயற்பட்டிருக்கின்றன.**

இ.தொ.காவிலிருந்து தமிழ் முற்போக்குக் கூட்டணி வரையிலான கட்சிகள் இதற்கான வகிபாகத்தை ஏற்றே ஆக வேண்டும். கடந்தகால சம்பள அதிகரிப்பு போராட்டங்களில் கூட தமது ஒற்றுமையை பிரதிபலிக்காமல் ஒண்டிக்கு ஒண்டி சண்டி என்ற போக்கிலேயே மலையகத் தலைமைகள் செயற்பட்டிருக்கின்றன.

பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் இன்று பலவீனமடைந்து போயுள்ளன. கூட்டு ஒப்பந்தமும் கைவிடப்பட்ட நிலையில் தொழிற்சங்கங்கள் தனித்தனி தீவுகளாக நின்று தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளன. அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்களால் எதுவுமே ஆனதாகத் தெரியவில்லை. எனவேதான் பொது எதிரியோடு போராடுவதை புத்திசாலித்தனமாக தவிர்த்து தமக்குள்ளேயே குடுமிப்பிடிச் சண்டைகளை நடாத்தி தாமும் குழம்பி மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கின்றன மலையகத் தலைமைகள்.

1000 ரூபா சம்பள அதிகரிப்பை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக உறுதி செய்து மாதங்கள் பல ஆகிவிட்டன, எனினும் முறையாக அது நடைமுறைக்கு வரவில்லை. எனினும் கம்பனித் தரப்பை இணக்கப்பாட்டு வழிக்குக் கொண்டுவர முடியாதுள்ளது. சாமிவரம் கொடுத்தாலும் பூசாரி வழிவிடாத கதையாகியுள்ளது சம்பள அதிகரிப்பு.

இதுவரை இ.தொ.கா இந்த விவகாரம் சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் அது ஏன் சாத்தியப்படவில்லை என்றொரு கேள்வி எழுகிறது. இ.தொ.காவும் இன்று பலவீனம் அடைந்துள்ளதன் வெளிப்பாடாக இதனை ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது?

பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை தோட்டக் கம்பனிகள் பயன்படுத்தலாம். ஆனால் தம்மை ஒற்றுமைப்படுத்திக் கொள்ள இதுவரை இ.தொ.கா. உருப்படியாக என்ன செய்துள்ளது? அல்லது தமிழ் முற்போக்குக் கூட்டணிதான் என்ன செய்துள்ளது? தேசியம் பேசுகிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் மனோ கணேசன் மலையக தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக செயற்பட எதனையும் செய்வதாக தெரியவில்லை.

பெரும் அவதிக்குள்ளாகி அல்லோல கல்லோலப்படுகின்றார்கள் மலையக மக்கள். விலைவாசி வான்முட்டும் அளவுக்கு உயர்ந்துக் கொண்டிருக்கின்றது. எரிபொருள் பிரச்சினையால் வேலைவாய்ப்புகளும் குறைவடைந்து வருகின்றது.

சவாலான இந்தப் பொழுதில் சவடால் பேசிக் கொண்டிருப்பதால் என்ன பயன்.

மலையக தொழிற்சங்க அமைப்புகள் தமது வேற்றுமை உணர்வுகளை ஓரங்கட்டி விட்டு பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு செயலாற்றினால் மட்டுமே சம்பள அதிகரிப்பும் மற்றும் அனைத்து பிரச்சினைகளையும் அடியோடு தீர்க்கலாம் என்று ஜீவன் தொண்டமான் நம்பினால் அதற்கான முன்னகர்வுகளை எடுக்கலாமே!

அதனை பெருந்தோட்ட மக்கள் முன்னிலையில் வைக்கலாமே. விட்டுக் கொடுப்புடன் முன்வரும் பட்சத்தில் அதற்கு முட்டுக்கட்டை போடும் தலைமைகளின் முகமூடிகள் சுலபமாக கிழிக்கப்படும் வாய்ப்புக் கிட்டும் அல்லவா?

இதனை விட்டு ஏதோ ஒரு மூன்றாம் தரப்பு பார்வையாளனின் பதிவு போல குறைசொல்லிக் கொண்டிருப்பதால் மக்கள் சமாதானம் அடையப் போவது கிடையாது.

ஏதாவது முன்னெடுப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்படுமிடத்து யார் தலைமை தாங்குவது? யாருக்கு முதன்மை? என்றெல்லாம் கௌரவப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததன் காரணமாக சந்தித்துவரும் தோல்விகளை இனியும் மக்கள் எவ்வளவு காலத்துக்குதான் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

பன். பாலா ...



## பெருந்தோட்டங்களில் குளவிக் கொட்டு:

# நிர்வாகங்களுக்கு மட்டுமல்ல: தொழிலாளர்களுக்கும் அக்கறை இல்லை!



தேயிலை மலைகளில் உள்ள மரங்களிலும் அதை அண்டிய பகுதிகளிலும் தேயிலைத் தூர்களிலும் இன்று குளவிகள் கூடுகட்டி வாழ்கின்றன. முன்னர், அதாவது முப்பது வருடங்களுக்கு முன்னர் இரண்டு வகையில் குளவிகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.

தோட்ட நிர்வாகமே தகுதியானவர்களை அமர்த்தி குளவிக்கூடுகளை சுட்டெரித்து குளவிப் பெருக்கத்தைத் தடுத்தது. தோட்டங்கள் தோறும் குளவி சுடுபவர்கள் இருந்தனர். இவர்கள் குளவிக்கூடுகளை மிக நாசுக்காக சுடுவர்.

இரவு வேளையில் பெரிய பந்தங்களைக் கொண்டு கூடுகளைச் சுடுவார்கள். கீழே விழும் குளவிகளை மானா போன்ற பற்றைகளைக் கொண்டு எரிப்பர். இப்படி குளவிகள் சுட்டு அழிக்கப்பட்டு மக்களை தோட்ட நிர்வாகங்கள் காத்துவந்தன.

இதேவேளை, தேன் எடுக்கும் வித்தை அறிந்தோர் எல்லா தோட்டங்களிலும் இருந்தனர். இவர்கள் பலவிதமான வித்தைகளைக் கையாண்டு தேன் எடுப்பார்கள். சுருட்டுப் புகையை ஊதி குளவிகளை விரட்டி தேன் ராட்டைகளை வெட்டி எடுப்பர்.

குளவிகளின் பெருக்கம் இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது. மனிதர்கள் நடமாட்டம் இருக்கும் இடம் பாதுகாப்பற்றது என குளவிகள் கருதி மனித நடமாட்டம் அற்ற பகுதிகளில் மறைவாக கூடுகட்டி வாழ்ந்து வந்தன.

இன்று தோட்ட நிர்வாகங்கள் குளவிக்கூடுகளை சுட்டெரிப்பதில்லை. தேன் எடுப்பவர்களும் எம் மத்தியில் இல்லை. தேனீக்கள் தாவர இனப்பெருக்கத்திற்கு பெரும் உதவிபுரிந்து வருவதால் தேனீக்களைக் கொல்வது சட்டப்படி குற்றமாகும்.

இதனால் தோட்ட நிர்வாகம் கூடுகளை சுட்டு அழிக்க முன்வருவதில்லை. தோட்டத் தொழிலாளர்களே தாமாக முன்வந்து குளவிக்கூடுகளை சுட்டெரிக்கின்றனர். இன்று சட்ட சிக்கல், பொலிஸ் பயம் என இவர்களுடைய கைகள் கட்டப்பட்டுள்ளன.

**நட்ட வளர்க்காத வாகையின மரங்கள் தேயிலை மலைகளிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் வளர்ந்து பெரும் விருட்சங்களாக உள்ளன.**

இதேவேளை இன்று தேயிலை மலைகள் காடாகி வருகின்றன. தோட்ட நிர்வாகம் தேயிலையில் கிடைக்கும் வருமானத்தை விட மரங்கள் வளர்த்து வெட்டுவதன் மூலமாக அதிக வருமானத்தை ஈட்டிவருகின்றன. தேயிலை மலைகளில் ஏராளமான உயரமான மரங்கள் காணப்படுகின்றன. இவை பூக்கும் காலங்களில் இவற்றில் தேனீக்கள் கூடுகட்டுகின்றன. நட்ட வளர்க்காத வாகையின மரங்கள் தேயிலை மலைகளிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் வளர்ந்து பெரும் விருட்சங்களாக உள்ளன. இவற்றில் நல்ல தேன் சுரக்கும் பூக்கள் இருப்பதால் இவை பூக்கும் காலங்களில் இந்த மரங்களில் கூடுகளை கட்டுகின்றன.

கூடுகளை நல்ல தேன் பிடிக்கும் காலத்தில் பருந்துகள் வந்து தேன்ராட்டைகளை கௌவிக்கொண்டு செல்கின்றன. ஆத்திரமடைந்த குளவிகள் கோபத்தோடு பருந்தை துரத்தும்போது பருந்துகள் நரித்தனமான ஒரு வேலையை செய்கின்றன.

மனிதர்கள் அல்லது ஆடு மாடு போன்ற விலங்குகள் உள்ள இடங்களில் செங்குத்தாக தரையிறங்கி சில நொடிகளின் பின்னர் மேல் எழும்பிப் பறக்கின்றன. பருந்தைத் துரத்தும் குளவிகள் அவ்விடத்தில் உள்ள அப்பாவி மனிதர்களை அல்லது விலங்குகளை தாக்குகின்றன. பல குளவிக் கொட்டுகள் பருந்தின் சதியால் ஏற்படுபவை. ஏனெனில் குளவிக்கூடுகளை பெரும்பாலும் கலைப்பது பருந்துகளே.



தற்போது குளவிகள் தேயலைத் தூர்களிலும் கூடுகட்டுகின்றன. இவற்றை அறியாத எமது தொழிலாளிகள் அதிக கொழுந்துக்காக கூடுகளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் தேயிலை கொய்யும் போதும் குளவிக் கொட்டுக்கு ஆளாகின்றனர்.

தேயிலைத் தூரில் இருக்கும் குளவிக்கூடுகளில் கால்பட்டு கூடு கலைந்துவிட, குளவிகள் கோபமடைந்து தாக்குகின்றன. தூர்களில் கட்டப்படும் கூடுகளை அகற்ற தோட்ட நிர்வாகங்கள் மட்டுமல்ல: தொழிலாளர்களும் அக்கறை கொள்வதில்லை.

வேலைசெய்த களைப்பில் இருக்கும் இவர்கள் குளவி துரத்தும் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடமுடியாது அகப்பட்டு கொள்கின்றனர். உடனடியாக புகைமூட்டவும் வசதி இல்லை. தென் பிறகு குளவிக்கொட்டுக்கு உள்ளானவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வாகனமும் உடனடியாகக் கிடைப்பதில்லை.

பயனளிக்கும் பாதைகளோ ஓடைகளாக இருக்கின்றன. விரைவாக பயணிக்க முடியாது.ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முன் இறந்தவர்களும் குணமடைந்து வந்தாலும் இவர்கள் நடைப்பிணம் தான்.

ஏனெனில் குளவிக்கொட்டுக்கு உள்ளானவர்களில் உடல் வலுவிழந்து விடுகின்றது. கஷ்டமான வேலைகளைச் செய்ய முடியாது. அதேநேரம் தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு இலகு வேலை கொடுப்பதும் இல்லை. பலர் தொழிலைவிட்டு விடுகின்றனர்.

அடிக்கடி கூட்டம் போட்டு கோஷம் எழுப்பும் சங்கங்கள் தொழிலாளர்களை குளவிகளிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளையாவது எடுத்ததுண்டா?

வைத்தியர் வேண்டாம். வாத்தியார் வேண்டாம். கங்காணி வேண்டாம் கணக்கப்பிள்ளை வேண்டாம் எனப் போராடும் தொழிலாளர்கள் தமது உயிர் பாதுகாப்பை கோரி போராட்டங்களை செய்ததுண்டா? இல்லையே!

புசல்லாவ ரொட்சைல்ட் ஓ.ஆர்.சி தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை பழனி இராஜேந்திரன் தோட்டத் தொழிலை முடித்துவிட்டு வீடு திரும்பும்போது மதியம் 12 மணியளவில் குளவிக்கொட்டுக்கு உள்ளானார்.

புசல்லாவ வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும் பயனில்லை. இவருக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. என்ன? தொழில் சட்டக்கோவையில் இது தொடர்பான சரத்துக்கள் உள்ளனவா என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இதேதினத்தன்று நோர்வூட் பகுதியில் ஒருவரும் குளவிக்கொட்டால் உயிழிந்தார். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் வெணிக்கொண்டுவரப்பட வேண்டும்.





ஆர். நவராஜா ...

(படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# நிலைபேறான அபிவிருத்தியும் கறுப்புச் சந்தையும்



கருணாகரன்

இலங்கையின் நிலவரத்தைப் பற்றிக் கொஞ்சம் ஆழமாக நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. ஒரு ஆண்டுக்கு முதல் நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) என்று வாய்க்கு வாய் எல்லோருமே சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். அப்படிச் சொல்வதே ஒரு நாகரீகமாக (fashionably) இருந்தது. தேசிய அரங்கில் மட்டுமல்லாமல், மாவட்டங்கள், பிரதேசங்கள் என எங்கும் இதைப்பற்றிய உரையாடல்கள், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் எனப் பெரிய திருவிழா களைகட்டியிருந்தது. படித்தவர்கள், அதிகாரிகள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தோர், அரசியல்வாதிகள் – ஆட்சித்தரப்பினர் எல்லாம் ஒரு முகம் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) யில் நாட்டை வளர்த்தெடுப்போம் என்று உறுதியுரைத்தனர். இதற்காகப் பல கோடி பணம் செலவழிக்கப்பட்டது. பலருக்கு இது ஒரு நன்மதிப்பாகவும் பெரும் உழைப்பாகவும் இருந்தது.

அப்பொழுது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றெல்லாம் சொல்லப்பட்டது. அல்லது அப்படிப் படம் காட்டப்பட்டது. தெரு முடுக்குகளில், கட்டிடங்களின் முன்னே, வாய்க்கால் கரைகளில், மின்பிறப்பாக்கிகளுக்கு அருகில், கோயில் வீதிகளில், சந்தை, சதுக்கங்களில் எல்லாம் "அபிவிருத்தியின் நாயகர்கள்" பல்லிழித்துக் கொண்டிருந்தனர். (அரசியல்வாதிகளின் படங்கள்). இன்னும் இந்த அபிவிருத்திக் "கட்டவுட்" களை நீங்கள் பார்க்க முடியும். (இதற்கான செலவு வேறு).

இதைப்போல இந்தத் திட்டங்களைத் தொடக்க வைக்கவும் முடித்துத் திறந்து வைக்கவும் செய்யப்பட்ட செலவும் கொஞ்சமல்ல. அதற்கான ஆளணியும் நிர்வாக நேர ஒதுக்கீடும் கூட அளவுக்கு அதிகமானதே. இதிலே எந்த ஆட்சியினரும் விலக்கல்ல. ஏட்டிக்குப் போட்டியாக இதைச் செய்தனர். உண்மையில் இதெல்லாம் அபிவிருத்திச் செயற்பாடு என்பதை விட அரசியற் செயற்பாடு என்று சொல்வதே சரியாகும். இதை இங்கே ஏன் சொல்கிறோம் என்றால், இந்தச் சந்தர்ப்பத்திலாவது நாம் உண்மைகளை துணிச்சலோடு அறிந்து, ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த காலத் தவறுகளிலிருந்து நேர்மையான முறையில் பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே. அதாவது இன்றைய துயரங்களிலிருந்து, நெருக்கடிகளிலிருந்து மீட்சியடைவதற்காக.

இப்படி நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) யைப் பற்றிப் பேசியவர்களையும் அந்தத் திட்டங்களில் ஈடுபட்டவர்களையும் இப்பொழுது எங்குமே காணவில்லை. பொருளாதார நெருக்கடி வந்தவுடன், அடுத்த கட்டம் என்ன என்று சொல்ல வேண்டியவர்கள், இந்த நெருக்கடிக்குக் காரணம் என்ன என்று பேச வேண்டியவர்கள் காணாமலே போய் விட்டனர். குறைந்த பட்சமாக தங்களுடைய நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development)க்கு என்ன நேர்ந்தது என்பதைக் கூடப் பேசுவதற்கு அவர்கள் முன்வரவில்லை. தயாரில்லை. பதிலாக எங்கேயாவது ஒரு லீற்றர் பெற்றோலை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். எங்கே மலிவான விலையில் பொருட்கள் கிடைக்கின்றன? அவற்றை வாங்கிச் சேமித்துக் கொள்ளலாம் என்று தங்கள் தனிப்பட்ட நலன்களைக் குறித்து மட்டுமே சிந்திப்பவர்களாகக் குறுகி விட்டனர்.

உண்மையில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு இவர்களும் காரணம். இவர்களில் யார் ஒருவரேனும் இத்தகையதொரு பொருளாதாரப் பிரச்சினை இலங்கையில் ஏற்படும் என்று முன்னுணர்ந்து – முன்னறிந்து சொன்னதில்லை, எச்சரித்ததில்லை. அந்தளவுக்கு அறிவுப் புள்ளியில் இந்த விசயம் இவர்களுக்குத் தட்டுப்படவில்லை. சிரத்தை இருந்தால்தானே அதைக்குறித்த ஆய்வும் அறிதற் சிந்தனையும் இருக்கும்!

ஆனால், இவர்கள் எல்லோரும் மிகத் தந்திரமாக ராஜபக்ஸ குடும்பத்தின் மீது பழியைச் சுமத்தி விட்டுத் தப்பி விடுகின்றனர். ராஜபக்ஸவினருக்கு நெருக்கடிகளிலும் தவறுகளிலும் பங்குண்டு என்பது மறுக்க முடியாதது. நாடே இதைப் பகிரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறது. அதற்காக மக்களுடன் சேர்ந்து தாமும் ராஜபக்ஸவினர் மீது பழியைச் சுமத்தி விட்டுத் தப்பித்து விட முடியாது இந்தப் பொருளாதாரத் துறையினர் மற்றும் பொருளாதார நிபுணர்கள்.

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை இருக்கும் என்றார் மகிந்த ராஜபக்ஷ. போரை முடிவுக்குக் கொண்டு வந்து, துரித கதியில் உட்கட்டுமானங்களை (வீதி அபிவிருத்தி, குளங்கள், கால்வாய்கள் புனரமைப்பு, நாடு முழுவதற்குமான மின்சார விநியோகம், பாடசாலைகள், மருத்துவமனைகள் விருத்தி, பொது நோக்கு மண்டபங்கள் தொடக்கம் அரச பணிமனைகள் வரை அனைத்து நிர்மாணத்தையும்) விருத்தியாக்கியதோடு, நாட்டின் அபிவிருத்திக்கான அடிப்படை உருவாக்கப்பட்டதாக அவர் கருதியிருக்கலாம். ஆகவே அபிவிருத்திக்கான அடிப்படை உருவாக்கப்பட்டதால், துரித கதியில் நாடு சுய பொருளாதார விருத்தியை நோக்கி முன்னேறும் எனவும் அவர் கருதியிருக்கக் கூடும். இன்று "மகிந்த சிந்தனை" என்ற அந்தக் கருத்திட்டத்தை எடுத்து ஆராய்ந்தால் அதன் குறைபாடுகளும் நிறைவும் புரியும்.

தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை வரைந்து கொள்ளாமல், வகுத்துக் கொள்ளாமல் அரசியல் பிரகடனமாக அதனை வரையறுத்துக் கொண்டதன் வெளிப்பாடே அந்தச் சிந்தனை அடிபட்டுப் போனதற்குக் காரணமாகும். இதில் விமல் வீரவன்ச, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு கூடுதல் பொறுப்புண்டு என்று சொல்லப்படுகிறது. இவர்களே அளவுக்கு அதிகமாக "மகிந்த சிந்தனை" பற்றிய விளம்பரங்களைச் செய்தவர்கள். அதில் மிஞ்சிய ஒரே லாபம் அல்லது நன்மை என்றால் அது இதுவரை செய்யப்பட்ட உட்கட்டுமான விருத்தியே. ஆனால் அதை மேலும் முன்னெடுக்கவோ தொடர்ந்து பராமரிக்கவோ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வீதிகள் சேதமடைந்தால் அவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதியோ எரிபொருளோ இல்லை.

உண்மையில் "அபிவிருத்தி" என்ற பெயரில் நடந்ததெல்லாம் உட்கட்டுமானம் (Infrastructure) மட்டுமே. இது அபிவிருத்திக்கான ஆரம்பச் செயற்பாடு. அடித்தளம். இதைச் சிலர் முன்பு குறிப்பிட்ட போது மறுத்து வாதாடியோருண்டு. அந்தளவுக்குத்தான் அவர்களுடைய பொருளாதாரம் குறித்த, அபிவிருத்தியைக் குறித்த புரிதல் இருந்தது.

நாம் அவர்களிடம் இப்பொழுது கேட்கலாம், "எங்கே நீங்கள் குறிப்பிட்ட அந்த அபிவிருத்தியெல்லாம்? அவற்றுக்கு என்ன நடந்தது?" என்று. "ஒரு வருடம் தாக்குப் பிடிக்க முடியாமல் எல்லாமே வெட்ட வெளியாகி விட்டதே. கையறு நிலையில், இன்று வந்து நிற்கிறோம். அந்தரம் அவசரத்துக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கே வக்கற்ற நிலை ஏன் வந்தது? " என.

திருவிழாக்காலத்தில் இரவில் கவர்ச்சியாக ஒளிரும் காப்பு, சீப்பு, கண்ணாடி மாளிகை காலையில் படுத்து விடுவதை போல எல்லாமே வெளிறிப்போய் விட்டன. தேசியப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் சுய பொருளாதார விருத்தியை நோக்கிக் கட்டம் கட்டமாக இலங்கை நகர்ந்திருக்குமானால், இன்றைய கையறு நிலை வந்திருக்காது.

அனைத்தையும் வெளியிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டும் என்ற தங்கு நிலைப் பொருளாதாரத்தை (தரகுப் பொருளாதாரத்தை) தொடர்ந்தும் பின்பற்றியதால், இன்று அந்நியச் செலாவணிக்கான தட்டுப்பாடு வந்தவுடன் அனைத்தும் படுத்து விட்டன. இதைச் சரியாகக் கணிப்பிடத் தவறியதன் விளைவே, நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) என்ற சொல் நம்மைப் பார்த்துப் பல்லிழிக்கிறது.

உண்மையில் நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) என்ற கருத்திட்டம் (Concept) உலகளாவிய அளவில் பேசப்பட்ட ஒன்று. 2000 த்தில் புதிய மிலேனியத்துடன் கவனமெடுக்கப்பட்ட இந்தக் கருதுகோள், முதற்கட்டமாக 2015 இல் ஒரு எல்லையை அடையும் எனவும் 2030 இல் இதன் இறுதி இலக்கை அடையும் எனவும் பேசப்பட்டது. சில நாடுகள் இந்த இலக்கை நோக்கி நகர்கின்றன. ஆனால், இலங்கையோ பின்னோக்கி வீழ்ந்துள்ளது. அது தன்னுடைய நிலையான தேசிய வருவாயை – உற்பத்திக் கூறுகளை இழந்ததன் விளைவே இது. இதை இந்தச் சந்தர்ப்பத்திலேனும் புரிந்து கொள்ளவில்லை என்றால் நாட்டுக்கு மீட்சியில்லை. நாட்டுக்கு மீட்சியில்லை என்றால் நமக்கும் மீட்சியில்லை.

ஆனால், இதைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. நாட்டுக்கு என்ன பிரச்சினையாவது வரலாம் போகலாம்.

நமக்கென்ன என்றவாறே பலரும் சிந்திக்கிறார்கள், செயற்படுகிறார்கள். இதனால்தான் நாடு இந்தளவுக்குச் சீரழிந்தது.

ஒரு சிறிய உதாரணம், வெளிப் பரப்பில் எரிபொருள் இல்லை. ஆனால் உள்ளூரில் தாராளமாக உண்டு. விலைதான் மூன்று நான்கு மடங்கு உயர்வு. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 3000/= வரை போகிறது. நன்றாகக் கவனிக்கவும் 300 இல்லை. 3000/=. டீசல் லீற்றர் ஒன்று, 800/= க்கு மேல். பல இடங்களிலும் எரிபொருள் மாஃபியாக்கள் உருவாகி விட்டனர். பதுக்கல்காரர் தாராளமாக உள்ளனர். கறுப்புச் சந்தைப் பொறிமுறையில் வெற்றிகரமாக அணிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதைப்பற்றிப் பகிரங்கமாக எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் யாரும் – எந்தத் தரப்பும் நடவடிக்கை எடுக்கவில்லை. பதிலாக கூடுதல் விலையைக் கொடுத்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இது எவ்வளவு தவறு என்று சிந்திக்கவில்லை. எப்படியாவது தங்களுடைய தேவை நிறைவேறினால் சரி என்று மட்டுமே சிந்திக்கிறார்கள்.

இது ஏன்? அப்படியென்றால் இந்தத் தவறை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்களா?

இந்த எரிபொருள் எங்கே இருந்து வந்தது? இவர்கள் தனியாகக் கப்பலில் இருந்து விசேடமாக இறக்கினார்களா? அல்லது இவர்களுக்கு அரசாங்கமோ பிற அனுமதிக்கப்பட்ட தரப்புகளோ விசேடமாக எரிபொருளை வழங்கினவா?

இல்லை. இல்லவே இல்லை.

அத்தனை எரிபொருள் மாஃபியாக்களும் (அடி) ஆட்களை வைத்தும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிறப்புச் சலுகை அடிப்படையிலும் அதிகமாகப் பெற்றுப் பதுக்கினர். இரவு பகலாக தெருவிலே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கால்கடுக்க, மனம் கொதிக்க நிற்கும்போதுதான் சனங்களின் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் கடந்து இதை இந்தப் பதுக்கல்காரர் வெட்கமின்றி, தயக்கமின்றிச் செய்தனர். (இவர்கள்தான் இனப்பற்றைப் பற்றியும் நீதியைப் பற்றியும் ஒடுக்குமுறையைப் பற்றியும் விடுதலையைப் பற்றியும் அதிகமாகக் கதைக்கின்றவர்கள் அப்படி நடிப்பவர்கள்)

இதை எந்த அரசியல்வாதிகளும் தடுக்க முற்படவில்லை. தெருவிலே நாட்கணக்காகச் சனங்கள் நிற்கும்போது அந்தப் பக்கமாக எந்த அரசியல் பிரமுகரும் எட்டிப் பார்க்கக் கூட இல்லை. ஆனால், தேர்தல் என்று வந்து விட்டால் வீடு வீடாக, தெருத்தெருவாக இந்தப் "பிச்சைகள்" வாக்குப் பிச்சை கேட்டு அலைவார்கள்.

இப்பொழுது பதுக்கிய எரிபொருட்களெல்லாம் ரகசிய ஏஜெண்டுகள் மூலமாக விற்கப்படுகிறது.

இதைக் கண்டும் காணாமல் இருக்கின்றன அரசியற் தரப்புகள். அரச நிர்வாகத் தரப்பு.பொலிஸ் மற்றும் படைத்துறை உள்பட பொறுப்பான பலவும்.

அதாவது "எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. கறுப்புச் சந்தை திறக்கப்பட்டுள்ளது."

இவ்வளவு பெரிய அரசியற் போராட்டங்கள், மாற்றங்கள் எல்லாம் நடந்த மண்ணில், தேசத்தில் மிகப்பெரிய அர்ப்பணிப்பைச் செய்த சமூகத்தில் நடக்கின்ற காரியங்களைப் பார்த்தீர்களா? இந்த அயோக்கியத்தனத்துக்கு என்ன பெயர்? இதற்கு என்ன மதிப்பு? இதற்கு என்ன நடவடிக்கை? இவர்களைச் சமூகம் தண்டிக்காமல் விட முடியுமா? மக்கள் திரண்டு இந்தப் பதுக்கலை மீட்கவோ முறியடிக்கவோ வேண்டாமா?

நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development) என்பது என்ன என முதலில் நம்முடைய சிந்தனையில் தெளிவுற வேண்டும். அதற்குப் பிறகே அனைத்தும்.

---

# சமூக உணர்வும், நற்பண்புகளும் கொண்ட ஒரு நல்ல நண்பன்

## "போரத்தோட்டை ரிஸ்மி"

"இளநெஞ்சன்"முர்ஷிதீன்
மாளிகாவத்தை



அன்பு நண்பர் "போரத்தோட்டை ரிஸ்மி" இறையடி சேர்ந்துவிட்டார் என்ற தகவலின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீள முடியவில்லை. இறப்பு இறைவனின் நாட்டம் என்பது எங்கள் ஈமானிய ஓட்டம். இருந்தாலும், நண்பர் ரிஸ்மியின் இழப்பு இன்னும் நம்ப முடியவில்லை.

இதயம் இன்னும் அழுகிறது.

ஐந்தாறு நாட்களுக்கு முன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தோம்.

ஜூன் மாதம் 28ஆம் திகதி திஹாரியில் உள்ள நண்பன் கவி நேசன் நவாஸின் வீட்டுக்கு போகவேண்டி இருந்த பயணத்தை, அடுத்த வாரம் (ஜுலை 5 ஆம் திகதி ) செவ்வாய்க் கிழமைக்கு மாற்றியிருந்தோம். றிஸ்மியின் வேண்டுகோளின் பேரில்.

"முர்ஷிதீன்,எனக்கு 27, 28ஆம் திகதிகளில் பாடசாலையில் விடுமுறை எடுப்பது சிரமம். அடுத்த வாரம் நான் ரெடி" என்று பச்சை கொடி காட்டியிருந்தார்.

நானும், கவிஞர்கள் கிண்ணியா அமீரலி, நஜ்முல் ஹுஸைன்,போரத்தோட்டை ரிஸ்மி ஆகிய நால்வரும்தான் இந்தப்பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தோம்.

இரண்டு மாதங்களுக்கு முன் திட்டமிட்டிருந்தும், அது கை விடப்பட்ட நிலையில், கடந்த வாரம் நண்பர் கிண்ணியா அமீரலி மீண்டும் தூண்டிவிட்டார்.

"பெட்ரோல் இல்லை என்பதால் மோட்டார் சைக்கிளில் போகாமல், பஸ்ஸில் போவோம் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஒரு கவிஞர், ஆசிரியர், இலக்கியவாதி என்பதற்கும் அப்பால் சமூக உணர்வும், நற்பண்புகளும் கொண்ட ஒரு நல்ல நண்பனை இழந்த வேதனையில் நான்.



கவிஞர் கிண்ணியா அமீரலியும் நானும், அவருடைய வீட்டில் கண்டவிருந்தோம்பலும்......

இளம் ஊடகவியலாளர் அனஸ் அப்பாஸின் வீட்டில் நடத்திய பலகத்துறை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களுடன் கவிஞர் ரிஸ்மி தலைமையிலான கலந்துரையாடலும்.....

வலம்புரி கவிதா வட்டத்தின் கவியரங்கு கொழும்புக்கு வெளியில், நீர்கொழும்பு, போரத்தோட்டை கலை இலக்கியப்பேரவையின் ஆதரவுடன் வெற்றிகரமாக நடத்தி முடித்த ஆளுமையும்...

என்னுடைய தலைமையில் இடம்பெற்ற வலம்புரி கவிதா வட்டத்தின் 75 ஆவது கவியரங்கில் கட்டாயம் பாட வேண்டும் என்று எனக்குக்கொடுத்த வாக்கின்படி, நீர்கொழும்பிலிருந்து தன்னுடைய குடும்ப வைபவமொன்றையே தவிர்த்து, கொழும்பு வந்த நட்பின் ஆழமும்...

இன்றும் என் கண் முன்னால்...... !

நண்பா ...... நீ எங்கள் நெஞ்சங்களில் வாழ்கிறாய்.....

எங்கள் பிரார்த்தனைகளில் புன்னகைக்கிறாய்.....

அந்த ஜன்னதுல் பிர்தவ்ஸ் உன் வரவுக்காய் காத்திருக்கின்றது....

எங்கள் ஊமைத்தனமான அழுகைக்கும் அப்பால்...உள்ளம் பெருமிதப்படுகிறது...

நீ எங்களுக்கு நண்பனாகக்கிடைத்தாய் என்பதற்காக !

---

## நல்லவர் றிஸ்மி சேர்! நாயனே சொர்க்கஞ் சேர்...

"மேமன் பாய்க்கவி!
டிவாங்ஸோ மலாய்க்கவி!
நீங்க கவிபாய் அலிபாய்!"
பதில் சலாத்தைப் பின்தொடரும்
றிஸ்மி சேரின்
சிரிப்புக் கலந்த குரல்... இனி
'இனிக்காது'...
அநாதைதான் இனிக் காது!
இருபதாண்டுகள் பார்த்த முகம்..
இறுதிக் கணத்தில்...
இயலாமலேயே...
'கால நிர்ணயம்...!
கண்ணில் நீர் நயம்!"
நல்லவர் றிஸ்மி சேர்...
நாயனே... சொர்க்கஞ் சேர்
வாப்பா இல்லாத
ஹஜ்ஜூப் பெருநாளை
வாழ்நாளில்
மறக்க முடியாது...
மருமகனே ஸெய்த்...!
வாப்பா வழி வாழ்!
பலகத்துறைக் கெங்கள்
பாவரங்கு 'வகவத்தை'
விருந்தளித்து கௌரவித்த
மகிழ்ச்சிப் பெருநாளை
மனமினிக்க ஞாபகிப்போம்....
றிஸ்மி சேர்...! உங்கள்
சொர்க்கத்து வாழ்வுக்காய்
தூயோனைப் பிரார்த்திப்போம்!
என் வாழ்வில் முதன்முதலாய்
என்னைப்
பிரதம அதிதியாய்க்
கல்லூரிக் கழைத்து
கௌரவித்த பெருமகனே!
அல்லாஹ்... இறுதியில்
உங்களைக்
கபுறறைக் கழைத்தானே...
என் ஞாபக விழியோரம்...
நிழலாய் நின்று
சிரிக்கும் தொடர்கனவுகள்...
இனி என்
தூக்கம் தொலைக்கும்...
துக்கம்
நெஞ்சை அடைக்கும்...!
எனது சந்தப்பா...
கவியெழுதத் தூண்டியதாய்...
வகவ மேடைக்கு
முதன்முதலாய் அறிமுகப்
படுத்தியதாய்...
என்னை அவையோர் முன்



கண்ணியப் படுத்தியதை...
எண்ணியெழுது கையில்
இருவிழி நீர் எனது கையில்...!
நட்புக் கழாது
நயனத்தில் நீரெதற்கு?
கல்லூரி நூற்றாண்டு
கவியரங்குத் தலைமைக்கு
எனக்கு வாய்ப்பளித்தீர்...!
இனிய நல் லாசானே...!
"கல்" என்ற உங்கள்
கவிதை ஓர்
வைரக்கல்!
அன்புக் கணவராய்...
பாசத் தந்தையாய்...
மாணவர்தம்
மனமினிக்கும் ஆசானாய்
சமூக சேவகனாய்...
சன்மார்க்க நெறி நின்று...
மக்கள் மனதை வென்று
மேன்மகனாய் வாழ்ந்த
றிஸ்மி சேர்...!
நீங்க
எனதொரு நானா...
எண்ணத்தில் வாழ்கின்றீர்...!
ஜென்னத்துல் பிர்தௌஸில்..
நலம் வாழ...
என்றென்றும் எங்கள்
பிரார்த்தனைகள்
பின்தொடரும்...!
ஆமீன்!

கிண்ணியா அமீர் அலி

# பதுக்கல் பேர்வழிகளுக்கு கொண்டாட்டமாகிப் போன

# அத்தியாவசிய பொருள் தட்டுப்பாடு

நூரளை எஸ். தியாகு

எங்கு பொருட்களுக்கு பெருமளவு தேவை இருக்கிறதோ அங்கே அவை தட்டுப்பாடாகுவதும் அவற்றின் விலை அதிகரிப்பதும் வழமையான சந்தைப் போக்கு. அதுபோலவே அப் பொருட்கள் பதுக்கப்படுவதும் கொள்ளை விலையில் விற்கப்படுவதும் நடைபெறத்தான் செய்யும்.

பிரச்சினை, இவற்றை இயல்பானவை எனக் கருதி அப்படியே விட்டு விடுவதா அல்லது தீவிர நடவடிக்கைகளை எடுத்து பதுக்கல்களை வெளியே கொண்டு வந்து சட்ட நடவடிக்கை எடுப்பதா?

இன்று ஒரு லீட்டர் பெட்றோல் ஆயிரம் ரூபாவுக்கு பின் கதவால் விற்கப்படுகிறது. ஒரு எரிவாயு சிலிண்டர் பத்தாயிரத்துக்கு போகிறது. அதற்கு அதிகமாகவும் பணம் கொடுக்க பலர் தயாராகவே உள்ளனர். எத்தனை தடவைகள் மண்ணெண்ணை வழங்கினாலும் வாங்குவோர் தொகை குறைந்தபாடாக இல்லை. காரணம், இல்லா வீடுகளிலும் லீட்டர் கணக்கில் மண்ணெண்ணெய் வாங்கி வைத்திருக்கிறார்கள். எத்தனை தடவைகள் வழங்கினாலும் அதே சனம் வரிசையில் நின்று மண்ணெண்ணெய் வாங்கி வைத்துக் கொள்வதைப் பார்க்க முடிகிறது. அடுத்த முறை நமக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சமே இந்த அதிகளவு சேமிப்புக்கான காரணம். மேலும் அதிக விலைக்கு விற்பனை செய்யலாம் என்ற எதிர்பார்ப்பும் மற்றொரு காரணம். விநியோகம் சீராக இருந்தால் பதுக்கல் இருக்காது. ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது மனிதனின் சேகரிக்கும் ஆவலும் அதிகமாகி விடுவது உலகெங்கும் இயல்பே!

டீசலுக்காக நண்பரொருவர் வரிசையில் நின்றார். அவரது வாகனம் நூறாவதாக நின்று கொண்டிருந்தது. அப்போது அவர் அருகே வந்த ஒரு முச்சக்கர சாரதி, உங்களுக்கு வரிசையில் 25ஆவது இடம் வேண்டுமா அல்லது 50தாவது இடம் வேண்டுமா/ 25ஆவது இடம் என்றால் 2500 ரூபா தாருங்கள். 50தாவது இடம் என்றால் 1500 தாருங்கள் என்று கேட்டாராம். வேண்டாம் எனக் கூறியவர், டீசல் வரிசையில் முச்சக்கர வண்டியை எப்படி நிறுத்துவீர்கள்? என்று கேட்டிருக்கிறார். நண்பரொருவரின் வாகனம் வருவம்வரை இடம் பிடித்து வைத்திருக்கிறேன் என்று அவர் சமாதானம் சொன்னாராம்!

ஆனால் இந்த நியாயங்களை முன் நிறுத்தி பதுக்கல்களை அனுமதிக்கலாமா? திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது... அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது என்ற எம்.ஜி.ஆர். பாடல் நினைவுக்கு வருகிறதா? பதுக்கலையும் அனாவசிய சேகரிப்பையும் தடுக்கத்தான் வேண்டும். தடுக்காவிட்டால் ஒரு போலியான தேவைகளையும் தட்டுப்பாட்டையும் அது சமூகத்தில் ஏற்படுத்திவிடும். இங்கே நாம் நுவரெலியாவில் நடக்கும் பதுக்கலைப் பார்ப்போம். ஏனெனில் அனைத்தையும் வியாபாரமாக்கும், எரிகிற வீட்டில் பிடுங்கியது. இலாபம் என்கிற மனப்பான்மை களையப்பட வேண்டியது அவசியம்.

எனக்கு அனைவரும் ஒத்துழைத்தால் மஸ்கெலியாவில் உணவுப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பவர்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவேன் என்கிறார் மஸ்கெலிய பிரதேசசபை உறுப்பினர் ராஜ்குமார். "பெருந்தோட்ட மக்கள் தற்பொழுது பாரிய பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ள நிலையில் அவர்களிடம் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்து வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றார்கள். இவர்களுடைய உண்மை முகத்தை வெளியில் கொண்டு வர வேண்டுமாக இருந்தால் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று ஆவேசப்படுகிறார் ராஜ்குமார். அது மாத்திரமல்ல இன்னும் பல இடங்களில் உணவுப் பொருட்கள் பதுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பகுதிகளிலும் எரிவாயு தட்டுப்பாடு மண்ணெண்ணை தட்டுப்பாடு வீட்டு சமையல் எரிவாயு தட்டுப்பாடு என்பதால் அனைத்திற்கும் மக்கள் வரிசைகளில் நிற்க வேண்டிய மிகவும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. வரிசையில் நின்ற மண்ணெண்ணைக்காக ஒருவர் உயிரிழந்த மிகவும் கவலைக்கிடமான சம்பவம் ஹட்டனில் நிகழ்ந்தது. இது தவிர இன்னும் பல இடங்களிலும் இந்த துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

உண்மையிலேயே பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றதா? அல்லது செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றதா?அல்லது வர்த்தகர்களால் திட்டமிடப்பட்டு பொருட்கள் பதுக்கப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றதா? இப்படிப் பல கேள்விகள் ஏற்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக ஆராய முற்பட்டோம். நுவரெலியா மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு 84638 லீற்றர் மண்ணெண்ணையும் சமையல் எரிவாயு 48456 (12.5 கிலோ) சிலின்டர்கள் தேவைப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபர பிரிவிற்கு பொறுப்பான கே.பி.விஜேரத்ன தெரிவிக்கின்றார். இந்த புள்ளிவிபரமானது 2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிறப்பு இறப்பு கணிப்பீட்டின்படியே கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஏழுலட்சத்து 80 ஆயிரம் பேருக்கே இந்த மண்ணெண்ணையும் சமையல் எரிவாயுவுமே தேவைப்படுவதாக கே.பி.விஜேரத்ன குறிப்பிடுகின்றார்.

**'நுவரெலியா மாவட்த்தில் எரிவாயு சிலிண்டர்கள், மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல், மா என சகல பண்டங்களும் தேவைக்கு அதிகமாகவே விற்பனையாகின்றன. ஆனால் தட்டுப்பாடு அப்படியேதன் இருக்கிறது அவை பதுக்கப்படுவதே ஒரே காரணம்'**

அதே நேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் 25 எரிவாயு நிரப்பு நிலையங்கள் இருப்பதாகவும் அவற்றில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 16 நிரப்பு நிலையங்களும் இந்திய நிறுவனத்திற்கு சொந்தமான 9 நிரப்பு நிலையங்களும் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தலுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.



அதே நேரம் நுவரெலியா மாவட்டத்திற்கு மாதாந்தம் 35 இலட்சம் லீற்றர் டீசலும் 22 இலட்சம் லீற்றர் பெற்றோலும் தேவைப்படுவதாக கொட்டகலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்தின் பொறுப்பாளர் தெரிவிக்கின்றார்.

இந்த தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு நாளைக்கு சராசரியாக 2822 லீற்றர் மண்ணெண்ணை தேவைப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்ற விற்பனை நிலையங்களின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது ஒரு விற்பனை நிலையத்தில் சராசரியாக 112 லீற்றர் தேவைப்படுகின்றது அல்லது விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் இன்றைய நிலைமையில் இதனை விட பல மடங்கு அதிகளவான மண்ணெண்ணை கொள்வனவு செய்யப்படுகின்றது. அதற்கு ஒரு காரணமாக அமைந்திருப்பது சமையல் எரிவாயுவின் தட்டுப்பாடாகும். அதே நேரத்தில் கள்ளச் சந்தையில் மண்ணெண்ணை தாராளமாக கிடைக்கின்றது. அது எப்ப சாத்தியமாகின்றது?

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு நாளைக்கு தேவையான டீசல் சராசரியாக 1.16 இலட்சம் லீற்றர். இதனை நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 25 நிரப்பு நிலையங்களில் 4000 ஆயிரம் லீற்றர் என்ற அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டும். ஆனால் அதனை விட அதிகமாக டீசல் தற்பொழுது விற்பனை செய்யப்படுகின்றது. அப்படியானால் அதற்கான காரணம் என்ன? நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாத்துறை பின்னடைவை சந்தித்துள்ளது. புதிய வாகனங்கள் கொள்வனவு செய்ய முடியாது. அப்படியானால் எவ்வாறு அதிகமாக டீசல் விற்பனை செய்யப்பட முடிகிறது? எங்கோ ஒரு இடத்தில் இடறுகிறதல்லவா?

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு நாளைக்கு தேவையான பெற்றோல் சராசரியாக 73 ஆயிரம் லீற்றர். இதனை நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 25 நிரப்பு நிலையங்களில் 2920 ஆயிரம் லீற்றர் என்ற அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டும். ஆனால் அதனை விட அதிகமாக பெற்றோல் தற்பொழுது விற்பனை செய்யப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு நாளைக்கு 1615 சமையல் எரிவாயு (12.5) கொள்கலன் விற்பனைக்காக தேவைப்படுகின்றது. ஆனால் அதனை விட அதிகமான சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுகின்றது. அப்படியானால் நிச்சயமாக எங்கோ ஒரு இடத்தில் சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்படுகிறது என்பது தானே இதன் அர்த்தம்? இதற்கு சான்றாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு கினிகத்தேனை பகுதியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினால் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 85 சிலின்டர்களை குறிப்பிடலாம். இது நீரில் மிதக்கும் பனிப் பாறையில் ஒரு சிறு பகுதி மாதிரித்தான். அநுராதபுரத்தில் ஒரே இடத்தில் 600 சமையல் எரிவாயு கொள்கலன்கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அது தவிர மேமாதம் 9 ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண நிலைமையின் பொழுது எரியூட்டப்பட்ட பல வி.ஐ.பி. வீடுகளில் சமையல் எரிவாயு உட்பட பல பொருட்கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் இந்த பொருட்களைத் தவிர அரிசி, கோதுமை மா உட்பட இன்னும் பல அத்தியாவசிய பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள். அது தவிர மஸ்கெலியா பிரதேச சபையில் கோதுமை மா பதுக்கல் தொடர்பாக உறுப்பினர் ராஜ்குமார் கடந்த ஜுன் 10ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பல தகவல்களை வெளியிட்டார். இப்போது அனைத்து நகரங்களிலும் பதுக்கல்கள் இடம்பெறுகின்றன என்று அவர் சொல்கிறார்.

இது தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகல்கள் வழங்கப்பட்ட பேதிலும் அவர்கள் தங்களுடைய கடமைகளை செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது அவர்கள் தரப்பு வாதமாக உள்ளது. காரணம் தமது வாகனங்களுக்கான டீசல் பெற்றுக் கொள்ள முடியாததால் கடமைகளை செய்ய முடியவில்லையாம்! இவ்வாறான சூழலில் கள்ளவர்த்தகர்களுக்கும், பதுக்கல் பேர்வழிகளுக்கும் இது கொண்டாட்டமாகி விட்டிருக்கிறது. பூனைகள் தூங்கும்போது எலிகளுக்கு கொண்டாட்டம் தானே! மக்கள் சிரமப்படும்போது வர்த்தகர்கள் மனிதாபிமானம் இல்லாமல் நடந்து கொள்வது எந்தளவு பொருத்தமானது?

---





என். சரவணன்

# கொழும்பின் பிரதான ரயில் நிலையம் எங்கே அமைந்திருந்தது?

இலங்கைக்கு 1858இல் ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. மண்வெட்டியால் வெட்டி அதற்கான பாதையை ஆரம்பித்து வைத்தவர் அன்றைய ஆளுநர்சேர் ஹென்றி வார்ட்.முதல் ரயில் பயணம் 1864ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி நடைபெற்றது. அதிகாரபூர்வமாக 1865, அக்டோபர் 12 அன்று ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்றைய இலங்கையின் “சாலைகளின் ஸ்தாபகர்” என்று அழைக்கப்பட்ட ஆளுநர் சேர் எட்வர்ட் பார்ன்ஸ் பதவி விலகியபோது, நாட்டின் ஒவ்வொரு நகரத்திற்கும் நெடுஞ்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தன. 1822 முதல் 1825 வரை கொழும்பு, கண்டி நெடுஞ்சாலை கிட்டத்தட்ட முழுமையடைந்தது. 1832 இல் முதல் 'மெயில் கோச்' அல்லது குதிரை வண்டி தபால் போக்குவரத்துக்காகப் பயன்பாட்டுக்கு வந்தது. இரயில் சேவை ஆரம்பிக்கப்படும் வரை அது தொடர்ந்தது.

கொழும்பில் இருந்து மலையகப் பகுதிகளுக்கான இரயில் பாதைகளை அமைப்பதற்கு இந்திய வம்சாவளி மக்கள் கொடுத்த விலை தனியான கதை. இயந்திர வசதிகள் இல்லாத காலத்தில் மலைகளைக் குடைந்தும், தோண்டியும், வெட்டியும் தமது கடின உழைப்பை பாதைகளாக உருவாக்கியவர்கள் அவர்கள்.



தொழில் நுட்பக் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக ரயில் அருங்காட்சியகம் அமைந்துள்ள இடத்தில் தான் இந்த ரயில் நிலையம் அமைந்திருந்தது.

இலங்கையின் இரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான பிரதான காரணியாக அமைந்தது; அன்றைய கோப்பி, தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தமது உற்பத்தியை கொழும்புக்கு கொண்டுபோவதற்கான போக்குவரத்துக்கான தேவை குறித்து அரசுக்கு கொடுத்த அழுத்தம் தான். அரசின் பிரதான வருமானமீட்டும் துறையாக அது மாறியிருந்த காலமாதலால். இரயில் சேவை தமது மூலதனத்தை பாதுகாத்து, பன்மடங்கு பெருக்க முக்கிய காரணியாக அமையும் என்று உறுதியாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையும் வீண் போகவில்லை.

கொழும்பு கண்டி புகையிரத சேவையை 1842 ஆம் ஆண்டு வலியுறுத்தியது அன்றைய கோப்பித் தோட்ட முதலாளிகள் தான். அதன் பிரகாரம் 1845 ஆம் ஆண்டு இலங்கை இரயில்வே கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பாவில் இரயில் சேவை தொடங்கப்பட்டதன் பின்பு கண்ட அதிவேக வளர்ச்சியையும், மாற்றங்களையும் குறிப்பிட்டு இலங்கையில் அதன் அவசியத்தையும், அதனால் காணக்கூடிய நலன்களைப் பற்றியும் ஒரு சிறப்பரிக்கையை 1856 ஆம் ஆண்டு அரசாங்க செயலரிடம் அன்றைய ஆளுநர் ஹென்றி வார்ட் (Henry Ward) சமர்ப்பித்தார். அது எற்றுக்கொள்ளப்பட்டதன் விளைவாக அதே ஆண்டு ஜுலை மாதம், இலங்கையில் ரயில் சேவையை தொடங்க “சிலோன் ரயில்வே நிறுவனம்” (Ceylon Railway Company) என்ற தனியார் நிறுவனத்திற்கு 800,000 பவுண்டுகள் செலவில் நிர்மாணிப்பதற்கான தீர்மானம் அரசாங்க சபையில் நிறைவேற்றப்பட்டது.

1858ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை 5.30 மணியளவில் இலங்கையில் இரயில்வே போக்குவரத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கையின் ஆளுநர் ஹென்றி வார்ட் மண்வெட்டியால் பாதை வெட்டி ஆரம்பித்து வைத்தார். மருதானை தொழிநுட்பக் கல்லூரிக்கு முன்னால் தற்போதைய புகையிரத களஞ்சிய திணைக்களத்திற்கும் சரக்கு களஞ்சியசாலைக்கும் இடையில் அமைந்துள்ள இடமே அன்று அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட புகையிரத பாதையின் தொடக்கம். அதுமட்டுமல்ல அங்கே தான் இலங்கையின் முதலாவது இரயில் நிலையமும், கொழும்பு மத்திய இரயில் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது.அன்று டெர்மினஸ் புகையிரத நிலையம் (Terminus Railway Station)என்று அழைத்தார்கள். இங்கிலாந்தில் மான்செஸ்டர் இரயில் நிலையத்தை (Manchester Railway Station) நிர்மாணித்த வில்லியம் பிரெடெரிக் (William Frederick Faviell 18221902) தான் 18581865க்கு இடையில் கொழும்பின் முதல் இரயில் நிலையத்தையும் வடிவமைத்தவர்.

இலங்கையின் முதல் ரயில் சேவைக்கு பாதை வெட்டப்பட்ட நாள் கொழும்பு மாநகருக்கு ஒரு திருவிழா போல் இருந்தது. நகரம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்விற்கான அழைப்பிதழை சிலோன் ரயில்வேயின் தலைமைப் பொறியியலாளர் டபிள்யூ.டி. டோய்ன் (W.T.Doyne) அனுப்பிருந்தார். 560 அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டதாக அறிய முடிகிறது. நிகழ்வில் இலங்கையின் மிக முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டிருந்தார்கள்.

1858 ஆகஸ்ட் 5, அன்று ஓப்சர்வர் நாளிதழ் இந்த வரலாற்று நிகழ்வைப் பற்றி இப்படி எழுதியது:

"அனைத்து விருந்தினர்களும் மாலை 4.30 மணிக்கு வந்திருந்தனர், ஆளுநர் மாலை 5.00 மணிக்கு வருகை தந்தார், அவரை தலைமைப் பொறியாளர் வரவேற்றார். 5.30 க்கு மண் வெட்டுதல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த மண்ணை ஒரு தள்ளுவனடியில் எடுத்துச் சென்று அப்பால் கொட்டினார் தலைமைப் பொறியாளர் டொயின். இந்த வரலாற்று தருணத்தின் நினைவுகளைப் படம்பிடிக்க புகைப்படக் கலைஞர்கள் வந்திருந்தனர், மேலும் அதிகாரப்பூர்வ புகைப்படக்காரர் பார்டின் (Partin). (இலங்கைக்கு புகைப்படக் கலையை அறிமுகப்படுத்தியாவர் அவர் தான்) தொடக்க விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர், அவர்களில் பலர் ஐரோப்பியர்கள் என்று ஓப்சர்வர் தெரிவித்தது.

உணவு விருந்துக்கான இடமும் பிரேத்தியமாக ஏற்பாடாகியிருந்தது. அதற்கான பிரமாண்டமான கூடம் தெமட்டகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மண்டபத்தில் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட 16 மேஜைகள் இருந்தன. ஒரு மேசையில் சுமார் 40 பேர் அமரும் வகையில் ஏற்பாடாகியிருந்தது. A முதல் P வரை எழுதப்பட்ட மேசை வரிசை அமைகப்பட்டிருந்தன. விருந்தினர்கள் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தனர். இந்த விருந்தில் பங்கேற்பவர்களின் முழுமையான பட்டியல் சிலோன் ரயில்வே (The Ceylon GovernmentRailway) என்கிற நூலில் வெளியிடப்பட்டிருக்கிறது.



கோட்டை ரயில் நிலையம்

இந்த உணவு விருந்தில் இராணி சார்பில் காலனியச் செயலர் சி. ஜே. மெக்கார்த்தியும், அரச குடும்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த மேல்மாகாணத்தின் அரசாங்க அதிபர் சீ.பி.லேயார்ட்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரயில் பாதை அமைக்கும் பணி துவங்கிய பின், அதற்கான பாதை வழித் திட்டங்கள் பற்றி வேறுபட்ட பல கருத்துகள் எழுந்ததால், அசல் திட்டங்களை மறு ஆய்வு செய்ய வேண்டியதாயிற்று. இதன் காரணமாக ரயில் பாதை அமைக்கும் செலவு, ஏற்கனவே மதிப்பிடப்பட்டதை விட இரண்டு மடங்கு அதிகமாக ஆகிவிட்டிருந்தது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதன் விளைவாக, 1860 இல் சட்டமன்றம், மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, புதிய உத்தேச செலவீனத்தை வெளியிட்டது. ஆளுநர் சார்லஸ் ஜஸ்டின் மக்கார்த்தியின் (Charles Justin Maccarthy) தலையீட்டின் பேரில், ரயில் பாதையின் கட்டுமானப் பணி; குறைந்த ஏலத்தில் விண்ணப்பித்த ஜெபியேல் என்ற தனியார் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஏலத்தின் மதிப்பு 873,039 ரூபாய். 1863 ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் அவர் ரயில்வே பணிகளைத் தொடங்கினார்.

1864 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி கொழும்பு கோட்டையிலிருந்து அம்பேபுஸ்ஸ வரையிலான 54 கிலோமீட்டர் நீளத்தைக் கொண்ட முதலாவது ரயில் பயணம்; ரயில்வேயின் முதல் இயக்குனரான ஜீ.எல்.மோல்ஸ்வத் தலைமையில் தொடங்கியது. இந்த முதல் பயணத்தில் பெல்ஜியத்தின் பட்டத்து இளவரசரும் பங்கேற்றார்.

கொழும்பில் இருந்து கண்டி வரையிலான ரயில் பாதை ஏப்ரல் 25, 1867 இல் நிறைவடைந்தது. இதை நிறைவு செய்ய நான்கு வருடங்களுக்கும் மேலாக எடுத்தது. இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அன்று தேயிலை உற்பத்தி ஆனபோது இந்த இரயில் போக்குவரத்து தான் பெரும் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டது. ஏப்ரல் 26 முதல் கொழும்பு கண்டி புகையிரத சேவை பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது.

களனி ரயில் பாதை தொடர்பாக பொறியாளர் எப்.பி.வேர்னன் தலைமையிலான குழுவின் அறிக்கை 1895 பெப்ரவரி 15ஆம் திகதி ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு ஆளுநர் “களனி பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை” எனப் பெயரிட்டார். இந்தப் புதிய பாதை கட்டுமானப் பணிகள் 1900 ஆம் ஆண்டு மார்ச் 22ம் திகதி தொடக்கப்பட்டது. 1902 செப்டம்பர் 15 ஆம் திகதி மருதானையிலிருந்து அவிசாவளை வரையான இரயில் பாதை திறக்கப்பட்டது. இந்தக் களனி வழிப் பாதைக்காக அப்போது ரூ.55, 43, 879 ரூபா செலவிடப்பட்டிருந்தது.

கொழும்பில் இருந்து அம்பேபுஸ்ஸ வரையான முதலாவது பயணிகள் ரயில் சேவை 1865 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதல் பயணம் 84 பயணிகளுடன் காலை 7.00 மணிக்கு கோட்டையிலிருந்து ரயில் புறப்பட்டது. இரயில் பயணம் பற்றி அன்றைய செய்தித்தாள்களில் கூட விளம்பரப்படுத்தப்பட்டது.

தற்போதைய கோட்டை பிரதான இரயில் நிலையம் அமைந்துள்ள இடம் 1877 காலப்பகுதியில் “பேர ஏரி”யின் நீரால் மூடப்பட்டிருந்த பகுதியாக இருந்தது. இன்றைய லேக் ஹவுஸ் கட்டடம் அமைந்துள்ள பகுதியும் இந்தக் காலப்பகுதியில் காலத்தில் பேறை ஏரியின் எல்லைக் கரையாக இருந்தது. “லேக் ஹவுஸ்” நிறுவனப் பத்திரிகைகளை இன்றும் ‘ஏரிக்கரை பத்திரிகைகள்’ என்றே அழைக்கப்படுவதை அறிவீர்கள்.

புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தற்போதைய கோட்டை புகையிரத நிலையமும் மருதானை புகையிரத நிலையமும் அப் பகுதிகளில் இருக்கவில்லை. இவற்றின் பெரும்பகுதிகள் பேர வாவியால் மூடப்பட்டிருந்தது. தற்போதைய தொழில்நுட்பக் கல்லூரிக்கு எதிரில் தான் இலங்கையின் முதலாவது கொழும்பு இரயில் நிலையம் அமைந்திருந்தது. இந்தப் பகுதி பேறை வாவியின் எல்லையில் அப்போது இருந்தது. அன்றைய கொழும்பின் அமைப்பும் இயல்பும் இன்றைய தோற்றத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதை உங்களால் ஓரளவு கற்பனை செய்து பார்க்க முடியும். அம்பேபுஸ்ஸ நோக்கிய முதலாவது புகையிரத சேவை தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னால் உள்ள இந்த நிலையத்திலிருந்து தான் இயங்கியது. இன்று அது புகையிரத நூதனசாலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. 1897 ஆம் ஆண்டளவில் இந்த நிலையத்தில் 197 பணியாளர்கள் கடமையாற்றியதாக குறிப்பிடப்படுகிறது. இந்த முதல் ரயில் நிலையம் 1908 ஆம் ஆண்டு மருதானை இரயில் நிலையம் திறக்கப்பட்டதும் மூடப்பட்டது.

1873 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் திகதி செனட் சபையில் உரையாற்றிய ஆளுநர் வில்லியம் கிரகரி, கொழும்பிலிருந்து களுத்துறை வரையான புகையிரத சேவையை ஆரம்பிப்பதன் மூலம் இரயில் சேவையை பரவலாக விரிவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். அதன்படி பல பொதுச் சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்கி அதனை மேற்கொள்வது பெரும் செலவு ஆகும் என்பதால்; காலிமுகத்திடலின் குறுக்காக கொள்ளுப்பிட்டி கடலை அண்மித்து தண்டவாளப் பாதைகளை நிர்மாணிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. காலி முகத்திடலுக்கு குறுக்கே புகையிரத பாதையை அமைக்க அரசாங்கம் தீர்மானித்தது. ஆனால் காலி முகத்திடலைப் பாதுகாக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் பிரேரணைக்கு எதிராக பொதுமக்களிடையே கண்டனங்கள் எழுந்தன. ஆர். வி. டன்லப், டி.ஹெல்மர், எச்.குரோஸ் போன்றோர்; “கொழும்பின் பெண்கள், சிறுவர்கள் பேரால்” என்கிற பெயரில் உருவாக்கிய அமைப்பின் சார்பில் பெப்ரவரி 1875ஆம் ஆண்டு 24ஆம் திகதி அன்று ஆளுநரைச் சந்தித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். பெண்கள், குழந்தைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட பொழுது போக்கிடமான காலிமுகத்திடலை அழித்து விட வேண்டாம் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இறுதியில் ஆளுநர் ஹென்றி வார்ட் அத்திட்டத்தைக் கைவிட்டார்.

1874 நாவலப்பிட்டி பாதை, 1877 கொழும்பில் இருந்து மொரட்டுவ பாதை, 1879 களுத்துறை பாதை, 1884 ஹட்டன் மற்றும் தலவாக்கலை பாதை, 1893 பலாங்கொடை மற்றும் ஹப்புத்தளை பாதை, 1894 காலி பாதை, 1902 அவிசாவளை முதல் களனிபாதை, 1903 இல் அனுராதபுர, நுவரெலிய ஆகிய பாதைகள், 1905இல் பளை வரையிலான வடக்குக்கான பாதை, 1908 இல் ஜா எல வரையிலுமான பாதைகள் திறக்கப்பட்டன. 1912 இல் ஆளுநர் சேர் ஹென்றி மெக்கலத்தினால் இரத்தினபுரி வரையிலான பாதை திறக்கப்பட்டது. 1914 இல் இந்தோஇலங்கை ரயில்சேவையும், 1916 இல் சிலாபம் வரையும் 1924 இல் ஆளுநர் சேர் வில்லியம் மனிங்கினால் பதுளை வரையிலும், 1927 இல் திருகோணமலை வரையிலும் ரயில் பாதைகள் திறக்கப்பட்டன.

தற்போதைய கொழும்பு கோட்டை புகையிர நிலையம் 1917 ஆம் ஆண்டு தான் திறக்கப்பட்டது. நாளாந்தம் மூன்று லட்சத்துக்கும் அதிகமான பயணிகள் பயன்படுத்தும் முக்கியமான போக்குவரத்து சாதனமே ரயில் சேவை. இலங்கைத் தீவின் ரயில் பாதை வலைப்பின்னல் கொழும்பில் இருந்தே விரிந்து செல்கிறது. (தொடரும்)

## யாழ். விஜயத்தின்போது வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட பேட்டி

'எமது யாழ். கூட்டத்துக்கு தமிழ்க்கட்சி பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர். அது வரவேற்கத்தக்கது. நாம் வடக்கை மையப்படுத்தி அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்பட விரும்புகிறோம்.'

'தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் ஆற்றியிருக்கும் உரைகளை தென்னிலங்கையில் வேறெந்த கட்சித் தலைவரும் ஆற்றியிருக்க மாட்டார்.



குற்றம் குறை கண்டு பிடிக்க முடியாத நிலையில் அரசியல் கட்சிகள் 33 வருடங்களுக்கு முந்தைய விஷயங்களையே எமக்கு எதிராக முன்வைக்கின்றன. கடந்த 28 வருடங்களில் நாங்கள் ஒரு கல்லைக்கூட எறிந்ததில்லை. ஆனால் இந்தக் கட்சிகளின் ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றி நாம் எடுத்துக்கூறும் போது அவர்கள் பழைய கதைகளையே பேசுகிறார்கள்.

**கேள்வி:** – ***நானும் 1971 காலத்துக்கு வருகிறேன். அப்போது போதிக்கப்பட்ட ஏழு வகுப்புகளில் ஐந்தாம் வகுப்பு பாடம் இந்திய விஸ்தரிப்பு வாதம் தொடர்பானது என்றும் மத்திய மலைநாட்டில் களைய போதிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஜே.வி.பியில் தமிழ்ப் பிரிவு ஒன்றில்லை. தோழர் ராமலிங்கம் சந்திரசேகரரை வைத்திருக்கிறீர்கள், அவ்வளவுதான்.***

**பதில்:** – 13ம் அரசியலமைப்பு திருத்தம் பிரச்சினையைத் தீர்க்கவில்லையே! எனினும் இப்பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான ஒரு தீர்வு அவசியம் என நாம் கருதுகிறோம். அதே சமயம் இம் மக்களுக்கு ஒரு பொருளாதாரத் தீர்வு வழங்கப்படுவது அவசியம் என்பது எமது நிலைப்பாடு. இம் மக்களின் கல்வி, ஊட்டச்சத்து, வேலைவாய்ப்பு, புதிய தொழில்கள் என்பனவற்றில் உடனடியாக தீர்வு வேண்டும். ஏனெனில் பொருளாதார ரீயாக இம்மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நீங்கள் சொன்ன மற்ற விஷயத்தில் உண்மை இருக்கவே செய்கி சினைகளை பேசுவதில்லை. இன்றைக்கு நான் ஆற்றிய உரையைப் போன்ற ஒரு உரையை தென்னிலங்கையில் எந்தத் தலைவரும் நிகழ்த்தியிருக்க மாட்டார். ஆனால் எமது இந்தச் செயற்பாடுகள் தமிழர்களை சென்றடைவதில்லை என்பதே இங்கே பிரச்சினை. நாம் அச்சமின்றி இனவாத அரசியலுக்கு எதிராக பேசி வருகிறோம்.

**கேள்வி:** – ***காணி, பொலிஸ், நீதிமன்ற அதிகாரங்களை அளித்தால் அது தனிநாட்டுக்கு வழிவகுக்கும் என்று உண்மையாகவே ஜே.வி.பி நம்புகிறதா?***

**பதில்:** – இன்னொரு நாட்டை இங்கே உருவாக்குவது சாத்தியமான விஷயம் அல்ல. நாம் இனங்களுக்கிடையில் இருக்கக்கூடிய சந்தேகங் தொகுதி அமைச்சர் அவர்களுக்கு கல்வி அமைச்சில் உத்தியோகம் வழங்கியிருக்கிறார். இலஞ்ச ஊழல் விவகாரங்களும் தவறான பொருளாதார திட்டங்களும், பெரிய கட்சிகளின் ஆட்சியதிகாரத்துக்கான போட்டா போட்டியுமே இந் நாட்டின் நிலைக்கு காரணம்.

**கேள்வி:** – ***இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தமிழர்களுக்கு பொருளாதார அபிவிருத்தியே அவசியம், அரசியல் உரிமைகள் அல்ல என்று கூறிவருகின்றன. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

**பதில்:** – இந்த நாட்டில் அனைவரும் சமம் என்ற ஒரு மனப்பான்மை மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே மக்களிடையே அரசியல், சிவில் மற்றும் பொருளாதார உரிமைகள்

# தமிழ்க் கட்சிகள் தேசிய அரசியலிலும் ஈடுபட வேண்டும்

## தென்னிலங்கை முற்போக்கு அணியுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்கிறார் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திசாநாயக்க

*இன்றைய எனது பேச்சும் அவ்வாறானது தான். விஷயம் என்னவென்றால், எமது இச் செயற்பாடுகள் தமிழர்களைச் சென்றடைவதில்லை. நாம் அச்சமின்றி இனவாத அரசியலுக்கு எதிராகப் பேசி வருகின்றோம்.'*

*'இந்தியாவுடன் மோதல் போக்கற்ற, இந்தியாவை பாதிக்கக் கூடிய அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகள் அற்ற ஒரு வெளிநாட்டுக் கொள்கை அவசியம்'*

**கேள்வி:** – ***ஜே.வி.பி. மீதான விமர்சனங்களை வைக்கும் போது 1971, 89 காலப்பகுதியை சிலர் நினைவுபடுத்துகிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்? இதை கறை படிந்த பக்கங்களாகக் கருதுகிறீர்களா?***

**பதில்:** – 1971, 88,89 எழுச்சிகள் சும்மா நிகழ்ந்தவை அல்ல. அரசுகள் எங்களை அடக்கி வைக்க முயன்றன. அதனால் நாங்கள் ஆயுதம் ஏந்த வேண்டியதாயிற்று. எமது கட்சி 1978 உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டது. 81 சர்வஜன வாக்கெடுப்பில் பாராளுமன்றம் நீடிக்கப்படக்கூடாது என்று பிரசாரம் செய்தோம். 82 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம். நாங்கள் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றி வந்த போதிலும் 83 கலவரத்தின் பின்னர் எம் மீது குற்றம் சுமத்தப்பட்டு ஜே.வி.பியை ஜே.ஆர். அரசு தடைசெய்தது. நாங்கள் நீதிமன்றம் சென்றோம். எனினும் எம்மை வேட்டையாடுவது தொடர்ந்தது. எனவே நாமும் ஆயுதம் ஏந்த வேண்டியதாயிற்று. அரசுக்கும் எமக்கும் இடையிலான மோதல்களின் போது எமது தரப்பிலும் தவறுகள் நிகழ்ந்தன. இன்று இவை எல்லாம் நிகழ்ந்து 33 வருடங்களாகிவிட்டன. ஆனால் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள எம்மீது வசித்த இந்திய வம்சாவளியினர் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல எனவும் போதிக்கப்பட்டதாக அறிகிறோம். இது உண்மையா? மலையக தமிழர்கள் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** – அக்குற்றச்சாட்டு பொய்யானது. அந்தக் காலத்தில் திபெத் ஆக்கிரமிக்கப்பட்டது. கோவாவை இந்தியா கைப்பற்றியது. காஷ்மீரையும் இந்தியா தன் வசப்படுத்தியது. 77 இல் ஜே.ஆர். ஜயவர்தன பதவிக்கு வந்தார். அவர் அமெரிக்க சார்பானவர். அதேசமயம் இந்தியா சோஷலிச நாடாக விளங்கியதால் எதிர்த் தரப்பில் நின்றது. எனவே இலங்கைக்கு அழுத்தம் தர வேண்டும் என இந்தியா விரும்பியது. இப்போது காலம் மாற பிராந்திய அரசியல் நிலைப்பாடுகளும் மாறிவிட்டன. இன்று அமெரிக்காவும் இந்தியாவும் ஓரணியில் நிற்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா என்பன இந்தோபசுபிக் அமைப்பான குவாட்சில் அங்கம் வகிக்கின்றன. இன்றைய சூழலில் இந்தியாவைத் தவிர்த்து நாம் அரசியல் செய்யமுடியாது. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி சமூகம் கடந்த ஐந்து தலைமுறைகளாக இந்நாட்டிலேயே வாழ்ந்து வருகிறது. இச் சமூகத்துக்காக நாம் எப்போதும் குரல் கொடுத்து வந்திருக்கிறோம். அச் சமூகம் சரிசமனாக சம உரிமைகளுடன் இங்கே வாழ வேண்டும் என்பதே எமது கொள்கை. நிலைப்பாடு.

**கேள்வி:** – ***வடக்கு கிழக்கு அரசியல் உரிமைகள், 13 ஆம் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான ஜே.வி.பியின் கொள்கையை விரிவாக சொல்வீர்களா? தமிழர்களுக்கு ஜே.வி.பி மீது ஒரு சந்தேகம் உள்ளது. அதைக்*** றது. நாம் ஆட்சிக்கு வருவதற்கும் அதை வைத்துக்கொள்வதற்கும் சிங்கள மக்களை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொள்ள முடியாது. அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து கொண்டுதான் இதைச்செய்ய முடியும்.

ஆரம்பத்தில் நாங்கள் சிங்கள சமூகத்தை அடிப்படையாக வைத்தே எமது அரசியலை ஆரம்பித்தோம். எனினும் நாங்கள் எவ்வளவுதான் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்திருந்தாலும் அது அவர்கள் மத்தியில் எடுபட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர்களின் சமூகம் சார்ந்த கட்சிகளுடன்தான் இணைந்திருக்க விரும்புகிறார்கள். எனினும் நாம் தமிழ் மக்களை அரவணைத்துத் தான் செல்லவேண்டும். எனவே நாம் வடக்கை மையப்படுத்திய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்பட விரும்புகிறோம். எனவே தமிழ்க் கட்சிகளை நான் அழைக்கிறேன். இன்று எமது கூட்டத்துக்கு யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய கட்சித் தலைவர்கள் வருகை தந்திருந்தார்கள். மேலும் தமிழ் மக்களிடையே எமது செயற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். எனவே தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்பட நாம் விரும்புகிறோம்.

**கேள்வி:** – ***தமிழர் உரிமைகள் தொடர்பாக வெளிப்படையாகப் பேசினால் சிங்கள மக்களின் சந்தேகத்துக்கு ஆளாக நேரிடும் என்ற பயம் காரணமாகவே தமிழ் விவகாரங்கள் தொடர்பில் அடக்கி வாசிக்கிறீர்களா?***


**பதில்:** – அப்படியல்ல. நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக கதைக்கும் அளவுக்கு தென்னிலங்கையில் எவரும் தமிழர் பிரச் களைக் களைய முனைய வேண்டும். ஆனால் நிர்வாக சிக்கல்கள் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே. இப்போது பாருங்கள், பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் நகர பாடசாலைகள் தம்மை தேசிய பாடசாலைகளாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்வதைப் பார்க்க முடிகிறது. அதாவது மாகாண மட்ட நிர்வாகம் போதுமானதாக இல்லை. மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருமானால் போதிய வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பே இக் கோரிக்கைக்குக் காரணம்.

**கேள்வி:** – ***நாடு இந்த வங்குரோத்து நிலைக்கு வருவதற்கு தமிழர் பிரச்சினையை தீர்க்காது சிங்களக் கட்சிகள் வாக்குவங்கி அரசியலை தென்பகுதியில் நடத்தியது ஒரு பெரிய காரணம் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?***

**பதில்:** – அதுவும் ஒரு காரணம்தான். ஒரு ஜனாதிபதி ஹம்பாந்தோட்டையில் இருந்து தெரிவானால் ஹம்பாந்தோட்டைப் பகுதியில் எல்லா அபிவிருத்தி பணிகளும் நடைபெறத் தொடங்குகின்றன. அவர் பொலன்னறுவையில் இருந்து தெரிவானால் அப்பகுதியெங்கும் அபிவிருத்தியாகிறது. ஒரு தேசிய அபிவிருத்திக்கு வேலைத் திட்டத்தின் கீழ் இவை நடைபெறுவது இல்லை. எனவே ஒரு தேசிய திட்டத்தின் கீழ் முழு நாட்டையும் ஒருங்கிணைத்து சகல பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதே சரியான தேசிய திட்டமிடலாகும். மாத்தறையில் இருந்து பஸ்களில் பணிக்கு வருகிறார்கள் ஹம்பாந்தோட்டைக்கு. ஏனெனில் அவர்கள் அரசியல் ரீதியாக பணிக்கு நியமிக்கப்பட்டவர்கள். இசுருபாயவுக்கு இரண்டு பஸ்கள் குளியாபிட்டியாவில் இருந்து வருகின்றன. ஏனெனில் குளியாபிட்டி நிலைநிறுத்தப்பட வேண்டும். கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நான் தமிழன் என்பதால்தான் எனக்கு இந்த நிலை என நினைக்கலாம். ஆனால் அனுராதபுரம் மதவாச்சியை சேர்ந்தவர்களும் கிளிநொச்சிக்காரரின் பிரச்சினையையே எதிர்கொள்கின்றனர் என்பதே உண்மை. இங்கு நான் சம்பந்தன் ஐயாவின் உரையை நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் ஒரு இலங்கைக் குடிமகன் என்று உலகத்துக்கு உரக்கச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இரண்டாவது குடிமகனாக இருக்க விரும்பவில்லை என்றார். அதுதான் விஷயம். எனவே நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல தேசிய ஒருமைப்பாடு மிக முக்கியம்.

**கேள்வி:** – ***இனி தமிழ் அரசியலுக்கு வருவோம். தமிழரின் அரசியலில் நீங்கள் காணும் பெரிய குறைபாடுகள் யாவை? எவற்றை அவர்கள் உடனடியாக கைவிட வேண்டும் அல்லது மாற்றிக்கொள்ள வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?***

**பதில்:** – வடக்கை மட்டும் மையப்படுத்தி அரசியல் செய்வதை விட்டுவிட்டு தேசிய அரசியலுக்கு வரவேண்டும் என்று நினைக்கிறேன். பாராளுமன்றத்தில் என்ன விஷயம் விவாதத்துக்கு வந்தாலும் தமிழ் உறுப்பினர்கள் வடக்கைப் பற்றியே பேசுகிறார்கள். அவர்கள் மைய அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.



தொடர் 15 ஆம் பக்கம்...

பேட்டி கண்டவர்
சுமித்தி தங்கராசா...

# கார்மேகத்தின் வாழ்வினை எழுத்தில் பதிவு செய்தமை ஈழத்தின் முன்னோடி இலக்கியச் செயற்பாடாகும்'









## லண்டன் வெளியீட்டு விழாவில் மு.நித்தியானந்தன்

'எழுத்தையே தொழிலாக, வாழ்வாகக் கொண்ட பத்திரிகையாளர்கள் நமது சமூகத்தில் கவனிப்பாரற்றுப் போய்விடுகிறார்கள். அவர்களது வாழ்க்கையைப் போற்றுவார் யாருமில்லை. இந்நிலையில் இலங்கையில் தமிழ் பத்திரிகையொன்றிலும், தமிழகத்தின் தினமணியிலும் ஆசிரியர்பீடத்தை அணி செய்த எஸ்.எம்.கார்மேகத்தின் வாழ்வினை எழுத்தினில் பதிவு செய்த முயற்சி ஈழத்தின் முன்னோடி இலக்கியச் செயற்பாடாகும்.

'பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் வாழ்வும் பணியும்' என்ற நூலினைத் தொகுத்து வழங்கியிருக்கும் எச்.எச்.விக்கிரமசிங்கவின் பணி, 'காலம் போற்றும் சிறந்த பணியாகும்' என்று மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தன் லண்டன் வெம்பிளி தமிழ் நிலையத்தில் சென்ற ஜூன் 26 ஆம் திகதி நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் நூல் வெளியீட்டு அரங்கில் பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் வாழ்வும் பணியும் இரண்டாம் பதிப்பினை வெளியிட்டு, உரையாற்றிய போது தெரிவித்தார்.

'வெறும் சம்பளத்திற்காக வேலை பார்க்கும் தொழிலாகக் கருதாமல், தனது பணியை ஆத்மார்த்தமாக செய்து, மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்த்த கார்மேகத்தை அறிந்த, அவரோடு பணியாற்றிய பல பத்திரிகையாளர்களையும், மேலும் பல ஆளுமைகளையும் இனங்கண்டு இந்நூலைத் தொகுத்து வழங்கியமை விக்கிரமசிங்கவின் சிறந்த தொடர்பு வட்டத்தினையும், எடுத்துக்கொண்ட பணியினைத் திறம்பட முடிக்கும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது' என்று அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

'கண்டி மன்னர்கள்', 'ஈழத்தமிழர் எழுச்சி', 'ஒரு நாளிதழின் நெடும் பயணம்' ஆகிய நூல்களையும் எழுதிய ஆய்வாளராகவும் எனது தந்தை திகழ்ந்தார். பத்திரிகைப்பணியிலும் பொது வாழ்விலும் முழு நேரத்தைச் செலவிட்டாலும் குடும்ப உறவினையும் பண்போடும் பாசத்தோடும் அரவணைத்துச் செல்லும் ஒருவராக அவர் எங்கள் நெஞ்சில் என்றும் குடியிருப்பார்' என்று அவுஸ்திரேலியாவில் வாழும் கார்மேகத்தின் புதல்வி கனகா கணேஷ் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 'எனது



தந்தை பத்திரிகையாளர் கார்மேகத்தின் பத்திரிகை சாதனைகளை ஆவணப்படுத்தும் முகமாக 'வாழ்வும் பணியும்' என்ற இந்த நூலின் இரண்டாம் பதிப்பு கடந்த ஜூன் 11ம் திகதி லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் மு.நித்தியானந்தன் விமர்சன உரை நிகழ்த்தியது எங்களுக்கு பெருமை தரும் நிகழ்வாகும்.

இன்று லண்டன் புத்தக கண்காட்சியில் என்னையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள செய்து கௌரவித்ததை எனது பாக்கியமாகவே கருதுகிறேன். ஏற்பாட்டாளருக்கும் எனது நன்றிகள். இந்நூலில் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன் முன்னுரையும், தினக்குரல் வார வெளியீட்டின் முன்னாள் பிரதம ஆசிரியர் பாரதி இராஜநாயகம் அணிந்துரையும் தந்துள்ளனர்.

உள்ளடக்கமாக எனது தந்தையுடன் 1960 முதல் தொடக்கம் பழகிய நண்பர்கள் உடன் பணியாற்றியவர்கள் உட்பட 46 பேரின் அரிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. எனது தந்தையைப் பற்றிய இந்நூலிற்கான ஆக்கங்களை கேட்டவுடனேயே அவரவது பரபரப்பான பணிகளுக்கிடையில் சிரமேற்கொண்டு எழுதி கொடுத்ததை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இந்நூலில் மு.நித்தியானந்தனும் என் தந்தையை பற்றிய காத்திரமான கட்டுரையை எழுதித் தந்துள்ளார். அவருக்கும் எனது நன்றிகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர் 15 ஆம் பக்கம்...

தொகுப்பு
லிங்கநகர்
சண்முகநாதன் கணேஷ்...

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# போஷாக்கின்மை என்ற அபாயத்தை தடுத்து நிறுத்தக்கூடிய அமெரிக்காவின் 32 மில்லியன் டொலர் உதவி

கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற G7 எனப்படும் உலகின் செல்வந்த நாடுகளின் மாநாட்டின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு மேலதிக உதவியாக 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அறிவித்தார்.

இதன் கீழ் அடுத்துவரும் பதினைந்து மாத காலப்பகுதிக்கு 800,000 கும் மேற்பட்ட பாடசாலை மாணவருக்கு உணவளிக்கும் பாடசாலை போஷாக்கு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவியளிப்பதற்கும் 27,000 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் உணவு வவுச்சர்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இலகுவில் பாதிக்கப்படும் நிலையில் உள்ள மக்கள் பிரிவினருக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாய உதவிகள் மற்றும் பணப்பங்களிப்புகள் ஊடாக சுமார் 30,000 விவசாயிகளுக்கு உதவவும் இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அமெரிக்கா மேற்கொண்ட இந்த அறிவிப்பானது உணவுப்பாதுகாப்பு பொதுச் சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களினதும் பொருளாதார மேம்பாடு தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை நிரூபிப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு உதவி நல்குவதோடு இந்த குறிப்பிட்ட உதவியானது மிகவும் தேவைப்படும் நிலையில் உள்ள சமூகங்களுக்கும் சிறுவர்களுக்கும் சென்றடைவதை அமெரிக்கா உறுதி செய்யும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை அமெரிக்கா இலங்கைக்கு வழங்க உறுதியளித்துள்ள 12 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவிகளுடன் சேர்த்து மொத்தம் 32 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த உதவிகள் USAID எனப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக வழங்கப்படும் எனவும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தாராதரங்களை கடைப்பிடிக்கும் பங்காளர்களுக்கு வழங்கப்படுவதாகவும் எனவே இந்த நிதியளிப்பானது கணக்கீடு செய்யப்படுவதையும் உணவுப் பாதுகாப்பின்மையால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களை அது சென்றடைவதை உறுதிப்படுத்தவும் முடியும் எனவும் அமெரிக்காவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



'இலங்கை ரூபாவில் சுமார் 720 மில்லியன் பெறுமதியான இந்த நிதியளிப்பானது தேவைகளுடைய அனைவருக்கும் உதவியளிக்கப் போதுமானதாக இல்லாவிட்டாலும் இப்போதைய நிலையில் இது காலத்தின்பால் கிடைக்கும் பேருதவியாகவே பார்க்கப்பட வேண்டும்'

'இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான காலப்பகுதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஒரு நாட்டின் வாழ்நாள் எதிர்பார்க்கையில் ஏற்படும் 10 சதவீத அதிகரிப்பு அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வருடாந்தம் 0.4 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்தும் எனக் கண்டறியப்பட்டுள்ளது'

இலங்கையில் கோவிட் 19 கொள்ளை நோயினால் 2020 ஆண்டிலிருந்து மோசமாகப் பாதிக்கப்பட்டு இப்போது பொருளாதார வீழ்ச்சியினால் முற்றாகக் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கையின் சமூகப்பிரிவினருக்கு அமெரிக்காவின் இலக்குப்படுத்தப்பட்ட இந்த நிதி அளிப்புகள் பேருதவியாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அமெரிக்கா தொடர்ச்சியாகவே இலங்கைக்கு இத்தகைய உதவிகளை வழங்கி வந்துள்ளது.

குறிப்பாக, பாடசாலைச் சிறார்களின் போஷணை மட்டத்தை மேம்படுத்த உதவும் பிஸ்கட் வழங்கும் திட்டம் பாடசாலைகளில் நீண்டகாலமாக அமுலில் இருந்தது. அமெரிக்காவின் உதவி மூலமே இது சாத்தியப்பட்டது. பின்னர் இது நிறுத்தப்பட்டு மதிய போசனம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறைந்தபட்சம் பாடசாலைக்கு சமூகமளிப்பதன் மூலம் உணவுத் தேவையில் சிறிய ஒரு பகுதியையாவது இத்திட்டங்கள் மூலம் மிகவும் பாதிக்கப்படும் நிலையில் உள்ள மாணவர்கள் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

ஆனால் இப்போது இவை எதுவும் நடைமுறையில் உள்ளதாகத் தெரியவில்லை. அத்துடன் காலை உணவின்றி பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் சென்றிருக்கிறது. அது மட்டுமன்றி இலங்கையில் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கிலான திரிபோஷ உணவு வழங்கும் திட்டம் மிக நீண்டகாலமாகவே நாட்டில் நடைமுறையில் இருந்துவந்தது.

ஆனால் இப்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. திரிபோஷவை உற்பத்தி செய்வதற்கான உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தமையும் இலங்கை அரசாங்கத்தின் பசுமை விவசாயத் திட்டத்தின் காரணமாக உள்நாட்டில் ஏற்பட்ட சோளம், பயறு போன்ற விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சியினால் இதற்கான உள்ளீடுகளைப் பெறமுடியாமல் போனமையும் இதனை முன்கொண்டு செல்வதில் தடைகளை எற்படுத்தியுள்ளன. இதனால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரின் போஷணை மட்டம் வெகுவாகக் குறைந்து போயுள்ளதுடன் சிசுக்களின் போஷணை மட்டம் மிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

மேலதிக ஊட்டச் சத்துகளை வழங்கும் பால்மா வகைகளின் விலைகள் வானத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்து சென்றுள்ள நிலையில் சாதாரண ஒரு குடும்பத்தினால் தாய்மாருக்கும் சிசுக்களுக்கும் மேலதிக உணவாதாரத்தை உறுதி செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. கொவிட் நிலை காரணமாக எற்பட்ட முடக்கங்கள் இந்நிலையை தீவிரப்படுத்தியுள்ள அதேவேளை 2022இல் மிகமோசமாக அதிகரித்துச் சென்று கொண்டிருக்கும் பணவீக்கம் காரணமாக நாளாந்த உணவுத் தேவைகளில் ஒரு பகுதியையேனும் பெற்றுக்கொள்ள முடியாத பேரவல நிலை உருவாகியுள்ளது.

சுகாதார மற்றும் போஷணை மேம்பாட்டுக்காய் உருவாக்கப்பட்டுள்ள அரச இயந்திரக் கட்டமைப்புகள் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு புறச்சூழலிலேயே அமெரிக்காவின் இலங்கைக்கான நிதியளிப்பு குறித்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

இலங்கை ரூபாவில் சுமார் 720 மில்லியன் பெறுமதியான இந்த நிதியளிப்பானது தேவைகளுடைய அனைவருக்கும் உதவியளிக்கப் போதுமானதாக இல்லாவிட்டாலும் இப்போதைய நிலையில் இது காலத்தின் பால் கிடைக்கும் பேருதவியாகவே பார்க்கப்பட வேண்டும்.

இந்த உதவிகள் உரிய பிரிவினரைச் சென்றடைவதை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அமெரிக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையானது இந்தப் பணத்திலும் ஒரு பகுதியை கபளீகரம் செய்து விடுவார்களோ என்ற ஐயத்தின் விளைவோ எனத் தெரியவில்லை.

சமூக குறிகாட்டிகள் தொடர்பில் இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்புதியில் இருந்தே சிறப்பான அடைவுகளைப் பெற்றிருந்தமை பலராலும் பாராட்டப்பட்டிருந்தது. ஒரு நடுத்தர வருமானம் பெறும் நாட்டின் சமூக குறிகாட்டிகளின் அடைவுகளை குறைந்த வருமானம் பெறும் இலங்கை அடைந்து கொண்டமையானது ஆய்வாளர்களால் வியந்து நோக்கப்பட்டது. இது தொடர்பில் இலங்கை கடைப்பிடித்த கொள்கைகள் பாராட்டப்பட்டன. ஆனால் தொடர்ச்சியாகவே போஷாக்கின்மையானது இலங்கையின் சமூக அபிவிருத்தியில் மிகப்பெரிய ஒரு குறைபாடாக சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது.

தொடர் 15ஆம் பக்கம்...



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# உலகளாவிய போரை நோக்கி நகரும் நேட்டோ?

உலக அரசியல் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேலாக கிழக்கு நாடுகள் எதிர் மேற்கு நாடுகள் என்ற போக்கினை தீவிரமாக ஏற்படுத்தி வருகின்றன. மேற்கு நாட்டின் தலைவர்கள் ஒன்றுகூடும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கிழக்கு நாடுகளின் எழுச்சிக்கு எதிராக தீவிர அணுகுமுறையை மேற்கொள்வதும் திட்டமிடுவதும் அதற்கான நகர்வுகளை செயற்படுத்துவதும் வழமையான அரசியலாக காணப்படுகின்றது.

கடந்த (ஜுன்) 2630 வரையில் ஜேர்மனியிலும், ஸ்பெயினிலும் நடந்த இரு வேறு உச்சி மாநாடுகள் மேற்குறித்த உலக அரசியலுக்கான அணுகுமுறைகளை வெளிப்படுத்தி உள்ளன. அதாவது, ஜேர்மனியின் பவேரியன் ஆல்ப்ஸ் நகரில் ஜி07 நாடுகளுக்கான சந்திப்பும், ஸ்பெயின் தலைநகரங்களில் ஒன்றான மட்ரிட்டில் நேட்டோ நாடுகளின் சந்திப்பும் சமகால உலக அரசியல் களத்தை முதன்மைப்படுத்தியுள்ளது. அக்கட்டுரை ஜி07 மற்றும் நேட்டோ நாடுகளின் தலைவர்களின் சந்திப்பின் நோக்கத்தை அடையாளப்படுத்த முயற்சிக்கிறது.

முதலாவது, ஜி07 நாடுகளுக்கான சந்திப்பு பிரதானமாக பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான உத்திகளை பிரதிபலித்திருந்தது. அம்மாநாட்டில் கலந்து கொண்ட ஜேர்மன், பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய அங்கத்துவ நாடுகளோடு இந்தோ பசுபிக் பொருளாதார சக்திகளும் பார்வையாளர் நாடுகளாக கலந்து கொண்டன. கடந்த பல ஆண்டுகளாக ஜி07 சந்திப்பு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் உலகளாவிய பொருளாதாரத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றிய உரையாடலை மேற்கொண்டிருந்த போதும் சமகால உச்சி மாநாடு அங்கத்துவ நாடுகளிடையே ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியையும் அதனை எதிர்கொள்வது பற்றியும் கவனத்தில் கொள்ளப்பட்டது. குறிப்பாக உக்ரைன் மீதான ரஷ்ய போர் ஐரோப்பாவிற்குள் ஏற்படுத்தியுள்ள எரிவாயு மற்றும் பெற்றோலியம் தொடர்பான நெருக்கடியும் அதற்கான மாற்று உபாயங்கள் பற்றிய கருத்தாடல்களும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன. அதுமட்டுமன்றி உக்ரைனுக்கான மனிதாபிமான உதவியாக 2.8 பில்லியன் அமெரிக்க டொலரும், வரவு செலவுத் திட்டத்துக்கான உதவித்தொகை 29.5 பில்லியன் அமெரிக்க டொலர்களும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதார தடையை நீடிப்பதுடன், தங்கத்தினாலான பரிமாற்றத்தினை மேற்கொள்வதற்காக ரஷ்யாவின் இலக்கினை தடைசெய்வது எனவும் தீர்மானித்துள்ளது. அத்தோடு உலக பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துவரும் வாழ்க்கைச்செலவை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் ரஷ்யாவின் சக்தி வளத்தில் தங்கியிருக்கின்ற நிலைமையை மாற்றியமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பையும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள உணவுச் சங்கிலியையும் பலப்படுத்துவதெனவும் ஜி07 தலைவர்கள் உரையாடியுள்ளனர். சர்வதேச மட்டத்தில் காலநிலை வலையமொன்றினை ஒத்துழைப்பினூடாக ஏற்படுத்துவதெனவும் மிகப்பிரதானமாக அத்தகைய காலநிலை வலயத்தை முன்னோக்கி நகர்த்தவும் இலக்குகளை அடையவும் தெளிவான வரையறையான மாற்றங்களை முதன்மைப்படுத்தவும் அதற்கான கொள்கை வகுப்பொன்றை வரையவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், காபன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துகின்ற கைத்தொழில் உற்பத்திகளை ஊக்குவிப்பதெனவும், பங்குபற்றலுக்கும் ஒத்துழைப்புக்குமூடாக சர்வதேச மட்டத்தை சக்தி வளத்தை பரிமாற்றம் செய்வதற்கான இடைத்தொடர்பாளராக உழைப்பதெனவும் அத்தோடு அனல் மின்வலுவின் பயன்பாட்டை ஊக்குவிப்பதென்ற ஜி07 மாநாட்டின் 2021ஆம் ஆண்டு இலக்கை மேலும் நீடிப்பதென்றும் பாரிஸ் உடன்படிக்கையை பலப்படுத்துவதென்றும் இம்மாநாட்டில் உரையாடப்பட்டது.

இரண்டாவது, நேட்டோ நாடுகளின் மட்ரிட் உச்சி மாநாடானது நேட்டோ விஸ்தரிப்பு சார்ந்து முதன்மைப்படுத்தப்பட்டதோடு உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளை எதிர்க்கும் அணுகுமுறைகளும் உக்ரைனுக்கான ஆயுத தளபாட தேவைகளை நிறைவு செய்வதற்கான முன்மொழிவுகளும் உரையாடப்பட்டன. நேட்டோவின் அங்கத்துவ நாடுகள் 30இனை கடந்து பின்லாந்து, சுவிடன் புதிய உறுப்பு நாடுகளாக முன்மொழியப்பட்டதும் துருக்கி ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட எதிர்ப்பினை கைவிட்டதும் இம்மாநாட்டில் இடம்பெற்ற பிரதான விடயங்களாகும். அத்துடன் நேட்டோ உச்சி மாநாட்டின் பார்வையாளர் நாடுகளாக அவுஸ்ரேலியா, நியுஸிலாந்து, ஜப்பான் மற்றும் தென்கொரியா என்பன ஒத்துழைப்பையும் உலகளாவிய சவாலையும் எதிர்கொள்கின்ற விதத்தில் இம்மாநாடு நகர்த்தப்பட்டிருந்தது. பிரதானமாக பயங்கரவாதத்துக்கு எதிரான முழு அளவிலான போரை பிரகடனப்படுத்தியதோடு ரஷ்யாவின் உக்ரைன் மீதான போரினால் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடி சார்ந்தும் ரஷ்யா மற்றும் சீனாவுக்கிடையில் வளர்ச்சியடைந்து வரும் பிராந்திய ரீதியிலான செல்வாக்கு ஒத்துழைப்பையும் சார்ந்து விவாதிக்கப்பட்டதோடு நேட்டோவின் புதிய ஒத்துழைப்பு வழங்கும் நாடுகளாக துனிசியா, மொரிடானியா மற்றும் துர்கிஷ் ஆகியன அறிவிக்கப்பட்டன.



எனவே, மேற்குறித்த இரு உச்சி மாநாடுகளும் அதிக முக்கியத்துவம் கொடுத்த விடயங்களாக காணப்படும் அம்சங்களை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

ஒன்று, ஜி07 நாடுகள் உள்நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி ரஷ்யாவை மையப்படுத்தி உரையாடியிருப்பதோடு அதனுடைய தீர்வுகளை நோக்கி நகர்வதற்கான உத்திகளையும் வகுத்துள்ளது. குறிப்பாக ரஷ்யாவின் இறக்குமதிக்குள் அகப்பட்டிருக்கும் ஐரோப்பாவை பாதுகாக்கும் விதத்தில் மாற்று சக்தி வளம் சார்ந்து கரிசனை செலுத்த ஜி07 தலைவர்கள் முயன்றுள்ளனர். பெற்றோலியம், எரிவாயு போன்றவற்றிற்கான மாற்றுக்களை அடையாளம் காண்பதும் அதனை ஊக்குவிப்பதும் இம்மாநாட்டின் பிரதான நோக்கமாக இருந்தது.

இரண்டு, ஜி07 உச்சி மாநாட்டில் ரஷ்யாவால் முன்மொழியப்பட்டு ஆரம்பகாலத்தில் அதிகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தங்கத்தின் பரிமாற்றம் தொடர்பான விடயம் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதாவது உலக நாடுகளின் பொருள் பரிமாற்றம் நாடுகளுக்கு இடையில் நிகழ்த்தப்படுகின்ற போது தங்கம் பிரதான பரிமாற்று ஊடகமாக செயற்பட்டது. இது பின்னர் அமெரிக்காவின் எழுச்சியினாலும் உலகளாவிய அரசியல் ஆதிக்கத்தினாலும் படிப்படியாக கைவிடப்பட்டு டொலர் பரிமாற்றத்துக்கும் வெளியீட்டுக்குமான இருப்பாக கருதப்பட்டது. அதனை எண்ணெய் வள நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்த அமெரிக்கா டொலரை முன்னிலைப்படுத்தி பொருளாதார ரீதியாக உலகத்தை டொலரின் கீழ் கொண்டு வந்தது. இதனை முறியடிக்கும் விதத்திலேயே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது உற்பத்திக்கான சந்தை பெறுமானத்தை ரூபிளில் செலுத்த வேண்டுமென நிபந்தனை விதித்தார். அது ஐரோப்பிய நாடுகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதால் மீளவும் தங்கத்தை முன்னிறுத்தியுள்ளார். இவ்வாறு தங்கத்தில் பரிமாற்றம் நிகழ தொடங்குமாயின் டொலரினதும் அமெரிக்காவினதும் ஆதிக்கம் படிப்படியாக வீழ்ச்சியடையும். எனவே தான் ஜி07 நாடுகளில் அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் பிரிட்டன் ஆகிய நான்கு நாடுகளும் ரஷ்யாவின் முன்மொழிவை முழுமையாக நிராகரித்ததோடு ஏனைய மூன்று நாடுகளும் மௌனம் சாதித்தன என்பதுவும் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும்.

மூன்று, ஜி07 உச்சி மாநாட்டின் பிரதான இலக்காக ரஷ்யாவே காணப்படுகின்றது. ரஷ்யாவிற்கு எதிரான போரை ஊக்குவிப்பதற்கும், உக்ரைனை முன்னிறுத்தி ரஷ்யாவை தோற்கடிப்பதையும் பிரதான நோக்காக கொண்டுள்ளமையை வெளிப்படுத்தி நிற்கிறது. ரஷ்யாவிற்கு எதிரான போருக்காக உக்ரைனியர்கள் கொல்லப்பட ஐரோப்பியர்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையை ஜி07 நாடுகள் ஊக்குவிக்கின்றன. உக்ரைனியர்கள் ரஷ்யாவின் தாக்குதல்களால் கொல்லப்படுகிறார்கள். அல்லது அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி புவிசார் அரசியல் அறிவின்றி உக்ரைனியர்கள் மேற்குடன் கூட்டுச்சேர்ந்து ஐரோப்பாவின் தானிய களஞ்சியமான உக்ரைனை சிதைக்கின்றனர். மறுபக்கத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்கள் எரிபொருள் மற்றும் பெற்றோலியத்துக்கான நெருக்கடியை சந்திப்பதோடு பொருட்களின் விலையேற்றத்தினால் அதிக வரி செலுத்தும் நெருக்கடியையும் எதிர்கொண்டு வருகின்றனர். இப்போரை மேலும் ஊக்குவிப்பதனால் உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடியும் மனித சமூகங்களுக்கிடையிலான மோதலும் குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் ஒரு உலக யுத்தத்தை தயார் செய்வதற்கான அணுகுமுறையை ஜி07 நாடுகள் ஏற்படுத்தி வருகின்றன.

நான்காவது, நேட்டோ உச்சி மாநாட்டையும் ஜி07 மாநாடு போன்றே அவதானிக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது. ஜி07 பொருளாதார நோக்குநிலையிலும், நேட்டோ இராணுவ நோக்கு நிலையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. நேட்டோவின் விஸ்தரிப்பை எதிர்த்து ரஷ்யா மேற்கொண்ட உக்ரைன் மீதான போரை மேலும் ஊக்குவிக்கும் விதத்தின் பின்லாந்தையும் சுவிடனையும் நேட்டோவின் அங்கத்துவமாக இணைத்ததன் மூலம் நேட்டோ நாடுகள் திட்டமிட்டுள்ளன. அதாவது ரஷ்யா ஒரு போரை உலகளாவிய தளத்தில் ஏற்படுத்த வேண்டுமென நேட்டோ கரிசனை கொள்கிறது. அமெரிக்கா மீண்டுமொரு யுத்தத்தை ஐரோப்பாவில் உருவாக்க முயலுகிறது. அதனை மேற்கு ஐரோப்பிய நாட்டு தலைவர்கள் அங்கீகரிக்கின்றனர். ஏற்கனவே முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களை எதிர்கொண்டு அழிந்துபோன ஐரோப்பா மீளவுமொரு போருக்கு தயாராவதை நேட்டோ கட்டமைக்கின்றது.

ஐந்தாவது, உலக பொருளாதார நெருக்கடி உலகப்போர்களுக்கு திறவுகோலாக அமைந்துள்ளது என்பதை வரலாற்றாசிரியர்களும் யதார்த்தவாதிகளும் உணர்ந்துள்ளனர். ஐரோப்பா ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நகர்கின்றது. எனவே உலக யுத்தமொன்று வெடிப்பதற்கான சூழ்நிலையை அமெரிக்கா மட்டுமன்றி முழுஉலகமும் கொண்டுள்ளது. அத்தகைய சூழ்நிலையை வலுப்படுத்தம் விதத்திலேயே நேட்டோவின் விஸ்தரிப்பும் ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதார தடைகளும் உக்ரைனுக்கு வழங்கப்படும் ஆயுதங்களும் பொருளதார உதவிகளும் ஏற்படுத்த வாய்பை வழங்குகின்றது.

தொடர் 15ஆம் பக்கம்...

## வாழ்வாதாரமா சேதாரமா 229



தமிழ்க் கவி பேசுகின்றார்

# இயற்கை விவசாயம் என்பது ஒரு கலையல்ல

'ஒருநாள் ஏதோ ஒரு காரணத்தால், எங்கிருந்தோ வரும் உணவு நிறுத்தப்படலாம். வாகனங்கள் ஓடுவதும் கப்பல்கள் மிதப்பதும், விமானங்கள் பறப்பதும்கூட நிறுத்தப்படலாம். ஆனால் உனக்கான உணவை நீ உற்பத்தி செய்யப் பழகியிருந்தால் இதையெல்லாம் எண்ணி நீ அஞ்சவேண்டியதில்லை.'

இது இயற்கை வேளாண் விவசாயி நம்மாழ்வார் கூறிய தத்துவம். எக்காலத்துக்கும், பொருந்தும் வகையில் அவரது பொன்மொழிகள் அமைந்துள்ளன. அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரைப் பின்பற்றியவர்கள் ஏராளம். அவரது நுண்ணிய அறிவாற்றல். ஏராளமான விவசாயிகளைக் கவர்ந்துள்ளது. 'ஒரு லட்சம் இளைஞர்கள் எங்களைப் பின்பற்றி விவசாயத்தில் இறங்கினால் விரைவிலேயே நம்நாட்டை மீட்டுவிடலாம்' என்று கூறியவர்.



இதைப்பற்றி ஏன் இப்போது சொல்கிறேன் என்பது பற்றி யாருக்கும் சந்தேகம் வரவே வராது. காரணம் இதுதான் அவரை நினைக்க வைக்கும் சரியான காலம்.

அண்மையில் விவசாய திணைக்களத்தினரால் வீட்டுத் தோட்டத்திற்கான விதைப் பொருட்களும், அவற்றை பயிரிட வேண்டிய ஆலோசனைகளும் அடங்கிய சிறு பொதி மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இயற்கை விவசாயம் என்பது ஒரு கலையல்ல அதைப்பயிலவும் தேவையில்லை. அதுதான் எம்முடைய பாரம்பரியம். வீடுகள்தோறும் விவசாயம் செய்பவனால் வளமாக இருந்த காலம் ஒன்று இருந்தது. இன்று விவசாயம் செய்பவனும், நவீன உபகரணங்களுக்காகவும் அதன் தேவைகளுக்காகவும் நாள்முழுதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன் வரிசையில் நிற்கிறான்.

வீட்டிலே மாடுகள் உழுதகாலம் அந்த மாடுகளை மனிதன் பராமரித்த காலம், என்று ஒருகாலம் இருந்தது. மாடுகளுக்கு தீவனம் தேடி எந்தப்பொ ருளையும் விலைக்கு வாங்க விவசாயி அலைவதில்லை. வரப்போரமிருக்கும் புல்லை மேய்கிறது. வைக்கோலைத் தின்கிறது. நெல்லைக் குத்தி அரிசியை நாம் எடுத்துக் கொண்டு கழிவாக வரும் உமியை கொடுத்தால் அதையும் தின்னும். பாடுபட்டு வேலை செய்யும். பசுவானால் பால் தரும் நமது பால்மாடுகளே கன்று போட்டு வேலையில் நிற்கும் மாடுகளுக்கு வயதாகிவிட்டால் புதிய மாடுகளை உற்பத்தி செய்து தந்துவிடும், கன்றுகள் வளர அவை விவசாயிக்கு வேலைக்காக வந்துவிடும். இன்றைக்கு நீங்கள் வாங்கி வைத்திருக்கும் உழவு யந்திரங்கள் குட்டி போடுமா என்ன? அது போகட்டும் அவை வைக்கோலையோ புல்லையோ மேயுமா? அதுவும் இல்லை. ஆனால் டீசலைக் குடித்துவிட்டு அது விடும் புகையால் சூழலைக் கெடுக்கத்தான் முடியும்.

மாறாக வைக்கோல்புரட்சி என்று ஒன்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதைப்பற்றி நான் பின்னர் ஒருமுறை சொல்கிறேன். இங்கும் வைக்கோல் எனபதைப்பற்றி பேசியே ஆக வேண்டும் எனக்கு நாற்றுமேடை அமைக்க சிறிதளவு ஒரு கைப்பிடி வைக்கோல் தேவைப்பட்டது. இரண்டு ஏக்கர் முதல் நூறு ஏக்கர்வரை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை கேட்டேன் என்ன ஆச்சரியம் ஒருவரிடமும் வைக்கோல் இல்லை.

' எல்லாம் மிசின் வெட்டுத்தானே வயல்லயே போட்டிருவம் எடுக்கிறதில்லை. வீடுகளை முன்னொருகாலம் வைக்கோலால் வேய்வோம் கடும் பனிக்காலம். வைக்கோலில் ஈரம்பட ஒரு சூடு கிளம்பும். உள்ளே உறங்குபவர்களுக்கு கதகதப்பாக இருக்கும். அதை வைத்து எழுந்த பழமொழிதான் 'தையும் மாசியும் வையகத்துறங்கு'வைக்கோல் போட்ட அகம், வீடு வையகம் தை, மாசி மாதங்கள் கடும் குளிர்காலம். எனவே வைக்கோல்வீட்டில் உறங்கு என்றார்கள்.

மனிதன் நல்லவற்றை எடுத்துக் கொண்டு கழிவையே உணவாகக் கொடுத்தாலும் மாடுகள் தமது கழிவையும் அவனுக்கு பயன்பாடாக கொடுக்கிறது. அது போடும் சாணம், மூத்திரம் எல்லாம் பசளையாக மறுபடி நிலத்தில் போகிறது எந்த சேதாரமும் இல்லாமல் மண் வளமாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் தோட்டங்களில் செய்கை பண்ணுமுன் பட்டியடைத்து விலங்குகளை அடைத்து வைத்ததொரு காலம். அன்றைய மனிதர்களுக்கு விவசாயத்தில் கிடைத்த லாபமே அவர்களது பிள்ளைகளுக்கு கல்வியாகவும் சீதனமாகவும், வெளிநாடுகளுக்கான செலவினமாகவும் ஏன் வானளாவ வளர்ந்த கட்டடங்களாகவும் மாறிய சிறு முதலீடாகும். இன்று மனிதர்கள் இல்லாத பெரும் பங்களாக்களை வயோதிபர்கள் கூட்டித்துடைத்து விளக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றாடம் ஐந்து சாக்கு மரக்கறி அறுவடை செய்த எனது தோட்டநிலத்தில் இப்போது மூன்று வீடுகளும் நான்கு கிணறுகளும் முளைத்துள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் தலா இரண்டு உந்துருளிகள். இருக்கின்றன. முழு நிலத்தையும் நான் பராமரித்து தோட்டம் செய்தபோது என்னிடம் ஒரேயொரு மிதிவண்டியே இருந்தது. எல்லாத் தேவைகளையும் அது திருப்தியாக நிறைவு செய்தது. முற்றத்தில் கூட ஒரு பலா ஒரு தோடை என நின்றது. இன்று முற்றங்களில் பூக்கன்றுகளும் குரோட்டன் செடிகளும் பூத்துக் குலுங்குகின்றன.

என்தாய் காலையில் சட்டிபானைகளை எடுத்து முற்றத்தில் போடுவாள் அங்கே ஒருவாளி தண்ணீரும் தென்னம் தும்பும் சிலநேரம் வைக்கோல்பிரியும் சாம்பலும் இருக்கும். அருகிலேயே சட்டிபானைகளை கழுவிக் கவிழ்க்கும் பரணும் காட்டுத்தடிகளை வைத்து கட்டியிருப்பாள். சட்டிபானைகளை சாம்பலுடன் தேங்காய் நாரால் தேய்த்து கழுவி பரணில் வெயிலில் கவிழ்த்து காயவைப்பாள். அத்தனையும் மண்பாத்திரங்கள் அவை காய்வது நல்லது என்பாள். கழுவிய நீர் தென்னைக்குப் பாயும், அதில் தேங்காய் வந்ததும் வாழைமரத்தடிக்கு மாறியது கழுவும் இடம். நானும் அதையே பின்பற்றினேனா என்றால் இல்லை ஆரம்பத்தில் செய்தாலும் போகப்போக நானும் அயலவர்கள் போல வாழ முயன்றேன். எனது பிள்ளைகளுக்கு அறவே அது தெரியாது

இப்போது சட்டிபானை கழுவ யாரும் வெளியே போவதில்லை அதைகழுவும் தண்ணீரும் சாக்கடையில் விழுகிறது. கழுவும் தும்பு சோப் வகைகள் எல்லாமே வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டு, அழகிய பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு வருகிறது. எமது பாவனையிலிருந்து ஒதுக்கிவிட்ட ஒவ்வொன்றும் எமது ஆரோக்கியத்தை மாற்றிவிட்டது தெரியவில்லை

வீட்டுக்கு வீடு வேப்பமரம் இருக்கிறது. எத்தனைபேர் அதை தினசரி உபயோகிக்கிறோம் காலையில் பேஸ்ற்றும் பிறஸ்ும் தேடுகிறோம். நாம் ஆனால் இரண்டும் ஒன்றாக உள்ள வேப்பங்குச்சி ஆமணக்கங்குச்சி என்பவற்றை தென்னிந்தியாவின் வாலிபர் ஒருவர் ஒன்லைனில் விற்று வருகிறார் என்பதை நம்புங்கள். மக்கள் இயற்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். எமது பிரதேசங்களில் விளைபொருட்களும் விலைகருதி வெளியே போவதால் நுகர்வோருக்கு தரமான பொருட்களை பெறமுடியவில்லை. மீன்கடையில் நல்ல மீன்களைக் காணவில்லை. மரக்கறிகளின் விலை அரைக் கிலோ வாங்க வேண்டியவர்களுக்கு காக்கிலோ வாங்குமளவுக்கே இருக்கிறது. ' எங்க பிள்ளை ஆமான வகையில் சமைச்சி சாப்பிட்டு எத்தினை நாள். கறியா வைக்கிறத சாம்பாரா வச்சு சோறாக் காச்சிறத கஞ்சியா வச்சு காலம் போகுது.' என்றார் ஒரு மூதாட்டி அவர் கீரை விற்கிறார். என்றைக்காவது கிளிநொச்சி சந்தையில் வாழைப்பூ முருங்கையிலை, பலாக்கொட்டை என்பன விற்பனைக்கு வந்ததுண்டா? அவை சாதாரணமாக இலவசமாக கிடைப்பவை. ஆனால் அண்மைக்காலங்களில் நான் இவற்றை சந்தையில் பார்க்கிறேன்.

'குடிக்கிற தண்ணிய காசுக்கு வாங்கிற காலம் வரும்'என்று எனது பேரன் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு சொன்னபோது நான் கெக்கட்டம் விட்டு சிரித்தது எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

# திக்கற்றவர்களுக்கு வழிகாட்டும் ரிதம் உமையாள் ஈஸ்வரன்



கொழும்பில் பிறந்த உமையாள் ஈஸ்வரன் ஹொங்கோங்கில் உள்ள ரிதம் அறவாரியத்தின் தலைவராக உள்ளார். QI குழுமத்தின் சமூக செயல்பாடுகள் பிரிவான Rythm Foundation, ஐக்கிய நாடுகளின் சமூக மேம்பாட்டுப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறது, உமையாள் 1990 இல் மலேசிய தொழிலதிபர் விஜய் ஈஸ்வரனை மணந்தார், வெளிநாடு சென்றார், ஆனால் அவரது தாய்நாட்டு நினைவுகள் அவரை விட்டு விலகவில்லை.

அவரைப் பற்றி கேட்டோம்.

நான் கொழும்பில் பிறந்து வளர்ந்தேன். பின்னர் வயது வந்ததும் எனது நம்பிக்கைகளை வடிவமைப்பதில் ஈடுபட்டேன். எனது பெற்றோர்களும், அவர்களின் தாராள மனப்பான்மையின் தொடர்ச்சியான எடுத்துக்காட்டுகளும்தான் சமூகத்திற்கு நான் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எனது விருப்பத்தை வடிவமைத்தது.

எனது தந்தை வர்த்தகராக திகழ்ந்ததுடன் அவரை அறிந்த அனைவராலும் மிகவும் மதிக்கப்பட்டவர். தெரியாதவர்கள் உட்பட பலர் அவருடைய உதவியை நாடி எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். எங்கள் வீட்டின் முன்வாசல் மூடியிருப்பதை நான் அரிதாகவே பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டிற்குள் நுழைந்த எவருக்கும் என் அம்மா சமைத்த உணவையும், என் தந்தை ஆதரவினையும் வழங்கினார்கள். இந்த சூழலில் வளர்ந்ததால், அது என் இரத்தத்தில் ஊறியுள்ளதாகவே நான் கருதுகிறேன்.

உங்கள் தாய் நாட்டிற்கு மீண்டும் வர உங்களைத் தூண்டுவது எது?

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மலேசியாவில் வாழ்ந்திருப்பதால் மலேசியா இப்போது எனது தாயகமாக இருக்கலாம், ஆனால் எனது இளமைப் பருவத்தில் என்னை வளர்த்த தாய் நாடாகவே இலங்கை எப்போதும் இருக்கும்.

இதன் மூலம் பின்தங்கிய சமூகங்களின் அபிவிருத்திக்கான பல்வேறு திட்டங்களை எம்மால் மேற்கொள்ள முடிந்தது.. மக்கள் தங்களைத் தாங்களே மேம்படுத்திக் கொள்ள, அவர்களின் தனிப்பட்ட ஆளுமையை வளர்க்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

**இலங்கையில் ரிதம் அறவாரியத்தின் பணிகளைப் பற்றி கூறுவீர்களா?**

2004 இல் ஏற்பட்ட ஆழிப்பேரழிவின் பின்னர் இலங்கையில் எமது முதலாவது சமூக திட்டம் ஆரம்பமானது. QI குழுமத்தின் மூலம் நாம் கணிசமான நிதி உதவிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் போன்ற வழிகளில் நிவாரணம் வழங்கினோம். சமீப காலமாக ரிதம் அறவாரியத்துடன் கூட்டு சேர முடிந்தது.

முல்லைத்தீவில், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், கஷ்டப்படும் குடும்பங்களுக்கு மலிவு விலையில் வீடுகள் மற்றும் பலவற்றை வழங்குவதற்கும், LEADS உடன் இணைந்து ஒரு சமூக நிறுவனத் திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில், நாங்கள் சர்வோதய சிரமதான இயக்கத்துடன் நெருக்கமாக இணைந்து நலிந்த பெண்களுக்கு தொழில்சார் கற்கைநெறிகள் மூலம் அவர்கள் தொழில் தொடங்குவதற்கு வழிவகை செய்து வருகிறோம். விசேட தேவையுடைய நூற்றுக்கணக்கான தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்காக பெண்கள் அபிவிருத்தி நிலையத்துடன் கண்டி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளை சமூக ரீதியாக உள்ளடக்கியதையும் நாங்கள் ஊக்குவித்தோம்.

எங்கள் திட்டங்கள் முடிவடையும் போது, சமூகங்கள் சுயசார்புடையவர்களாக மாறுவதையும், அவர்களின் வளர்ச்சியை சுதந்திரமாக நிலைநிறுத்துவதையும் உறுதிசெய்ய நீண்ட காலத்திற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதே எங்களது ஒட்டுமொத்த இலக்காகும்.

எங்களிடம் பல வெற்றிக் கதைகள் உள்ளன. வள்ளிபுனத்தில் ஒற்றைத் தயாரான சிவகுமாரியின் கதை குறிப்பிடத்தக்கது. அவர் தனது வாழ்நாளில் இரண்டு முறை யுத்தம் காரணமாக தனது வீட்டை விட்டு இடம்பெயர்ந்துள்ளார். அவர் தனது குடும்பத்தை நடத்துவதற்காக தினசரி கூலி வேலை செய்து வந்தார். பல தினங்கள் அவருக்கு வேலைகிடைக்காத நிலையில் அவரது குடும்பம் பட்டினியால் வாடநேரிட்டது.

சிவகுமாரி ஒரு கட்டத்தில் எங்கள் திட்டத்தில் சேர்ந்தார், அங்கு அவர் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற செங்கற்கள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றார், மேலும் அவருக்கு ஒரு வேலையும் வழங்கப்பட்டது, அது இப்போது அவருக்கு நிலையான வருமானத்தை தருகிறது. இப்போது அவர் தனது குடும்பத்தையும் குழந்தைகளின் கல்வியையும் கவனிக்க முடிகிறது. அவரது மூத்த புதல்வனின் கல்வியில் பல தடைகள் ஏற்பட்ட போதிலும் அண்மையில் புலமைப் பரிசில் பரீட்சை எழுதி மிகச் சிறப்பாக தேர்ச்சி பெற்றார், இது எளிதான சாதனை அல்ல. சில நேரங்களில் மக்களுக்கு சரியான வாய்ப்பு தேவை என்பதை இது காட்டுகிறது. சிவகுமாரி தனது வாழ்க்கையில் தனக்கு இல்லாத வாய்ப்புகளை தனது குழந்தைகளுக்கு வழங்குவதில் உறுதியாக உள்ளார், அதற்கு நாங்கள் அவருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைகிறோம். இது போன்ற கதைகள் நாம் சரியான பாதையில் தான் செல்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

அருள் ...









அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி அதிபர் "கலாசூரி "திவ்யா சுஜேனின் நெறியாள்கையில் நிவேதா கணேசன், சொக்கர் பிரவீன் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தலைமை விருந்தினர் அ. உமாமகேஸ்வரன் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்) தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக சென்னை மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப்பேரன் "ஞானபாநு" இசை மேதை டாக்டர் ராஜ்குமார் பாரதி கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் தலைமை விருந்தினர் அ. உமாமகேஸ்வரன் கௌரவம் பெறுவதையும், இந்தியாவில் இருந்து வருகைதந்த அணிசேர் கலைஞர்கள் மற்றும் நட்டுவாங்கம் செய்த ஆசிரியர் திவ்யா சுஜேன் ஆகியோரையும் மாணவர்களுக்கான கல்லூரி நடனச் சான்றிதழை ஆசிரியர் வழங்குவதையும் நடன நிகழ்வினையும் காணலாம்.





# குறிஞ்சியில் பூத்த மலர்!



குறிஞ்சியிலே பூத்த மலரே!
கவிகளிலே வாழ்ந்த கவிஞனே!
புசல்லாவை தந்த புதல்வனே! புலம்புகிறோம்
இன்று உம் பிரிவால்!
வித்தகனாய் கல்வி பெற,
முத்துக்களாய் எமை வளர்த்தீர்!
ஓய்வின் பின்பும் ஓய்வில்லை,
நீர் எமை வளர்த்ததில்!
ஏனோ இன்று சயனித்தீர்!
சரித்திரம் படைத்து விட்டீர்!
மாதா மனம் மகிழ்ந்தாள்! பிதா பெருமை கொண்டார்!
எம் குருவாய் உமை பெற்றதில்,
நாம் பெருமைக் கொண்டோம்!
எம் குறிஞ்சி நாடனே! உம்மால் நாம் உயர்ந்தோம்!
உம் பிரிவால்
நாம் துவண்டோம்!
அன்னையாய், தந்தையாய்,
நல் ஆசானாய், தோழனாய்,
நாம் தொழும் குருவாய் வாழ்ந்தாய்!
ஜனனமும் மரணமும் உண்மையென்றால் உறவும்
பிரிவும் அதுவே!
இன்று எம்மோடு நீர் இல்லை!
இறப்போடு இன்புற்றாய்!
கண்ணீரோடு கவலை பகிர்கின்றோம்!
அன்புள்ள ஆசானே, காலம் உள்ளவரை உம்மை மறவோம்!
கணக்கிறது மனம் அமைதி பெறட்டும்
உம் ஆத்மா!
ஓம் சாந்தி

அமுதா ஜெயக்குமார்

# போகாதே! மகனே போகாதே!

போகாதே! மகனே போகாதே!
பொல்லாத போக்குப் போகாதே!
ஸ்கூல் இல்லாட்டிப் போகட்டும்.
இப்படி ஏறிப் போகாதே!
ரெயினில் போனவனும் விழுந்துட்டான்.
ரெண்டு நிமிடத்திலே இறந்திட்டான்
படிக்கத்தான் வேணும்டா மகனே!
பாதகப் பயணங்கள் வேண்டாம்!
கொறோனாக் காலம் போல் வீட்ட
கிடந்து படித்திட்டால் போதும்.
போனுக்குள்ள படிச்சபடிப்பு, அதை
போட்டுக்குட்டு படிடா தங்கம்!
பெற்றோல், டீசல் வருமாமே கப்பல்?
பெற்ற பின்னே போ மகனே ஸ்கூல்!
தொங்கிக்கிட்டுப் போகாதே தங்கம்!
தூக்கி எறிந்தால் இறப்பாயே பங்கம்!

கலாபூஷணம் காத்தான்குடிபௌஸ்



பட உதவி: மீலாத் கீரன்

# கவிதை மஞ்சரி

கிருஷா

## மலர்கள் புன்னகையால் சொன்ன ஈத் முபாறக்

எம்.எம்.எம்.நகீபு
சாய்ந்தமருது.

நாளை விடிந்தால்
பெருநாள் என்பதால்
இரவு வானத்தின் உள்ளங்கையில்
மருத வண்டி புள்ளிகளாய்
நட்சத்திரங்கள்

பல நிறங்களிலான முஸல்லாவை
விரித்தது போல் இருந்தது
அதிகாலை வானம்

மசூதிகளில்
ஹஜ்ஜுப் பெருநாள்
தொழுகையை தொழுது
அல்லாஹுவை ஸுஜுது செய்தன
எனது
சமூகப்புறாக்கள் வரிசைகளாக

ஈத் முபாறக் வாழ்த்தை
சிறுவர் சிறுமிகள்
சொல்லித்திரிந்த போது
அவர்களில் சிலருடன்
வண்ண மலர்களும் வந்திருந்தன
இந்த வாழ்த்தை
புன்னகையால் சொல்லுவதற்கு
அவர்கள் உடுத்திருந்த
புத்தாடைகளின் பூக்களாய்

ஏழை எளியவர்களுக்கு
அன்னதானங்களையும்
இனிப்புப் பண்டங்களையும் வழங்கிய
உயர்ந்த உள்ளங்களால்
கட்டப்பட்டிருந்தது
மகத்துவத்தின் மாளிகை
இந்நாளின் கருணை நிலத்தில்

முஸ்லிம் சகோதரர்கள்
முஸபா செய்து கொண்ட – அந்த
சகோதரத்துவ
பண்பை பார்த்தோ தெரியாது?
பகல் பொழுதை
அந்தி வானம் முஸபா செய்து வழியனுப்பியது

பகைமையால் சொந்த பந்தங்களை
விட்டு மறந்து
பறந்து போன உறவுகளும்

மீண்டும் வந்து – அந்த
சொந்த பந்தங்களுடன்
உரையாடி மகிழ்ந்தமை இந்த
ஈகைத் திருநாள் எமக்களித்த
ஓர் அன்பளிப்பு ஆகும்

இவைகளால் இந்த
ஹஜ்ஜுப் பெருநாளை
ஆசை கரங்களில் தேய்த்து
மனதில் சுமக்கின்றேன்
அது
விலை உயர்ந்த
சுமுக் (Shumukh) என்ற
வாசனைத் திரவியமாய்
மணம் வீசுகின்றது ஊரெல்லாம்

## கண்வெட்டு

இணுவில் வாகீசன்

தெருவெங்கும் மின் வெட்டு
நிலவொளியில்
உன் கண் வெட்டு
என் மனவெளியில்
உனைத்தொட்டு
நடக்கின்றேன் எட்டுத்திக்கும்

நிலவொளியில் கதைபேசி
அலை ஒலியில் கால் நனைத்து
தலைசாய்த்து உறங்கவேண்டும்
விடியும் வரை உன் தோளில்

கைகோர்த்து பலதூரம்
வந்திடவும் வேண்டாம்
அக்கினியை வலம் வந்து
வீடுவரை வந்துவிடு
முற்றத்து மல்லிகையை
உன் கூந்தலிலே சூடிடுவேன்



## ஏன் இந்த ஏக்கம்

குப்பிளான் குமரன்

பேரழிவு வரப்போகின்றது என்று
பேசுகின்றனர் பலர் இன்று அது
ஏங்க வைக்கிறது நம் எல்லோரையும்
காலம் எல்லாம் ஏங்கி ஏங்கியே
மானிடர் யாவரும் வாழுகின்றனர்

நம் தேசம் செய்த பாவம்தான் என்ன
நம் நாட்டில் வாழ்வதற்கு நம்மிடம்
வளங்களா இல்லை சிந்தியுங்கள்
வளங்களை சீராக பயன்படுத்தினர்
நம் முன்னோர்கள் அன்றைய நாளில்
வளமாய் வாழ்ந்தனர் மகிழ்ச்சியுடன்
தாராளமயமாக்கல் கொள்கை வந்தது

வெளிநாட்டு பொருட்களுக்கு அடிமையானோம்
நம்நாட்டு வளங்களை கைவிட்டோம்
நலிவடைந்தது நாம்தான் நம்புவோமா?
நெருக்கடிக் காலங்களில் நமது வளங்களை
மீண்டும் பயன்படுத்தும் மனப்பாங்கை வளர்ப்போம்
படிப்படியாக எங்களை நாங்களே மாற்றுவோம் ஏக்கம்
வேண்டாம் என்றும் எங்களுக்கு
விரைந்து வெற்றி கொள்வோம் பேரழிவை!

## குற்றமிழைக்காத கைதிகள்

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.

எண்ணமதில் கொள்ளவில்லை
எண்ணில்லாத் துயரமது
வண்ணச் சரங்களென
வந்தமர்ந்திடுமென்று...

கண்ணக் குழிகளிலே
கைகள் இரண்டும்,
கண்ணீரும் சிந்தும்
காரணமே யாரறிவார்?

ஒரு பிடிச்சோற்றுக்கு
ஒப்பாரி ஓலங்களே நிதம்,
உற்றமும் சுற்றமும்
உரத்து ஒலிக்கின்றதேன்?

விலைவாசியேற்றங்கள்
விரசக் காட்சிகளென
இரட்டிப்பு விலைகள்
இல்லாதவன் பசியெங்ஙணம்?

வீதியில் பார்க்கவியலா
விசனத்தின் வடிவங்கள்

வாகன எரிபொருளுக்கோ
வளைந்து வளைந்து வரிசைகளில்

இதயச் சுமைகளோ
இன்னுமின்னும் கூடி
இல்லாத் தனத்தை
இரவலளித்து விட்டது

கடன் பழுக்களிலே
காலம் உருளுகிறது
காரணமிலாக் கடனாளிகளாய்
கருக்களும் சர்வதேசத்திலே,

செய்யாக் குற்றங்களுக்காக
சிறைத்தேசத்தில் நாளும்
சித்திரவதையாவது ஏனோ?
சீக்கிரத்தில் விடுதலையாவோமா?



## மதி மயங்கும் மனம்

அறூபா அஹ்லா
கல்முனை

மாயத் தோற்றத்திலே
மதி மயங்கிப் போகிறது
மனித மனம்

மாயமென்று
அகம் உணர்ந்தும்
ஆசைகள் அளவுகள்
கடந்ததனால்
மாய வலையில்
மயங்கிக் கிடக்கிறது

சிக்கித் தவிக்கும்
மாய வலையில்
சிக்காமல் நழுவிட
ஆசைகளை அடக்கினாலே
போதுமே

இருப்பதை இருப்பது
போல் காட்டினாலே போதுமே
வளமான வாழ்வை
மகிழ்வாய் வாழலாமே

பகட்டின் அடிகளை
எம் பாத அடிகள்
தொடர்ந்தால்
பாதாள குழியில்
பரிதவித்திட வேண்டுமே

மாயத் தோற்றமதில்
மதி மயங்கிப் போகாமல்
இருக்கும் வாழ்வை
இன்பமாய் கழிப்போமே

## பெற்றால் போதுமே பெற்றோல்!

இரா.ஜெயக்குமார்

பெற்றோர் தவமிருந்து
பெற்றதாய் சொன்னது அன்று!
பெற்றோலுக்காய் தினமும்
தவமிருக்கிறேன் இன்று!

குறைப்பதாய் சொன்ன மகான்
குணத்தினை காட்டிவிட்டான்!
விற்கிற சிங்கங்களோ
வில்லங்கம் தருகுது பார்!

விலை உயரக் காத்திருந்த
நிலவறைப் பெற்றோலோ
உலை வைக்கும் விலை கண்டு
உள்ளிருந்து ஊற்றெடுக்கும்!

நகரும் பேரணியில்
நாளும் பேரவலம்!
தகரும் வாழ்வாலே
தவிக்குமே மனமெங்கும்!



## பத்தினி

கலாபூஷணம்
'அக்கரைப்பற்று நஜுமு'

கட்டிக் கொண்டபோது,
அவளின்
கண்கள் தெரிந்தன!
கட்டிலில் கொண்டபோது
கள்ளம் புரிந்தது!
விட்டுப் பிரிந்தபோது
வேஷம் கலைந்தது!
தாலிகட்டிக் கொண்ட இவள்,
வேலிதாண்டிய வெள்ளாடு என!
கற்புக்கரசியே!
கண்ணகியே!
உன் பாதம் தாங்கி
மண்ணில் பட்டுத் தெறித்த
சிலம்புப் பரல்களில் கூட
தொட்டுச் சிலிர்த்ததுன்
கற்புக் கனலின்
கங்கில்கள்!
அதனால்
உன்
பாதம் கழுவிய
தண்ணீரில் கொஞ்சம்
காணிக்கையாய் தா!
என் பத்தினியாயிருந்தவள்
பருகிக் கொஞ்சம்,
அவளை
புனிதமாக்கிக் கொள்ளட்டும்!
நீ
கற்பின் வலிமையால்
மதுரையை எரித்தாய்!
இவள் மதுரமொழி பேசியே
என் வாழ்க்கை யை எரித்தாள்!

## கண்ணீரில் தெரியும் நீ

ஷிபானியா பௌசுல்
நேகம

தளர்ந்திக் கொள்ளாத
பிடிவாதங்களை
பிரியமான உனக்காக
தளர்த்திக் கொண்டேன்..

கைவிடாத அகங்காரங்களை
கைபிடிக்க நினைத்து
உனக்காக கைவிட்டேன்..

அடிமைவாதத்தை அடியோடு
ஒழிக்கும்
ஆயுத மங்கையென
சுதந்திரமாக வலம்வந்த
கால்களுக்கு உனக்காக
சங்கிலி மாட்டிக் கொண்டேன்


என்லொட்டுமொத்த
நாட்களும் வாரங்களாக
உனக்காக மட்டும்
வலம் வர வரம் பெற்றதை
அறியவில்லையா!

சிந்தனைகளுக்கும்
என் உணர்வுகளுக்கும் நீ
திட்டமிட்டு கொடுத்த பட்டம்
முட்டாள் என்ற
முற்றுபுள்ளியை
மட்டுமே...

தவிர்க்க முடியாத
தருணங்களில் எனக்குள்
தவழ்ந்து திரிகின்ற
உன் நினைவுகள்
மட்டும்...
என் நெஞ்சத்தை
குத்திச் செல்கின்றதே
ஏன்

## கவிதை

என். பாரத்,
மானிப்பாய்.



கவிதைகளெல்லாம்
வியக்கின்றது
கவிதையே
உன்னைப் பார்த்ததும்
படைத்தவன் யாரோ
பார்க்கத்துடிக்கின்றது
கவிதைகளெல்லாம்
நீ
காதல் சுவடுகளில்
பிறந்தவள் என்று
யாருக்கும் தெரியாதுதானே
கவிதையே..!

## போஷாக்கின்மை என்ற... 12ஆம் பக்க தொடர்...

போஷாக்கின்மையானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். முதலாவதாக போஷாக்கின்மையானது ஒருவரது வாழ்நாள்களைக் குறைத்துவிடும். இதனால் பொருளாதார ரீதியில் பங்களிக்கவல்ல காலப்பகுதி சுருங்கிவிடும். அதனால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான காலப்பகுதி தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஒரு நாட்டின் வாழ்நாள் எதிர்பார்க்கையில் ஏற்ப டும் 10 சதவீத அதிகரிப்பு அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வருடாந்தம் 0.4 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்தும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல மிக அரிதான உற்பத்தி வளமாகக் கருதப்படும் மனித மூலதனத்தைக் கட்டியெ முப்புவதில் போஷாக்கின்மையானது தடைகளை ஏற்படுத்தக் கூடும்.

அண்மைய ஆய்வுகளின்படி ஒரு சிசு பிறந்தது முதல் மூன்றுவருட காலப்பகு தியில் அது உள்ளெடுக்கும் கலோரிகளின் அளவு அது வளர்ந்து 20 வருடங்க ளின் பின்னர் உழைக்கும் வருமானத்தில் தாக்கம் செலுத்தும் எனக் கண்டறியப் பட்டுள்ளது. அதிக கலோரிகளை உள்ளெடுக்கும் குழந்தை பின்னாளில் அதிக வருமானத்தை உழைப்பது தெரியவந்துள்ளது. அக்குழந்தை உற்பத்தித்திறன் மிக்கதாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

எனவேதான் கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மாரின் போஷாக்கு மட்டம் அதிக ரிப்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதனால் அமெரிக்காவின் நிதியுதவி நீண்டகால ரீதியில் இலங்கையைப் பாதிக்கவல்ல போசணைக்குறைபாட்டுப் பிரச்சினையை ஈடுகொள்ள ஒரு சிறிய பங்களிப்பை வழங்கக்கூடும். ஆனால் ஏற்கெனவே கட்டியெழுப்பபட்டுள்ள மனித மூலதனத்தையும் உள்நாட்டில் சரி யாகப் பயன்படுத்த வக்கின்றி வெளிநாடுகளுக்கு விற்று டொலர் தேடமுயற்சிக் கும் ஆட்சியாளருக்கு இவ்விடயங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கும்.

## உலகளாவிய போரை... 12ஆம் பக்க தொடர்...

எனவே, ஜி07 உச்சி மாநாடும் நேட்டோ உச்சி மாநாடும் ரஷ்யாவிற்கு எதிரான அணுகுமுறையை கொண்டிருந்த போதும் அவ்வணுகுமுறை ரஷ் யாவிற்கு எதிரான போராக எழுச்சி பெறவும் ரஷ்யா உலகத்தை நோக்கிய ஒரு போரை தொடுக்கவும் வாய்ப்பை தந்துள்ளது. ரஷ்யா சுவிடன் மற்றும் பின்லாந்து உக்ரைன் மீதான போரை நிகழ்த்துமாயின் அப்போரில் நேட்டோ தன்னை ஈடுபடுத்தி கொள்ள முழுமையான அங்கீகாரம் ஏற்பட்டுள்ளது. நேட் டோவும் ஜி07உம் ரஷ்யாவை மட்டுமன்றி சீனாவையும் அதன் கணனி யுத் தத்தையும் கலப்பு போரையும் எதிர்கொள்ளும் விதத்தில் நகர்ந்துள்ளது. ஒட்டுமொதத்தில் ரஷ்யாவிற்கும் சீனாவுக்குமெதிரான பலமான அணியை யும் அதற்கான கட்டுமானங்களையும் திட்டமிடல்களையும் உருவாக்குவதில் நேட்டோவும் ஜி07உம் முனைப்பாக செயற்படுகின்றது.

## அரசியல் ஸ்திரத்தன்மை... (06 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு அமைக்கப்படும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு பாரா ளுமன்ற உறுப்பினர்களே தலைவர்களாக இருப்பார்கள்.

இதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களும் சாதாரண பாராளுமன்ற உறுப் பினர்களாக இருப்பதுடன், சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறு வனங்களின் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். குறிப்பாக கொள்கைத் தயாரிப்புப் பற்றிய தீர்மானங்களை எடுப்ப தற்கு துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் உறுதுணையாகவிருக்கும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் கணிசமான பங்களிப்பை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக பாடசாலைக் கல் வியில் பாலியல் குறித்த பாடத்தை உள்ளடக்குவது குறித்த விடயம் கல்விசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டு சமூகத்தில் கருத்தாடல்களை உருவாக்கியிருந்தது. அதேபோல, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு முன்வைத்திருந்த அறிக்கை பெரிதும் பேசப்பட்டது.

இவ்வாறான நிலையில் நாடு இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டிருக் கும் சந்தர்ப்பத்தில் உரிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கு துறைசார் மேற் பார்வைக் குழுக்கள் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கதாக அமையும். இது மாத்திரமன்றி, நிதி குறித்த விடயங்களைக் கையாள்வதற்கும் விசேட குழுக் கள் அமைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியி ருந்தார்.

இது பற்றிய விடயங்களும் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன. குறிப் பாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பாராளுமன்றக் குழுக்கள் பற்றிய பரிந்துரைகளைப் பிரதமருக்கு விரைவில் சமர்ப்பிக்கவுள்ளார். இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைத் தீர்வுக்கும் உறுதுணையாகவிருக்கும்.

## இடுக்கண் களையும் நல்லெண்ணம்...

(06ஆம் பக்கத் தொடர்)

மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பின் போது, இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவு மற்றும் பெரும்போகத்தில் நெற்செய்கைக்குத் தேவையான 65,000 மெற்றிக் தொன் யூரியாவின் அவசரத் தேவை என்பவை கருதி 55 மில் லியன் அமெரிக்க டொலர் கடனாக இந்தியாவினால் ஒதுக்கப்பட்டமை குறித்து மிலிந்த மொரகொட மீண்டும் அமைச்சர் சீதாராமனுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெற வைக்கும் நடவடிக்கையில் தனது அமைச்சின் பூரண ஒத்துழைப்பை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட விடம் தெரிவித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இக்கட்டான காலகட்டத்திற்குப் பின்னர் தனது மக்களின் ஆதரவுடன் இலங்கை விரைவில் மீண்டு வரும் என்று நம்பிக்கையும் தெரிவித்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கென இந்தியன் ஒயில் கோர்ப்பரேஷனால் (IOC) வழங்கப்பட்ட 40,000 மெட்ரிக் தொன் எரிபொருள் உட்பட சுமார் 200,000 மெட்ரிக் தொன் அளவிலான எரிபொருளை இந்தியா இதுவரை வழங்கியுள்ளது.

இலங்கையில், நெருக்கடி நிலையைத் தீர்க்கவும், பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்கும் உதவுவதற்காக இந்தியா மேலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு கடன் வழங்குவதாகவும் அறிவித்திருந்தது. அதோடு, 11,000 மெட்ரிக் தொன் அரிசியை கொழும்புக்கு வழங்கியிருந்தது.

இவ்வாறிருக்கையில், இலங்கையில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாக நான்கு எரிபொருள் கப்பல்களை கொள்வனவு செய்வது தொடர்பா கவே இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சு வார்த்தை ஆரம்பமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிற்கும் இந்தியாவின் பெற்றோலிய இயற்கை வாயு, வீட மைப்பு மற்றும் நகர அலுவல்கள் அமைச்சர் ஹர்திப் சிங் பூரிக்கும் இடையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது நான்கு எரிபொருள் கப் பல்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கே முயற்சி மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் உற்பத்தி, விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்புத் தொடர்பில் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்தும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக் கடிகள் குறித்தும் மிலிந்த மொரகொட இந்திய அமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள் ளார். எரிபொருள் இறக்குமதிக்காக கடனாக வழங்கப்பட்ட உதவிக்காக உயர்ஸ்தா னிகர் இந்தியாவிற்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கு பெற்றோல் மற்றும் டீசலை விநியோகிப்பது தொடர்பில் இந்திய அமைச்சர் சாதகமான கருத்தை வெளியிட்டதாகவும் இந்தத் தீர்மானம் மிக்க சந் தர்ப்பத்தில் இலங்கைக்கு முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்க இணங்கி யதாகவும் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் அறிவித் துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் எரிபொருள் துறையின் ஒத்துழைப்பை விருத்தி செய்யக் கூடிய முறை குறித்தும் அங்கு கவனம் செலுத் தப்பட்டது. இரண்டு டீசல் கப்பல்களையும் இரண்டு பெற்றோல் கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கும் அங்கு கவனம் செலுத்தப்பட்டது. இதில் டீசல் கப்பலை விரையில் இலங்கைக்கு அனுப்ப இந்தியா இணக்கம் தெரிவித்திருப்பதாக இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தக் கப்பல் நாட்டை வந்தடைய மேலும் ஒரு வார காலம் எடுக்கும்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்குமாறு இந்திய அரசிடம் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கோரிக்கை விடுத்துள்ளமையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண் டியதாகும். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வேலைத்திட்டம் இறுதி செய்யப்ப டும் வரையில், இலங்கை எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை தணிக்க உதவுமாறு உயர்ஸ்தானிகர் இந்தியாவிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, "இந்தச் சூழலில், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொரு ளுக்கான கடன்கள் மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு போன்ற வடிவங்களில் இந்தியா வழங்கும் உதவிகளை அதிகரிப்பது மற்றும் மறுசீரமைப்பதற்கான சாத் தியக்கூறுகளை அமைச்சரும் உயர்ஸ்தானிகரும் ஆராய்ந்தனர்" என்று இலங்கை தரப்பிலான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார உரையாடலை நடத் துவதற்கான நிறுவப்பட்ட உத்தியோகபூர்வ நிலைப் பொறிமுறையானது தொடர வேண்டும் என்றும் இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இந்தியா இலங்கைக்கு 3 பில் லியன் டொலர் மதிப்பிலான பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## கார்மேகத்தின் வாழ்வினை...

11 ஆம் பக்க தொடர்...

எங்கள் தந்தையைப் பற்றி எங்க ளுக்கே தெரியாத நிறைய விடயங்கள் நாங்கள் ஆவணப்படுத்த மிக உதவியாக இருந்தது அவர்களது ஆக்கங்களே.

மேலும் 'நினைவினில் வாழும் இனிய தந்தை' என்ற தலைப்பில் எனது கட்டுரை யும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

இந்நூலின் முதற் பதிப்பு 2018 ஆம் ஆண்டு நிறைவடைந்த நிலையில் கம் போடிய உலக தமிழர் மாநாட்டில் முன்னாள் அமைச்சரும் இலங்கை மலையக முன்னணி தலைவருமான வே. இராதா கிருஷ்ணன் தலைமையிலும் பின்பு புது டில்லி பிரவாசி பாரதீய யுக கேந்திரா நிலையத்தில் கோபியோ அமைப்பின் சர்வதேச மாநாட்டில் மலேசிய தலைவர் செல்வராஜ் தலைமையிலும் வெளியீடு செய்யப்பட்டது.

எனது தந்தை கார்மேகத்தின் பணிக ளும் சேவைகளும் காற்றோடு கலந்து கரைந்து விடா வண்ணம் அவர் பற்றிய தகவல்களை தகுந்தவர்கள் மூலம் கட்டுரை வடிவில் ஆக்கங்களாக சேகரித்து ஆவணப்படுத்தி ஒரு புத்ததகமாக பதிப் பித்து அதனை மேலும் அலங்கரிக்கும் வண்ணம் வெளியீடு செய்து எங்கள் கரங் களில் தவழ வைத்த பெருமை எச்.எச். விக் கிரமசிங்கவை மட்டுமே சாரும்.

என் தந்தை கார்மேகம் மறைந்து 17 வருடங்களுக்கு மேல் ஆகி விட்ட போதிலும் அவர் அனைவராலும் இன்றும் நினைவு கூரப்படுகின்றார் என்பதில் பெரு மிதம் கொள்கிறேன் என்றார்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவு ரையாளர் எம்.எம்.ஜெயசீலன் மீள்பிரசுரம் செய்த கோ.நடேசய்யர் எழுதிய 'இலங் கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கட மைகளும் உரிமைகளும்' என்ற நூலை பதிப்பித்து வெளியிட்டமையைப் பாராட்டி மு.நித்தியானந்தன் உரையாற்றினார்.

இவ்விரு நூல்களையும் இவ் வெளி யீட்டு விழாவில் பிரதம அதிதியாக விருந் தினராக கலந்து கொண்ட எச்.எச்.விக்கி ரமசிங்க இ.பத்மநாப ஐயருக்கு வழங்கி கௌரவித்தார்.

## தமிழ்க் கட்சிகள் தேசிய... 11 ஆம் பக்க தொடர்...

எனினும் இப்போது சில தமிழ் உறுப்பி னர்கள், உதாரணத்துக்கு சாணக்கியன், தேசிய அரசியல் பற்றியும் பேசுகிறார்கள். தமிழ் மக்கள் பற்றி மட்டும் பேசும்போது என்ன நடக்கிறது என்றால் பிராந்திய அர சியல் மட்டும் பேசுபவர்கள் என்று சிங்கள சமூகம் நினைத்து விடுகிறது. எவ்வளவு தான் வடக்கை மையப்படுத்தி அரசியல் செய்தாலும் தேசிய அரசியலை மையப் படுத்தி மேற்கொள்ளப்படும் அரசியலே முக்கியமானதாகக் கருதப்படும். தமிழ்க் கட்சிகள் தமது மத்தியில் காணப்பும் பிளவு களை மறந்து ஒன்றுபட்டு தென்னிலங்கை யின் முற்போக்கு சந்திகளுடன் ஒன்றுபட்டு இனவாத அரசியலுக்கு எதிரான அரசியல் செய்யமுன்வரவேண்டும் என்று விரும்பு கிறேன். எவ்வளவு தான் வடக்கு அரசியல் செய்தாலும் தேசிய அரசியலில் பங்களிப்பு செய்யாவிட்டால் பிரயோசனம் இல்லை.

**கேள்வி:** – ***அடுத்த தேர்தலில் ஆட்சி அமைக்க முடியாவிட்டால், எதிர்க்கட்சியாக வரக்கூடிய வாய்ப்பு உள்ளதாகச் சொல் கின்றார்கள்.. எனவே கேட்கிறேன், உங்கள் ஆட்சி கம்யூனிசமா, ஜனநாயக சோஷலி ஸமா அல்லது முதலாளித்துவ நாடுகளு டன் ஒத்துப்போகக்கூடிய ஒரு கலப்பு பொரு ளாதாரக் கொள்கையா?***

**பதில்:** – இப்போது உலகில் எந்த வொரு நாடும் அப்படிக் கருதுவதில்லை. ஒவ்வொரு நாடும் தமது மக்களின் பாது காப்பு மற்றும் அபிவிருத்தி பற்றியே நினைத்து செயல்படுகின்றன. இரண்டா வது உலக யுத்தத்தின் பின்னர் அமெ ரிக்க சார்பு, ரஷ்ய சார்பு என இரண்டு முகாம்கள் காணப்பட்டன. 1990 களில் சோவியத் யூனியன் சிதறியது. அதன் பின்னர் அமெரிக்க அணி மட்டுமே காணப் பட்டது. இப்போது அந்த நிலை இல்லை. சீனா, இந்தியா, ஜப்பான், ரஷ்யா, அமெ ரிக்கா என பல அரசியல் சக்திகள் காணப் படுகின்றன. எனவே எமது வெளிநாட்டுக் கொள்கை எந்தவொரு வெளிநாட்டு அர சியல் சக்திகளுக்கு அடிபணியாமல் இருப் பதாகவே அமையும். மஹிந்த ராஜபக்ஷ சீன அரசியல் ஆளுமைக்குள் அனாவசிய மாக தஞ்சமடைந்தது தவறாகப் போனது. அதனால் இந்தியா இலங்கைக்கு அழுத்தம் தர ஆரம்பித்தது. எனவே பக்கம் சாராததாக எமது வெளிநாட்டுக் கொள்கை அமையும். அதேசமயம் இந்தியாவைப் பாதிக்காத அர சியல் பொருளாதார கொள்கைகளை நாம் கைக்கொண்டாக வேண்டும். இந்தியாவுடன் மோதல் போக்கு கொண்ட அரசியலையோ பொருளாதாரக் கொள்கைகளையோ இலங்கை கொண்டிருக்கக்கூடாது.

**கேள்வி:** – ***மதவாதமும், இனாவாத மும் தான் இந்நாட்டின் பெரிய பிரச்சினை. இடதுசாரியாக இருந்தாலும்கூட உங்க ளுக்கு தமிழ் வராது. பெரும்பாலான சிங் களவர்களுக்கு தமிழ், தமிழ் கலாசாரம், தமிழர் பிரச்சினை என்பது பற்றி எதுவுமே தெரிவதில்லை. இந்த இனவாதத்தையும் மதவாதத்தையும் அரசியலில் இருந்து ஒழிப்பது சத்தியமா?***

**பதில்:** – நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டும். இனவாதம் என்பது இலங்கை யில் ஒரு அரசியல். சிங்கள இனவாதத்தைப் போல தமிழ் இனவாதமும் காணப்படுகிறது. தென்னிலங்கை அரசியல் இனவாதத்துடன் கூடியது. அதுபோலவே இன ஒற்றுமை என் பதும் ஒரு அரசியல்தான். அதையே நாம் விரும்புகிறோம். அடுத்த தலைமுறைக் காக நாம் இனங்களை ஒன்றிணைக்க வேண்டும். ஏனெனில் இனங்களிடையே எவ்வளவு பிரச்சினைகள் காணப்பட்டாலும் எதிர்காலத்துக்காக நாம் ஒன்றிணையத் தான் வேண்டும். எனக்கு தமிழ் மொழி தெரிந்திருந்தால் நல்லதுதான். ஆனால் இந்த வயதின் பின்னர் தமிழை தெரிந்து கொள்வதென்பது....

**கேள்வி:** – ***புலம்பெயர்த் தமிழர் சமூகம் டயஸ்போராவுக்கு நீங்கள் விடுக் கும் செய்தி என்ன? அவர்களை ஏன் இலங் கையின் அபிவிருத்திக்கு பயன்படுத்தக்கூ டாது?***

**பதில்:** – இலங்கையில் ஒரு தனிநாடு உருவாகும் என்று எவரும் இனி நினைக்கக் கூடாது. இலங்கையில் இருந்து வெளியேறி வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அந் தந்த நாடுகளில் இரண்டாம் பிரஜைகளே. ஆனால் இலங்கை அவர்களின் தாய்நாடு. டயஸ்போராவுக்கு இந்நாட்டை அபிவிருத்தி செய்வதில் பெரிய பங்களிப்பு உள்ளது. ஆனால் இனவாத அரசியல் இங்கு இருக் கும் வரை அவர்கள் இங்கு வரவோ, முதலீடு செய்யவோ முன்வர மாட்டார்கள். எனவே அத்தகைய சூழலை இங்கே உரு வாக்க வேண்டும்.

**கேள்வி:** – ***வன பாதுகாப்பு திணைக் களமும் தொல்லியல் திணைக்களமும் தமிழ்ப் பகுதிகளில் இனவாதத்தோடு செயல்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?***

**பதில்:** – தொல்லியல் என்பது எமது வரலாற்றைப் பேசும் ஓர் துறை. தொல்லி யல் எச்சங்கள் மற்றும் சின்னங்கள் காப் பாற்றப்பட வேண்டும். ஆனால் துரதிர்ஷ் டவசமாக இங்கே தொல்லியல் என்பது இந்து தொல்லியல், பௌத்த தொல்லியல் சிங்கள, தமிழ் தொல்லியல் என்று பார்க் கப்படுகிறதுதான் இங்கு பிரச்சினை.

**கேள்வி:** – ***இலங்கை அரசியலில் மதத்தின் வகிப்பாகம் எவ்வாறு இருக்க வேண்டும்?***

**பதில்:** – இலங்கை அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும் என் பதுதான் எங்கள் நிலைப்பாடு. ஏனெனில் மனிதனின் அகத் தேவைகளை பூர்த்தி செய்வது மதத்தின் வேலை. மனிதனின் புறத் தேவைகளை கவனிப்பதே அரசிய லின் வேலை. இவை இரண்டும் வெவ்வே றானவை என்பது எமது கருத்து.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் அனை வரும் விடுதலை செய்யப்பட வேண்டும். 2013ஆம் ஆண்டு நான் சிறைச்சா லைக்கு சென்றிருந்தபோது 1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ஒரு கைதியை சந்தித்தேன். அவர் செய்த குற்றம் விடுத லைப் புலிகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருந்தமையே. அந்த அடையாள அட்டையில் கையெழுத்திட்டி ருந்தவர் தயா மாஸ்டர். என்ன நடந்திருக் கிறது என்றால் கையெழுத்திட்டிருந்த தயா மாஸ்டர் வெளியே இருக்க அட்டையை வைத்திருந்தவர் உள்ளே இருக்கிறார்! இது என்ன நியாயம்?

## சரித்திரங்களை மீட்டிச் செல்லும்... (02 ஆம் பக்கத் தொடர்)

தொடர்ச்சியாக செயல்பட்டு வரும் சிறப்பான ஒரு இலக்கி யவாதி என இவரை பேராசிரியர் மௌனகுரு பாராட்டியிருக் கின்றார்.

அந்த வகையில் இலக்கியப் படைப்புகளை தொடர்ச்சியாக பிரசவித்துக் கொண்டிருக்கின்ற ஒருவராக அவரை நாம் பார்க் கின்றோம்.

அவருடைய காதல் கவிதைகளை நாம் காதல் கவிதை கள் என்ற வட்டத்திற்கு அப்பால் நோக்குவோமானால் அதில் காதலும் மனிதாபிமானமும் கலந்து காணப்படுகின்றன. அவ ருடையது பிரபஞ்சத்தையும் தாண்டி அதற்கு அப்பால் பறந்து செல்கின்ற காதல். அதற்கு இணை இல்லை.

காதலை வெறும் வார்த்தைகளுக்குள் அடக்கி விட முடியாது. அதனைத்தொடர்கின்றவர்களுக்கு அது இன்பமா னது. காதலினால் முடியிழந்தவர்கள் இருக்கின்றார்கள். பலர் மகுடம் தாண்டியும் நிலைத்திருக்கின்றார்கள். காதல் என்பது இளையோர், பெரியோர் அல்லது ஏனையோர் என அனைவரா லும் விரும்பப்படுகின்ற பிரிக்க முடியாத விடயம்.

அதனை மைக்கல் கொலின் தமது கவிதைகளில் தத்ரூப மாக வெளிப்படுத்தியுள்ளார்.

கல்லடிப் பாலத்தில் தொடங்கி கம்போடியா வரை சென்று பல அற்புதமான சரித்திரங்களை எமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

நாம் மூத்த குடிகள், பழந்தமிழர்கள் என்ற உண்மையை அவர் ஆங்காங்கே அதில் கொண்டு செல்கின்றார். அதைவிட வெகு உச்சமாக இளைஞர்களுக்கு தேவையான இயலு மையை அவர் தொட்டுக்காட்டுகின்றார். புது இரத்தம் பாய வேண்டும் என அவர் ஒரு கவிதையிலே மிகவும் அழுத்தமாக கூறுகின்றார்.

சமகால நிகழ்வுகளோடு அதனைச் சுருக்கிக் கொள்ளாது, இளைஞர்கள், குறிப்பாக வடக்கு கிழக்கிலே உள்ள இளைஞர் களுக்கான எச்சரிக்கையாகவும் அழைப்பாகவும் கூட அதனை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கவிதையுயூடாக கவிஞர் தொட்டுக் காட்டியிருக்கின்ற அம் சங்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை.

காதலை மட்டுமன்றி பல்வேறு கனதியான விடயங்களை யும் அவர் தமது கவிதைகளில் உள்ளடக்கியுள்ளார்.

மேலோட்டமாகவே இந்த கவிதை நூலை நான் வாசித்தா லும் என்னையும் அந்த கவிதைகள் பேசவைத்தன.

ஒவ்வொருவருடைய வாசிப்பு போக்கிலும் இந்த கவிதைகள் அவர்களையும் பேச வைக்கும் என்றால் மிகையில்லை

கவிஞர் மைக்கல் கொலினின் இலக்கியப்பயணம் தொடர வேண்டும் மேலும் பல உச்சங்களை அவர் தொட வேண்டும் என வாழ்த்துகிறேன் என குறிப்பிட்டார் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

எடுத்துக்கொண்ட பங்கை மிகச் சிறப்பாக நிகழ்த்திக் காட் டியதுடன் மிகவும் எளிமையாகவும் அற்புதமாகவும் தமது உரையை அவர் நகர்த்திச்சென்றதை பாராட்ட வேண்டும். ஒரு அரச அதிகாரியான அவரது இலக்கிய நேசிப்பும் இலக்கியத் தின் மீது அவர் கொண்டுள்ள ஆர்வமும் அவரது இந்த நயவு ரையில் வெளிப்பட்டன.

"பல பேராசிரியர்களை, கலாநிதிகளை, சிரேஷ்ட விரிவுரை யாளர்களை, நூற்றுக்கணக்கான விரிவுரையாளர்களைக் கொண்ட ஒரு பல்கலைக் கழகம் ஆற்றவேண்டிய பணியை தனி ஒருவனாக நின்று புரியும் மைக்கல் கொலினால் மட்டக்க ளப்பு மண் பெருமையுருகிறது" என

கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனக சிங்கம் புகழாரம் சூட்டினார்.

மகுடம் பதிப்பகம் மூலம் தனது ஏழு நூல்கள் உட்பட இதுவரை அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை மைக்கல் கொலின் பதிப் பித்துள்ளார். ஈழத்து இலக்கிய வெளிக்கு அவரது பங்களிப்பு மிக முக்கியமானது. தொடர்ச்சியாக இயங்கிவரும் மைக்கல் கொலின் பல்கலைக்கழக இலக்கிய விரு துக்கும் தகுதியுடையவர் என்றார். பௌர ணமி கலை இலக்கிய நிகழ்வுத் தொடரின் 43 வது நிகழ்வாக

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்திய மகுடம் வி. மைக்கல் கொலினின்

என் இனிய பட்டாம் பூச்சிக்கு கவிதைத் தொகுப்பு வெளி யீட்டு விழா மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி. றஞ் சிதமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது.கிழக்குப் பல்க லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம விருந்தினராகவும் கிழக்குப் பல்கலைக் கழக வேந்தர் பேராசி ரியர் ம.செல்வராஜா, மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் ஆகியோர் அழைப்பு அதிதிகளாவும் கலந்து நூலை வெளியிட்டு வைத்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் . க.மோகனதா சன் நூல் அறிமுக உரையை ஆற்றினார்.

நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும், அதிபருமான ச. மணிசேகரனும், வரவேற்புரையை மட்டக்களப்பு மாவட்ட எழுத் தாளர் சங்க பொருளாளர் கதிரவன். த.இன்பராசாவும் ஆற்ற நன்றியுரையைமகுடம். வி. மைக்கல் கொலின் நிகழ்த்தி னார். நிகழ்வை கவிஞர்ஜி .எழில் வண்ணன் தொகுத்து வழங் கினார்.

மீன் பாடும் தேன்நாட்டில் நடைபெற்ற இந்த இலக்கிய விழா ஒரு மாலைப் பொழுதை மேலும் மகிழ்ச்சிகரமாக்கியிருந்தது என்றால் அது மிகையல்லை.

**லோரன்ஸ் செல்வநாயகம்**


இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ்

**போக்குவரத்து வசதிகள் கெப் சேர்விஸ்களுக்கான விலைமனு அழைப்பு**

2022/23ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு வாகனங்கள் (கெப் சேவைகள்) ஐ வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. 2011 ஆண்டில் அல்லது அதற்குப் பின் தயாரிக்கப்பட்ட கொழும்பு புறநகர் பகுதிகளில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கார்கள்/ பயணிகள் வேன்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

கீழ்க்காணும் வாகனங்களின் எல்லா நான்கு வகுதிகளை வழங்கும் கொள்ளளவை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

1. கார் - இயந்திர கொள்ளளவு 1000 cc மற்றும் அதற்குக் கீழ்,
2. கார்கள் இயந்திர கொள்ளளவு 1000 cc முதல் 1500 cc இற்கு இடையில்
3. பயணிகள் வேன்கள் A/C யுடன் - (குறைந்தபட்ச இருக்கை வசதிகள் - 09)
4. பயணிகள் வேன்கள் A/C இன்றி - (குறைந்த பட்ச இருக்கை வசதிகள் - 09)

ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் இ. ரூபா 2,000.00 + VAT செலுத்துவதன் பேரில் வார நட்களில் அலுவலக நேரங்களில், கொழும்பு-08, எல்பிட்டிகல மாவத்தை, விக்டோரியா பிளேஸ், இல. 17, இலங்கை கட்டளைகள் நிறுவனம், பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து 2022.07.14 வரை விலை ஆவணங்களையும் விபரங்களையும் சேகரித்துக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022.07.18ம் திகதி 14.00 மணி வரை ஏற்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்பிட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

**தொ.பே:- 011-2671567-72**





## ஹஜ் சிறப்புச் சிறுகதை

# தடைப்பட்ட பயணம்

இவ்வாண்டு ஹஜ் தியாகத் திருநாள், காலண்டர் கணிப்பின்படி எதிர்வரும் 10ஆம் திகதி. அதற்கு ஒரு கிழமை முன்னதாக இச்சிறப்புச் சிறுகதை இன்று (03) பிரசுரமாகிறது. அதற்குக் காரணம் உண்டு. நல்லவை நடக்க எதிர்பார்க்கிறார் எழுத்தாளர்.

இந்தத் தடைப்பட்ட பயணம் பற்றிப் பதிவிட முன் நான் எங்கே வாழ்கிறேன். என்னைச் சுற்றி இருக்கும் பெரும்பாலான மக்கள் யார் யார் என்பதைத் தெரிவித்துவிட வேண்டியது கடமையாகிறது.

இலங்கையில் கிழக்குக் காத்தான்குடிக்கு அடுத்தபடியாக சனத்தொகை – அதுவும் முஸ்லிம் சமூகம் அதிகமாக உள்ள பிரதேசம் கொழும்பு 10, மாளிகாவத்தை.

இங்கே நான் 'வந்தான் வரத்தா'னாக வந்து ஐம்பது ஆண்டுகள். அதிலிருந்து நான் ஏழை பாழைகளை சுற்றி சூழவே வாழ்கிறேன்.

இருப்பினும் கணிசமான பணக்கார வர்க்கத்தினரும் வதிவிடம் உள்ளவர்களே!

இந்த வகையில், குரும்பை விற்கும் குத்தூஸ் நாநா முதற்கொண்டு, வாகன உதிரிப்பாகங்கள் விற்று கை நிறைய காசுடன் புழங்கும் காஸிம் மரைக்காயர்

இப்படி, நம் மலைநாட்டுப் படைப்பாளி பிரமீளாவின் பதிவை முகநூலில் படித்து விட்டு, எதிரே பளிச்சிட்டுக் கொண்டிருந்த தொலைக்காட்சியில் உலகப் புகழ் 'அல்ஜெஸீரா' செய்தி அலை வரிசை அறிக்கைகளை அவதானித்த பொழுது ஒன்று அதிரடியாகக் காதுகளில் அபிமானிகள் அறிவது அவசியம் அதையும்:

'சூடான், சோமாலியா, யேமன் நாடுகளில் கண்டிராத சோகத்தையும் அவலத்தையும் இலங்கையில் காணக்கூடியதாக இருக்கிறது.' என்ற தகவலை ஆஸ்திரேலிய ஏ.பீ.சி. நிவ்ஸ் சேனலுக்கு யுனிசெப் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

என் நெஞ்சு கனத்தது.

இந்த மனச்சங்கடத்தை அனுபவித்த இரண்டு நாளில் என்னைத்தேடி காஸிம் மரைக்காயர் முதலாளி வருகை !

'அஸ்ஸலாமு அலைக்கும். வந்தது என்னத்துக்கு எண்டா, இந்த வருசம் ஹஜ் ஓகேயாமே? நான் நிய்யத்து வச்சது கொரோனாவுக்கு முந்தி. சவூதி கோர்ணமேந்து ஆயிரத்து சொச்சம் விசா குடுக்குதாம். மெய்யாலுமா?'

'மெய்.. மெய்... பயணத்திற்கு நிய்யத்தா?'

'ஓ ! ஓ! ரெண்டு வருசத்திற்கு முந்தியே

**இலங்கை யாத்திரீகர் ஒருவருக்கு ஹஜ்ஜுப் பயணக் கட்டணமாக, முகவர் நிலையங்கள் வழங்கும் சேவைகளுக்கு அமைவாக இருபது முதல் இருபத்தைந்து லட்சமாக அமையும். வழங்கப்பட்ட செய்தியில் உள்ள பணத்தொகை என்னைத் திடுக்கிட வைத்தது.**

ஈறாக என்னுடன் ஊடாட்டமே!

காரணம், நான் ஊடகக்காரன் என்பது.

இந்தத் 'தடைப்பட்ட பயணம்' என்னையும் காஸிம் மரைக்காயரையும் சுற்றியதே!

சென்ற ஜூன் மாதத்தின் முதல் கிழமையில் ஒரு காலை இளம் பொழுதில், தமிழ் நாளேடுகள் நான்கையும், ஓர் ஆங்கில இதழையும் புரட்டி விட்டு முகநூல் (பேஸ்புக்) பக்கத்தையும் பார்த்தால்

மலைநாட்டுத் தொழிலாள வர்க்கத்தைச் சார்ந்த பெண்மணியும், பிரபல சிறுகதை எழுத்தாளருமான பிரமீளா பிரதீபன் அவரது பக்கத்தில் பதிவிட்டிருந்தது பதை பதைக்கச் செய்தது.

அதைப் பிரதி எடுத்து அபிமானிகள் பார்வைக்கும் தருவது அவசியமாகிறது.

'தினமும் ஆயிரக்கணக்கான மாணவர்களை காண்கிறேன். அதில் சில நூறு பேரின் பசியையாவது கண்டும் காணாதது போல் தாண்டிச் செல்கிறேன்.

அவர்கள் தம் உணவின் அளவை சுருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வகுப்பறை பின்வரிசை மேசையில் சோர்ந்து தலைசாய்க்கும் மாணவர்களது எண்ணிக்கை நாளுக்குநாள் கூடிக் கொண்டே போகிறது.'

முஸ்லிம் டிபார்ட்மெண்டுக்கு எப்ளிகேசன் போட்டுட்டேன். இப்ப லிஸ்ட்ல பேரு இருக்குதாண்டு பாக்கத்தான் உங்கட ஹெல்புக்கு வந்தன்'.

'என் ஹெல்ப் தேவையே இல்லே. டிபார்ட்மெண்ட் செலக்ட் பண்ணி இருக்கிற ஏஜன்சிமார் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறாங்க.... நான் இப்ப வெளியில போக ரெடியாகிக் கொண்டிருக்கிறேன் மரைக்கார்...'

மனிதரை உடனேயே வீட்டிலிருந்து அனுப்புவதில் குறியாக இருந்தேன்.

என் மன உளைச்சல், மன நிலை அப்படி.

அதுவும் 'திரும்புகிற இடமெல்லாம்' 'இல்லை, இல்லை', 'பசி, பசி' என எங்கும் எதிரொலிக்கும் பொழுது காஸிம் மரைக்காயருக்கு உதவ ஆர்வம் ஏற்படவில்லை.

அவர் என்னைப் புரிந்தவர். உடனேயே, 'சரி...சரி... நானும் புறப்படுறன். பொறவு கோல் தாறன்' என்றவாறு விறுவிறுவென்று வெளியேற்றம்!

உண்மையில் என் பிறந்த மண்ணின் அன்றாட அவலங்கள் என்னைப் பாதித்திருந்தன. எண்ண அலைகள் மிகவும் வித்தியாசமான பாதையில் ஓசையிட்டுக் கொண்டிருந்தன.

★★★

சென்ற ஜூன் 23ஆந் திகதி. வார இதழ் ஒன்றில் இப்படி செய்தி காணப்பட்டது:

இலங்கையிலிருந்து முதலாவது ஹஜ் குழு 28 இல் சவூதி பயணம்.

ஜூலை 2இலும் 3 இலும் யாத்திரிகர்கள் செல்வர்

968 பேர் யாத்திரையைத் திணைக்களத்தில் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை யாத்திரீகர் ஒருவருக்கு ஹஜ்ஜூப் பயணக் கட்டணமாக, முகவர் நிலையங்கள் வழங்கும் சேவைகளுக்கு அமைவாக இருபது முதல் இருபத்தைந்து லட்சமாக அமையும்.

வழங்கப்பட்ட செய்தியில் உள்ள பணத்தொகை என்னைத் திடுக்கிட வைத்தது.

55 ஆண்டுகளுக்கு முன், 1967 –லில், விமானப்பயணக் கட்டணம் வெறும் 2484 ரூபாய் மாத்திரமே!

வாசல் அழைப்பு மணியோசை.

வந்து நின்றிருப்பது காஸிம் மரைக்காயரே!

'அஸ்ஸலாமு அலைக்கும் மரைக்காயர் நாளைக்கு 3ஆந் திகதி தானே ஹஜ் கடைசி விமானம். பயணம் சொல்லி சலாம் கொடுக்க வந்தீங்களா?

அவர் பதில் சொல்லாமல், 'மொதலில உங்கட பெரம்பு சாய்மானத்துல உக்கார அனுமதி தாங்கோ!' என்றார். உட்கார்ந்தும் விட்டார்.

'நான் கேக்கப்போற ஒரு கேள்விக்கு நீங்கதான் மறுமொழி சரியாச் சொல்லுவீங்க. யேமன் எண்டு ஒரு அறபு தேசம் இருக்குதா?'

'அது சவூதிக்கு அடுத்த வூடு!'

'பாத்தீங்களா, பாத்தீங்களா, எங்கடவன்களுக்கு சவூதியும், துபாயும், கட்டாரும்தான் தெரிஞ்ச கத்திரிக்காய்வள்! யேமன் தெரியாதவனுவள்'

மரைக்காரின் தொனி முற்றிலும் மாறிப்போனது திகைப்பைக் கொடுத்தது. 'மகிமையான மக்கமா நகரத்தின் ஜித்தா துறைமுகத்திலிருந்து ஆயிரத்துச்

டினியுந்தான். சரி, மரைக்கார், நீங்க பயணக்காரரர்.

டைம் வேஸ்ட் பண்ணப்படாது. சலாம் கொடுத்துக் கொள்வோம்.'

'சலாமா? நான் பயணம் வச்சாத் தானே சலாம்? கென்சல்! கென்சல்!' அவர் குரலில் உறுதி தெரிந்தது.

நான் நன்றாகவே திடுக்கிட்டுத் திகைத்தே போனேன்.

'ஓ.... ஓ... பயணம் கென்சல். அதச் சொல்லத்தான் வந்தன். எங்கட ஸ்ரீ லங்காவில பசி பட்டினி எண்ட பேச்சு இருக்கப்படாது. ஒவ்வொருத்தரும் ஏண்ட அளவுக்கு உண்ணக் குடுத்து உசிர்களை காப்பாத்த ஓணும்!. ஒரு கணக்கு போடுங்க... பேனாவையும் பேப்பரையும் கையில எடுங்க..'

நான் மெய்சிலிர்த்தவனாக .... பேசவே தோன்றாமல்....

'என் ஹஜ் பயணச்செலவு 25 லட்சம். இந்தத் தொகைக்கு பெருநாளைக்கு மொதல்நாள் அரிசி, சீனி, மாவு எண்டு எல்லா அயிட்டங்களும். மறுநாள் தொழுகை முடிஞ்சி குர்பான் இறைச்சி!'




யுனிசெப் போன்ற மாபெரும் உலக மேம்பாட்டு அமைப்பு, சூடான், சோமாலியா, யேமன் நாடுகளின் பலதரப்பட்ட அவலங்களுடன் இலங்கையையும் சேர்த்திருக்கும் சமயத்தில், ஒரு மதக்கடமைக்கு ஆகும் செலவீனம் மலைப்பாக இருந்தது.

அதுவும், அந்த ஜூன் 23 காலையில் தான், புகழ்பெற்ற அனைத்துலகத் தொலைக்காட்சி 'அல்ஜெஸீரா' அந்தத் துன்பச் செய்தியைத் தெரிவித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சபை கணக்கெடுப் பின்படி, உலக மக்களின் பட்டினி நிலை 500 மில்லியன்கள்.

யா அல்லாஹ்!

'மில்லியன்' என்பது பத்து லட்சம். 500 என்பதைப் பத்தினால் பெருக்கிப் பார்த்தால்....?

தலைச்சுற்றல் எடுத்தது.

★★★

ஜூலை மாதம் 2ந் திகதி. முஸ்லிம் பிறைக் கணக்குப்படியும் இரண்டே! 10 ஆம் பிறையில் ஹஜ் தியாகத் திருநாள்.

இன்றுள்ள இலங்கை சூழ்நிலையில் 'முஸ்லிம் சிறுபான்மைச் சமூகம் எப்படி ஹஜ் பெருநாளை எதிர்கொள்ளும் என்பதை கணிக்க என் பேனைக்குத் திராணியில்லை. அதற்கும் ஊட்டச்சத்துக் குறைபாடு!

சொச்சம் கி.மீ. தூரம் தான். ஹஜ் காலத்தில் பல லட்சம் மக்கள் அல்லாஹ்வை நெனைச்சு,

'உனக்கு அடிபணிந்தோம் அல்லாஹ். உனக்கு அடி பணிந்தோம்' – என்ற தல்பியா ஓதல் முழக்கம் செய்யக்கோல இந்த யேமனிலும் எங்கட சிறீலங்காவிலையும் கேக்கிற சத்தம், 'யா அல்லா பசிக்குதே, யா அல்லா பசிக்குதே' என்ற ஒப்பாரிதானே....?'

'போதும்... போதும்... நானும் டி.வி.யில பார்த்துப் போட்டுத்தான், உங்க கிட்ட சரி, பொழை செக் பண்ணினேன்'.

'இருக்கட்டும். நீங்க... ஹஜ் பயணக்காரரர். யேமனைப் பற்றிப் பேசுற காரணம் என்ன?'

'நல்ல கேள்விதான் கேட்டீங்க சீதேவி! இந்த யேமன் பசி தானே எங்கட நாட்டிலையும். ஏண்ட ஹஜ் பயணத்துக்கு அடுத்தடுத்த வூட்டுக் காரவங்களுக்கு ஸலாம் சொல்றது கடமை எண்டு, ஸக்கியா தங்கச்சி, நஃலா மாமி, ஜெஹறா உம்மா, எண்டு போனா சுப்ஹாநல்லாஹ் குஞ்சுகுளுவானுவளுமா புள்ளயல் தரையில் சுருண்டு கெடக்குதுவுள். விசாரிச்சா சரியான சாப்பாடு இல்லாம மந்த போசனையாம்.'

'இண்டைக்குத்தான் தெரியுமா உங்களுக்கு? ஒவ்வொரு பத்து குடும்பத்துக்கும் ஏழு குடும்பத்துல பசியும் பட்

நான் சுதாரித்துக் கொண்டவனாக உடனேயே, ஜெட் வேகத்தில் இப்படி எழுதிக் கொடுத்தேன்:

5000 ரூபாப் பெறுமதியில் உணவுப் பொருட்களும், குர்பான் இறைச்சி முக்கால் கிலோவும் 500 பேருக்கு வழங்கலாம்.

'நல்லது.... நல்லது... தடைப்பட்ட ஹஜ் எனக்கு அடுத்த வருசம் அல்லாஹ் நாடினால்... இன்ஷா அல்லாஹ்'.


காஸிம் மரைக்காயர், வாசல் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்.

'மஸ்ஜித்கள் சமூக மத்தியத் தலங்களாக இயங்குமாக இருந்திருந்தால், அவற்றின் நிர்வாகிகள் சமூகத்தை மையமாகக் கொண்டு இயங்கி இருந்தால், இவ்வாறான வாழ்க்கை நெருக்கடிகளின் போது அவற்றின் 'மஹல்லா' எனப்படும் பிரதேசங்களில் யாரும் 'பசி'யுடன் படுக்கைக்குச் செல்ல மாட்டார்கள்.

***பன்னூலாசிரியர், கவிஞர், ஒலிபரப்பாளர் அஷ்ரஃப் ஷிஹாப்தீன் முகநூலில் பதிவு. – நன்றி.***

***இக்கதையில் இடம்பெற்றுள்ள ஊடகத் தகவல்கள் அனைத்தையும் திரட்டி உதவியவர், கலைஞர், கவிஞர் எம்.எஸ். அப்துல் லத்தீஃப். நன்றி.***

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 30




திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................
திகதி .................. கையொப்பம் ..................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 30
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 30

**இடமிருந்து வலம்**

(1) வினோதமானது, வழமையிலிருந்து வேறுபட்டது.
(6) தண்டனை பெற்று சிறையில் இருப்பவர். (திரும்பியுள்ளது)
(7) தீங்கு அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் செயல். (திரும்பியுள்ளது)
(8) தீமையானது.
(10) ஒரு தானியவகை.
(11) பழங்காலத்தில் சிற்றரசர்கள், பேரரசர்களுக்கு செலுத்திய வரி அல்லது கப்பம். (திரும்பியுள்ளது)
(13) களை இழந்த முகத்தோற்றம். (குழம்பியுள்ளது)
(14) மழைத்துளி. (குழம்பியுள்ளது)
(15) அடாவடித்தனம் செய்பவன். (குழம்பியுள்ளது)
(16) சாதுவான காட்டு விலங்கு.
(17) ஒரு வாத்தியக் கருவி.
(19) வெற்றிலையுடன் பயன்படுத்துவது.
(20) கடல் பயணத்துக்கு இதுவும் தேவை.
(22) தற்காலிகமாக தங்கும் இடம்.
(23) இதுவும் ஒரு மலர். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(1) நெறிமுறைகளை பின்பற்ற வேண்டிய நியதி.
(2) தலைமுடி.
(3) ஒருவகை தானியம்.
(4) சூரியன்.
(5) இந்தியா, தமிழகத்திலுள்ள பெருநகரம்.
(8) தீப்பந்தம்,
(10) துளை.
(12) ஆற்றல்.
(13) நித்திரை குழம்பிவிட்டது.
(16) பாடசாலையில் கல்விபயிலும் பெண்பிள்ளை.
(18) உள்ளுறுப்புகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
(19) அரைப்பகுதி.
(20) மயிலின் ஆட்டத்திற்கு அழகு சேர்ப்பது.
(21) ஒலி எழுப்பும் சாதனம். இதனை ஆலயங்களிலும் காணலாம். (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 29

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சிரஞ்சீவி 05. சிசு 07. கறை
08. மாசி 09. வகை 10. பன்றி
14. மாரி 16. திமிர் 18. கவுதாரி
20. ரதம் 21. வாதம் 22. பஞ்சம்
24. மதி 25. பனி

**மேலிருந்து கீழ்**

01. சிறை 02. ரகளை 03. சீமான்
04. விசிறி 05. சிகை 06. சுவடு
11. பரிவு 12. ஸ்திரம் 13. அதர்மம்
15. மாதா 17. மிதவாதி 18. கம்பளி
19. பரிசம் 23. சனி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 28

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எஸ். கிதுர்ஷா,**
தரம் 10, நு/தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம்,
தலவாக்கலை.

**இரண்டாம் பரிசு**
**எம்.ஏ.எப். அஷ்கா,**
இல. 38/1,
வெலகெதர வீதி,
பதுளை.

**மூன்றாம் பரிசு**
**எம்.ஏ. நஜிமுதீன்,**
இல. 155,
அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று 19.

### பாராட்டு பெறுவோர்

**1. கே. பத்மநாதன்,**
தெஹிகலகந்துர,
நாரங்கலை, ஹாலி எல.

**2. எம்.டி.எச். மிஹ்ஸியா,**
390, ஏ.கே.எம். வீதி,
ஏறாவூர் 03.

**3. யுஸ்ரியா அஹமட்,**
236/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**4. மங்கையற்கரசி மனோகரன்,**
53A, லேடிமெனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

**5. ஏ.எல். அப்துல் ஜலீல்,**
61/1A/1, மஹாபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.

**6. எம். சுப்ரமணியம்,**
இல. 7, ஜயந்திபுரம்,
பாடசாலை வீதி, மட்டக்களப்பு.

**7. எஸ். சஞ்சனா,**
இல. 735,
நடுவில்தம்பி வீதி,
வந்தாறுமூலை.

**8. எம்.எம். அமீன்,**
263C, மெக்காமதி வீதி,
மருதமுனை 03.

★ ★ ★



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 12

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# தலித் இலக்கியத்தின் பிதாமகர் கே. டானியல்

தமிழக எழுத்தாளர்களில் ஒருவரும், இயற்பியல் பேராசிரியருமான அ.மார்க்ஸ் கே. டானியல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'டானியல் அதிகம் படித்தவரல்ல. புதிய புதிய இலக்கிய உத்திகள் நவீன சிந்தனைகள் முதலியவைகளையெல்லாம் அறிமுகப்படுத்திக் கொண்டவருமல்ல... எதார்த்தவாத இலக்கிய வடிவத்தை அவர் தாண்டியதில்லை. தலித்துகளுக்கான போராட்ட இலக்கியத்தின் வடிவம் மைய நீரோட்ட வடிவத்திலிருந்து மாறுபட்டிருக்க வேண்டாமா? என்ற கேள்விகளையெல்லாம் அவரிடம் யாரும் கேட்பதுமில்லை. எனினும்கூட, இன்றளவும் தமிழின் தலித் இலக்கிய முன்னோடி என்று சொன்னால் டானியலைத்தவிர வேறு யாரும் நம் நினைவுக்கு வருவது மில்லை' (மனுசங்க செப்டம்பர் அக்டோபர் 1990 இதழ்)

'தலித்' என்ற மராத்திச் சொல்லுக்கு 'உடைந்து போனவர்கள்' என்று பொருள். எழுபதுகளில் மராட்டியத்தில் வசிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களும், இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மக்களில் சிலரும், தங்களைத் தலித் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர். பின்னர், இந்தப் பெயர் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலைத்துவிட்டது என்று பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம் கூறுகிறது.

இந்தியாவில் தலித் இலக்கியம் என்ற இலக்கிய வகைமை தோன்றுவதற்கு முன்னரே தமிழில் தலித் இலக்கியம் படைத்தவர் கே.டானியல். இவர் ஈழத்துத் தீண்டாமைக் கொடுமைகளைத் தமது எதார்த்த எழுத்துகள் அனைத்திற்கும் கருப்பொருளாய் எடுத்துக்கொண்டவர்.

'சுதந்திரன்' இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் 'அமரகாவியம் 'என்னும் சிறுகதை பரிசு பெற்றதன் மூலம் கே. டானியல் எழுத்துலகிற்கு அறிமுகமானார்.

இவர், தனது முதலாவது நாவலான பஞ்சமர் பிறந்த கதையை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.


மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' நாவலை நான் படித்தேன். நீண்டகாலமாக அது என் மனதில் கிடந்தது. ரஷ்ய நாட்டின் விடுதலைக்கான நடைமுறைச் செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அந்தத் தாயைப் போன்று நமது நாட்டினதும் சமூகத்தினதும் விடுதலைக்காக அன்றாட வாழ்க்கையோடு சேர்ந்து வழிநடத்தக் கூடிய ஒரு பாத்திரம் ஏன் பிறக்கக்கூடாது என எண்ணினேன், தேடினேன், சம்பவங்களைச் சேகரித்தேன். அதே தாய்போன்று என் கண்ணுக்கு முன்னால் நடமாடித் திரிந்த ஒரு மனிதரையும் பிடித்துவிட்டேன். அவரின் நடைமுறை வாழ்க்கை முறைகளை அவதானிக்க, அவர் பேசும் சொல் முறைகளைச் சேகரிக்க, அவரின் உடைநடை பாவனைகளை அறிந்துகொள்ள, மொத்தத்தில் அவரைச் சரியானபடி நான் படித்துக்கொள்ள சுமார் மூன்று ஆண்டு காலத்தைக் கழித்தேன். அவருடைய யாழ்ப்பாண நடைமுறை வாழ்க்கையோடு மார்க்ஸிம் கார்க்கியின் தாயையும் சேர்த்துக் கணக்கிட்டு சமப்படுத்தி நான் கற்றுக்கொண்ட அனுபவங்களையும் சேர்த்து இராசண்ணர் என்ற அவரை ஐயாண்ணர் ஆக்கினேன். பஞ்சமர் என்ற நாவல் பிறந்து விட்டது.


யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறை, யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கு, யாழ்ப்பாணத்துச் சம்பிரதாயங்கள், யாழ்ப்பாணத்து உடைநடை பாவனை, யாழ்ப்பாணத்து வீடு வாசல் அமைப்பு யாழ்ப்பாணத்து விவசாய வாழ்க்கை வளர்ச்சி, யாழ்ப்பாணத்து அரசியல் நடைமுறைகள், யாழ்ப்பாணத்து மண்ணின் அவலங்கள், வீழ்ச்சிகள் எழுச்சிகள் ஆகியவற்றில் எதையுமே பிறநீங்கலாகி நிற்கவிடாமல் பஞ்சமரில் உள்ளடக்கியதில் நான் கார்க்கியையே வழிநடத்தல்காரனாக ஏற்றுக்கொண்டுள்ளேன்.'




டானியல் படைப்புகள் ஒரு திறனாய்வு நோக்கு என்ற கட்டுரையில் கலாநிதி நா. சுப்பிரமணியன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: டானியலின் பஞ்சமர் வரிசை நாவல்கள் அனைத்தினதும் பொதுவான கதையம்சத்தை பின்வரும் இரு கூறுகளுள் அடக்கிவிடலாம் (1) உயர்சாதியினர் எனப்படுவோர் தாழ்த்தப்பட்டோர் மீது நிகழ்த்தி வந்துள்ள பல்வேறு நிலைக் கொடுமைகளின் விவரணம் (2) அவற்றிற்கெதிராகத் தாழ்த்தப்பட்டோரும் மனிதநேயம் கொண்ட உயர்சாதியினர் எனப்படுவோரும் இணைந்து மேற்கொள்ளும் எழுச்சி சார்ந்த நடவடிக்கைகளின் விவரணம்.

முதல் நாவலான பஞ்சமரில் இந்த இரு கூறுகளும் நேரடியாகவே கதையம்சமாக விரிகின்றன. உயர்சாதியினர் எனப்படுவோரின் சாதித்திமிர், அதனால் அவர்கள் புரியும் அட்டூழியங்கள் என்பன தொடர்பான பல கதைகள், செய்திகள் என்பனவற்றையும் தாழ்த்தப்பட்டோரின் வர்க்க ரீதியான எழுச்சியையும் இந்நாவல் கட்டம் கட்டமாக விபரித்துச் செல்கிறது.




கோவிந்தன் நாவலிலே சாதித்திமிர் பிடித்த ஒரு குடும்பத்தின் வீழ்ச்சி சித்தரிக்கப்படுகிறது. பஞ்சமரின் எழுச்சிக்குமுன் சாதித்திமிர் நிலை தளர்ந்து போவதாகக் காட்டுவது இந்நாவலின் அகநிலையான கதையம்சம். ஆனால் புறநிலையிலே சாதி மீறிய காதல் பாலியல் உறவு என்ற அம்சத்தை முதன்மைப்படுத்தியதாக இந்நாவல் அமைந்துள்ளது.

அடிமைகள் நாவலும் கோவிந்தனைப் போலவே வேளாளகுலக் குடும்பமொன்றின் வீழ்ச்சியைப் பேசுவது. நிலம் புலம் சொத்து அதிகாரம் அடிமை – குடிமை என்பவற்றுடன் ராசவாழ்வு நடத்திய அக்குடும்பம் கேளிக்கைகள் ஆடம்பரங்கள் சண்டித்தனங்கள் முதலியவற்றால் சீரழிந்து போவதை நான்கு தலைமுறை வரலாற்றினூடாக இந்நாவல் காட்டியமைகின்றது.

கானல் நாவலின் கதையம்சம் மேற்கூறியவற்றினின்று சற்று வேறுபட்டது. தமிழர் மத்தியிற் பரவிய கிறிஸ்தவ மதம் சாதிப் பிரச்சினைக்குத் தீர்வு காட்டும் ஒன்றாக அமைந்ததா? என்ற வினா எழுப்பி விடை காணும் நோக்கில், விமர்சிக்கும் நோக்கில் இது அமைகிறது.

சாதி ஏற்றத் தாழ்வுப் பிரச்சினையில் குடிதண்ணீர் பெறுவதில் தாழ்த்தப்பட்டோர் எய்தும் அவலங்களை மையப்படுத்தி கதைப் பொருள் கொண்டமைந்தது தண்ணீர் நாவல்.

தாழ்த்தப்பட்டோரின் சமத்துவம் நோக்கிய எழுச்சி வரலாற்றடன் தமிழரின் இன விடுதலைக்கான இயக்கங்களின் உருவாக்கச் சூழலை இணைத்துப் புனையப்பட்ட நாவல் பஞ்சகோணங்கள். தாழ்த்தப்பட்டோரின் எழுச்சி மேற்படி சூழலில் எத்தகு பாதிப்புகளை எய்திற்று என்பதை இந்நாவல் மூலம் டானியல் உணர்த்த விழைகின்றமை புரிகின்றது. மேற்குறித்தவாறான பஞ்சமர் வரிசை நாவல்களின் கதைகள் நிகழ்களங்கள் என்ற வகையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல்வேறு கிராமப்புறங்களும் டானியலின் பார்வைப் பரப்புக்குள் வந்துள்ளன.

இந்நாவல்களில் கதைநிகழ் களங்களைப் போலவே கதை நிகழ்கால எல்லைகளும் விரிவானவையாகும்.

இவை எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும்போது சாதிப்பிரச்சினையை உள்ளடக்கமாகக் கொண்ட படைப்புகளின் வரலாற்றில் கதையம்சப் பரப்பு, பிரதேசப்பரப்பு, காலப்பரப்பு ஆகியவற்றில் பஞ்சமர் தரப்பு நாவல்கள் மிக விரிவானவையாக தனிக் கவனத்துக்குரிய கன பரிமாணங்கள் கொண்டவையாகத் திகழ்கின்றமை தெளிவாகும். (இலக்கு சஞ்சிகை, மலர் 4)

டானியலின் ஏனைய படைப்புகளாக 'டானியல் சிறுகதைகள்', 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள், 'போராளிகள் காத்திருக்கிறார்கள்', 'நெடுந்தூரம்', முதலிய நாவல்கள், பூமரங்கள், மனங்கள் தானாக மாறுவதில்லை, முருங்கை இலைக்கஞ்சி, பிஞ்சுப்பழம், மையக்குறி, இருளின் கதிர்கள் சொக்கட்டான், சாநிழல் ஆகிய குறுநாவல்கள், என்பனவும் கே. டானியலின் கடிதங்கள் என்ற தொகுப்பும் என்கதை என்ற சுயசரிதை நூலும் வெளிவந்துள்ளன.

டானியலின் பஞ்சமர் நாவலும் உலகங்கள் வெல்லப்படுகின்றன சிறுகதைத் தொகுதியும் இலங்கை சாகித்திய விருதினைப் பெற்றவை.

கே.டானியல் 15.04.1927 அன்று ஆனைக்கோட்டை என்னும் கிராமத்தில், கிறகொரி மரியாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

குடும்பத்தின் வறுமைநிலை காரணமாக பள்ளிப் படிப்பை ஆறாம் வகுப்புக்குமேல் தொடர முடியவில்லை.

கே.டானியல் தமக்கு விவரம் தெரிந்த காலம் முதல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், புரட்சிகர எழுத்தாளர் அமைப்பு, சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் முதலிய அமைப்புகளில் இணைந்து முக்கிய பங்காற்றினார்.

இவர், சிறுவனாக இருந்த காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டார். மாவிட்டபுரம் ஆலயம் பிரவேசப் போராட்டத்தில் கலந்துகொண்டு, பஞ்சமருக்காக குரலெழுப்பியதற்காக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். டானியல் தமது வாழ்நாளில் 11 மாதங்கள் சிறையில் கழித்தார். இவர், சலவைத் தொழிலாளி, கள்ளுக் கொட்டில், கடல் தொழில், கூலித் தொழில், கால்நடை வளர்ப்பு, தீந்தை பூசுதல், குளிர்பான வியாபாரம், பழைய இரும்பு வியாபாரம், வெல்டிங் கடைசல், இயந்திரங்கள் பழுது பார்த்தல் முதலிய பல்வேறு தொழில்கள் செய்து தமது வாழ்க்கையை நடத்தியுள்ளார்.

பிற்பட்ட காலத்தில் நீரிழிவு நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவர், தமிழகம் சென்று நீரிழிவு நோய்க்கான சிகிச்சை பெற்ற வேளையில் தஞ்சாவூர் மருத்துவமனையில் 23.03.1986இல் காலமானார். அவரது பூதவுடல் அவரது நண்பரான அ.மார்க்ஸ் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலியின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டது. புரட்சி பண்பாட்டு இயக்கத்தினர் 1987இல் டானியலுக்கு கல்லறை அமைத்தனர்.

---




## 34 மதுமிதா கொண்டுவந்தாள் கதையில் திருப்பம்! இதுதானோ கொலைகாரனின் விருப்பம்!

பிரசன்னா கேட்ட கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல், சிறிது நேரம் வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.!

"என்ன மது பதிலையே காணும்?"

பிரசன்னா தான்,

மீண்டும் பிரசன்னமானான்.

"நான் அவர்களிடம் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுத்தான் போனேன்!" "என்ன பொய் சொன்னீங்க?"

"நான் மணப் பெண்களுக்கு உடை அலங்காரம் செய்வதால் இரவு நேரங்களில் கூட வெளியே போய் வருவேன். அவர்களுக்கும் அதுதெரியும் அன்றும் அப்படித்தான் நுவரெலியாவிற்கு உடை அலங்காரம் செய்யப்போவதாக சொல்லிவிட்டுப் போனேன்!"

"ஓ... அப்படியா...! சரி மேலே சொல்லுங்கள்!"

"நாம் அன்று அதிகாலை ஐந்து மணி அளவில் குறிப்பிட்ட அந்த பாதாள நண்பனுடன்தான் தீபன் வந்தான். இருவரும் பைக்கில்தான் வந்தார்கள். பிறகு நாலு பேருமாக மலைமேல் ஏறினோம். வந்திருந்த அந்த நண்பனும் கெம்பசில் படிப்பவன் தான். அவன் பெயர் ரஞ்சன். இப்போது நாங்கள் நால்வரும் பாதாளத்தின் மலைமேல் நின்றிருந்தோம். முதல் நாள் போயா தினம் என்பதால் பால்போல் நிலவும் காய்ந்து கொண்டிருந்தது. பையைத்திறந்து ஒரு பெயின்ட் டின்னையும் சிறிய ஒரு பிரஸ்ஸையும் கையில் எடுத்தாள் தீபிகா. அங்கே ஒரு பெரிய பாறை ஒன்று இருக்கிறது. அங்கே வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லோரும் அதில் ஏதாவது எழுதி விட்டுத்தான் போவார்கள்.அந்தப் பாறையின் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்த தீபிகா அதில் எழுதினாள்!"

"என்ன எழுதினாள்?"

"2013 ஜுன் 12ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு தீபன் தீபிகாவின் காதல் கதை நிறைவு பெறுகிறது!" என்று எழுதினான்!"

"அதன் பிறகு அவன் என்ன செய்தாள்?"

"பெயின்ட் டின்னை எடுத்து பைக்குள் வைத்து விட்டு கொஞ்சம் முன்னால் சென்றாள். எனக்கு திக்கென்று ஆகிவிட்டது. திடீரென்று இருவரும் பாதாளத்தில் பாய்ந்து விட்டால் என்ன செய்வதென்ற உணர்வு வந்ததும் நான் கொஞ்சம் உசாராகவே இருந்தேன்! சிறிது நேரத்திற்குப் பிறகு போவோமா என்று நான் கேட்டபோது ஏன் மது நீங்க அவசரப்படுறீங்க என்று தீபன் என்னிடம் கேட்டான்.

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க மது?" "எனக்கென்றால் அவசரம் எதுவும் இல்லை... ஆனா நீங்க ரெண்டு பேரும் எங்க பாதாளத்தில் பாஞ்சி தொலைச்சிடுவீங்களோ என்றுதான் பயமா இருக்கு என்று நான் சொன்னேன்!"

"நீங்கள் இப்படிச் சொன்னதும் அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"தீபன் சிரித்துக் கொண்டே நாங்கள் அந்த அளவுக்கு முட்டாள்கள் என்றா நினைத்து விட்டீர்கள், அதுவுமில்லாமல் தற்கொலை செய்து கொள்வதென்றால் உங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டா வருவார்கள்? என்று கேட்டான். அதுவும் உண்மை தானே. அதன் பிறகு அங்கிருந்து வருவதற்கு நாங்கள் தயாரானோம். ஆனால் அப்போதுதான் எதிர்பாராத அந்த சம்பவம் நடந்தது?"

"ஏன்... அப்படி என்ன நடந்தது?" பரபரப்புடன் கேட்டான் பிரசன்னா.

"மூடிகள் அணிந்திருந்த இருவர் ஓடி வந்து தீபனை பிடித்துக் கொண்டார்கள். திடீரென்று வந்த அவர்களைத் தாக்குவதற்கு தீபன் முயன்றபோது ஒரு துப்பாக்கி ஒன்றை எடுத்து அவனைக் குறிபார்த்து நீட்டினான்!"

"ஐயையோ அப்புறம் என்ன நடந்தது?"

திகிலோடு கேட்டான் பிரசன்னா.

"அதைப்பார்த்ததும் நாங்கள் மூவரும் ஆடிப்போய் விட்டோம். துப்பாக்கியை கையில் வைத்திருந்தவன் தீபனைப் பார்த்துச் சொன்னான். "நீ உயிரோடு இருந்தால் தானே எங்களை பொலிஸாரிடம் காட்டிக் கொடுப்பாய். அதனால் மீண்டும் திரும்பிவராத இடத்திற்கு உன்னை அனுப்பி வைக்கப் போகிறோம்!" என்றான்.

"அப்படியானால் அவன் தீபனை சுட்டு விட்டானா?"

"இல்லை தீபனை இழுத்துக் கொண்டு முன்னால் ஓடினார்கள். தீபிகாவும் கத்தியபடியே பின்னால் ஓடினாள். நானும் ரஞ்சனும் தீபிகாவின் பின்னால் ஓடினோம். ஆனால் அதன்பிறகு ஐயோ... அதை எப்படி சொலவேன் பிரசன்னா..?" முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் மதுமிதா"

"அதன் பிறகு என்ன நடந்தது மது" அவள் முதுகில் மெல்ல தட்டியபடியே கேட்டான் பிரசன்னா.

மெல்ல நிமிர்ந்து பிரசன்னாவைப் பார்த்த மதுமிதா,

"இதயமே இல்லாத அந்த இருவரும் தீபனைப் பிடித்து பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள். கத்திய படியே ஓடிச் சென்ற தீபிகா அவர்களின் தோளில் தொங்கினாள். அவர்கள் இருவரும் தீபிகாவையும் பிடித்து அந்த பாதாளத்தில் தள்ளி விட்டார்கள். பிரசன்னா... ஐயோ இதுதான் அன்று அங்கே நடந்தது.

இப்போது நினைத்தாலும் என் மேலெல்லாம் நடுங்குகிறது பிரசன்னா... பாவம் தீபனும் தீபிகாவும்!" சொல்லிவிட்டு,

"மீண்டும் கண்களைத்துடைத்து விட்டுக் கொண்டாள் மதுமிதா.

அவள் முகத்தில், சோகத்தின் ரேகைகள் படர்ந்திருந்தது!

அப்படியே அந்த மேசையில், முகத்தை சாய்த்துக் கொண்டாள் மதுமிதா.

இந்த இடத்தில்,

பிரசன்னாவால் புரிந்து கொள்ள முடியாத ஒன்று இருந்தது!

அதாவது,

இந்தக் கொலைகள் நடப்பதற்கு,

மதுமிதாதான் காரணமாக இருந்தாளா?

இந்தக் கேள்விக்கு அவனுக்கு பதில் கிடைக்கவே இல்லை!

அவன் மெல்லத்திரும்பி,

மதுமிதாவைப் பார்த்தான்.

அவள்,

இன்னமும் மேசையில் முகத்தைப் புதைத்த படி அழுது கொண்டிருந்தாள்.

"மது... என்ன இத நீங்க இப்படி அழுது கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் என்னை தப்பா நினைக்கப்போகிறார்கள். அதனால் எழுந்திருங்கள்!" என்று அவளைத் தட்டி எழுப்பினான்.

படாரென்று தலையைத் தூக்கிப் பார்த்தாள்,

"ம்... அதென்றால் உண்மைதான்... ஆனாலும் யாரும் பார்க்கவில்லையே...!

"ம்.... மது இப்போது அந்த சம்பவம் நடந்து முடிந்து விட்டது... தீபாவும் தீபிகாவும் உங்கள் நண்பர்கள் என்பது உண்மைதான்... ஆனாலும் அவர்கள் கொண்டு வந்த ஆயுள் காலம் அவ்வளவு தான்...

இப்போது நாங்கள் செய்யவேண்டிய தெல்லாம் அந்த இரண்டு அப்பாவிகளையும் பாதாளத்தில் தள்ளிய அந்த கொலைகாரர்களை பிடித்து இடத்திற்கு அனுப்பவேண்டும்! அந்த இருவருக்காகவும் அதுதான் நீங்கள் இப்போது செய்யவேண்டும்! ஆனால் அதற்கு முந்தி எனக்கு ஒரு விஷயம் தெரிந்தாக வேண்டும்?" அது என்ன விஷயம் பிரசன்னா?"

"உங்களால் தான் இந்த சம்பவம் நடந்த தென்று நீங்க சொன்னீங்க தானே....?"

"ஆமாம் அப்படித்தான் நான் நினைக்கிறேன் பிரசன்னா!"

"என் மது அப்படி நினைக்கிறீங்க...?"

"தீபா என்பது எனது நெருங்கிய தோழி... அதே போல் தீபாவுக்கு இருக்கும் நெருங்கிய தோழியும் நான்தான். தீபா அன்று இந்த யோசனையை அவள் சொன்ன போது அதை நான் தடுத்திருந்தால். தீபிகா கண்டிப்பாக அந்தப் பயணம் போயிருக்க மாட்டாள். அவர்கள் அப்படி போகாமல் இருந்திருந்தால் இன்று அவர்கள் இருவருமே உயிரோடு இருந்திருப்பார்கள்!

"இல்லை மது... அன்று உள்ள நிலைமையின் படி நீங்கள் போகவில்லையென்றால் வேறு யாரையாவது அழைத்துக் கொண்டு போயிருப்பாள்!"

"பைத்தியமா பிரசன்னா நான் அன்று கார் ஒன்றை எடுத்துக் கொண்டு போயிருக்க வில்லையென்றால் அவள் வேறு யாருடனும் கண்டிப்பாக போயிருக்கவே மாட்டாள்!"

"ஆமாம்... உங்கள் தோழியைப் பற்றி என்னைவிட உங்களுக்குத் தானே அதிகம் தெரியும் அதுசரி... இருவரையும் பாதாளத்தில் தள்ளி விட்டு அந்த இருவரும் பேசாமல் போய் விட்டார்களா?"

"இல்லை... தள்ளிவிட்ட இருவரும் எங்களை நோக்கி வந்தார்கள்!"

"வந்து?"



**(இளமை வளரும்)**

# SLT-MOBITEL இன் mGuide சேவை விஸ்தரிப்பு




தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, SLTMobitel Home வாடிக்கையாளர்களுக்கு (நிரந்தர இணைப்பு) mGuide சேவையை வழங்க முன்வந்துள்ளது. அதனூடாக, கட்டடக்கலை மற்றும் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பார்வையிடக்கூடியதாக இருக்கும்.

SLTMobitel mGuide சேவை என்பது, வாடிக்கையாளர்களுக்கு இலங்கையின் வரலாற்று, கலாசார மற்றும் சமய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் பற்றிய தகவல்களை செவிமடுக்கக்கூடிய வகையில் அமைந்த தொடர்பாடல்களை பேணக்கூடிய குரல் மூலமாக கட்டுப்படுத்தும் கட்டமைப்பாக அமைந்துள்ளது. இந்தச் சேவை முன்னர் SLTMobitel மொபைல் வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

சிறந்த பெறுமதி சேர்ப்பை வழங்கியுள்ளதனூடாக SLTMobitel Home வாடிக்கையாளர்களுக்கும் தற்போது இலங்கையின் உண்மையான வனப்பை 1299 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். interactive voice response (IVR) முறையிலமைந்த கட்டமைப்பினூடாக பாவனையாளர்களுக்கு இலங்கையின் உயர்ந்த கலாசாரம் மற்றும் பாரம்பரியம் பற்றிய தகவல்களை தெளிவான விளக்கங்களுடன் பெற்றுக் கொள்ள முடியும்.

SLTMOBITEL மொபைல் வாடிக்கையாளர்களுக்கு mGuide சேவை என்பதை 888 எனும் குறும் இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும். மேலும், இந்த சேவையை விரிவாக்கம் செய்துள்ள நிலையில், சகல SLTMobitel Home வாடிக்கையாளர்களுக்கும் மொபிடெல் குறும் இலக்க சேவை 888 ஐ ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், SLTMOBITEL இனால் mGuide சேவை மீளமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக சிறந்த உள்ளம்சங்கள் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவை பத்துக்கும் அதிகமான மொழிகளில் காணப்படுகின்றது.

# CAT Lubricants விநியோக பணிகளை ஆரம்பித்துள்ள UTE



யுனைட்டட் டிராக்டர் அன்ட் இக்யுப்மன்ட் (பிரைவட்) லிமிடெட் (UTE), கட்டர்பில்லர் (CAT) டிராக்டர் கம்பனியுடன் 75 வருட காலமாக பேணும் உறவுக்கு மேலும் பெறுமதி சேர்த்து, CAT Lubricants விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த 18 வருட காலமாக நிர்மாணத் துறையில் பயன்படுத்தப்படும் கட்டர்பில்லர் சாதனங்களுக்கு அசல் ஒயில் வகைகளை UTE விநியோகத்த வண்ணமுள்ளதுடன், வாகனத் தொழிற்துறையில் பரந்தளவு நுகர்வோருக்கு அனுகூலம் சேர்க்கும் வகையில் தனது வியாபாரச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.

நாடு முழுவதிலும் UTE ஊடாக கிடைக்கும் CAT Lubricant தெரிவுகளில் CAT, DEO, Heavy Duty டீசல் என்ஜின் ஒயில்கள், CAT, HYDO,ADVANCED உயர் வினைத்திறனான ஹைட்ரோலிக் திரவங்கள், CAT, TDTO,drive train and transmission oil, CAT GREASES மற்றும் CAT ELC extended life coolant ஆகியன அடங்கியுள்ளன.

யுனைட்டட் டிராக்டர் அன்ட் இக்யுமன்ட் (பிரைவட்) லிமிடெட் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அனசுயா குணசேன கருத்துத் தெரிவிக்கையில், "CAT ஆரம்பத்தில் தமது அதிதிறன் படைத்த தமது கட்டர்பில்லர் என்ஜின்களுக்கு தமது lubricant களை தயாரித்திருந்தது. என்ஜின்களின் இயக்கத்துக்கு அத்தியாவசியமான வலுவை வழங்கி செயற்படுத்தக்கூடிய வகையில் CAT' oils வடிவமைக்கப்பட்டுள்ளன. தினசரி தமது என்ஜின்களுக்கு சிறந்த தயாரிப்பை நாடும் வாகன பாவனையாளர்களுக்கு இந்த உயர் தொழில்நுட்பம் மற்றும் நியமம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. The CAT DEO ' 15W 40 CI4 டீசல் என்ஜின் ஒயிலின் மூலமாக என்ஜின்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதுடன், சாதனங்களின் செயற்திறன் அதிகரிக்கப்பட்டு, பெருமளவு சேமிப்பை வழங்குவதாக அமைந்துள்ளது." என்றார்.

# இலங்கையில் 40 வருடங்கள் கொண்டாடும் SOS கிராமங்கள்




தனது 40 வருடகால சேவைப் பயணத்தின்போது, இலங்கை SOS சிறுவர் கிராமங்களினால், இலங்கை சமூகத்துக்கு பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் 12,000 நேரடி அனுகூலம் பெறுவோரும், 50,000க்கும் அதிகமானோர் பல்வேறு சமூகத் திட்டங்களினூடாக நேர்த்தியான அனுகூலங்களையும் பெற்றுள்ளனர்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லை குறிக்கும் வகையில், SOS சிறுவர் கிராமங்களினால் அண்மையில் 40 ஆவது வருட பூர்த்தி கொண்டாட்டங்கள், பிலியந்தலையிலுள்ள SOS சிறுவர் கிராமத்தின் தேசிய பயிற்சி நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன்போது 40 வருட பூர்த்தியை முன்னிட்டு ஞாபகார்த்த தபால் முத்திரை வெளியிடப்பட்டிருந்ததுடன், விசேட முதல்நாள் மேலுறையும் தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியுடன், இலங்கை SOS சிறுவர் கிராமத்தின் பணிப்பாளர் சபையின் தலைவர் நந்தசிறி பொன்னம்பெரும, இலங்கை தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரட்ன, SOS சிறப்பு தூதுவர் ரொஷான் மஹாநாம, SOS சிறுவர் கிராமத்தின் தேசிய பணிப்பாளர் திவாகர் ரட்னதுரை ஆகியோருடன், SOS சிறுவர் கிராமத்தின் இதர அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

SOS சிறுவர் கிராமத்தின் தேசிய பணிப்பாளர் திவாகர் ரட்னதுரை கருத்துத் தெரிவிக்கையில், "SOS சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த நாம், எமது 40 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இந்த தபால் முத்திரையை வெளியிடுவதையிட்டு மிகவும் பெருமை கொள்கின்றோம். இந்த விசேட ஏற்பாட்டுக்காக தபால் திணைக்களம் மற்றும் தபால்மா அதிபர் ஆகியோருக்கு விசேடமாக நன்றி தெரிவிக்கின்றோம். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தது என்பதுடன், அன்பு, மதிப்பு மற்றும் பாதுகாப்பாக வளர வேண்டும் எனும் நோக்குடன் SOS சிறுவர் கிராமம் நிறுவப்பட்டது.

# இந்தியாவின் ITC One Colombo 2023 இல் கட்டுமானப்பணிகள் பூர்த்தி



கட்டுமானப் பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் 400 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான செலவில் ITC One Colombo, 2023 ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ITC Limited இற்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமான Welcom Hotels Lanka (Private) Limited இன் இலங்கையின் முதலாவது திட்டமாக இது அமைந்துள்ளது.

நிலைத்தன்மையை மையமாகக் கொண்ட இந்த அதிநவீன ITC hotel கட்டுமானமானது 352 அறைகள் மற்றும் சர்வதேச மற்றும் இந்திய உணவு வகைகளின் சிறப்பு உணவுத் தெரிவுகளையும் உள்ளடக்கிய அதிசிறந்த சொகுசு வசதிகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் Sapphire Residences 132 வானுயர்ந்த சொகுசு மாளிகைகளைக் கொண்டுள்ளது. இவை சராசரியாக 5500 சதுரஅடி அளவிலான வணிக மற்றும் விற்பனைத் தளங்களைக் கொண்டுள்ளன.

உலகில் புகழ்பெற்ற பல முன்னணி பெயர்கள் இந்த கட்டுமானத்தின் கட்டடக் கலை மற்றும் வடிவமைப்பின் பின் உள்ளன. மதிப்பிற்குரிய உள்நாட்டு கட்டடக் கலைஞர் சுரத் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணிபுரியும் Gensler (USA) யின் முதன்மைக் கட்டடக் கலையுடன், வீட்டுமனைகளின் கவர்ச்சிகரமான உள்ளகம் YOO inspired by Starck இனால் செய்யப்படுகிறது. முதன்மை கட்டமைப்பு பொறியியல் Thornton Tomasetti (USA) இனாலும், தரைத்தோற்ற வடிவமைப்பு Burega Farnell (Singapore) இனாலும், ஹோட்டலின் உட்புற வடிவமைப்பு Wilkes Malaysia, னாலும், Control Risks மூலம் பாதுகாப்பு வடிவமைப்பும், பொது கண்ட்ரக்டராக L&T Limited ஆகியோர் விளங்குகின்றனர்.

# காலநிலை மாற்றத்துக்கு எதிராக போராடுவதற்கு சூழலுக்கு நட்பான நிலைபேறான திட்டங்கள்

காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்துக்காக, நிலைபேறான சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ள SLT MOBITEL, சர்வதேச சூழல் தினத்தை அனுஷ்டித்திருந்தது. இதற்கமைய, மீரிகம பகுதியில் தனது 5ஆவது மர நடுகைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. தேசிய மட்ட மர நடுகைத் திட்டத்தை SLT MOBITEL முன்னெடுத்திருந்ததுடன், அதனூடாக வளித் தூய்மையாக்கல், வனாந்தரச் செய்கையை ஊக்குவித்தல், காபன் நடுநிலையாக்கம் மற்றும் பச்சை இல்ல வாயுக்களை குறைத்தல் மற்றும் உயிரியல் பரம்பலை பேணுதல் போன்றவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. நிலைபேறாண்மை தொடர்பில் தனது அக்கறையை வெளிப்படுத்தும் SLTMOBITEL, பசுமையான புவியின் முக்கியத்தை உணரந்துள்ளதுடன், ஆரோக்கியமான தாவரங்களினூடாக மனித சுகாதாரத்துக்கு கிடைக்கும் நேரடி அனுகூலங்கள் மற்றும் இயற்கையை பேணுவது, எதிர்காலத் தலைமுறைகளுக்காக காலநிலை மாற்றத்தை தணித்து, சீராக்குவது போன்றவற்றுக்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

"தூய வளி மற்றும் உரத்தினூடாக நாட்டுக்கு வளமூட்டுவோம்" எனும் தொனிப் பொருளின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டிருந்த இந்தத் திட்டம், திரண்ட நலனுக்காக சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

களை கட்டுப்படுத்தலுக்கு நாட்டிலுப்பை மரம் பங்களிப்பு வழங்குவதாக நம்பப்படுகின்றது. சேதனப் பசளை தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படுவதுடன், வளியை தூய்மைப்படுத்தவும், மருந்துவ குணம் மிக்க தாவரமாகவும் கருதப்படுகின்றது.

இதுவரையில் SLTMOBITEL இனால் 1000க்கும் அதிகமான தாவரங்கள் மொனராகலை, உமந்தாவ, அனுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் நாட்டப்பட்டுள்ளன.

# நிபொன் பெயின்ட் லங்காவின் புதிய விற்பனையகம் தெரணியகலையில்



நிபொன் பெயின்ட் லங்கா (பிரைவட்) லிமிடெட் தனது புதிய விற்பனைக் காட்சியறையை தெரணியகல பகுதியில் அண்மையில் திறந்துள்ளது. ஆசிரி என்டர்பிரைசஸ், தெஹியோவிட்ட வீதி, தெரணியகல எனும் பகுதியில் அமைந்துள்ள இந்த விற்பனையகத்தில், தெரணியகல மற்றும் அதனை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த

நுகர்வோரினால், நிபொன் பெயின்ட் தயாரிப்புகளின் முழுத் தெரிவையும் கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

நிபொன் பெயின்ட் லங்கா பொது முகாமையாளர் நிமந்த அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "தெரணியகல ஒரு விவசாயப் பகுதி, இலங்கையில் காணப்படும் ஈரப்பதன் நிறைந்த நகரங்களில் ஒன்றாகும். இப் பிராந்தியத்தில் உயர் தரம் வாய்ந்த நிபொன் பெயின்ட் தெரிவுகளுக்கு அதிகளவு கேள்வி காணப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். நாடு முழுவதிலும் நிபொன் பெயின்ட் தெரிவுகளை இலகுவான முறையில் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கச் செய்வது எமது இலக்காகும்." என்றார்.

அலங்கார, வாகனங்கள் மற்றும் தொழிற்துறை மேற்பூச்சு தீர்வுகளுக்கான உயர் ஜப்பானிய தொழில்நுட்பத்துக்காக "The Coating Expert" என உலகளாவிய ரீதியில் அறியப்படும் நிபொன் பெயின்ட் தயாரிப்புகளை தற்போது தெரணியகல பகுதியில் கொள்வனவு செய்யலாம்.

# செலான் வங்கியின் செலான் கார்ட் இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத்திட்டம்



அன்புடன் அரவணைக்கும் வங்கி செலான் வங்கி, தனது கடனட்டைதாரர்களுக்கு மற்றுமொறு வசதியை வழங்கும் வகையில், அவர்களின் காப்புறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

இதற்காக முன்னணி காப்புறுதி சேவைகள் வழங்குநர்களுடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதுடன், அதனூடாக ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிகளைக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களின் மேம்படுத்தப்பட்ட பணப்பாய்ச்சல் நிர்வகிப்பை பேணவும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

"அத்தியாவசிய தேவைகளுக்கான அத்தியாவசிய அட்டை" எனும் தனது உறுதிமொழிக்கமைய, 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை வாடிக்கையாளர்கள் செலான் வங்கி கடனட்டையைப் பயன்படுத்தி காப்புறுதிக் கொடுப்பனவுகளை இலகுமுறை தவணைக் கொடுப்பனவினூடாக மேற்கொள்ளலாம். இந்தச் சலுகை ஆகக்குறைந்தது ரூ. 10,000 முதல் ரூ. 1 மில்லியன் வரை கொடுப்பனவுகளுக்கு செல்லுபடியாகும். 0% தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள் 3 மாதங்கள் மற்றும் 6 மாதங்கள் வரை நீடித்துக் கொள்ள முடியும் என்பதுடன், வாடிக்கையாளர்கள் தமது இலகு தவணைக் கொடுப்பனவு திட்டங்களை 7 வேலை நாட்களுக்குள் இலகுமுறை தவணைத் திட்டத்துக்கு மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

செலிங்கோ இன்சூரன்ஸ், AIA இன்சூரன்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ், ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ், LOLC மற்றும் ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் போன்ற முன்னணி காப்புறுதி சேவை வழங்குநர்களுக்கு மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாம். தற்போதைய பொருளாதாரச் சூழலில், இல்லப் பணப்பாய்ச்சலை நிர்வகிப்பது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது.

இதன் பெறுபேறாக, கடனட்டை பாவனை தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதுடன், இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களுக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

# இலங்கை ரக்பி ஆடவர் மற்றும் மகளிர் அணிகளை வலுவூட்டும் Signature



இலங்கையில் முன்னணி வகிக்கும், நம் நாட்டில் உருவான ஆடவர் ஆடை வர்த்தக நாமமாக 2022ஆம் ஆண்டு பர்மிங்ஹாமில் ருமுயில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கான இலங்கை ரக்பி ஆண்கள் மற்றும் பெண்கள் தேசிய செவன்ஸ் அணிகளின் உத்தியோகபூர்வ ஆடைப் பங்காளியாக Signature, நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு 2022 ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளது. தேசிய ரக்பி தேர்வாளர்கள் ஏற்கனவே 20ஆண்கள் மற்றும் பெண்கள் கொண்ட ஒரு அணியை தீர்மானித்துள்ளனர். அணியில் 12 பேர் மற்றும் 8 காத்திருப்பு வீரர்கள் உள்ளனர். இலங்கையில் முதலிடம் வகிக்கும் ஆடவர் ஆடைகளுக்கான தீர்வுகளை வழங்குவோரான Hameedia 1990 ஆம் ஆண்டில் இலங்கை சந்தையில் சிக்னேச்சர் என்ற வர்த்தக நாமத்தை அறிமுகப்படுத்தியது. அன்று முதல் இலங்கையின் ஃபேஷன் அரங்கில் பொது வர்த்தக தலைவராக இந்த வர்த்தக நாமம் சீராக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

பெருந்தொற்றின் விளைவாக இலங்கையில் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை. இது அவர்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்தியதுடன் போட்டித்தன்மையின்மை காரணமாக அவர்களின் முன்னேற்றத்தையும் தடுத்தது.

# பால் சார்ந்த உற்பத்தி நிறுவனமான ரசோதா டேரிஸூக்கு தங்கவிருது



இலங்கையின் முன்னணி பால் சார்ந்த உள்நாட்டு உற்பத்தி நிறுவனமான ரசோதா டேரிஸ் (தனியார்) நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடு செய்த தேசிய கைத்தொழில் விருது விழாவில் பால் சார்ந்த உற்பத்தி பிரிவின் மத்திய மற்றும் பாரியளவிலான பிரிவின் தங்க விருதை வென்றுள்ளது.

இவ்விருதுவிழா அண்மையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. ரசோதா என்னும் சொல்லின் பொருள் சுவை உதயம் என்பதாகும். ரசோதா எப்பொழுதும் உள்நாட்டு பாற் பண்ணை கிராமங்களின் பசுக்களிலிருந்து பெறப்படும் உடன் கறந்த பசும்பாலை கொண்டு உற்பத்தி செய்யப்படும் உயர் தரத்திலான யோகட், யோகட் பானம், தயிர், ஐஸ்கிறீம் உள்ளிட்ட ஏராளமான உற்பத்திகளை சந்தைக்கு வழங்குகின்றது.

அந்தவகையில் ரசோதா உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ளதோடு அதனால் போட்டிச் சந்தையில் சீக்கிரமே முன்னேற முடிந்துள்ளது. இந்த நேரத்தில் எம்மை தங்கப் பதக்க விருதுவரை அழைத்துச் சென்ற எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கும் ரசோதா ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என அதன் அதிபரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான தமிந்த பெரேரா தெரிவித்தார்.




# படித்ததும் பகர்வதும் 101



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### உளப்பூர்வமாக உதவுவோம்!

**உ**லக நாடுகள் இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கு இணைந்ததாக, எமது நாடும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளது. இதிலிருந்து விடுபட அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தாக்கத்தினால் பலரும் பல்வேறு கஷ்டங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.



இந்த நிலைமையில் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் இயன்ற அளவில் மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டிய அவசிய நிலைமை உருவாகியுள்ளது.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பொருளாதார பாதிப்புக்கு உள்ளாகி சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள போதிலும், அவரவர் தமது வசதி, வாய்ப்பு, வருமானம், சொத்து, செல்வம், இருப்பு என்பவற்றுக்கு ஏற்ப பிறருக்கு சிறிய அளவிலேனும் உதவிகள், ஒத்துழைப்புகள், ஆதரவுகள் வழங்க வேண்டியது அவசியமாகும்.

'விரலுக்கு ஏற்ற வீக்கம்' என்பதற்கு ஏற்ப, அதிக அளவில் இல்லை என்றாலும் தமக்கு ஏற்ற வகையில் மற்றவர்களுக்கு தர்மமாய் வழங்கிட முன்வர வேண்டும்.

'அயலான் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய புசித்திருப்பவன் ஒரு இறை விசுவாசியாக இருக்க முடியாது' என்பது நபிகள் நாயகத்தின் பொன்மொழியாகும். இதனை இன்றைய காலத்தில் ஒவ்வொருவரும் கருத்தில் எடுத்து, மனித நேயம் உள்ளவர்களாக செயல்படுவது கட்டாயமாகும்.

ஒவ்வொருவரது தேவையும் எதிர்பார்ப்பும் வெவ்வேறானதாக இருந்த போதிலும், தம்மால் இயன்றது எதுவோ, தமது பணத்துக்கும்,பலத்துக்கும் பொருத்தமானது எதுவோ அதனையேனும் தேவை உள்ளோருக்கு வழங்கி உதவுவது தார்மீக பொறுப்பாகும். இவ்வாறு செய்பவர்களுக்கு மனிதர்களின் உளப்பூர்வமான பிரார்த்தனைகளும், அதனால் இறையருளும் நிறையவே கிடைக்கும்.

'தர்மம் தலைகாக்கும்' என்ற பொன்மொழியை இன்றைய சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் கருத்தில் கொண்டு, காலத்தின் தேவையறிந்து, தேவையுள்ளோருக்கு, தாராளமாக உதவிகள் செய்திட முன்வருவோம்.

## நெஞ்சுக்கு நீதி

சோதனைகள்வாழ்வினிலேசகஜந்தான் தம்பி
போதனைகள்சொல்கிறதேஏற்பாயே விரும்பி
வேதனைகள்மறையுமேநீ உழைத்தாலே தம்பி
சாதனைகள்செய்திடலாம்இறைவனை நம்பி

### நெஞ்சோடு நெஞ்சம் நன்றிகள் ஆயிரம்!

**க**டந்த வார 'படித்ததும்பகர்வதும்'நூறாவதுபத்தியை வாசித்த பின் உள்நாட்டில் இருந்தும் இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சவுதிஅரேபியா, குவைத், கத்தார், ஆஸ்திரேலியா, கனடா உட்பட பல வெளிநாடுகளிலிருந்தும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்வேறு இயக்கங்களின் பதவி சார் உறுப்பினர்கள் உட்பட பெரும்பாலான வாசகர்கள் நேரடியாகவும், அலைபேசி வாயிலாகவும், வாட்ஸ்சப், முகநூல் உட்பட சமூக வலைத்தளங்கள் மூலமும், நூறாவதை எட்டியதற்கு, தங்களது வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்து வருகின்றனர். எம்மீது அன்பு கொண்ட இவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள். உங்களது அன்பும், ஆதரவும் என்று தொடருமென எதிர்பார்க்கின்றோம்!

## பிரிந்தார் பெருமை

### கு. சின்னப்ப பாரதி

**இ**லங்கையில் சிங்கள இலக்கியவாதிகளால் உட்பட பலராலும் நன்கு அறியப்பட்ட, இடதுசாரி சிந்தனை கொண்ட, தென்இந்தியாவின் மூத்த எழுத்தாளரும் அரசியல்வாதியுமான கு. சின்னப்ப பாரதி கடந்த 2022 ஜூன் 13 ம் திகதியன்று தனது 87ஆவது அகவையில் காலமானார்.



தாகம், சங்கம், சர்க்கரை, பவளாயி, சுரங்கம், தலைமுறை மாற்றம், பாலை நில ரோஜா என்பன இவர் எழுதியபுகழ் பெற்ற புதினங்கள். இவற்றில் பல இந்தி, வங்காளி, குஜராத்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராட்டி போன்ற இந்திய மொழிகள் பலவற்றிலும், மற்றும் ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம் உட்பட வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவர் எழுதிய 'சுரங்கம்' என்ற புதினம், நிலக்கரிச் சுரங்கத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட வர்க்கப் போராட்ட நாவலாகும். மேற்குவங்காளம் அசன்சாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுடன் பல மாதங்கள் தங்கி இருந்து, நேரடியாகப் பார்த்த, பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இப்புதினத்தை சின்னப்ப பாரதி எழுதினார். இந்நாவலுக்கு 'இலக்கியச் சிந்தனை விருது'கிடைத்ததுள்ளது. பிரபல சிங்கள எழுத்தாளர் உபாலி நாணயக்காரவின் மொழிபெயர்ப்பில் இது சிங்களத்திலும் வெளியாகியுள்ளது.

'செம்மலர்' என்ற இலக்கிய சஞ்சிகையின் ஆரம்ப ஆசிரியரான சின்னப்ப பாரதி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவருமாவார்.இலங்கையைச் சேர்ந்த பலரின்படைப்புகள் இந்திய மொழிகளில் வெளிவரவும், அவைகளைப் பிரபலப்படுத்தவும் உதவிகள் செய்துள்ளார்.

இவர், 'கு. சின்னப்ப பாரதி இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளை' என தனது பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவியுள்ளார்,இதன் மூலம் நாவல், கட்டுரை,இலக்கிய ஆய்வு, சிறுகதை, மொழிபெயர்ப்பு, கணினித் தமிழ் இலக்கியம், சிற்றிதழ்கள், இணைய இதழ்கள், சமூகசேவை, நாடகம், கவிதை மற்றும் சிறந்த பத்திரிக்கையாளர் என பல துறைகளையும் சார்ந்தோர்களை தேர்வு செய்து விருதுகளும், பணப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றமை விசேடமாக குறிப்பிடத்தக்கது.

## சிந்தனை செய் மனமே

### பெட்ரோல்! பெட்ரோல்!!

**பெட்**ரோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும்இந்தக் காலத்தில்,பெட்ரோலுக்குத் தட்டுப்பாடு இல்லாத ஒரு காலத்தில் ஒருவரது வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வு இது. அவரே கூறுகிறார் இப்படி:

ஒருநாள், இரவு நேரம். அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பி கொண்டிருந்தேன். வழியில் பெட்ரோல் இல்லாமல் பைக் நின்றுவிட்டது. அதிகம் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியது. அங்கிருந்து எந்த பக்கம் பெட்ரோல் நிலையத்துக்குசெல்ல வேண்டுமானாலும் குறைந்தது நான்கு கிலோமீட்டர்களாவது செல்ல வேண்டும்.

இரவு நேரத்தில் எவரையும் தொந்தரவு செய்யக் கூடாது என நினைப்பவன் நான். எனவே நண்பர்களை தொந்தரவு செய்யாமல் விதியையும், பெட்ரோல் போடாமல் விட்ட எனது மதியையும்நொந்தபடிபைக் கைதள்ளிக்கொண்டே நடக்கத் தொடங்கினேன்.




திடீரென இன்னொரு பைக்கில் இருவர் என் முன் வந்து நின்றனர். "என்ன சார் பெட்ரோல் இல்லையா?" என்றார் ஒருவர். "ஆமா சார்" என்றேன். அதை முழுதும் கூறி முடிக்கும் முன்னரே அவர் தனது பைக்பெட்டியிலிருந்த சிறிய கேனை எடுத்தார். அதிலிருந்து பெட்ரோலை எடுத்துத் தந்தார்.

எனக்கோ இறைவனே நேரில் வந்து தந்தது போன்ற உணர்வு. ஏனெனில் அந்த சாலையில் அந்த நேரத்தில் கையில் பெட்ரோலுடன் ஒரு பைக் வந்தது,'நான் என்றோ செய்த நல்வினைக்கான புண்ணியம்' தான் என நினைத்தேன். 'தர்மம் தலைகாக்கும்' என்பார்களே அது இதுதானோ?

பெட்ரோலை ஊற்றிவிட்டு, தயங்கியபடி ஒரு தொகை பணத்தாள்களை அவர்களிடம் நீட்டி, " சார். இதை உங்கள் பெட்ரோலுக்கான காசா நினைக்காதீங்க, நீங்க எப்படியும் பெட்ரோல் போடுவிங்கதானே அதற்கு பயன்படுத்திக்கோங்க" என்றேன்.

"இல்ல சார் பணமெல்லாம்வேணாம். நாங்க சிசிடிவி கெமராதொழில் பண்றோம், அடிக்கடி கஸ்டமர் இடங்களுக்கு செல்லும் போது இப்படி சூழ்நிலை வரும் அதான் பெட்ரோல் வாங்கி வச்சுருப்போம்" என்று கூறி பணம் வாங்க மறுத்து விட்டார். அவர்களை அப்படியே அனுப்ப என் மனம் இடம்தரவில்லை.

"சரி உங்கதொலைபேசி எண் கொடுங்க. தொழில் ரீதியா உங்க உதவி தேவைப்பட்டா அழைக்கிறேன்" என்றேன். அவர் பெயர் 'ரசாக்' என்று கூறிதொலைபேசி எண்ணையும் கொடுத்து விட்டு, என் நன்றியை சிரிப்பால் ஏற்றுக்கொண்டு சென்று விட்டார்.

அன்றிலிருந்து நான் பெட்ரோல் போடும் போது, அவருக்கான நன்றியாக,மற்றவர்களுக்கு உதவுவதற்காக. ஒரு சிறிய பாட்டிலில் பெட்ரோல் கொஞ்சம் எடுத்து வைத்துக்கொள்வேன். அந்த பாட்டிலில் ஒரு ஸ்டிக்கரில் 'ரசாக்' என்ற அவர் பெயரையும், அவர் தொலைபேசி எண்ணையும் எழுதிவைப்பேன்.

இதுவரை பெட்ரோல் இல்லாமல் ரோட்டில் உருட்டி சென்ற நான்கு பேருக்கு உதவியிருக்கிறேன். அவர்கள் பதிலுக்கு பணம் கொடுக்க வரும்போது, "பணம் வேணாம், என் நண்பர் சிசிடிவி கெமரா தொழிலில் உள்ளார். தேவைப்பட்டா அவரை அழையுங்கள்" என்று ஸ்டிக்கரில் உள்ள எண்ணை கொடுப்பேன்..

யாருமே வேண்டுமென்றே பெட்ரோல் நிரப்பாமல் செல்வதில்லை. அவசரமான உலகில் இவ்வாறு நிகழ்வதை தவிர்க்க முடியாது. அத்தகைய நேரத்தில் இவ்வாறு உதவுவது விலை மதிக்க முடியாத பேருதவி. முடிந்தால் நீங்களும் செய்யமுயலுங்கள்.

அன்றைய இரவு இருட்டில் எனக்கு இந்தப் பாடத்தை சொல்லித் தந்த அவரது முகம் கூட இப்போது என் நினைவில் இல்லை. ஆனால் பெயர் மட்டும் நினைவில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. "ரசாக்".

## தகவல் களஞ்சியம்

### மின்சாரப் பயணிக் கப்பல்

**சீ**னாவின் முதலாவது மின்சாரப் பயணிக் கப்பல், சீனாவின் யாங்சி ஆற்றில் அண்மையில் அதிகாரப்பூர்வமாக இயக்கப்பட்டுள்ளது. 100 மீட்டர் நீளமுடைய இக்கப்பல், உலகின் மிகப் பெரிய மின்சாரப் பயணிகள் கப்பலாகும். இதன் மூலம் 1300 பயணிகள் ஒரே நேரத்தில் பயணம் மேற்கொள்ள முடியும். 7500 கிலோ வாட்டு இயக்க ஆற்றால் கொண்ட மின்கலன்கள் இக்கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



### அழிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய விமானம்

இரஷ்ய இராணுவம் உக்ரைன் நாட்டில் மேற்கொள்ளும் தாக்குதல்களினால் ஏற்பட்டுள்ள, ஏற்படுகின்ற சேதங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. யுத்தத்தின் ஆரம்ப காலத்தில்,உக்ரைன் தலைநகர் கீவ் அருகேயுள்ள ஹோஸ்டோமல் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலகிலேயே மிகப் பெரிய விமானத்தை ரஷ்ய இராணுவம் அழித்தது.



உலகிலேயே மிகப் பெரிய விமானமாக கருதப்பட்ட AN225 'Mriya', க்ரைன் ஏரோநாட்டிக்கல் நிறுவனமான அன்டோனோவ் நிறுவனத்தால் 1985ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.'Mriya' என்றால் உக்ரைன் மொழியில் 'கனவு' என்றே பொருள்படுகிறது. இவ்விமானம், 30 சக்கரங்கள், 6 என்ஜின்கள், 290 அடி இறக்கைகளுடன் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம் என்ற சிறப்பை பெற்றது. சரக்கை ஏற்றிக் கொண்டு, இந்த விமானத்தால் 4,500 கிலோ மீட்டர் வரை செல்ல முடியும்.

ரஷ்ய ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் இந்த விமானம் முற்றிலும் எரிந்து சாம்பலானதாக உக்ரைன் அமைச்சர் டிமிட்ரோ குலேபா உறுதிப்படுத்தியுள்ளார்.

### கடலில் மூழ்கிய 4000 அதி சொகுசு கார்கள்

**அ**தி சொகுசு கார்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பல் விபத்துக்குள்ளானதில் சுமார் 4000 அதி சொகுசு கார்கள் கடலில் மூழ்கியுள்ளன. போர்த்துக்கல் கடற்பகுதியில் அஸோர்ஸ் தீவுக்கூட்டம் அருகே இவ்வருட பெரவரி மாத இறுதிப் பகுதியில், இக் கப்பல் தீப்பிடித்தது.

'ஃபெலிசிட்டி ஏஸ்' (felicity ace) என்ற இந்தக் கப்பலில்'போஸ்ச்' (Porsche),'பென்ட்லி' (Bently), 'ஃபோக்ஸ்வேகன்' ரக சொகுசு கார்கள் இருந்துள்ளன.

இவற்றில் 189 பென்ட்லி கார்களும், 1,100 Porcheகார்களும் இருந்ததாகவும், ஃபோக்ஸ்வேகன் நிறுவனம் தனது கார்களுக்கு 155 மில்லியன் டாலர் காப்பீட்டுத் தொகையைக் கொண்டுள்ளதாகவும் ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. ஜேர்மனியின் எம்டன் துறைமுகத்தில் இருந்து அமெரிக்கா நோக்கிச் செல்லும் போது விபத்துக்குள்ளான இக்கப்பல், அட்லாண்டிக் பெருங்கடலில், சுமார் 3500 மீற்றர் அடிப்பகுதியில் இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

## பேசும் படம்



இது அந்த கால நினைவை மீட்டும் படமல்ல. இப்போதைய எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வாக, யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ள குதிரை வண்டிப் போக்குவரத்துச் சேவையின் உற்சாக மூட்டும் காட்சி.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் எதிர்வு கூறல் (Forecasting)



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 13

**ஒரு நிறுவனத்தின் செயல் திட்டம் (Action Plan), வரவு செலவு திட்டம் என்பவற்றை தீர்மானிப்பதற்கு திட்டமிடலின் ஒரு அங்கமாகிய அல்லது இரண்டாவது படிமுறையாகிய எதிர்வுகூறல் உதவுகிறது. ஒரு நிறுவனம் ஒன்றின் நோக்கங்களை முடிவு செய்தபின் அந்தநிறுவனம் எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பாக முன்கூட்டியே உணர்ந்துகொள்ளும் ஒரு செயற்பாடே எதிர்வுகூறலாகும். உண்மையில் திட்டம் ஒன்றை தீட்டுவதற்குத் தேவையான விபரங்களை திரட்டுவதற்கும், நிறுவனத்தின் நோக்கங்களை இலகுவில் அடையும் பொருட்டும், அவ்வாறு நோக்கங்களை அடையும் போது எதிர்கொள்ளக்கூடிய சவால்களை அறிந்து அவற்றை எதிர்கொள்ளவும் அல்லது தவிர்க்கவும், ஏற்படக்கூடிய பிரச்சினகளைப்பற்றி பணியாளர்களுக்கு விளக்குவதற்கும் அவர்களை அப்பிரச்சினைகளை எதிர்கொள்வதற்குத் தயார்படுத்தவும் எதிர்வு கூறல் முக்கியமான ஒன்றாக இருக்கிறது .**

எதிர்வு கூறல் பல்வேறு அகப்புறக் காரணிகளில் தங்கி உள்ளது. நாட்டின் அரசியல் சமூக பொருளாதார நிலைமைகள், அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள், அரசாங்கத்தின் பொருளாதார நிதிக்கொள்கைகள், போட்டி நிறுவனங்களின் நிலைகள், மக்களின் மனநிலை மற்றும் நுகர்வுக் கலாச்சாரம், நுகர்வோர் கருத்துக்கள், சந்தைவாய்ப்பு, உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள், நிதி, உபகரணங்கள் மற்றும் மனிதவளங்கள் கிடைக்கும் தன்மை அவற்றின் அளவு அல்லது அவற்றை பெற்றுக்கொள்வதில் காணப்படும் நிலமைகள், உற்பத்திக்கான கேள்வி நிலைகள், உலக ஒழுங்கு, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள், அந்தக் குறிப்பிட்ட நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் அதன் ஒழுங்குவிதிகள் என்று பல காரணிகள் எதிர்வுகூறலைத் தீர்மானிக்கும் .

எதிர்வு கூறல் மூலம் நிறுவனத்தின் பணிக்கூற்று, (Mission) நோக்கக்கூற்று அல்லது தொலைநோக்கு (Vision), எதிர்காலத்தில் அந்த நிறுவனம் அடையவேண்டிய இலக்குகள் அல்லது நிலைகள் தொடர்பாக முகாமைத்துவத்தால் தீர்மானிக்க முடிவதுடன் அதன் நோக்கங்களை அல்லது இலக்குகளை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் முடிவு செய்யக் கூடியதாக இருக்கிறது. பணிக்கூற்று என்பது ஒரு நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமான ஒன்று . அது நிறுவனத்தின் தொழில் என்ன , அதனுடைய உற்பத்திகள் அல்லது சேவைகள் என்ன ,அதனுடைய வாடிக்கையாளர் யார் என்பவற்றைப் பற்றி ஒரு தெளிவினைத் தந்து நிறுவனத்தின் இலக்குகளைத் தீர்மானிக்க உதவுகிறது. இதன் மூலம் அந்த நிறுவனம் செய்யக்கூடியது என்ன செய்யக் கூடாதது என்ன யார் செய்வது எப்படிச் செய்வது எங்கே செய்வது என்ற விபரங்களை பணிக்கூற்றுத் தருகின்றது . அதேவேளை நோக்கக்கூற்று நிறுவனத்தின் நோக்கங்கள், இலட்சியங்கள் பற்றி வழிகாட்டுவதுடன் அந்த நிறுவனத்தின் பணிக்கூற்று வெற்றிகரமாக எட்டப்படுமாயின்



அந்த நிறுவனம் எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை விளக்குவதாக இருக்கும் .

கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் எதிர்வு கூறலின் முக்கியத்துவத்தை தெளிவாக விளக்குகின்றார் .

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.(குறள் 465)

ஒரு செயலைச் செய்யும் முன் அதனைப் பற்றி முழுவதுமாக ஆராயாமல், அச்செயலின் தன்மையை முழுவதுமாக அறியாமல், அச்செயலை செய்வதற்குத் தேவையான வலிமைகளையும், இடங்களையும் காலத்தையும் திறன்களையும் அறியாமல், அச் செயலைச் செய்வதற்குத் தேவையான வளங்களைப் பற்றி நினையாமல், அச்செயலினால் வரக்கூடிய பயன்களை ஆராயாமல், அச்செயலுக்கான திட்டத்தைத்தீட்டாமல், அச்செயலில் வரக்கூடிய இடர்களை பிரச்சினைகளை முழுவதுமாக உணராமல், அவற்றை எதிர் கொள்வதற்கு அல்லது விலக்குவதற்குத் தேவையான தந்திரங்களை சிந்தித்துத் தீட்டாமல், செய்யத்தக்கது எது செய்யத்தகாதது எது என்று தெளிவில்லாமல் ஒருவர் ஒரு செயலை செய்தால் அது எமது பகைவரை நமது நிலத்திலேயே விதைத்து பாத்திக்கட்டி வளர்த்து நிலைபெறச் செய்வதற்கு ஒப்பாகும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் பகைவர் கேடு விளைவிப்பார்கள் என்பதனால் தொடங்கிய அச்செயலும் கெட்டு அழியும். அத்தோடு செல்வம் அழியும் மன நிம்மதி கெடும் என்கிறார் திருவள்ளுவர் .

ஆதலால் ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் எந்த ஒரு செயலையும் செய்வதற்குமுன்பு முழுவதுமாக ஆராயவேண்டும். அரைகுறையாக ஆராய்ந்தால் ஆபத்து. அவர் தான் செய்ய நினைக்கும் செயலின் வகைகளை அல்லது தன்மைகளை எல்லாம் முறையாக எண்ணாமல் ஆராயாமல் அதனைச் செய்யத் தொடங்குதல் தோல்வியில் முடியும் என்கிறார் திருவள்ளுவர் . அதாவது எந்தவிதமான முன்னேற்பாடுகளையும் முழுமையாக ஆராய்ந்து செய்யாமல் எதிர்வு கூறாமல் முன் உணராமல் ஒரு செயலைச் செய்யக்கூடாது .இச்செயலானது ஆழம் அறியாமல் ஒரு ஆற்றினில் இறங்குகின்ற செயல் போல் எப்போதும் ஆபத்தானதாகவே முடிந்து நிறுவனத்தைத் தொவிக்கு கொண்டு சேர்த்து விடும் .

எவ்வாறு முற்றாக ஆராயாமல் முன்னேற்பாடுகள் எதுவும் இல்லாமல் ஏற்படும் விளைவுகளை நினையாது பகைவருடன் பொருதுவது தோல்வியைத் தருவதுடன் அப்பகைவனை மேலும் வலிமை பெறச் செய்யுமோ அதேபோல் முறையான எதிர்வு கூறல் இல்லாமல் அல்லது பணிக் கூற்று, நோக்கக் கூற்று இன்றித் தொடங்கும் எந்தத் தொழிலும் அல்லது நிறுவனமும் சவால்மிக்கதாக அல்லது தோல்வியைத் தருவதாக அமையுமென்று திட்டமிடலில் எதிர்வு கூறலின் முக்கியத்துவத்தை இவ்வீரடியில் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் .

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வாரமஞ்சரி திருமண சேவைகள்

வர்த்தகம்

வேலைவாய்ப்பு

## 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777 438169 அபிவிருத்தி செய்யப்பட்ட பல தோட்டங்கள் A9 வீதி தம்புள்ள மாத்தளை, மத்தளபிட்டிய வீதி, தெங்கு, கித்துல், இ டைப்பயி ர் 12 மில்லியன், பதம்பிட்டிய 6 1/2 ஏக்கர், தெங்கு, மா, வயல், கு டி யிருப்பு க்கு வீ டு. 25 மி ல்லி யன், பொக்கா வல 20 ஏ க்கர் பலா, தெங்கு, இடை ப்பயிர் ஓர்கல் ( 2 ஏக்கர்) 35 மில்லியன் உல்பத் மடவல 16 ஏக்கா் தேக்கு 4000 மிளகு கொடிகள் 2000, வயலுடன் வீடு 80 மி ல்லியன், கலகெ தர காபட் பாதைக்கு முக ப்பாக 350 மீட்டர் 16 ஏக்கா் இறப்பா் தோட்டம் 1400 மில். 0777 282147. 036041



## 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/ 2, பே ங்ஷால் வீதி, கொ ழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeaccservices@gmail.com 038819

## 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

30 வருட நம்பிக்கையைவென்றுள்ள எமது நெஸ்கோ நிறுவனத்திற்கு வயது 20 60 இரத்மலானை, களுத்துறை, பாணந் துறை, தெஹிவ ளை, நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ பிரதேசங்களிலிருந்து கனரக மற்றும் இல குரக வாகன சாரதிகள் தேவை. சம்பளம் ரூபா 40, 000/ இற்கு மேல் அழைக்கவும். 0777263954, 076 7639155 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 036744

## 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

மாத்தறை பிரதேசத்தில் கறுவா தோட்டத்தில் தங்கி வேலை செய்ய 2045 வயது தமிழ் ஆண் தொழிலாளிகள் வேண்டும். 071 3058343. 039063

சொந்த விடயம்

## 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 6, வெள்ளவத்த, பெண்களுக்கான தளபாடங்க ளுடனான அறைகள் இணைந்த குளியலறைகள் , ஓய்வு அறை, சமையலறை, குக்கர், வொஷர், குளிர்சாதனம். 75/1, W.A. சில்வா மாவத்தை, தொ.பே. 011 2591169, 0755 0 9 13 79, 0777452447 037140

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

காணி/தோட்டம்

## 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கொள்ளுப்பிட்டி கொஹிலவத்தை வீதிக்கு அருகாமையில் கொஹிலவத்தை வீரமல் மாவத்தையில் 12 பேர்ச் காணியில் 2 பெரிய படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள திருமதி நிஸார் 0771724900. 038732

## மணமகன்

36 வயதுள்ள முஸ்லிம் விவாகரத்துப் பெற்ற மார்க்கப் பற்றுள்ள கல்விசார் தகைமையுள்ள, மத்திய கிழக்கில் புகழ் வாய்ந்த நிறுவனத்தில் வேலை செய்யும் அன்பும், பண்புமுல்ல மணமகன் சாதாரண மார்க்கப் பற்றுள்ளவரும், ஆங்கில பின்புலத்தைக் கொண்டவரும், பிள்ளைகள் அற்றவ ரும் 30 45 வயதிற்கிடைப்பட்ட மணமகளை தே டுகின்றார். இஸ்லாமிய போ த னை களை பின்பற்றுகிற வரா க வும் முறையான ஆ டையை அணிபவராகவும் முஸ்லிம் நாடொன்றில் வசிப்பதற்கு விருப்பமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். விபரங்களை pietyseeking@gmail.com என்பதற்கு அனுப்பவும். G183076







சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் தனது கேரள விஜயத்தின் போது, கேரள முதல்வர் பினராயி விஜயன் மற்றும் கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், ஆகியோரைச் சந்தித்தார்.




இம்முறை இலங்கையிலிருந்து புனித ஹஜ் கடமைக்காக மக்கமா நகருக்கு செல்லவுள்ள ஹாஜிகள் தொடர்பில் சவூதி அரேபிய ஹஜ் அமைச்சக தலைவர்களிலொருவரான அஷ்ஷெய்க் பரீட் பந்தரை அமானத் ஹஜ் குழு மற்றும் இலங்கையின் ஹஜ் குழுத் தலைவருமான ஹிசாம் கௌஸ், பேருவளை ஏசியன் ஹஜ் குழு ஏற்பாட்டாளர் நௌபர் ஹாஜியார் ஆகியோர் மக்காவிலுள்ள ஹஜ் அமைச்சகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது எடுத்த படம்.

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







வெல்லம்பிட்டியவில்
களஞ்சியசாலையுடனான காணி விற்பனைக்கு

20 பேர்ச்சுக்கள், உயரமான கூரை, மூன்று வழி மின்சாரம், இரட்டை கேட்டுக்கள், முழுமையான சதுரமான கட்டிடத் தொகுதி, 20 அடி கொள்கலன் வாகனங்களுக்கான அணுகுவழி உண்டு.
தரகர் தேவையில்லை. 60 மில்லியன் ரூபா. பேசித் தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 7 569 490

SUBODHA AYURVEDA (PVT) HOSPITAL
CHANNELLING SERVICE
OPD & Hospitalized Treatment Service
Graduated Ayurveda Doctors Service
WELL EXPERIENCED STAFF TRUSTED SERVICE
General Medical Treatments
Consultation by Dr. Rangana Pradeep
B.A.M.S (Hons) Colombo, M.Sc. Clinical Biochemistry (Red) Peradeniya
Lecturer (Probationary), IIM University of Colombo
Dr. Jayadasa Treatments for Leucoderma & Psoriasis
0716 790 672, 0726 506 485
No. 7/13, Thelawala Rd, Mayura Mw, Rathmalana.

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

# பிழைதிருத்தம்

## தேசிய உப்பு நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

Inner Liner பெறுகைக்காக 2022.06.26ம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக இத்தால் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| விலைமனு -1 | Inner Liner **அளவு**: உயரம் 900mm மற்றும் அகலம் 500 mm (50kg இற்கு) |

ஏனைய எல்லா மாதிரிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி அவ்வாறே இருக்கும்

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு -05.**

BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT



LAKE HOUSE

# பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## தேயிலை ஆராய்ச்சி சபை

## முகாமையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

### சென் ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இரத்தினபுரியில் அமைந்துள்ள சென் ஜோக்கிம் தோட்டம் மற்றும் தொழிற்சாலைக்கு பொறுப்பாகவிருந்து மிகச்சிறந்த புலமையுள்ள விஞ்ஞானிகளின் அணியுடன் சவால்கள் நிறைந்த சுற்றாடலில் பணியாற்றக்கூடிய சுறுசுறுப்புள்ள அத்தியட்சகரொருவரை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் தேடுகின்றது.

தேயிலை ஆராய்ச்சி விஞ்ஞானிகளுடன் தோளோடு தோளாக பணியாற்றுவதன் மூலம் தேயிலை தொழிற்றுறையில் ஒரு அடையாளத்தைப் பெறுவதுடன் அவரது வாழ்தொழில் தன்மையை மேலும் மேலும் அதிகரிப்பதற்காக பொருத்தமான தகைமையுள்ள நபரொருவருக்கு வழங்கப்படும் அரிய சந்தர்ப்பமாகும்.

**பணி விளக்கம்**
தேயிலை தொழிற்சாலையொன்றை, தேயிலை பெருந்தோட்டமொன்றை மற்றும் அலுவலகமொன்று தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் முகாமைப்படுத்துவதற்காக திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையிடல் அத்துடன் முகாமைத்துவத்திற்கு திரட்டக்கூடிய தகவலை வழங்கல்.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**
க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி (சிங்களம்/ தமிழ்) ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியன அடங்கலான நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி.
**அத்துடன்**
க.பொ.த. (உ-த) பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக மூன்று (03) பாடங்களில் சித்தி.
**அல்லது**
பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமாவிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை (NVQ) 5ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழைப் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரானவர் தேயிலை தோட்டத்தின் முகாமையாளராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்துடன் மற்றும் தேயிலைக் கொழுந்தை கொண்டுவத்து அரைக்கும் தொழிற்சாலை செயற்பாடு ஆகியவற்றிலும் அனுபவம் இருத்தல் கட்டாயமாகும்.

மிகச்சிறந்த சமுகரீதியிலான தொடர்புகள், அணி உத்வேகம் மற்றும் வலையமைப்பு திறன்கள் சேர்க்கப்பட்ட தகைமைகளாக கருதப்படும்.

சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பணியாற்றும் திறமை அத்துடன் தமிழில் பேசக்கூடிய ஆற்றல் முக்கியமாகும்.

இந்த நியமனமானது ஆரம்பத்தில் 3 வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் நிலையிலும் அமைந்திருக்கும்.

**வயது**: 70 வயதிற்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

**சம்பளம்:**
அனைத்துமடங்கிய மாதாந்த பொதி அண்ணளவாக 150,000 ரூபாவாகும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரானவருக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் நிருணயிக்கப்பட்ட இந்த பதவிக்காக பிரயோகிக்கப்படும் மேலதிக வசதிகளும் வழங்கப்படும்.

பிறப்புச் சான்றிதழின் பிரதி, உரித்தான கல்விசார் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகள், சேவைக்கால சான்றிதழ் மற்றும் நிகரான துறையில் விண்ணப்பதாரியின் திறன்கள் மற்றும் அறிவு தொடர்பாக பரிந்துரை செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியன அடங்கலான முழுமையான சுயதரவிலான விண்ணப்பமானது பதிவுத் தபாலில் 2022 ஜூலை 19ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே கையொப்பமிட்டுள்ளவரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/நியதிச்சட்டசபை ஆகியவற்றின் அலுவலகர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனத்தின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இந்த தேவைப்படுத்தலுக்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடவும்.

**பணிப்பாளர்,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**புனித கூம்ஸ், தலவாக்கலை.**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www. observerjobs. lk

සතොස

# பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிட்டட்டுக்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்

விலைமனு இலக்கம் LSL/PRO/05/72/Shopping Bags/2022
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

லங்கா சதொச லிமிட்டட்டுக்கு (LSL) பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கலுக்காக உள்நாட்டு முகவர்கள், அவர்களது அங்கீகாரம் பெற்ற இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து 03 மாத காலத்திற்காக லங்கா சதொச லிமிட்டட் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

தேவைப்பாடுகள்:

| இலக்கம் | பொருட்களின் விபரம் | அளவு (LxWxG) | அங்கீகரிக்கப்பட்ட உச்ச எடை | மதிப்பிடப்பட்ட அளவு | அளவீ (கேஜ்) | உற்பத்தி பொருள் | அச்சிடப்பட்டது/ அச்சிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) – நடுத்தரம் | (17" + 10" x 05") | 04 கிலோ | 26,865,000 | மைக்ரோன் 20 அல்லது அதற்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 2 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) - சிறியது | (12" + 09") | 02 கிலோ | 40,155,000 | மைக்ரோன் 20 அல்லது அதற்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு குறித்த ஆங்கில மொழியிலான குறித்த விலைமனு ஆவணத்தின் இரண்டாவது பாகத்தை 3,000.00 ரூபா **மீளளிக்கப்படாத கேள்விமனுக் கட்டணம்** ஒன்றை செலுத்தி **2022 ஜூலை 04 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜூலை 25 ஆம் திகதி வரையான காலத்தில்**, இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்திருக்கும் லங்கா சதொச தலைமை அலுவலகத்தில், பெறுகைப் பிரிவில் இருந்து (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும். (விலைமனுவின் பாகம் 1 www.lankasathosa.org எனும் இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது)

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 ஜூலை 15ஆம் திகதி** மு.ப. 11.00க்கு இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2022 ஜூலை 25ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்**, லங்கா சதொச லிமிட்டட், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிட்டட்டிற்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கைக்குள் செயற்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படுகின்ற)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதி விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் ஏற்பது **2022 ஜூலை 25 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்கள் திறக்கப்படுவது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. வெற்றிகரமான விலைமனுதாரர் மூலம் ஒப்பந்தப் பெறுமதியில் 10% **தொகை செயல்திறன் பிணை ஒன்றாக (மீளளிக்கப்படுகின்ற)** செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
நிறைவேற்று அதிகாரி (திலினி) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிட்டட் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிட்டட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

**பாதுகாப்பு அமைச்சு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

# விலைமனுக்கோரல்

## இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு முன்மொழியப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணி

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : *KDU/PRO/RP&SERVICE(KDU)/ 01/2022*

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு முன்மொழியப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.07.04** ஆம் திகதியிலிருந்து **2022.07.25** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.10,000/-** கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் **2022.07.04 முதல் 2022.07.25** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி** வரை சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449, 011-2632430)**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2022.07.26 ஆம் திகதி** மு.ப.10.00 மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு** பல்கலைக்கழகத்தில் மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாடடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல்** 011-2632430 / 0710219449, **directorlogistics@kdu.ac.lk,ocrepair@kdu.ac.lk,** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம்.(விலைமனுக் கோரல்)

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**இரத்மலான, இலங்கை.**

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு**

# ஜப்பான் மொழிப் பயிற்சி ஆலோசகர் சேவைக்காக பதிவு செய்தல்

**வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் ஜப்பான் மொழிப் பயிற்சி பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளின் ஆலோசகராக கடமையாற்றுவதற்கு உங்களுக்கு ஓர் வாய்ப்பு**

## கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உங்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

உங்களது சேவை ஒப்படை அடிப்படையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக தெரிவாகும் புதியவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் எதிர்பார்க்கிறது.

## • ஜப்பான் மொழிப் பயிற்சி ஆலோசகர்கள் (தமிழ்)

பட்டதாரி பட்டத்துடன் கற்பித்தல் பற்றிய ஒரு வருட அனுபவம் அல்லது ஜப்பான் மொழித் திறன் NAT (1) முதல் NAT (4) வரை சான்றிதழ்களைப் பெற்றிருப்பதுடன் 01 வருட கற்பித்தல் பற்றிய அனுபவம்.

**வயது 24 - 55 வரை**


(தாதியர் தொழில் மற்றும் உணவு சேவைக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட ஜப்பான் மொழி அடிப்படையில் பயிற்சி (JFT) இற்காக கல்வியை வழங்கும் ஆற்றல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

உங்களது சுயதரவு விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புங்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஜப்பான் மொழிப் பயிற்சி ஆலோசகர் பதவிக்காக பதிவு செய்து கொள்ளல்" என்று குறிப்பிடுங்கள்.

**முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்,**
**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்,**
**234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

***இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்***

*'அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு'*




## மேஷம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர சகாய ஸ்தானாதிபதியான அவர் அதற்குரிய வீட்டிலேயே சஞ்சரிக்கும் பொழுது உடன் பிறப்புகளால் உதவி கிடைக்கும். அவர்களின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். உடன்பிறந்தவர்களின் உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகலாம். அதிஷ்ட திகதி ஜுலை 12,13,14 அதிஷ்ட நிறம் நீலம்.

## ரிஷபம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். மிதுனம் புதனுக்கு சொந்த வீடாகும் அங்குள்ள சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகம் உருவாக்குகிறார். எனவே பொது வாழ்வில் புகழ் கூடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பஞ்சமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவும் கடல்தாண்டி சென்று படிப்பது சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். அதிஷ்ட திகதி ஜுலை 4,5,15,16 அதிஷ்ட நிறம் பச்சை.

## மிதுனம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) உங்கள் ராசி நாதன் புதன் உங்கள் ராசியிலே சஞ்சாரம் செய்துள்ளார். இதன் விளைவாக நல்ல பலன்கள் ஏற்படும். குறிப்பாக தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். வெற்றிக்குரிய செய்தி வீடு வந்து சேரும். புதன் சூரியனுடன் இணைந்து புத ஆதித்யா யோகம் உருவாக்குவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உயர் அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். அதிஷ்ட திகதி ஜுலை 6,7,16 அதிஷ்ட நிறம் ஆரேஞ்.

## கடகம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். விரையாதிபதி புதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். பிள்ளைகளின் மேற்படிப்பு அல்லது வேலைவாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் நல்ல தகவல் கிடைக்கும். அதிஷ்ட திகதி ஜுலை 3,4,5,8,9 அதிஷ்ட நிறம் கருநீலம்.

## சிம்மம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். லாபாதிபதி புதன் லாப ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் நல்ல நேரம் ஆகும். சூரியனோடு புதன் இணைந்து புத ஆதித்திய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் உத்தியோக உயர்வு ஊதிய உயர்வு கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். அதிஷ்ட திகதி ஜுலை 6,7,10,11 அதிஷ்ட நிறம் பிரவுன்.

## கன்னி

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். உங்கள் ராசிக்கு 10ம் இடத்திற்கு அதிபதியான புதன் 10ம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். உங்கள் ராசிநாதனாகவும் புதன் இருப்பதால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். நல்ல தகவல்கள் உங்களை தேடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிஷ்ட திகதி ஜுலை 1,2,8,9 அதிஷ்ட நிறம் பச்சை.

## துலாம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். உங்கள் ராசிக்கு 9 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். பாக்யாதிபதி புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். பூர்வீக சொத்துக்கள் அல்லது புதிய சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள் இனிமை தரும் விதத்தில் அமையும். அதிஷ்ட திகதி ஜு லை 3,4,5 ,10 அதிஷ்ட நிறம் இளஞ்சிவப்பு.

## விருச்சிகம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். உங்கள் ராசிக்கு அட்டம லாபாதிபதியான புதன் அட்டமத்தில் சூரியனோடு இணைந்து புத ஆதித்யா யோகத்தை உருவாக்குவதால் கலை, கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பொது வாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு என்பதற்கேற்ப தொழிலில் கூடுதல் லாபம் வரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு கிடைக்கும். அதிஷ்ட திகதி ஜுலை 7,8,12,13 அதிஷ்ட நிறம் வைலட்.

## தனுசு

ஆனி 11ஆம் திக தி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது கல்யாணம் போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கடமையில்இருந்த தொய்வு அகலும். பயணங்கள் பலன் தருவதாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். அதிஷ்ட திகதி ஜூலை 3,4,8,9 அதிஷ்ட நிறம் மஞ்சள்.

## மகரம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். 6க்கு அதிபதியான புதன் 6ல் வலுவடையும் இந்த நேரம் மிகுந்த கவனத்தோடு செயல்படுவது நல்லது. எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். உடல் நலத்திலும் மீண்டும் பழைய தொல்லை தலைதூக்கும். எதையும் யோசித்து செய்வது மட்டுமல்லாமல் அருளாளர்கள் மற்றும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளை கேட்டு செயல்பட்டால் தான் வெற்றி பெற முடியும். அதிஷ்ட திகதி ஜூலை 7,8,10,11 அதிஷ்ட நிறம் பச்சை.

## கும்பம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் அற்புதமான நேரமாகும். எனவே தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். பிள்ளைகள் வழியில் உள்ள பிரச்சினைகள் படிப்படியாக மாறும். அவர்களின் மேல் படிப்பு சம்பந்தமாகவோ வெளிநாடு சென்று பணி புரிவது சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால் அது வெற்றி கிடைக்கும். அதிஷ்ட திகதி ஜுலை 9,10,15,16. அதிஷ்ட நிறம் ரோஸ்.

## மீனம்

ஆனி 11ஆம் திகதி (25/06/2022) மிதுன ராசியில் புதன் சஞ்சாரம் செய்துள்ளார். இக்காலம் ஒரு இனிமையான காலமாக அமையும். 4ம் இடத்தில் புதன் பலம் பெறும் பொழுது கல்வியில் இருந்த தடை அகலும். பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. ஆரோக்கியத் தொல்லை அகலும். நண்பர்களின் ஆதரவுடன் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். அதிஷ்ட திகதி ஜுலை 12,13,14 அதிஷ்ட நிறம் நீலம். ஜூலை 03 முதல் ஜூலை 09 வரை

# தமிழ்ப் பகுதிகளில் பறிபோகும் விவசாய காணிகள் தடுத்து நிறுத்துமா வனத் திணைக்களம்?

**'தரிசாகக் கிடக்கும் காணிகளை எல்லாம் விவசாய பூமியாக்குங்கள் என்கிறது அரசு. வடக்கிலோ தமிழர் காணிகளை பற்றிப் பிடித்து காடாக வைத்திருக்க முனைகிறது வன பாதுகாப்பு திணைக்களம். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக அரசு!'**



ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்நாட்டின் இறைமையை காப்பாற்றுகின்ற ஒரு விடயம் ஆகும். அபிவிருத்தி என்று பார்க்கின்ற போது நாட்டில் காணப்படும் அத்தனை துறைசார் விடயங்களையும் சம அளவில் அபிவிருத்தி செய்கின்ற போதே அந்நாடு முழுமையான அபிவிருத்தியை அடைகின்றது.

முற்றத்து மல்லிகை மணம் வீசாதென்று கூறுவது போல சொந்த நாட்டில் தேவையான வளங்கள் குவிந்து கிடக்கும் தறுவாயில் அண்டை நாடுகளிடம் கையேந்துகின்ற நிலையை நாட்டின் தலைவர்கள் உருவாக்கிவிடுகிறார்கள்.

தற்போது இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்தவர்களின் சிந்தனைகளில் மாற்றம் வராததன் காரணத்தாலேயே நாடு தற்போது அதள பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது.

தனியே தமது அரசியல் நலன்கள் கட்சிசார் விடயங்கள் தனிப்பட்ட நலன்கள் என்பனவற்றுக்கும் பேரினவாத மாயைக்கும் முக்கியத்துவம் அளித்து வந்ததால் நாட்டின் வளர்ச்சி தொடர்பில் சிந்திப்பதற்கு அரச தலைவர்களுக்கு காலம் இடம்கொடுக்கவில்லை என்பதே உண்மை.

கையிலிருக்கும் பூனையை தவறவிட்டு பூஸ் பூஸ் என்பது போல நாட்டில் இருக்கும் வளங்களை பயன்படுத்தாது அவற்றை மலடாக்கி ஏனைய நாடுகளின் காலடியில் தஞ்சம் புகுவதை இந் நாட்டு தலைவர்கள் பழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

இங்குள்ள வளங்களை பிற நாடுகளுக்கு விற்பனை செய்வதையும், அவர்கள் இந் நாட்டு வளங்களை சுரண்டி தமது தேவைகளை கச்சிதமாக நிறைவேற்றிக் கொள்வதையும் உற்று நோக்கும் போது எம்மவர்கள் சொந்தக் காசில் சூனியம் வைப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

நாட்டு வளங்களை குரங்கு அப்பத்தை பங்கிட்டுக்கொண்டதுபோல பங்கிடுவதைப் பார்க்கும் போது அதில் கிடைக்கும் வருவாயை ஏப்பமிடுகின்ற தன்மையை நிறையவே பார்த்துவிட்டோம்.

ஏற்கனவே கூறியதைப் போன்று சிந்தனையில் அக்கறையற்ற பேரினவாத சக்திகள், தமிழர் தரப்பு மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத வெறியை, அரச அதிகாரிகளை பயன்படுத்தி தமிழர் பகுதிக்குள் தேவையான அளவிற்கு விதைத்துள்ளார்கள் என்பது நிதர்சனம்.

வன பாதுகாப்புத் திணைக்களத்தை எடுத்துக் கொண்டால் அத் திணைக்களத்தில் கடமை புரியும் பணியாளர்கள் முற்று முழுதாக பெரும்பான்மை இனத்தவராகவே உள்ளனர்.

தமிழர் பகுதிக்குள் தமிழ் இளைஞர் யுவதிகளை கடமைக்கு அமர்த்த தவறியுள்ளமை நய வஞ்சகத் தனமே.

அத்துடன் மெதுமெதுவாக தமிழர் வளங்களை சுரண்டுவதற்காக மிகச் சிறப்பாக கட்டமைக்கப்பட்ட ஒரு தனிப்படையாகவே வனப் பாதுகாப்பு திணைக்களத்தை தமிழ்ச் சமூகம் பார்க்கிறது.

இந்த இடத்தில்தான் தமிழர் தரப்பு பலவீனப்பட்டுள்ளதை காண முடிகின்றது. அவர்களின் அம்புகளுக்கு இரையாகி அவர்களின் எண்ணங்களுக்கு வடிவம்கொடுக்கின்ற ஊடகமாக தமிழர்கள் மாறி, யானை தன் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்வதைப் போல தமிழர்களும் தம்மை தாமே அழித்துக்கொள்கின்றார்கள்.

மிக தந்திரமாக திட்டமிட்டு தமிழர் வளங்களை, அவர்களை வைத்தே சூறையாடும் திட்டத்தில் அரச தரப்பு பாரிய வெற்றியைக் கண்டு வருகிறது.

தமிழ்ப் பகுதி காடுகளில் காணப்படும் மர வளத்தை சூறையாடுவதை நாம் காண்கிறோம். இதற்கு சோரம் போகக் கூடிய தமிழர்களையே பயன்படுத்துகின்றனர்.

திணைக்களத்தினரின் ஒத்தாசையுடன் காடுகளில் உள்ள மரங்கள் தேவைக்கேற்றாற் போல் வெட்டி விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது.

வேலியே பயிரை மேய்ந்தது போல வன வளத் திணைக்களத்தினரே செயற்படுவது வருந்தத்தக்க விடயமாகும்.



காடுகள் அழிக்கப்படும் போது இப் பிரதேசத்துக்கான மழை வீழ்ச்சி பாதிக்கப்படுவதோடு சூழல் வெப்பமடைகிறது. சூழல் சமநிலை குழப்பமடைகிறது. இதனூடாக தமிழர்களின் விவசாய செயற்பாடுகளில் இடர்பாடு ஏற்படுகிறது. அவர்களின் தன்னிறைவு பொருளாதாரம் ஆட்டம் காண முடியும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதிக மழை இல்லாது போவதும், அதிக வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படுவதும், பூச்சி மற்றும் நோய்களின் தாக்கங்கள் அதிகரிப்பதும் இதன் சங்கிலித் தொடர் விளைவுகளே.

அது மட்டுமல்லாது அதிக வெப்பம் காரணமாக மண் வளத்தில் சிதைவு துரிதப்பட்டு உற்பத்தி திறனின் அளவும் குறைய வாய்ப்புள்ளது.

இத்தோடு கரியமில வாயு அதிகரிப்பதால் உற்பத்தித் திறன் அதிகரித்து பயிர்கள் அதிக அளவு சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளும். இதனால் மண்வளம் குறையலாம்.

இது மட்டுமன்றி பூமி வெப்பமடைவதால் கொசுக்களின் வாழ்நாள் மற்றும் இனவிருத்தியின் அளவு அதிகரிப்பதன் காரணமாக, கொசு தொடர்பான நோய்கள் பரவும் வாய்ப்பு அதிகரிப்பதால் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதோடு இவை பொருளாதாரத்தில் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

காட்டை அழிப்பதால் பக்டீரியா மற்றும் பூஞ்சைகள் வளர்வதற்கு உகந்த நிலை ஏற்படுவதோடு, விளைபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களும் சேதமடைகின்றன. இதனால் உற்பத்தியின் அளவு குறைவடைவதோடு பொருளாதார வீழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு காடுகள் அழிக்கப்படும் சந்தர்ப்பங்களில், மண்ணரிப்பும் இயல்பாகவே இடம்பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவை இவ்வாறு இருக்க, வனங்களை பாதுகாக்க வேண்டியவர்கள் பெறுமதியான மரங்களை தறித்து விற்பனை செய்யும் மாபியாக்களுடன் கை கோர்த்து நிற்பது பாம்பிற்கு பால் வார்ப்பதைப் போலுள்ளது.

இவ்வாறான விடயங்களை தமிழர் பகுதிகளில் கட்டவிழ்த்து விடுவதால் தமிழர்களை கையேந்தும் நிலைக்கு தள்ளிவிடலாம் என்ற எதிர்பார்ப்பு இவர்களிடம் காணமுடிகிறது.

அத்தோடு தமிழர்கள் காலாதி காலமாக செய்கைபண்ணி வந்த விவசாய காணிக்கள் நாட்டில் ஏற்பட்ட பல அனர்த்தங்களால், நீண்ட காலமாக செய்கை பண்ணப் படாமல் இன்று காடுகளாக மாறியுள்ளன.

இவற்றை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் வனப் பாதுகாப்புத் திணைக்களம், அப் பகுதிகளை தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளாகக் கருதி எல்லைக் கற்களை நாட்டிக் கொள்வது தற்போதுள்ள பாரிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

அத்தோடு மீள் காடு வளர்ப்பு என்ற திட்டத்தை இப் பகுதிகளில் குறித்த திணைக்களம் முன்னெடுக்க தவறியுள்ளமையும் பெரும் வருத்தமளிக்கின்ற சம்பவமாக மாறியுள்ளது.

நீண்டகால அனர்த்தங்களால் உருக்குலைந்து போன தமிழர் பொருளாதாரம் மெல்ல மெல்ல தற்போது வளர்ச்சி கண்டுவரும் நிலையில், குறித்த பகுதிகளை மீள பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் அப் பகுதிகளை மீள் விவசாயத்திற்காக பயன்படுத்த முனைகின்ற போதே, வன பாதுகாப்புத் திணைக்களம், தமது பொறிக்குள் தமிழர்களை சிக்கவைத்து தமது நாடகத்தை அரங்கேற்றி வருகிறது.

பல ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களை தமிழர்களின் ஜீவனோபாய செயற்பாட்டிற்கு வழங்காது கோழி தன் குஞ்சைப் பாதுகாப்பது போல திணைக்களத்தினர் இறுக பற்றி வைத்திருப்பது தமிழர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

உதாரணமாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கனகராயன்குளம் தெற்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட குறிசுட்டகுளம் கிராமத்தை எடுத்துக் கொள்ளலாம். இங்கே பல வருடங்களாக மக்கள் விவசாயம் செய்து வந்துள்ளார்கள். நாட்டு சூழல் காரணமாக அதனையும் கைவிடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது உண்மையே.

தற்போது விவசாய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படவே, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினால் அப் பகுதியில் ஐந்து வருடங்களுக்கு முன்னதாக 63 விவசாயிகளுக்கு அக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவை இப்படி இருக்கும் போது, அக் காணிகளுக்கான முழுமையான ஆவணங்களும் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு அதிகார பூர்வமாக பிரதேச செயலகத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இருந்தும், அப் பகுதியை துப்பரவு செய்து தமது விவசாயத்தை மேற்கொள்வதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர்.

அப் பகுதியை வன பாதுகாப்பு திணைக்களத்தினர் தமக்கு உரித்தான பகுதியாக அறிவித்துள்ளதே தற்போதுள்ள பிரச்சினையாக உள்ளது.

இது தொடர்பில் அப் பகுதிக்கான பிரதேச செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல தரப்பட்டவர்களிடமும் அம் மக்கள் முறையிட்டும் இதற்கான தீர்வு எட்டா கனியாகவே காணப்படுகிறது.

தற்போதுள்ள நாட்டு நிலையை கருத்திற்கொண்டால் அரசு தரிசு காணிகளை விவசாயத்துக்கு பயன்படுத்துங்கள் என்று உற்சாகமூட்டுகிறது. வனவள திணைக்களமோ சட்டம் பேசிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு தமிழர் பிரதேசமெங்கும் தமது காய்களை மிகச் சிறப்பாக நகர்த்தி இனவாத சக்திகள் வெற்றி கண்டு வருகிறது.

நாடு குட்டிச் சுவராய்ப் போனதே இனவாதத்தால் என்பதே உண்மையானாலும் இச் சக்திகள் அதை விடுவதாக இல்லை.

இவ்வாறு வடக்கைப் பொறுத்தவரையில் பல இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் மிக துல்லியமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழர் வளங்களை முடக்கும் போது அவர்கள் சுயமாக தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றுகிறது. இதன் மூலம் தமிழர் தரப்பின் மீண்டெழும் முயற்சிகளை தடுப்பதாகவும் தொடர்ச்சியான பொருளாதார முன்னேற்றத்தை அமிழ்ப்பதாகவுமே அரச இயந்திரத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றது.

இதனால் வடக்கில் நெல் உற்பத்தி மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை போன்றவற்றின் உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பது பெரும் சாபக் கேடாக மாறியுள்ளது.

இவ்வாறான நிலையில் சுதந்திரமாக தாம் வாழ்ந்த பூமியில் தமது விவசாய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத கையறு நிலைக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளதை காண முடிகின்றது.

இதே போன்று ஆற்றுப்படுகைகளில் மணல் மாபியாக்களை உருவாக்கி மணல் கொள்ளைகளும் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது.

இதற்கு காவல்துறையினரும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினரோடு சேர்ந்து கை கோர்த்துள்ளதாக மக்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அவற்றை சம்பந்தப்பட்டவர்களுக்கு பொது மக்கள் தெரியப்படுத்தும் போது,குறித்த மாபியாக்களிடம் தகவலாளிகள் தொடர்பான விவரங்களை கசியவிட்டு இரு தரப்பையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்ற நிகழ்வும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றது. இதனால் தமிழர்களிடையே குரோதத்தையும் ஒற்றுமையின்மையும் வளர்ப்பதோடு, வன்முறைகளையும் தூண்டி, தொடர்ந்தும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக இனவாத இயந்திரம் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். வனத்தை பாதுகாக்கிறோம் என்ற பெயரில் அதை அழிப்பதோடு மட்டுமல்லாமல், விவசாய செயற்பாட்டை சீர்குலைப்பதன் மூலம் தமிழர் தரப்பில் பொருளாதார சிதைப்பை வன பாதுகாப்புத் திணைக்களம் முன்னெடுத்து வருவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பல தசாப்தங்களாக தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர், தற்போது அவர்களின் வளங்களை சுரண்டி அவர்களை இயங்கு நிலையிருந்து பின் தள்ளிவைக்கும் முயற்சியாகவே இவற்றை பார்க்கிறோம்.



வவுனியூர் சஜீவன் ...✍

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| | 06 | 07 | 08 | 09 | |
| 10 | | 11 | | 12 | 13 |
| 14 | 15 | 16 | | 17 | 18 |
| | 19 | | 20 | | |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) மாடுகளில் இது ஆண் இனம். இதன் ஒலிமரபுச் சொல் 'முக்காரம் போடும்' என்பதாகும்.
(04) நெருப்பு இல்லாமல் இது வருவதில்லை.
(06) யானையின் பெறுமதியான உறுப்பு இது. ஆனால் எல்லா யானைகளிலும் இது இருப்பதில்லை. இதனைப் பெறுவதற்காகவே உலகெங்கும் யானைகள் கொல்லப்படுகின்றன.
(12) அறிவுக்கண் திறக்கும் ஆசான் இவர். (தலைகீழான சொல்)
(14) பயிர்கள் செழிப்பாக வளர்வதற்குத் தேவை. இல்லையேல் பயிர்கள் பயன் தராது. (தலைகீழான சொல்)
(17) ஓவியம், சிற்பம், நடனம், இசை என்றெல்லாம் பல்வேறு திறமைகளை உள்ளடக்கிய துறையை இவ்வாறு கூறுவர்.
(21) அக்காலத்தில் பலம் வாய்ந்த அரசர்கள் குறுநில மன்னர்களான சிற்றரசர்களை தமது பிடிக்குள் வைத்திருந்தார்கள். சிற்றரசர்கள் தமது நாட்டின் வருமானத்தின் ஒரு பகுதியை பேரரசர்களுக்கு கப்பமாகச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்துவதை இப் பெயரில்தான் குறிப்பிடுவர். (தலைகீழான சொல்)
(23) கடிதம் என்பதை குறிக்கும் மற்றொரு சொல்.

**மேலிருந்து கீழ்**

(02) மரம் என்பதன் ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)
(03) வேட்டையாடி இரை பிடிக்கும் பறவை இது. வானத்தின் உயரத்தில் பறந்து வட்டமிடும் போதே, தரையில் உள்ள தனது இரையைக் கண்டு கொள்ளும். திடீரென்று தாழப் பறந்து வந்து இரையைப் பிடித்துச் சென்று விடும். (தலைகீழான சொல்)
(04) தண்டுப் பகுதியில் இனிப்புச் சாறு கொண்டுள்ள தாவரம். (தலைகீழான சொல்)
(10) இளைஞன், எருது ஆகிய அர்த்தங்கள் தருகின்ற சொல்.
(13) வாழை, திராட்சை போன்றவற்றின் பழத்தொகுதியைக் குறிக்கும் சொல்.
(15) தெருக்கள் ஒன்றாகச் சந்திக்கும் இடம் இது.
(20) நாடு செழிக்க வேண்டுமானால் நீர்வளம் அவசியம். நீர்வளம் வேண்டுமானால் அவசியமானது இது. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 17

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) திமிங்கிலம் (11) தங்கம் (18)பாதணி
(21) ஆசை (23) கரு (25) தோணி

**மேலிருந்து கீழ்**

(02) உமி (04) கிழங்கு (06) ஆரம்பம்
(10) கணிதம் (19) தரு (21) தோசை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 16

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எம். பாத்திமா சாறா,**
க.பொ.த. (உ/த)
ஆயிஷா வித்தியாலயம், 174, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

**இரண்டாம் பரிசு**
**எம்.என். ஆமினா பர்ஹத்,**
தரம் 08 A,
மே/மா மினு/அல் ஹுஸைன்
131/5, கண்டி வீதி, வேவல்தெனிய.

**மூன்றாம் பரிசு**
**எம்.ஆர். ஸாரா,**
தரம் 09, மாறை/அல் மினா ம.வி.,
இல. 41, படபத்தை, மீயல்லை, ஹக்மனை.

### பாராட்டு பெறுவோர்

**1. நி. இலக்கியா நாட்சி,**
தரம் 06, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.
**2. கே. மதுசாகர்,**
தரம் 05, மட்/பட்/இராமகிருஷ்ண வித்தியாலயம்,
பாலமுனை, மண்டூர்.
**3. ச. வகிஷ்ணா,**
தரம் 05, மட்/வின்சன்ட் மகளிர் பாடசாலை,
435/36, 2ம் குறுக்கு, மட்டக்களப்பு.
**4. பிரணுகா பிரசாந்த்,**
தரம் 03 S,
மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை,
43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
**5. எஸ்.ஐ. பதுரியா ஜெஹான்,**
தரம் 03A, கொ/கய்ரியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்,
கொழும்பு 09.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 18
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk




குறளமுதம் :

**வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து.**

***தெளிவுரை :***
*வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.*

## எனது நாடு இலங்கை




எனது நாடு இலங்கையாகும். இயற்கையாகவே அழகு நிறைந்த எனது நாடான இலங்கையை இரத்தின துவீபம்.ஆசியாவின் வைரம். இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படுவதுண்டு. நான்கு புறமும் நீரால் சூழப்பட்ட ஓர் அழகிய தீவாகும். இங்கு விண்ணைத் தொடும் மலைகளும். எப்போதும் வற்றாத ஆறுகளும். பரபரப்புடன் பாயும் நீர்வீழ்ச்சிகளும். பச்சைக்கம்பளம் போர்த்திய தேயிலைத் தோட்டங்களும் எமது நாட்டை இன்னும் அழகாக்குகின்றன. பொன்நிறமான கடற்கரைகளும். பனிபடர்ந்த காடுகளும். பசுமையான புல்வெளிகளும். தலையாட்டும் வயல்வெளிகளும். புனிதமான நகரங்களும். ஓங்கி உயர்ந்த மரங்களும் இலங்கையின் அழகுக்கு இன்னும் அழகு சேர்க்கின்றன. உல்லாசபயணிகளை அதிகம் கவரும் நாடுகளில் எமது நாடும் ஒன்று என்பதில் பெருமைப்படுகின்றேன். பல இனத்தவர் ஒற்றுமையுடன் வாழும் தேசமாகும். பல கலாசாரங்களை தன்னகத்தே கொண்ட நாடாகும். உண்மையில் எனது நாடான இலங்கை ஓர் சொர்க்கபுரித் தீவாகும்.

**இ. அபிலாஷ்,**
திருகோணமலை.

**தெரிந்துகொள்வோம்!**

## பப்பாளி – ஏழைகளின் அப்பிள்



பழங்களில் சிறந்தது ஆப்பிள் என்பது பொதுவான கருத்து. தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் மருத்துவரை நாட வேண்டாம் என்பது பழமொழி. ஆனால் அதைவிட சிறந்த பழம் பப்பாளி. அப்பிள் கிலோ 1500 ரூபாய்க்கு மேலே விற்கப் படுகிறது. அதைவிட சிறந்த ஆரோக்கியமான வாழ்விற்கு உகந்த பப்பாளி கிலோ 240 ரூபாவாகும். பப்பாளி ஏழைகளின் ஆப்பிள் என்றால் மிகையாகாது.

பழங்களில் மிகமிகக் குறைவான கலோரி பப்பாளியில் தான். 100 கிராம் பப்பாளியில் 32 கலோரிகளே உள்ளன. அப்பிளைக் காட்டிலும் இனிப்பான பழம் பப்பாளி. பப்பாளியை தினமும் நம் உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் நோய் நொடியின்றி நல்ல ஆரோக்கியமாக வாழலாம்.

மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் பப்பாளி மரம் ஆரோக்கிய மரம் என்றும் பழத்தை ஆரோக்கிய பழம் என்றும் சொல்கிறார்கள். காரணம் பப்பாளியில் அனைத்து விட்டமின் சத்துகளும் அடங்கியுள்ளன. அதில் போலிக் அமிலம், பொட்டாசியம், காப்பர், பாஸ்பரஸ் இரும்பு மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன. விட்டமின் சி அதிகளவில் இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது.

சத்தான பழங்களில் பப்பாளி முதலிடம் வகிக்கிறது. நல்ல ஜீரண சக்தியும், ஜீரண கோளாறுகளின் எதிர்ப்பு தன்மையும் இதில் இருப்பதற்கு காரணம், இதிலுள்ள 'பொப்பின்' எனப்படும் புரதச் சத்து, குடல் புழுக்கள் உண்டாவதை பப்பாளி தடுக்கிறது.

மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, வாய்வு, நெஞ்சு எரிச்சல், அல்சர், சர்க்கரை வியாதி மற்றும் கண் பார்வை கோளாறுகளுக்கு பப்பாளி ஒரு சிறந்த மருந்தாகும்.

**என். வினோமதிவதனி,**
லுனுகலை.

## வெற்றிக் கனி பறிப்போம்....!

*பசுமை நிறைந்த நாடு வேண்டும்*
*பசியே இல்லாப் பூமியும் வேண்டும்*
*சின்னஞ் சிறுவர் எங்களின் வாழ்க்கை*
*சிறப்புடன் மலர்ந்திட வழிவகை வேண்டும்.!*

*கல்வியும் கலைகளும் வளமுற வேண்டும்*
*கற்றவர் மாண்பு உயர்ந்திட வேண்டும்.*
*பெற்றவர் தம்மை மதித்திட வேண்டும்*
*பெரியவர்க்குரிய மரியாதை வேண்டும்.*

*நித்திய வாழ்வில் நேர்மையுடன் வேண்டும்*
*நிறைந்த மனத்துடன் வாழ்ந்திட வேண்டும்*
*நன்மைகள் செய்வதில் நாட்டமும் வேண்டும்*
*நலிந்தோர்க்குதவும் மனநிலை வேண்டும்.*
*மற்றவர் தயவை மறுத்திட வேண்டும்*
*மனதில் துணிச்சலை வளர்த்திட வேண்டும்*
*வெற்றியை நாடிச் சென்றிட வேண்டும்*
*விடாத முயற்சிகள் அதற்கென வேண்டும்.*

*தேடித் தேடிப் படித்திட வேண்டும்*
*தெரியா விடயங்கள் அறிந்திட வேண்டும்*
*வீடும் நாடும் சிறந்திட வேண்டும்*
*விரும்பும் சுதந்திரம் கைவர வேண்டும்.!*

**ஷெல்லிதாசன்...**
திருகோணமலை.







பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தினால் பதுளையிலுள்ள பிந்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு பதுளை பொது நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 25 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் இருவருக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டது. இதில் பதுளை வலயக்கல்வி பணிப்பாளர் கார்த்தீபன், பதுளை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சுரேஸ்கண்ணண், ஆசிரிய ஆலோசகர் இந்திராணி யோகேந்திரன், பிரன்லி சிப் அமைப்பின் தலைவரும் முகாமைத்துவ சேவை அதிகாரியுமான எஸ். யசோதராஜன், சேவைக்கான இணைப்பாளர் பன்னீர்ச்செல்வம், பிரன்லி சிப் அமைப்பின் செயலாளர் எம். எப் ஆரிபா, நியூ சன் ஸ்டார் யூத் கழகத்தின் தலைவரும் இளம் விஞ்ஞானியுமான சோ. வினோஜ்குமார் உட்பட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## இவ்வார மழலை



காலித்

மிஷாத் / மும்தாஜ்,
கெலிஓயா.

## சிறுவர் சித்திரங்கள்



**அக்ஷயா,**
தரம் 09, கொ/இராமநாதன் இந்துக்கல்லூரி,
கொழும்பு 04.



**யோ. கவீஷா,**
தரம் 03,
றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்,
வத்தளை.



**ஜெ. நித்தீஸ்,**
தரம் 06, சன்போர்ட் சர்வதேச பாடசாலை,
வத்தளை.



**சி. மௌஜேஷ்,**
அமிர்தகளி,
மட்டக்களப்பு.

# விளையாட்டு

# ரக்பி விளையாட்டு வளர்ச்சிக்கு பாகிஸ்தானின் ஒத்துழைப்பு




இலங்கை ரக்பி வரலாற்றில் முதற்தடவையாக பாகிஸ்தான் தூதரக காரியாலயம் இந்நாட்டில் விளையாட்டொன்றின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ளது. இந்நாட்டிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய காரியாலயம் மற்றும் இலங்கை ரக்பி சம்மேளனத்துக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் பிரதேச மட்டத்தில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்கு நிதி உதவி வழங்க முன் வந்துள்ளது.

இது தொடர்பாக ஊடக சந்திப்பொன்று அண்மையில் கொழும்பு ரமடா ஹோட்டலில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பர்க்கியின் தலைமையில் நடைபெற்றது. இச்சந்திப்பில் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட்டும் இணைந்து கொண்டார். இதில் கலந்துகொண்ட இலங்கை ரக்பி சம்மேளன தற்போதைய தலைவர் ரிஸ்லி இல்யாஸ் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாகிஸ்தான் அரசு இந்நாட்டில் பிரதேச மட்டத்தில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்கு பெற்றுக் கொடுத்துள்ள நிதி உதவி தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

**புதிய பாதையில் ரக்பி**

நாம் இன்று மேற்கொண்டது சரித்திர பூர்வ பூர்வமான ஒரு நிகழ்வாகும். 148 வருட சரித்திரத்தில் இலங்கை இது போன்ற ஒப்பந்தத்தை செய்து கொண்டதில்லை. நாம் இவ் ஒப்பந்தத்தை பிரதேச ரீதியாக ரக்பியை வளர்ச்சிப் பாதையில் இட்டு செல்வதற்காக கைச்சாத்திட்டுள்ளோம். அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காரியாலயம் எமக்கு நிதி உதவியை பெற்றுக் கொடுக்கும் ஒப்பந்தத்திற்கு நாம் தற்போது கையெழுத்திட்டுள்ளோம். பாகிஸ்தான் விளையாட்டு வளர்ச்சிக்காக உதவி செய்வது இது முதல் தடவை அல்ல. இலங்கையில் யுத்தம் இடம் பெற்ற வேலையில் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் உலகில் கிரிக்கெட் விளையாடும் பல நாடுகள் இலங்கைக்கு வருகை தர பின்நின்ற வேளையில் பாகிஸ்தான் அணியினர் இங்கு வருகை தந்து போட்டிகளில் விளையாடினார்கள். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உபகரணங்கள் மற்றும் தேவையான உதவிகளையும் வழங்கினார்கள். இவ்வேளையில் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச்செலாவணி பிரச்சினை காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது. இவ்வேளையில் விளையாட்டின் அபிவிருத்திக்காக பாகிஸ்தான் முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

**ரக்பியை பிரதேச மட்டத்தில் உயர்த்துவதற்கு**

நாட்டில் விளையாட்டை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்கள் என்று இன்று எம் கண்முன்னால் காணக்கூடியதாக உள்ளது. எரிவாயு, மருந்து மற்றும் ஏனைய பொருளாதார சிரமத்துக்கு மத்தியிலும் சுற்றுலா அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் நடந்து முடிந்த இருபத்துக்கு 20 போட்டியின் போது 35,000க்கும் அதிகமான பார்வையாளர்கள் அணியை உற்சாகப்படுத்த மைதானத்தில் கூடினார்கள். அவ்வாறான சூழலில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் 12 வயது தொடக்கம் 19 வயது வரையிலான ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்காக பெற்றுக் கொடுத்த ஒத்துழைப்பை மிகவும் பாராட்ட வேண்டும்.

நிதி உதவிக்கும் அப்பால் சென்று உதவி வழங்கும் திட்டங்களை செயல்படுத்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காரியாலயம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. கல்விகற்கும் மாணவ மாணவிகளுக்காக பிரதேச மட்டத்தில் கணனிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் கல்வி உபகரணங்கள் மற்றும் அத்தியவசியப் பொருட்களை வழங்கவும் இதற்கு இணைந்ததாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அத்துடன் உலகில் பாரிய அளவில் தயாரிக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த திட்டங்களின் இரண்டாவது கட்டமாக ரக்பி பந்துகளை வழங்குவதற்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அது மாத்திரமல்ல நான் ஏனைய தூதுவராலய காரியாலயங்கள் போன்று உயர் ஸ்தானிகராலயம் காரியாலயங்களுக்கும் எழுத்து மூலம் இந்நாட்டின் விளையாட்டுத் துறையை மேம்படுத்த தேவையான நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதே வேளை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்துக்கும் இந்த யோசனையை முன்வைத்து தற்போது 3,4 வாரங்களகின்றன. அவர்களே முதலில் இந்த வழங்களை மேற்கொண்டுள்ளதை மிகவும் மதிக்கின்றோம்.

இந்த நிதி மூலம் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ள வீரர்களுக்கு மற்றும் விளையாட்டு சங்கங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளதோடு எதிர்வரும் நான்கு மாத காலத்துக்குள் மாகாண கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டு அணிகளை கொண்ட நான்கு அபிவிருத்தி போட்டிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராஜதந்திர மட்டத்தில் மேற்கொள்ளப்படும் இந்த ஒப்பந்தம் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சு அறிந்துள்ளதா?

இல்லை நாம் அமைச்சுக்கு அறிவிக்க தேவையில்லை. கடந்த இரண்டு வருட காலத்துக்குள் எவ்வித நிதி உதவியும் அமைச்சிடமிருந்து அமைச்சு மட்டத்தில் எமக்கு கிடைக்கவில்லை. ஆனால் நாங்கள் வருடம் தோறும் ஏற்பாடு செய்யும் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்தோம். அதற்காக எங்களுக்கு தனியார் நிதி நிறுவனம் அனுசரனையை வழங்கியது. நாம் கடந்த கொவிட் 19 தொற்று வேலையில் அமைச்சு வழங்கிய வழிகாட்டலுக்கு அமைய செயற்பட்டாலும் நாங்கள் அமைச்சின் நெறிமுறைக்கு உட்பட்டு இல்லை.உலக ரக்பி சம்மேளனம் மற்றும் இலங்கை ஒலிம்பிக் சங்கத்துக்கு கீழேயே நாம் செயல்படுகின்றோம்.

**ரக்பி சம்மேளன தடையுடன் இணைந்த தற்போதைய பயணம்**

நான் இச் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான விடயங்களை முன்வைக்க எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீதிமன்றம் எமக்கு பெற்றுக் கொடுத்துள்ள உத்தரவின் பேரில் தான் நாம் தற்போது நடவடிக்கையில் ஈடுபடுகின்றோம்.எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி பொதுச் சபை கூட்டத்தை கூட்டி புதிய அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நீதிபதிகள் இருவர் மற்றும் நிர்வாக அதிகாரியுடன் கூடிய மூன்று நபர்கள் இந்த சுயாதீன குழுவை நியமித்து தலைவர் ஒருவரை தேர்தலுக்காக தெரிவு செய்துள்ளோம். வேட்பு மனு தாக்கல் செய்து போட்டியிட முடியும். அவ்வாறில்லாமல் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்வேளையில்அத்திட்டத்தை பாதிப்படைய செய்து விளையாட்டிற்கு தடை ஏற்படுத்தக் கூடாது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டம் பற்றி அவர் அறிவாரா?

அவரை சந்திக்க நேரம் கேட்டு இன்னும் எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் எமது திட்டங்கள் குறித்து அவர் புரிந்துணர்வுடன் இருப்பதாக எண்ணுகிறேன். அவர் எம்மைப்பற்றி நம்பிக்கை வைத்துள்ளார் என நம்புகிறேன். இவ்வாறான அனுசரணையாளர்களின் அனுசரணையை பெற்றுக் கொண்டு ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்கு ஆசிர்வாதமும் எமக்கு கிட்டும் என எண்ணுகிறேன். நிறுத்தப்பட்டிருந்த வருடாந்த போட்டித் தொடர் தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



## 28ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதிவரை

# பொதுநலவாய விளையாட்டு போட்டி; 114 இலங்கை வீரர்கள் பங்கேற்பு

## இலங்கை அணி 25ஆம் திகதி பயணம்

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பில் 15 வகையான போட்டி நிகழ்ச்சிகளுக்காக 114 வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாக தேசிய ஒலிம்பிக் சங்கம் கடந்த (30) உத்தியோகபூர்வமாக அறிவித்தது.2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழா இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதிவரை நடைபெற உள்ளது.




பொதுநலவாய விளையாட்டு விழா ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு மாதங்களுக்கும் குறைவான நாட்கள் எஞ்சியுள்ள நிலையில், குறித்த விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள இலங்கை அணி விபரம் மற்றும் அதற்கான ஏற்பாடுகள் குறித்து ஊடகங்களை தெளிவுபடுத்தும் விசேட சந்திப்பு கடந்த (30) கொழும்பில் உள்ள ஒலிம்பிக் இல்லத்தில் நடைபெற்றது.

இலங்கை பொதுநலவாய விளையாட்டு சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான இலங்கை அணியின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ, தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ உரையாற்றுகையில், இந்த ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 114 வீர வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாகவும் அதில் 54 வீரர்கள் மற்றும் 60 வீராங்கனைகள் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

ஒவ்வொரு விளையாட்டு சங்கத்தினாலும் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சியாளர்கள், முகாமையாளர் என 35 பேர் அடங்கிய அதிகாரிகள் குழு மற்றும் 16 உதவியாளர்களும் என மொத்தம் 165 பேர் கொண்ட குழு இந்த ஆண்டு பொதுநலலாய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ளார்கள் என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

கொரோனா வைரஸ் உள்ளிட்ட முக்கிய விடயங்களை கருத்தில் கொண்டு இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்குபற்றுகின்ற அனைத்து விளையாட்டு வீரர்களும் ஒலிம்பிக் போன்று விளையாட்டுக் கிராமம் ஒன்றில் தங்கவைக்கப்பட மாட்டார்கள் என தெரிவித்த அவர், அவர்களுக்காக ஐந்து வெவ்வேறு தங்குமிட வசதிகளை போட்டி ஏற்பாட்டுக் குழு செய்துள்ளதாகவும், அவற்றுள் நான்கு இடங்களில் இலங்கை வீரர்கள் தங்கவைப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

குறித்த நான்கு இடங்களுக்கும் தனித்தனியாக பொறுப்பான அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள முதலாவது இலங்கை அணி இம்மாதம் 25ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டுச் செலவுள்ளது. அதற்கு முன்னதாக மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகள் குழு இம்மாதம் 21ஆம் திகதி பேர்மிங்ஹாமை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவை இலக்காகக் கொண்டு வெளிநாடுகளில் பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்ற ஒருசில வீரர்கள் நேரடியாக அந்தந்த நாடுகளில் இருந்து இங்கிலாந்தை வந்தடைவார்கள் என மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரான யுபுன் அபேகோன் மற்றும் அவரது பயிற்சியாளர் இத்தாலியிலிருந்தும், ஜிம்னாஸ்டிக் வீராங்கனைகளான அனாமரி ஒண்டாஜ்ஜி, மில்கா கெஹானி ஜப்பானிலிருந்தும், ஜூடோ வீரர் சாமர தர்மரத்ன ஸ்லோவோக்கியாவிலிருந்தும், டைவிங் வீரர் துலாஞ்சன் பெர்னாண்டோ அவுஸ்திரேலியாவிலிருந்தும், இலங்கை மல்யுத்த அணியைச் சேர்ந்த 3 வீரர்கள் ஹங்கேரியிலிருந்தும் இவ்வாறு இங்கிலாந்தை வந்தடையவுள்ளனர்.

இலங்கை மெய்வல்லுநர் அணியில் இடம்பெற்றிருந்த அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்ற உயரம் பாய்தல் வீரரான உஷான் திவங்க பெரேரா விசா பிரச்சினை காரணமாக கடைசி நேரத்தில் பொதுநலவாய விளையாட்டு விழாவில் இருந்து விலக தீர்மானித்ததையடுத்து அவருக்குப் பதிலாக பிறிதொரு வீரருக்கு வாய்ப்பு வழங்க தேசிய ஒலிம்பிக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள இலங்கை வீரர்களுக்கு 3 பிரிவுகளின் விமான டிக்கெட் வழங்கப்படவுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சு 20 பேருக்கும், விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் 20 பேருக்கும் பொதுநலவாய விளையாட்டுத்துறை சங்கம் 99 பேருக்கும் விமான டிக்கெட்டுகளை வழங்ககுகின்றன.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்கும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் அனைத்து செலவுகளையும் இலங்கை கிரிக்கெட் ஏற்கவுள்ளது.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் முதல் தடவையாக இலங்கை அணியில் வீரர்களின் எண்ணிக்கையை விட வீராங்கனைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் தலைவர் யார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும், மிக விரைவில் தலைவர் மற்றும் முழு வீரர்களின் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்கல், மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக்ஸ், மெய்வல்லுநர் ஆகிய போட்டிகளில் இலங்கைக்கு பதக்கம் கிடைக்கும் என அனுமானிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# டயமண்ட் லீக் பதக்கத்தை தவறவிட்ட யுபுன் அபேகோன்



சுவீடனின் ஸ்டோக்ஹோல்மில் கடந்த (30) நடைபெற்ற டயமண்ட் லீக் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் 4ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

போட்டியை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 10.21 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பை அவர் தவறவிட்டார்.

உலக மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான டயமண்ட் லீக் மெய்வல்லுநர் தொடரின் 8ஆவது அத்தியாயம் சுவீடனின் ஸ்டோக்ஹோல்மில் உள்ள ஒலிம்பிக் அரங்கில் நடைபெற்றது.

உலகின் முன்னணி மெய்வல்லுனர் பலர் பங்குகொண்ட இப்போட்டியில் இத்தாலியில் அண்மைக்காலமாக பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றவரும், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை மற்றும் தெற்காசிய சாதனைகளை முறியடித்தவருமான யுபுன் அபேகோன் இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக டயமண்ட் லீக் மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொண்டார்.

தென்னாபிரிக்காவின் அகானி சிம்பினே, பிரித்தானியாவின் ரீஸ் ப்ரெஸ்கோட் உள்ளிட்ட உலகின் முன்னணி வீரர்களுடன் போட்டியிட்ட யுபுன், 10.21 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து 4ஆவது இடத்தைப் பிடித்தார்.

போட்டியை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 3ஆவது இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பை அவர் தவறவிட்டார்.

காற்றின் வேகம் 0.5 எதிர்த்திசையில் இருந்ததால் அவரது இந்த நேரப்பெறுமதி பெரும் பாராட்டைப் பெற்றது.

நோர்வேயின் ஒஸ்லோவில் கடந்த மாதம் நடைபெற்ற டயமண்ட் லீக் தொடரில் பங்குகொண்ட யுபுன், 5ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இந்த மாதம் அமெரிக்காவின் ஒரிகனில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடருக்கும் தகுதி பெற்றுக்கொண்டார்.

இதன்மூலம் உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 100 மீற்றருக்கு தகுதி பெற்ற முதல் தெற்காசிய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

குறித்த போட்டியில் முதலிடத்தை தென்னாபிரிக்காவின் அகானி சிம்பினே (10.02 செக்.) பெற்றுக்கொள்ள, பிரித்தானியாவின் ரீஸ் ப்ரெஸ்கோட் (10.15 செக்.) இரண்டாவது இடத்தையும், பிரான்ஸின் விகோட் ஜிம்மி (10.19 செக்) மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜுலை 03 ஞாயிற்றுக்கிழமை
Gagana

# பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## கிஸா பிரமிட்டின் 3871 ஆண்டு சாதனை



உலகின் உயரமான கட்டடம் என்ற சாதனை இன்று நாளுக்கு நாள் மாறி வருகிறது. அதன் உயரம் 2722 அடி. இப்போது டுபாயில் இருக்கும் புர்ஜ் கலீபா கோபுரம் தான் உலகின் மிக உயரமானது. ஆனால் எத்தனை காலத்துக்கு என்று சொல்ல முடியாது. அந்த வகையில் எகிப்தில் இருக்கும் கிஸா பிரமிட்டின் சாதனை பல்லாயிரம் ஆண்டுகளாக முறியடிக்க முடியாததாக இருந்தது. கி.மு 2570இல் கட்டப்பட்ட இந்தப் பிரமிட் 481 அடி உயரம். இந்த பிரமிட் 3871 ஆண்டுகள் உலகின் மிக உயரமான கட்டடம் என்ற சாதனையை தக்கவைத்திருக்கிறது.

கடைசியில் 1221இல் இங்கிலாந்தில் கட்டப்பட்ட லிங்கன் தேவாலயம் அந்த சாதனையை முறியடித்தது. இந்த தேவாலயம் 482 அடி உயரம்.

## கடைசி சிவப்பிந்தியர்

1911 ஓகஸ்ட் 29 ஆம் திகதி அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இருக்கும் ஒரொவில் காட்டில் இருந்து உடல் பலவீனம் அடைந்த ஒருவர் பட்டினியோடு நகருக்கு வந்தார். அவர் தான் காட்டில் வாழ்ந்த சிவப்பிந்திய பழங்குடியைச் சேர்ந்த கடைசி மனிதன்.

அவரிடம் பெயரைக் கோட்டால், எனக்கு பெயர் வைக்க யாரும் இருக்கவில்லை என்றார். நகருக்கு வந்த அவர் கடைசியில் ஒரு ஆய்வுப் பொருளாக மாறிவிட்டார். அவருக்கு இஷி என்று பெயர் வைக்கப்பட்டது. இஷி என்றால் அவரது யஹி மொழியில் மனிதன் என்று பொருள்.

அவரை வைத்துத் தான் சிவப்பிந்தியரின் வாழ்வு முறை, மொழி, கலாசாரம் பற்றி நவீன உலகம் முழுமையாக அறிந்து கொண்டது.



## பிரிட்டனால் ஜெர்மனி பொருட்களுக்கு ஏற்பட்ட கிராக்கி




ஓர் உற்பத்திக்கு தயாரிப்பு நாட்டின் பெயரை போடும் வழக்கம் முதல் முறை பிரிட்டனில் தான் கொண்டுவரப்பட்டது. 'தயாரிப்பு பிரிட்டன்" என்று அந்த உற்பத்தியில் பெருமையுடன் பொறிக்கப்பட்டிருக்கும். 1887 ஆம் ஆண்டு இந்த வழக்கம் கொண்டுவரப்பட்டதன் நோக்கமே வேறு.

அதாவது வெளிநாட்டு தயாரிப்புகளை மக்கள் புறக்கணிக்கச் செய்து உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கத் தான் பிரிட்டன் தயாரிப்பாளர்கள் முயன்றார்கள். குறிப்பாக ஜெர்மனி தயாரிப்புகளை ஒழிப்பதே இதன் முக்கிய இலக்கு. ஆனால் வாடிக்கையாளர்கள் இதனை வேறு விதமாக எடுத்துக் கொண்டார்கள்.

பிரிட்டன் தயாரிப்புகளை விடவும் ஜெர்மனி பொருட்கள் நம்பகமானது மற்றும் மலிவானதாக இருந்ததால் வாடிக்கையாளர்கள் தேடித் தேடித் ஜெர்மன் பொருட்களை வாங்க ஆரம்பித்தார்கள்.

## தீவை காணவில்லை



அவுஸ்திரேலியா மற்றும் நியு கலடோனியா என்ற பிரான்ஸ் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிக்கு இடையில் தென் பசிபிக் கடலில் ஒரு தீவு இருப்பதாக நூற்றாண்டு காலமாக உலக வரைபடங்களில் இருந்து வந்தன. அந்த தீவுக்குப் பெயர் சான்டி தீவு.

ஆனால் வரைபடத்தைப் பார்த்து அந்த தீவை நோக்கிச் சென்ற அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளுக்கு அங்கே தீவே இல்லை என்பது தெரிந்தது. உண்மையில் முன்னர் அப்படி ஒரு தீவு இருந்து கடல் மட்டம் உயர்ந்ததால் மூழ்கிவிட்டதா, இல்லை தவறாக வரைபடத்தில் யாராவது புள்ளியிட அது தீவாக மாறிவிட்டதா என்பது தெரியவில்லை.

## 'யுகடான்' தெரியுமா?

யுகடான் தீபகற்பம் தென்கிழக்கு மெக்சிகோவின் மிகப்பெரிய தீபகற்பம். பிலைஸ் மற்றும் குவாதமாலா நாடுகளுக்கு அருகில் இருக்கிறது. இந்த தீபகற்பத்திற்கு முதல் முறை வந்த ஐரோப்பியரின் பெயர் பிரான்ஸிஸ்கோ ஹெர்டஸ் டி கொர்டோபா. ஸ்பெயின் நாட்டவரான இவர் 1517 ஆம் ஆண்டு யுகடானை அடைந்தார். அவருக்கு தாம் எங்கே வந்திருக்கிறோம் என்று தெரியவில்லை. அங்கிருக்கும் பழங்குடியினரிடம், நான் எங்கே இருக்கிறேன்? என்று கேட்டார். அவர்கள் யுகடான் என்று கூறினார்கள். யுகடான் . நல்ல பெயர் என்று பிரான்ஸிஸ்கோவும் நினைத்திருப்பார். ஆனால் அதன் பொருள், நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை?



## ஊபர் ஓட்டுநர்களின் தந்திரம்

வாடகைக்கு வாகனங்களை அமர்த்தும் ஊபர் சேவை உலகெங்கும் பிரபலம். ஆனால் அதில் வாகனம் ஓட்டாமலேயே சம்பாதிக்கலாம் என்ற தந்திரத்தை சீன நாட்டவர்கள் தான் கண்டுபிடித்தார்கள்.

அதாவது ஊபர் வாகனத்தை அதன் செயலியில் வாடகைக்கு அமர்த்தினால் அதில் ஓட்டுநரின் புகைப்படமும் தெரியும். சில ஓட்டுநர்கள் தமது புகைப்படத்தை பயங்கரத் தோற்றத்தில் எடுத்து, அதனை ஊபரில் போட்டு விடுவார்கள்.

ஊபரை வாடகைக்கு அமர்த்துபவர்கள் அந்த பயங்கர புகைப்படத்தைப் பார்த்து, அந்த வாகனத்தை ரத்துச் செய்வார்கள். ரத்துச் செய்த கட்டணமாக ஓட்டுநருக்கு சிறு தொகை கிடைக்கும். இந்த ஏமாற்று வேலை தமது நிறுவனத்துக்கு பெரும் தொந்தரவாக மாறி இருப்பதாக ஊபர் நிறுவனம் புலம்ப ஆரம்பித்திருக்கிறது.



# கொடூர குணாம்சங்களை கொண்ட 18 சன்னி பிசாசுகள்

*இன்றைய நவீன உலகில் விஞ்ஞான வளர்ச்சியானது பல்வேறு துறைகளிலும் உச்சம் கொண்டுள்ள போதிலும் பேய், பிசாசு, பூதங்கள் அவதாரங்கள் ஆவிகள் மற்றும் அமானுஷ்ய தீயசக்திகள் பற்றிய நம்பிக்கைகள் இன்றும் மக்களிடையே காணப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சி அற்ற ஆதிக் காலத்தில் மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களின் பின் புலத்திலும் ஏதோ ஒரு தீயசக்தியின் செயல்பாடு இருப்பதாக நம்பினர். அவ்வாறான தீயசக்திகள் மனித உடலுக்குள் புகுந்து மக்களை வாட்டி வதைப்பதாகவும் அவற்றுக்கு பரிகாரமாக மந்திர பலி பூஜைகள், யாகங்கள் மற்றும் சாந்தி கர்மக் காரியங்களை செய்வதன் மூலம் அத்தகைய அமானுஷ்ய தீய சக்திகளை விரட்டியடித்து அவற்றின் பார்வையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்வதன் மூலமும் பல கொடிய நோய்களில் இருந்தும் குணமடையலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே மேலோங்கி காணப்படுகிறது.*

அந்த வகையில் இலங்கையில் சிங்கள மக்களின் கலாச்சார மரபுகளில் தொன்று தொட்டு நிலவிவரும் மஹாசொஹோன் யக்ஷயா, ரீரியக்ஷயா, ஹுனியம் யக்கா, ரட்ட யக்கா, களுக்குமார யக்ஷயா, மோகினி யக்ஷனி, மற்றும் 18 சன்னிகள் உட்பட பல்வேறு பேய் பிசாசுகள் பற்றிய நம்பிக்கைகள் இன்றும் நிலவிவருகின்றது அத்தகைய தீய சக்திகளின் கோரப்பிடியில் இருந்து மக்களை மீட்டெடுக்க நடைபெறும் மந்திர பூஜைகள், பலி பூஜைகள், யாகங்கள் மற்றும் சாந்திகர்ம பரிகாரங்கள் தொடர்பில் ஒரு சிலவற்றை நாம் அவ்வப்போது கண்டும் கேட்டும் அறிந்து வந்துள்ளோம். அவற்றில் "தாஹட்ட சன்னிய" எனப்படும் 18 வகையான சன்னிகள் எனப்படும் பிசாசுகளுக்காக அதாவது இலங்கையில் குறிப்பாக மாத்தறையை அண்டிய தெற்கு கரையோரப் பகுதிகளில் தீயசக்திகளின் செயல்பாடுகளால் பீடிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்ட ஒருவரையோ, ஒரு குடும்பத்தையோ அல்லது ஒரு கிராமத்தையோ மீட்கும் பொருட்டு "கட்டடி" எனப்படும் மந்திரவாதிகளால் மேற்கொள்ளப்படும் "தொவில்" என்றழைக்கப்படும் சாந்திகர்ம பூஜைகளானது மிகவும் பலம் வாய்ந்த சக்திமிக்க சாந்திகர்ம பூஜையாக கருதப்படுகிறது.

இலங்கையில் இத்தகைய சன்னிகளுக்கான சாந்திகர்ம பூஜைகளின் ஆரம்பம் மாயாதுன்ன என்ற அரசனின் காலத்திற்கு பின்னரே உருவானதாக ஒரு சில சிங்கள மரபுவழி கதைகளின் மூலம் சொல்லப்படுகின்றது. எனினும் இதன் மூல ஆரம்பம் இந்தியாவில் "விஷாலா புரியை" தலைநகராக கொண்டு அரசாட்சி செய்து வந்த "லிச்ஜவீ" அரச வம்சத்தினரின் காலப்பகுதியே எனவும் கூறப்படுகின்றது.



அதாவது இந்த லிச்ஜவீ அரசப் பரம்பரை வழிவந்த சங்கபால என்ற மன்னன் . அவனது மனைவியான அரசி அசுபாலி அல்லது ஆசுபாலி கர்ப்பம் தரித்து இருந்த சந்தர்ப்பத்தில் அரசிக்கு தேனை ஒத்த இனிமையான சுவை கொண்ட "மீ அம்ப" எனப்படும் ஒருவகை மாம்பழத்தை சாப்பிட வேண்டும் என்ற ஆசை( மசக்கை)
ஏற்பட்டது. எனினும் அச் சந்தர்ப்பத்தில் அரசன் போர் ஒன்றின் நிமித்தம் தனது படை வீரர்களுடன் அயல் நாட்டுக்கு சென்றிருந்தான் எனவே பட்டத்து அரசியின் ஆசையை அறிந்த பிரதான அமைச்சர் முன்வந்து அரசிக்கு அந்த மாம்பழத்தை பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தார். அவ்வாறு கிடைக்கப்பெற்ற மாம்பழத்தை அரசி மிகவும் ரசித்து ருசித்து சுவைத்து உண்பதைத் கண்ட காளி எனப்படும் அரச மாளிகை தாசிக்கும் (பணிப் பெண்) அத்தகைய மாம்பழத்தை உண்ண வேண்டும் என்ற ஆசை உண்டானது. எனினும் அவளது அந்த ஆசை நிறைவேறாது போனதால் கோபம் கொண்ட தாசி பலிவாங்கும் நோக்கில் பிரதான அமைச்சருக்கும் அரசிக்கும் இடையே தகாத உறவு இருப்பதாக அரசனிடம் சென்று
முறையிட்டாள்.

இதனை கேள்வியுற்று சினம் கொண்ட மன்னன் அவள் நிறைமாத கர்ப்பிணி என்பதையும்





பொருட்படுத்தாமல் அவளை கடும் சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்து கால்கள் இரண்டையும் "புப்பேரிய" என்னும் ஒருவகை மரத்தில் கட்டி தொங்கவிட்டு அவளது உடலை இரு பாதி துண்டுகளாக பிளந்து விடுமாறு கட்டளையிட்டான். அரசனின் ஆணைப்படி தண்டனையும் அவ்வாறே நிறைவேற்றப் பட்டது. இந்த நிலையில் முற்பிறவியில் செய்த பிறவி நற்பலன்கள் காரணமாக தாயின் பிளவுபட்ட இரு உடல் கூறுகளுக்கும் இடையே இவ்வுலகில்
அவதரித்த குழந்தையானது தாயின் இரத்தம், சதை, நரம்புகளை உணவாக உண்டு வளர்ந்து "அரச மூல சன்னி" அல்லது "கோல சன்னி யக்ஷயா" என பிற்காலத்தில் உருவெடுத்து பெயர்பெற்றது. நாளடைவில் தனது தாயை கொலைச் செய்த தன் தந்தையை ஏதோவொரு வகையில் பலி வாங்கியே தீரவேண்டும் என நினைத்த அந்த அரச குமாரன் அதிக நச்சுத்தன்மை கொண்ட மூலிகை காய்களையும் மூலிகை இலைகளையும் சேகரித்து அவற்றை ஒன்றாக அரைத்து விஷம் நிறைந்த 18 உருண்டைகளை தயார் செய்து வந்ததாகவும் அதனைக் கண்ணுற்ற "ஷக்கறயா" என்ற (ஈர் உலகுக்கும் அதிபதியான) கடவுள் அவற்றுக்கு மேலும் சில விஷ திரவியங்களை தெளித்து அந்த உருண்டைகளில் இருந்து 18 வகையிலான பிசாசுகளை படைத்ததாகவும் அவைகளே தாஹட்ட சன்னி எனப்படும் 18 பிசாசுகளாக பெயர் பெற்றுள்ளதாகவும் சிங்கள புராண மரபுக் கதைகளில் இருந்து நமக்கு தெரியவருகின்றது.

அவையாவன பூத சன்னி, அபூத சன்னி, அமுக்கும் சன்னி, கொப்புள சன்னி, வாத சன்னி, செவிட்டு சன்னி, கோள சன்னி, காது சன்னி, பின் சன்னி, ஊமை சன்னி, வாத முர்த்து சன்னி, நாக சன்னி, நொண்டி சன்னி, நெருப்பு நீர் சன்னி, மண்ணீரல் சன்னி, ஜல சன்னி, தேவ சன்னி மற்றும் தமிழ் (தெமழ) சன்னி எனப்படும் 18 சன்னிகளாகும் இச் சன்னிகளின் தீய பார்வை படுவதன் காரணமாகவே மக்கள் மனநோய், காய்ச்சல், வாந்திபேதி, வாதம், காது, கண், நாக்கு, வலிப்பு, வாய் பூட்டு, விசப் புண் மற்றும் அம்மை போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதாக நம்பப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சன்னிகளாலும் ஏற்படக்கூடிய தனித்துவமான ஒவ்வொரு நோய்களும், நோய் அறிகுறிகள் காணப்படும் எனவே அவற்றை தனித்தனியாக கண்டறிந்து உரிய முறையில் மந்திரப் பூஜைகள் சாந்தி கர்மங்கள் செய்வதன் மூலம் மட்டுமே நோயை முழுமையாக குணப்படுத்தலாம். தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அந்த தீய சக்திகளின் நடவடிக்கைகளால் மேலும் மேலும் நோயாளிகளுக்கு பயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் சில சமயங்களில் மந்திரவாதிகளான தாங்களையும் கூட சன்னிகள் பழிவாங்கலாம் எனவும் நம்புகின்றனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சன்னிகள் இளவரசனை சுற்றிவளைத்து உணவு கேட்டு தொந்தரவு செய்ய ஆரம்பித்தன. இச் சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைத்த இளவரசன் அவனது தந்தையை பலி வாங்கும் நோக்கில் என்னிடம் உணவு இல்லை ஆகையால் விஷாலா தலைநகருக்கு சென்று அங்கே எனது தந்தையான சங்கபால என்ற மன்னனிடம் உணவு பெற்றுக் கொள்ளுமாறு கட்டளையிட்டான். விஷாலா தலைநகருக்கு வந்த சன்னிகள் உணவு கோரி பயிர்களையும் வயல் வெளிகளையும் அழித்து துவசம் செய்தன இதனால் தலைநகரில் கடும் பஞ்சம் தலைதூக்கியது. உணவு பற்றாக்குறையால் நோய்வாய்ப்பட்டு மக்கள் பலர் உயிரிழந்தனர். தலைநகர வீதிகள் எங்கும் துர்நாற்றம் வீசும் சடலங்கள் குவிந்து கிடந்தன. இறந்தவரின் உடல்களில் தீய ஆவிகள் புகுந்து மக்களை மேலும் மேலும் துன்புறுத்தி வந்தன. சன்னிகளின் தொல்லைகளிலிருந்து விடுபட மும்மணிகளின் ஆசி வேண்டி இரத்தின சூத்திர பாராயணம் மற்றும் சாந்தி கர்மங்களையும் செய்து இப் பேரழிவில் இருந்து மக்களை விடுவித்ததாகவும் மரபுக் கதைகளின் மூலம் சொல்லப்படுகின்றது.

**களுத்துறை நாராயணசாமி ஜெயரட்னம்**



# திரவத் தங்கம்

ஒலிவ் ஒயிலை உங்கள் முகத்திற்கும் பயன்படுத்தலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒலிவ் ஒயிலை முக அழகிற்காக பயன்படுத்தும் வழக்கம் வரலாற்று நாயகி கிளியோபாட்ராவில் இருந்து துவங்குகிறது. ஆகச்சிறந்த அழகிகளில் ஒருவரான கிளியோபாட்ரா, தனது அழகு சாதனை முறைகளில் ஒலிவ் ஒயிலை பயன்படுத்தியிருக்கிறார்.

ஒலிவ் ஒயிலை முக அழகிற்காக பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் நீங்கள் நினைத்து கூட பார்க்க முடியாதது என்று சொல்லலாம். உடல் நலத்தில் அக்கரை கொண்டவர்கள் ஒலிவ் ஒயில் இல்லாத உணவை நினைத்துக்கூட பார்க்க முடியாது என்பது போல, உங்களைப்போன்ற அழகு நலத்தில் ஆர்வம் கொண்டவர்கள் இந்த அற்புத எண்ணையை அழகு சாதன பயன்பாட்டில் சேர்த்துக்கொள்ள தவறக்கூடாது.

ஒலிவ் ஒயில் திரவத் தங்கம் என்றும் அழைக்கப்படுவது உங்களுக்குத் தெரியுமா? இது அன்டிஅக்சிடென்ட் நிறைந்திருப்பதால், சருமத்தின் அழுக்கு, மாசு மற்றும் யுவி கதிர்கள் உள்ளிட்ட பிரிரேடிகள்களில் இருந்து காக்கிறது. மேலும் சூப்பர் மாய்ஸ்சரைசிங் அளிப்பதோடு முகப்பருக்களை உண்டாக்கும் கிருமிகளை அழித்து பருக்களையும் இது குறைக்க உதவுகிறது. ஒலிவ் ஒயிலை எந்த வகையில் எல்லாம் நீங்கள் முக அழகிற்காக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை கீழே படித்து தெரிந்து கொள்ளுங்கள்...

- ☐ உங்கள் லிப் ஸ்கிரப்பின் ஒரு அங்கமாக
- ☐ மேக்கப் ரிமூவராக
- ☐ மாய்ஸ்சரைசராக
- ☐ வயோதிக தன்மையை எதிர்க்கும் சாதனமாக
- ☐ இயற்கை ஹைலைட்டராக



# வயது சார்ந்த மாற்றங்கள்

நீங்கள் வயதாகும் போது, உங்கள் சருமமும் வயதாகிறது. என்னென்ன மாற்றம் ஏற்படுகிறது என்று தெரிந்துகொள்ளுங்கள்.

*20 களில்:* உங்கள் சருமம் அதிகபட்ச பொலிவுடன் காணப்படும், பதின்பருவ பருக்களின் பாதிப்பு தொடரும். குழந்தை பிறப்புக் கட்டுப்பாடு அல்லது கருத்தரித்தல் சருமத்தைப் பாதிக்கலாம்.

*30 களில்:* மரபுரீதியாக நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், பெரிதாக மாற்றம் இருக்காது, ஆனாலும் கண்ணின் கீழ் பைகள், வாயை சுற்றிலும் சிரிக்கும் கோடுகள் போன்றவை ஏற்படக்கூடும்.

*40 களில்:* வயதாவதன் தெளிவான அறிகுறிகளை சருமம் காண்பிக்க தொடங்கும். நெற்றி சுருக்கங்கள், உள்ளங்கையின் பின்புறம் சுருக்கம், கழுத்து மற்றும் புறங்கைகளில் சுருக்கம், தொங்கும் சருமம் போன்றவை ஏற்படக்கூடும்.



# மாசு மருவில்லா பொலிவான சருமம்



மாசு மருவில்லா பொலிவான சருமத்தை பெறுவது எப்படி? என அறிந்து கொள்ளுங்கள்.செடியில் இருந்து இயற்கை கற்றாழையை எடுத்துக்கொள்ளுங்கள் கற்றாழை இலை இன்றை கத்திரித்து, அதன் முள்களை நீக்கி விட்டு அதன் சாற்றுப்பகுதியை முகத்தின் பக்கவாட்டில் பூசிக்கொள்ளவும். செடியில் இருந்து கத்தியை கொண்டும் கொஞ்சம் சாற்றை அகற்றி பயன்படுத்தலாம். இரண்டு இலைகளில் இருந்து எடுக்கப்படும் சாறு போதுமானது. தேவை எனில் இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்ளலாம். இதில் கொஞ்சம் பாதாம் எண்ணெய் சேர்த்து முகம் மற்றும் கழுத்துப்பகுதியில் இரவு படுக்கச்செல்லும் முன் தடவிக்கொள்ளவும். இரவு அப்படியே விட்டு விட்டு காலை எழுந்ததும் கழுவிக்கொள்ளவும்.



த. சாத்விக்
அப்பா தயாபரன்,
அம்மா துர்கா
2021.07.01 213/25,
சலலிஹினி மாவத்தை,
முல்லேரியா தெற்கு

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து



நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.




நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543 என்ற whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.



**பிறந்தநாள் வாழ்த்து..!**
ஜெயப்பிரகாஷ் ராஹினி
தம்பதிகளின் புதல்வன்
ஜெ. வினுஜன் (17.06.2022)
(இரண்டாவது பிறந்த நாள்)
மொரகொல்ல வீதி,வெளிமடை



"நாய்க்கு கோபம் வந்தால் என்ன செய்யும் ?
"நாய்கிட்டதான் கேக்கணும் "
"அதாண்டா கேட்கிறேன் பதில் சொல்லு!!"



"எண்டா உன் மனைவி கரண்டி, தட்டு
எல்லாம் தூக்கி வீசரா ?"
நான்தான் சொன்னேனே, அவளுக்கு 'வீசிங்'
ப்ராப்ளம் இருக்குன்னு.!!"



அம்மா : டேய் ஏன்டா வேர்க்க வேர்க்க
சாப்டுட்டு இருக்க அந்த Fan ah போட
வேண்டிதானே
மகன் : இல்லமா அப்பாதான் வேர்வை சிந்தி
சாப்பிட சொன்னாரு






ஒருவர் தேன் கொட்டினா வலிக்கும் ...
மற்றவர் ஆமா
ஒருவர் பாம்பு கொட்டினா வலிக்கும்...
மற்றவர் ஆமா
முடி கொட்டினா வலிக்குமா?
மற்றவர் ??????



ப்ரண்ட் 1 : ஒரு மாடு ஒரு நாள் கடைக்கு
போச்சாம் டக்குனு அங்க இருந்த கதவ கடிச்சு
சாப்பிட ஆரம்பிச்சுச்சாம் ?
ப்ரண்ட் 2 : ஏன் ? ப்ரண்ட் 1 : ஏனா அந்த
கதவுல Pull(புல்) னு போட்ருந்துச்சாம்



தூங்குவதற்கு முன்னாடி ஏன் குட்நைட்
சொல்றோம்?? ★★தூங்குனதுக்கு
அப்பறம் சொல்ல முடியாது
அதனால........



**நோயாளி ஒருவர்** டாக்டரிடம் சென்றார்.
அவர் சிறுநீரை பரிசோதித்த டாக்டர், சில
மருந்துகளைக் கொடுத்து, இதை சாப்பிட்டு
வாங்க.
**டாக்டர்** உங்களுக்கு நீரில் கொஞ்சம்
சர்க்கரை இருக்கு, எதுக்கும் மூன்று மாதங்கள்
கழித்து சிறுநீரை மறுபடியும் கொண்டு வாங்க
பரிசோதித்துப் பார்ப்போம்.
**நோயாளி** மூன்று மாதங்கள் கழித்து
மூன்று பெரிய கேண்களை தூக்க முடியாமல்
கஷ்டப்பட்டு டாக்டர் முன் வைத்தார்).
**டாக்டர்:** என்ன இவை?
**நோயாளி:** நீங்கதானே மூன்று மாதங்கள்
கழித்து சிறுநீர் கொண்டு
வரச்சொன்னீங்க



**பயணி :** யோவ் டிரைவர்! பஸ்ஸை
நிறுத்து... ஒருத்தர் பஸ்ல இருந்து தவறி
விழுந்துட்டாரு.
**டிரைவர் :** சும்மா இருய்யா! கண்ட
இடத்துல பஸ்ஸை நிறுத்துனா கண்டக்டர்
என்னை திட்டுவாரு.
**பயணி :** யோவ்! விழுந்ததே
கண்டக்டர்தான்...



"நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு ?"
"ஏன் கேக்கறே"
"திருக்குறளை போர்டுலே எழுதிட்டு, அவங்களே
இதை எழுதினது யார்'னு கேக்கறாங்க !!"

# இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முதலாக ஹிஜாப் அணிந்து செய்தி வாசித்த பெண்

## ரெஹானா ஏ அஸீஸ்






**சிறுவயது முதலே ஊடகவியலாளராக வரவேண்டும் என்ற கனவுகளோடு வாழ்ந்து வந்த ஒரு இளம் பெண் தான் ஊடகவியலாளர் ரெஹானா ஏ அஸீஸ். ஊடகத்துறைக்கு வரும்போதே வரலாற்றில் பெயர் பதிக்கக்கூடிய வகையில் தமது முத்திரையை பதித்துக்கொண்டு வந்தவர் ரெஹானா ஏ அஸீஸ். இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முதலாக ஹிஜாப் அணிந்து செய்தி வாசித்த இளம் பெண் என்ற பெருமைக்குரியவராக இவர் திகழ்கிறார். இவரோடு உரையாடியதில் கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.**

**● உங்களைப் பற்றிய அறிமுகம்.......?**

என்னுடைய பெயர் ரெஹானா ஏ அஸீஸ், கம்பஹா மாவட்டம் மல்வானை எனும் கிராமத்திலேயே நான் பிறந்தேன். எனக்கு 02 சகோதரிகள், ஒரு சகோதரன்.

சிறு வயது முதலே ஒரு ஊடகவியலாளராக ஆக வேண்டும் என்பது என்னுடைய இலட்சியம். இன்று அந்த இலட்சியப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றேன்.

**● பிறந்த ஊர், படிச்சது, தற்போது வேலை செய்கின்ற நிறுவனத்தின் பெயர்.. அங்கு உங்களுடைய பதவி......?**

என்னுடைய ஆரம்பக் கல்வியை நான் மல்வானை அல்முபாரக் தேசிய பாடசாலையில் கற்றேன். அதன் பிறகு உயர் தரத்தை திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் பயின்றேன். நாவல திறந்த பல்கலைகழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தேன். அதேவேளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக்க் கற்கையை நிறைவு செய்துள்ளேன்.

தற்போது விடிவியில் (VTV) சிரேஷ்ட செய்தி தயாரிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் கடமையாற்றுகின்றேன்.

**● ஊடகத்துறைக்குள் எவ்வாறு பிரவேசித்தீங்கள்?**

ஊடகத்துறை என்பது எனது சிறு வயது கனவு, எனவே உயர் தரம் கற்கின்ற காலப் பகுதியிலேயே ஊடகப் பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்கு பற்றியிருந்தேன். ஆரம்ப காலத்தில் குரல் கலைஞராகவே இந்தத் துறையில் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. சிறுஆவணங்கள், விளம்பரங்கள் மற்றும் நாடகங்களில் குரல் கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சில தயாரிப்புகள் மற்றும் நாடாகங்களில் குரல் கலைஞராக செயற்பட்டிருந்தேன்.

ஊடகத் துறையில் ஆரம்பகாலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வர்த்தக சேவையின் இளைஞர் மன்றம் மற்றும் இலக்கிய மஞ்சரி ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்திருந்தது. இந்த நிகழ்ச்சியின் ஊடாக ஊடகத்துறையில் பல புதிய அனுபவங்களை பெறக்கூடியதாக அமைந்தது.

**● உங்களை ஊக்கப்படுத்தியவர்கள் யார்?**

ஆரம்ப காலத்தில் ஊடகத்துறையில் சந்தித்த சிலசிரேஷ்ட ஊடகவியலாளர்கள் எனக்கானஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கியிருந்தனர்.




அதேபோன்று என்னுடைய குடும்பஅங்கத்தவர்கள் எப்போதும் என்னுடைய பயணத்திற்குத் துணையாக நின்றுள்ளனர்.

**● நீங்கள் கடமையாற்றிய ஊடக நிறுவனங்கள், வகித்த பதவிகள்.......?**

ஆரம்பகாலங்களில் நான் பகுதி நேரமாகவே ஊடகத்துறையில் கடமையாற்றியிருந்தேன்.

அதனை அடுத்து ஆதவன் டப் வானொலியில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், எக்சகடிவ் ப்ரொடியுசராகவும் கடமையாற்றினேன்.

அதேபோன்று யுடிவியில் (ருவுஏ) செய்தி தொகுப்பாளராகவும், சிரேஷ்ட செய்தி தயாரிப்பாளராகவும் கடந்த 2021 ஆகஸ்ட் மாதம் வரையில் கடமையாற்றினேன்.

**● செய்தி வாசிப்பு தொடர்பாக பெற்ற அனுபவங்கள்.....?**

இஸ்லாமிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஹிஜாப் என்பது என்னோடு எப்போதும் இணைந்த ஒரு விடயம். எனவே, ஹிஜாப் அணிந்து ஒரு செய்தி வாசிப்பாளராக எமது நாட்டில் இடம் பிடிப்பது என்பது என்னைப் பொறுத்தவரை இலகுவான ஒரு விடயமாக அமையவில்லை.

எனக்கு நினைவில் இருப்பதற்கு அமைய எனக்கான சந்தர்ப்பத்திற்காக சுமார் 04 வருடங்கள் காத்திருந்தேன்.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதன் முதலில் இலங்கை வரலாற்றிலேயே ஒரு தேசிய தொலைக்காட்சி ஊடகத்தில் ஹிஜாப் அணிந்த முதல் பெண் செய்தி வாசிப்பாளராக இடம்பிடிப்பதற்கான சந்தர்ப்பம் அமைந்தது.

நீண்டநாள் முயற்சியின் ஒரு வெற்றியாகவே நான் இதனை கருதுகின்றேன். பல ஐரோப்பிய நாடுகளிலும் இதற்கு முன்னர் ஹிஜாப் அணிந்து பெண் செய்தி வாசிப்பாளர்கள் திரையில் தோன்றியிருந்தார்கள். அந்த வகையில் எனக்கான சந்தர்ப்பத்தை வழங்கிய யுடிவியிற்கும் அப்போதிருந்த நிர்வாகிகளுக்கும் எப்போதும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆரம்ப காலங்களில் செய்தி வாசிப்பாளராகவே செயற்பட விரும்பிருந்தேன். இருப்பினும் அதற்கான சந்தர்ப்பம் அமையாததால் செய்தி தயாரிப்பின் பக்கம் கவனம் செலுத்தியிருந்தேன்.

இருப்பினும் என்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு எனக்குத் துணையாக இருந்தவர் என்னுடைய குரு, இந்த்த் துறையில் நான் எப்போதும் மதிக்கும் மரியாதைக்குரிய சிரேஷ்ட ஊடகவியலாளர் நௌஷாத் மொஹிடீன். அவர் எமது யுடிவியின் செய்திப் பிரிவின் தலைவராக செயற்பட்டவர்.

அவருடைய உதவி மற்றும் ஊக்குவிப்பு என்னுடைய கனவுக்கான மற்றுமொரு ஆதாரமாக அமைந்தது. எனவே இந்த சந்தர்பத்தில் என்னுடைய நன்றியை நௌஷாத் மொஹிடீனுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**● இன்னும் நீங்கள் சொல்ல விரும்புகின்ற எதுவும் இருந்தால் சொல்லுங்ளேன்.....!**

அதேபோன்று இன்று நான் தொடர்ந்தும் இந்தத் துறையில் பயணிப்பதென்றால் அதற்கு என்னுடைய கணவர் தான் காரணமாக இருக்கின்றார். பெண்கள் ஊடகத்தறையில் பிரவேசிப்பது என்பதும், அதில் நீடிப்பது என்பதும் பெரும் சவாலான விடயம். எனக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பவர் என்னுடைய கணவர். என்னால் முடியாது என்று சோர்ந்து போகின்றபோதெல்லாம் என்னை ஊக்கப்படுத்துபவர் அவர் தான்.



**கே. ஈஸ்வரலிங்கம்**

# வெள்ளிவிழா நாயகனாகிய தந்தை செல்வா நற்பணி மன்ற பொதுச் செயலர்

## Lion S. K. தளையரட்ணம் (MAF)

**சமூக சேவை, அறநெறி சேவை, கல்விச் சேவை என பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்ற தந்தை செல்வா நற்பணி மன்றம் ஆரம்பிக்கப் பட்டு 25 ஆண்டுகளாகின்றன. தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் வெள்ளி விழாவையொட்டி பல்வேறு நடத்தி வருகின்ற அம்மன்றத்தின் ஸ்தாபகத் தலைவரும் பொதுச் செயலாளருமாகிய Lion S. K. தளையரட்ணத்தை (MAF) அண்மையில் சந்தித்து உரையாடினோம்.**

### மன்றத்தின் வளர்ச்சிப் பற்றி கூறுங்களேன்

தந்தை செல்வா நற்பணி மன்றம் ஆற்றிய சேவைகளையும், அது ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தையும், கொள்கைகளையும் 25 ஆண்டுகள் நிறைவேற்றி தன்னிகரில்லா தலைநகரில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் ஸ்தாபகத் தலைவர் என்ற ரீதியில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

### உங்களைப் பற்றியும் உங்கள் ஊர் பற்றியும் கூறுங்களேன்.

வடமாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் தொன்மைமிக்க வட்டுக்கோட்டைத் தொகுதியில் மூளாய் என்ற கிராமத்தில் வதிரன்புலோ மூத்த விநாயகரின் அருட்கடாட்சத்தைப் பெற்று செல்வச் செழிப்புடன் வாழும் மக்களில் தளையரட்ண முதலியார் செங்காரபிள்ளை உடையார் வழித்தோன்றல் கணபதிப்பிள்ளையின் ஏக புத்திரனாக தளையரட்ணம் ஆகிய நான் பிறந்தேன்.

எனது இளமைக் காலத்தில் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையும் சேவை செய்யும் தன்மையும் வளர்ந்து வந்தது. இதன் பேறாக எனது 24ம் வயதில் மூளாய் இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளராகவும் தொடர்ந்து 1989ம் ஆண்டு சங்கத்தலைவராகவும், இருந்த காலத்தில் மூளாய் வதிரன்புலோ விநாயகப் பெருமான் ஆலயத்தின் சுற்றுமதில் செயற்பாடுகளை வெற்றிகர



மாக மேற்கொண்டு முடித்தோம், அதே காலத்தில் மூளாய் கிராம முன்னேற்றச் சங்கத்தின் உப செயலாளராகவும் தொடர்ந்து செயலாளராகவும் செயற்பட்டு அரிய பல சேவைகளைச் செய்தேன். மாணவர்களின் கணிதத்துறை வளர்ச்சியடைவதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு இலவச வகுப்புகள் நடாத்தி, பரீட்சைகள் நடாத்தி வெற்றியும் கண்டேன்.

நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக 1992ம் ஆண்டு கொழும்பு வந்து சேர்ந்தேன். எனது சேவையைத் தொடர்வதற்கு ஏற்றவசதிகள் கிடைக்காத சூழ்நிலையில் கொழும்பில் இயங்கி வந்த புதிய அலைகலை வட்டத்தில் கலைஞர் இராதா மேத்தாவின் உதவியுடன் ஒரு அங்கத்தவராக இணைந்தேன். கொழும்பு 12இல் அமைந்துள்ள கொட்டாஞ்சேனை மத்திய இந்து வித்தியாலயத்தில் கலைவாணி அறநெறிப் பாடசாலையில் சேவையைத் தொடந்தேன்.

இக்காலத்தில் மனோ கணேசனின் தொடர்பு எனக்கு கிடைத்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதி ராஜா அண்ணனுடன் தொடர்பு கொண்டு எனது நண்பன் கருணாகரனுடன் சேர்ந்து 12.12.1997இல் தந்தை செல்வா நற்பணி மன்றத்தை கொழும்பில் ஆரம்பித்தேன்.

2000ம் ஆண்டுவரை நாம் செய்த கல்விச் சேவைகள், அறநெறி சார்ந்த சேவைகளை எந்த ஒரு பத்திரிகைகளும் பிரசுரிக்க மறுத்து விட்டன. பத்திரிகை நிறுவனத் தவைர்கள், பொறுப்பாசிரியர்களுடன் தொடர்பு கொண்டபோது யாப்புவிதிகள் கேட்டன, அதனால் கொழும்பு மத்திய இந்து வித்தியாலய அதிபர் சற்குணம், கணபதி மகளிர் வித்தியாலய அதிபர் தில்லைநாதனின் உதவியுடன் மன்றத்தின் யாப்பு விதிகளையும், பதிவு வேலைகளையும் மேற்கொண்டு முடித்தேன்.

பின் கொழும்பு மத்திய இந்து வித்தியாலயத்தில் தந்தை செல்வா அறநெறிப்பாடசாலை உருவாக்கப்பட்டது. 2003ம் ஆண்டு இந்து கலாச்சாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. வங்கிக் கணக்குகளும் இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளில் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பு மாவட்ட கிராம சேவையாளர் A.R.A.M. லாபீர் இதற்கு உறுதுணையாக இருந்தார்.

எமது மன்றம் யாப்பு விதிப்படி பொதுச்சபை, நிர்வாகச்சபை, தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக சபையில் உள்ளவர்களை நிர்வகிக்க விசேட அதிகாரம் கொண்ட மேல் சபையும் உருவாக்கப்பட்டது. இந்த உட்கட்டமைப்பு மூலம் எமது மன்றத்தின் கல்விச் சேவை, சமய சேவை, சமூக சேவை, கலாச்சார சேவை என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் இன, மத, வேறுபாடு இன்றி இதுவரை சுமார் 21,000 பேர்களுக்கு இலவச கண்பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கியுள்ளோம். இலங்கையின் பல பிரதேசங்களிலும் சிறப்பாக பணியாற்றிய அதிபர்கள், கிராம சேவையாளர்கள், ஊடாகவியலாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள் போன்ற 1000 பேரை கௌரவித்து தந்தை செல்வா விருது களையும் வழங்கியுள்ளோம். தொடர்ந்து வழங்கி வருகின்றோம்.



தந்தை செல்வா அறநெறிப் பாடசாலை மாணவர்களை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், ரம்பொடை, சிலாபம், கதிர்காமம், உடப்பு, போன்ற பிரதேசங்களில் உள்ள ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று தரிசிக்க செய்தோம். டாக்டர் இராம ஜெயத்தின் பண உதவிகள் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது. வருடாந்த மகாசிவராத்திரி காலங்களில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. அவரின் உதவியை எமது மன்றம் மறப்பதற்கு இல்லை.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எமது மன்றம் நிலையாக இயங்க வேண்டும் எனும் நோக்கத்துடன் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து Computer, Dupplo Machine, Photo Copy Machine, Colour Print,

சங்கீத உபகரணங்கள், கதிரைகள், போன்ற உபகரணங்களை





வழங்கியிருந்தார். இந்த வெள்ளி விழாவில் எமது அண்ணன் மனோ கணேசனின் பெருமையை சொல்ல சொற்களே இல்லை எனலாம்.

மன்றத்தின் எதிர்கால நோக்கமாக எமது தந்தை செல்வா நற்பணி மன்றத்திற்கென ஒரு தனியான இடம் பெறப்பட வேண்டும், அந்த இடத்தில் அறநெறிப்பாடசாலை எமது

கலை, கலாச்சார பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்படும் நோக்கத்துடன் கலை சார்ந்த வகுப்புகளையும் குறைந்த கட்டணத்தில் நடாத்தல் வேண்டும். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் பூப்புனித நீராட்டு விழா, திருமண வைபவங்கள், கலாச்சாரம் சார்ந்த நிகழ்வுகள் நடாத்த இடம் ஒதுக்குதல் வேண்டும். தந்தை செல்வா நற்பணி மன்றம் மேல் மாகாணத்தில் அமைந்தது போல் வட மாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் போன்ற பிரதேசங்களில் விஸ்தரிக்கப்பட்டு சம்மேளனத்தை உருவாக்குதல் வேண்டும். இதன் மூலம் எமது சேவைகள் விஸ்தரிக்கப்படுவதுடன் இன, மத சகோதரத்துவம் வளர்த்தெடுக்கப்படும். எமது விளையாட்டுக் கழகத்தை புனர் நிர்மாணம் செய்து மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு வித்திடல் வேண்டும். 25 ஆண்டு காலமாக எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு வித்திட உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அறநெறிப் பாடசாலையில் எந்த விதமான வேதனமும் இன்றி சேவையாற்றிய, சேவையாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து ஆசான்களையும் பாராட்டுகிறோம். பாடசாலைகளை தந்து கருத்தரங்குகளை வைக்க உதவிய அதிபர்களுக்கு இரு கரங்கூப்பி நன்றி தெரிவிக்கின்றோம். கருத்தரங்குகளை இலவசமாக நடாத்தி தந்த ஆசான்களுக்கு நன்றி கூறுகிறோம்.




சமய முன்னிலை நிறுவனங்கள் சமய பெரியார்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

மன்றத்தின் வளர்ச்சிக்காக உதவிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், அரச உத்தியோகத்தினர், ஊடகவியாலாளர்கள், அரிமா சங்க உறுப்பினர்கள், டாக்டர்கள், அனைவருக்கும் எமது இருகரங்கூப்பிய நன்றிகள் உரித்தாகட்டும்.

அகில இலங்கை சமாதான நீதிவானாகிய மன்றத்தின் பொதுச் செயலாளர் Lion S. K. தளையரட்ணம்,(MAF), தேசபந்து, லங்கா புத்திர, விஸ்வகீர்த்தி, திருவாவடுதுறை, ஆதீனம் சித்தாந்தரத்தினம், சாகித்திய விருது (பணியமுதன்), ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

கே. ஈஸ்வரலிங்கம்
easwarantkn@gmail.com
Whatsapp : 077 3124543



Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எம்.எம். முஸ்தபா.**
**மன்னார்.**

**கேள்வி: மக்கள்...திலகம் எம்.ஜி.ஆர்.அவர்கள் செய்ய நினைத்து அவரால் செய்ய முடியாமல் போன காரியங்கள் ஏதாவது இருக்கிறதா?**

**பதில்:** எனக்கு தெரிந்த வகையில் முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. இப்போது மணிரத்தினம் இயக்கிக் கொண்டிருக்கிறார் அல்லவா கல்கியின் 'பொன்னியின் செல்வன்', இந்தக் கதையை முதலில் திரைப்படமாக தயாரிக்கப் போனவர் எம்.ஜி.ஆர்.தான். அதற்காக முப்பதாயிரம் ரூபாய் கொடுத்து அத்தக் கதையின் உரிமையையும் வாங்கி வைத்திருந்தார். 'நாடோடி மன்னன்' படம் வெற்றிகரமாக ஓடிய பின், 'பொன்னியின் செல்வன்' படத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடு பட்டார். வழக்கமாக அவரது படங்களில் நடிப்போர்களைத் தவிர்த்து புதியவர்களை போடவேண்டுமன்று திட்ட மிட்டிருந்தார். அதேநேரம் அவர் இரட்டை வேடங்களில் நடிப்பதாகவும் இருந்தது.



ஆனாலும் 'நாடோடி மன்னன்'பட வெற்றிக்குப் பிறகு அவருக்கு திரைய படங்களில். நடிக்க வாய்ப்புகள் வந்து தயாரிப்பு வேலைகள் தள்ளிப்போனது.' பொன்னியின் செல்வன்' படத்தை எம்.ஜி..ஆரே இயக்கப்போவதாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் கூட வெளியாகின. நடிகர் சிவகுமாரிடமும் படத்தில் நடிக்க வேண்டு மென்று சொல்லியிருந்தார். வதியத்தேவன் கதாபாத்திரத்தில் அவர் நடிப்பதாக இருந்தது.

இதற்கிடையில் 'அடிமைப் பெண்','உலகம் சுற்றும் வாலிபன்'போன்ற படங்களைத் தயாரிப்பதில் அவர் முன்மும்முரமாக ஈடு பட்டதால் 'பொன்னியின் செல்வன் 'தயாரிப்பு தள்ளிப்போனது. இதன் பிறகு அவர் அரசியலுக்கு வந்து விட்டதால் அவரது அந்த ஆசை நிறைவேறாமலே போனது.



**எம்.மாகிரட்,**
**எலபடகம**

**கேள்வி: தளபதி விஜய்யின் மகனும் கதாநாயகனாக நடிக்கிறாராமே...ஹாய் ஜாலிதான்....இது உண்மையா..சேர்?**

**பதில்:** உண்மைதான் மாகிரட். தளபதி விஜய் தனது நிஜவாரிசான சஞ்சயை விரைவில் கதாநாயகனாக அறிமுகப் படுத்தவிருக்கிறார். கதை, இயக்குநர் உள்ளிட்ட விடயங்கள் உறுதியாக்கப்பட்டு விட்டதாகவும் இதற்கான அதிகாரப் பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்று விஜய்க்கு நெருக்கமானவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

**எம்.ஆர். சுதாகர்**
**வத்தளை.**

**கேள்வி: என்ன இது...கமலின் 'விக்ரம்' படம் தமிழ்த் திரை உலகையே கலக்கிக் கொண்டிருக்கிறதாமே.......! இதுவரை காலமும் தமிழ்த்திரையுலகில் வந்த படங்களின் வசூலை எல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டதாமே..?**

**பதில்:** ஆமாம்...தமிழ்த்திரை உலகில் இதுவரை காலமும் வந்த எல்லா திரைப்படங்களின் வசூலையும் முறியடித்து முன்னணியில் நிற்கிறது.

மக்கள் திலகம், நடிகர் திலகம், இவ்விருவருக்கும் இடையேயான போட்டி, சூப்பர் ஸ்டார், உலகநாயகன் ஆகியோரிடமும் தொடரந்தது. நான்கு ஆண்டுகளாக படமாளிகையில் படம் வெளியாகி வசூல் ரீதியில் வெற்றியை பெறாத



உலக நாயகன் கமல்ஹாசன் 'விக்ரம்' படத்தின் மூலம் புதிய சாதனையை படைத்திருக்கிறார். அதாவது இதுவரை வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களில் தமிழகத்தில் அதிக வசூலை ஈட்டிய திரைப்படமென்று 'விக்ரம்' வரலாற்றை படைத்திருக்கிறது. கடந்த சில காலங்களில் உலக நாயகனை விட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் துக்குத்தான் திரையுலக வணிகர்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்து வந்தனர். தற்போது அந்த நிலை 'விக்ரம்' பட வசூலின் மூலம் மாறி விட்டது.

**எஸ்.ஏ.பிரபு, மஸ்கெலியா.**

**கேள்வி: ரஜினி காந்த் நடிக்கும் படத்திற்கு பெயர் வைத்து விட்டார்களா?**

'விக்ரம்' வசூலில் ரஜிகாந்த் திகிலில்!

**பதில்:** ம்... 'ஜெயிலர்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ரஜினி காலத்துக்கு இப்போது ஒரு புதிய பிரச்சினை வந்திருக்கிறது. அதாவது இதுவரை காலமும் ரஜினிகாந்தின் படங்கள் தான் வசூலில் சாதனை படைத்து முன்னணியில் நின்றது. ஆனால் 'விக்ரம்' பட வசூல் சாதனைக்குப்பிறகு 'ஜெய்லர்' படக் குழுவினருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.



'ஜெய்லர் படத்தில் நடித்து வரும் சூப்பரா ஸ்டார் ரஜினி காந்த்திற்கு சாதாரண வெற்றி அல்ல பிரமாண்டமான வசூல் வெற்றி வேண்டும் என்ற கட்டாய நெருக்கடி சூழல் உருவாகி இருக்கிறது. இதற்காகத்தான் 'ஜெய்லர்' படத்தை இயக்கும் நெல்சன் திலிப் குமாரை அழைத்த ரஜிகாந்த் தனது நிலையை விவரித்து திரைக்கதையை மேலும் கூர்மைப்படுத்த மூத்த இயக்குநரான கே.எஸ். ரவிக்குமாரை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

**எம்.மலர் ராணி.**
**கொழும்பு13**

**கேள்வி: எங்கள் தளபதி விஜய் நடிக்கும் 'வாரிசு' திரைப் படத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.?**

**பதில்:**பொதுவாக நட்சத்திர நடிகர்கள் நடிக்கும் படங்களை அறிமுகப்படுத்தும். பொழுது முதல் பார்வை இரண்டாம் பார்வை,மோஷன் போஸ்டர்கள் என போஸ்டர்களை வெளியிடுவார்கள்.

ஆனால் தளபதி விஜய் நடிப்பில் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருக்கும் 'புதிய படமான 'வாரிசு' படத்துக்கு மூன்று போஸ்டர்களை படக் குழுவினர் வெளியிட்டனர். முதல் போஸ்டரில் விஜய்யின் ஸ்டைலான தோற்றம், இரண்டாவது போஸ்டரில் குழந்தைகளுடன் குழந்தைத் தனமான வசீகரத் தோற்றம், மூன்றாவது போஸ்ட, ரில் ரசிகர்களை ஈர்க்கும் கொமர்ஷல் எக்சன் தோற்றம் என அவரது 'மூன்று' முகத்தையும் வெளியிட்டு ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தி இருக்கிக்கிறார்கள். இது தொடர்பாக படக் குழுவினர் பேசுகையில், " 'வாரிசு படத்தின் கதையை போஸ்டர்கள் மூலம் சூசகமாக வெளியிட்டிருக்கி ரோம்" என்றனர். இதைத் தொடர்ந்து, தொலைந்த தனது தாய் தந்தையரைத் தேடி அவர்களது நிஜமகன் பயணித்து கண்டறியும் கதைதான் தளபதி விஜய்யின். 'வாரிசு' படக் கதை 'என இணையத்தில் ரசிகர்கள் பதிவிட்டு வருகிறார்கள்.

**எஸ். எம். பாருக், திஹாரி.**

**கேள்வி: கண்ணதாசன் எழுதிய பாடல்களில் உங்களுக்கு பிடித்த பாடல் வரிகள் ஏதாவது இருக்கிறது?**

**பதில்:** புல்லாங் குழலில் காற்று புகுந்தால் புதுப் புது இசையாகும்! பொல்லா மனதில் ஆசை புகுந்தால் பொழுதும் பகையாகும்! வார்த்தைகளை வைத்து கவிஞர் எப்படி விளையாடி இருக்கிறார் என்று கவனித்தீர்களா!

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# ஜான்வி கபூருக்கு கணவராக தகுதிகள்

**தனது** வருங்கால கணவர் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் மறைந்த ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர். மறைந்த ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் இந்தி படங்களில் நடித்து வருகிறார். அவரது நடிப்பில் வந்த குஞ்சன் சக்சேனா த கார்கில் கேர்ள் படம் பாராட்டை கொடுத்தது. தற்போது 2 படங்களில் நடித்து முடித்து விட்டு மேலும் 2 புதிய படங்கள் கைவசம் வைத்து நடித்து வருகிறார். சமூக வலைதளத்தில் அடிக்கடி கவர்ச்சி படங்களை பகிர்ந்து ரசிகர்களுக்கு நெருக்கமாகி உள்ளார். தனது வருங்கால கணவர் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஜான்வி கபூர் அளித்துள்ள பேட்டியில், ''நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை. திருமணத்தின் மீது எனக்கு விருப்பம் உள்ளது. என்னை திருமணம் செய்து கொள்பவர் நான் செய்யும் வேலைகளை நேசிக்க வேண்டும். அவருக்கு நன்றாக நகைச்சுவை உணர்வு இருக்க வேண்டும். எப்போதும் என்னை சிரிக்க வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். எந்த நேரமும் ஏதோ ஒரு விஷயத்தை எனக்கு கற்பித்த படி என்னை உற்சாகமாக வைத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட குணங்கள் இருப்பவரை நான் கணவராக தேர்வு செய்வேன். நான் ஸ்ரீதேவியின் மகள் என்பதால் சினிமாவில் எளிதாக வர முடிந்தது. ஆனால் யாராக இருந்தாலும் திறமையை நிரூபித்தால்தான் நிலைத்திருக்கமுடியும்'' என்றார்.



# "குதூகலத்தில்" அம்மு அபிராமி



**பனியன்** தயாரிப்பில் நடக்கும் சம்பவங்கள் முதன் முதலாக தமிழில் படமாக்கப்படுகின்றன. இந்த படத்தை உலகநாதன் சந்திரசேகரன் இயக்குகிறார். அறிமுக இயக்குனர் உலகநாதன் சந்திரசேகரன் இயக்கத்தில் நடிகர் பாலமுருகன் கதாநாயகனாக அறிமுகமாகும் படம் "குதூகலம்".

இப்படத்தில் கதாநாயகியாக அம்மு அபிராமி நடிக்கிறார். இவர்களுடன் கவிதா பாரதி, புகழ், பியான், சஞ்சீவி, அனிஸ், மன்மோகித், பிரேமி, தயாரிப்பாளர் எம். சுகின்பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். திருப்பூர் பனியன் தயாரிப்பில் நடக்கும் சம்பவங்களை வைத்து உருவாக்கப்படும் இப்படத்தை ரெட் & கேட் பிக்சர்ஸ் சார்பில் எம்.சுகின்பாபு முதல் படைப்பாக தயாரிக்கிறார். இப்படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார் இயக்குனர் உலகநாதன் சந்திரசேகரன். இவர், சிவகார்த்திகேயன் நடித்த 'காக்கி சட்டை', 'எதிர்நீச்சல்' படங்களில் துணை இயக்குனராகவும் தனுஷ் நடித்த 'கொடி', 'பட்டாசு' போன்ற படங்களில் இணை இயக்குனராகவும் பணிபுரிந்துள்ளார். "குதூகலம்" படத்திற்கு பியான் சர்ராவ் இசையமைத்துள்ளார்.

மணி பெருமாள் ஒளிப்பதிவு செய்துள்ளார். மேலும், இப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் திருப்பூரில் படமாக்கப்படுவதாக படக்குழு தெரிவித்துள்ளது.

# வைரலாகும் தனுஷின் "தாய் கிழவி" பாடல்



**மித்ரன் ஜவஹர்** இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் திருச்சிற்றம்பலம். இப்படம் வருகிற ஓகஸ்ட் 18ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. யாரடி நீ மோகினி', 'குட்டி', 'உத்தமபுத்திரன்' படங்களை இயக்கிய மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் உருவாகி உள்ள 'திருச்சிற்றம்பலம்' படத்தில் தனுஷ் நடித்துள்ளார்.

இப்படத்தில் நித்யா மேனன், பிரியா பவானி சங்கர், ராஷி கன்னா, பிரகாஷ்ராஜ், இயக்குனர் பாரதிராஜா உள்ளிட்ட பல முன்னணி பிரபலங்கள் நடித்துள்ளனர். இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது.

அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகளில் படக்குழு ஈடுப்பட்டுள்ளது. 7 வருடங்களுக்குப் பிறகு தனுஷ்அனிருத் கூட்டணி இப்படத்தின் மூலம் இணைந்திருப்பதால் படத்தின் மீதுள்ள எதிர்ப்பார்ப்பு அதிகரித்துள்ளது. திருச்சிற்றம்பலம் படத்தின் முதல் பாடலான "தாய் கிழவி" என்ற பாடல் (24.06.2022) வெளியாகும் என வீடியோ பதிவின் மூலம் தனுஷ் சில தினங்களுக்கு முன்பு அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் அறிவித்திருந்தார். இந்நிலையில் அறிவித்தபடி இப்படத்தின் முதல் பாடல் வெளியாகி உள்ளது.

அனிருத் இசையில் தனுஷ் குரலில் பெரும் எதிர்ப்பார்ப்பில் வெளியான "தாய் கிழவி" பாடலை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். கிராமத்து பாணியில் உருவாகி இருக்கும் இப்பாடல் தற்போது சமுக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# ஷாருக்கானை கட்டி அணைத்த திவ்ய தர்ஷினி

**அட்லீ** இயக்கத்தில் 'ஜவான்' திரைப்படத்தில் ஷாருக்கானுடன் நடிகை நயன்தாரா ஜோடி சேர்ந்துள்ளார். இந்த நிலையில் ஷாருக்கான் இந்த மாத தொடக்கத்தில், நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவனின் திருமணத்தில் கலந்து கொண்டபோது இணையத்தில் பெரும் வைரலானது. திருமண விழாவில் பிரபல விருந்தினர்களுடன் அவர் போஸ் கொடுக்கும் பல படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

சமீபத்தில், பிரபல தமிழ் சினிமா மற்றும் தொலைக்காட்சி நடிகை திவ்ய தர்ஷினி தனது டுவிட்டர் பக்கத்தில், ஷாருக்கானுடன் எடுத்த சில புகைப்படங்களை பகிர்ந்துள்ளார்.

முதல் படத்தில், திவ்ய தர்ஷினி ஷாருக்கை கட்டிப்பிடிக்கிறார், அடுத்த படத்தில், அவர்கள் கெமராவுக்கு வெறுமனே போஸ் கொடுக்கிறார்கள். இந்த புகைப்படங்களுடன், ஷாருக்கான் சினிமா துறையில் கால்பதித்து 30 ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில், அவரை பாராட்டி திவ்யதர்ஷினி எழுதியுள்ளார்.

"நான் அவரை இறுகக் கட்டிப்பிடித்து, நான் சொல்ல விரும்பிய அனைத்தையும் அவரிடம் சொன்னேன், 'இவ்வளவு வருஷங்கள், பல நினைவுகள், நீங்கள் எங்களுக்குக் கொடுத்த மகிழ்ச்சி மிகவும் அதிகம் சார்.





# மேமன்சமூக இளந்தலைமுறையினருடன் மூத்தோரின் அனுபவங்களை பகிரும் செயலமர்வு



இலங்கை மேமன் சமூகத்தின் முதலாவது தலைமுறையினரின் அனுபங்களை, இளம் சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்ளும் விஷேட செயலமர்வு அண்மையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள மேமன் சங்கத் தலைமையகத்தில் இடம்பெற்றது. இச்சமூகத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், டவர் மண்டப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான ஹாஸிம் உமரின் தலைமையில் நடந்த இந்நிகழ்வில், மேமன் சமூகத்தை பிரதிநித்துவப்படுத்தும் சிரேஷ்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு, மேமன் சமூக இளைய தலைமுறையினர் புரிந்துகொள்ளும் வகையில், மூத்த பரம்பரையினர், இலங்கைக்கு வந்த போது நிலவிய, சூழ்நிலைகள் குறித்த அனுபவங்கள் மற்றும் கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன. நிகழ்வின் சிறப்புப் பேச்சாளர்களாக ஹாஜி அன்வர் அஹமட், ஹாஜிஅஹமட் ரஹுமான், ஹாஜி ஏ சத்தார் அபூபக்கர், ஹாஜி சித்தீக் அஹமட் மற்றும் ஹாஜி ஜிக்கர்காஸிம் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வின் இறுதியில் சிறப்புப் பேச்சாளர்களை கௌரவிக்கும் பொருட்டு, சிறந்த வெகுமதிகளும் வழங்கப்பட்டன. ஹாஸிம் உமரிடமிருந்து பேச்சாளர்கள் வெகுமதிகளைப் பெறுகின்றனர்.







## சேப்பால கடத்திய விமானத்துக்கு 40 வருடங்கள்

**நாராயணசாமி ஜெயரட்னம்**
**களுத்துறை சுழற்சி நிருபர்**

உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற விமானக் கடத்தல் வரலாற்றில் இலங்கையர் ஒருவரால் சுமார் 300 பயணிகளுடன் முதன் முதலாக விமானம் ஒன்று கடத்தப்பட்ட துணிகர சம்பவம் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் அதாவது 1982ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்றது. சேப்பால ஏக்கநாயக்க தனது

மனைவி மற்றும் மகன் மேல் கொண்டிருந்த அளவில்லாத அன்பின் காரணமாக இந்த சம்பவம் இலங்கை வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கின்றது.

இக் கடத்தல் நாடகத்தின் பிரதான நாயகனான சேப்பால ஏக்கநாயக்க 1949ஆம் ஆண்டு ஜுன் மாதம் மூன்றாம் திகதி மாத்தறை மாவட்டத்திலுள்ள கரதொட்டை என்ற கிராமத்தில் பிறந்தார். அம்பாந்தோட்டை, யோதகண்டிய மகா வித்தியாலயத்தில் கல்வியை தொடர்ந்த இவர் தனது பதினைந்தாவது வயதில் தந்தையுடன் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகள் காரணமாக கல்வி நடவடிக்கைகளை இடை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்து வெளியேறி கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். சிலகாலம் கொழும்பில் வசித்து வந்த நிலையில் அத்துல ஜயவிக்கிரம என்ற நண்பர் ஒருவரின் உதவியுடன் 1972ஆம் ஆண்டில் அவரது 23வது வயதில் மேற்கு ஜெர்மனியை சென்றடைந்தார்.

ஜெர்மனியில் வசித்து வரும் காலப் பகுதியில் இத்தாலிய நாட்டு இளம் அழகியான அன்னா அல்ட்ரோவாண்டி (Anna Aldrovandi) என்ற பெண்ணுடன் ஏற்பட்ட நட்பு நாளடைவில் காதலாக மலர்ந்த 1977ஆம் ஆண்டு இருவரும் திருமண பந்தத்தில் இணைந்தனர். அதன் பின்னர் 1980ஆம் ஆண்டில் இத்தாலியின் மொடெனா பகுதிக்கு சென்று குடியேறிய தம்பதிகளுக்கு Fririe Ekanayaka என்றொரு மகன் பிறந்தார்.


இந் நிலையில் வீசா காலாவதியானதால் சேப்பால ஏக்கநாயக்க இலங்கைக்கு வரவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தனது அழகிய குடும்ப வாழ்க்கையில் ஏற்பட போகும் விரிசல் காரணமாக மனமுடைந்த நிலையில் காணப்பட்டார். இதற்கிடையே இத்தாலியில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்புக் கொண்டு சேப்பாலவுக்கு வீசாவைப் பெற்றுக் கொள்ளும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டார். எனினும் இத்தாலிய அதிகாரிகள் இலங்கைக்குச் சென்று அங்குள்ள இத்தாலிய தூதரகம் மூலம் விண்ணப்பித்து வீசா பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தனர்.

இலங்கைக்கு திரும்பிய சேப்பால ஏக்கநாயக்க இலங்கைக்கான இத்தாலிய தூதரகம் மூலம் இத்தாலிய குடியுரிமை கோரி விண்ணப்பம் செய்தார் எனினும் அதற்கு ஆறு வருடங்கள் செல்ல வேண்டும் என்று அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

அவர் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தது. இதன் போது இத்தாலிய பெண் அதிகாரி ஒருவர் சேப்பாலவை மிகவும் அலட்சியப் படுத்தியதுடன் "முடிந்தால் எடுத்துக் கொள்ளுங்கள்" என சவால் விடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்து பொறுமையிழந்த தனது உயிருக்கு உயிராக நேசித்த மனைவியையும் மகனையும் எதேனும் ஒரு வகையில் அடைந்தே தீருவேன் என்ற வைராக்கியத்துடன் " நான் சவாலை ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறி தூதரகத்தில் இருந்து வெளியேறினர்.



சவாலை ஏற்றுக் கொண்ட போதிலும் அத்தருணத்தில் அதனை எப்படி நிறைவேற்றுவது என்று அவரிடம் ஏதும் திட்டங்கள் இருக்கவில்லை. அவரது ஒரே குறிக்கோள் தனது பாசத்துக்குரிய மனைவி மற்றும்



மகனை அடைவதே ஆகும். இச் சந்தர்ப்பத்தில்

தான் சேப்பால ஏக்கநாயக்க 1982ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதி இலங்கையில் இருந்து இந்தியாவின் புதுடில்லிக்கு நண்பர் ஒருவருடன் புறப்பட்டு சென்றார். ஏற்கனவே திட்டமிட்டபடி உதவிக்காக நண்பன் பண்டாரவை அழைத்துச் சென்ற போதிலும் இறுதியில் தான் தனியாகவே இக் காரியத்தில் ஈடுபடுவதாக தீர்மானித்தார். ஆம், டெல்லி விமான நிலையத்திலிருந்து இத்தாலிய அலிதாலியா விமான நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 747 விமானத்தில் ஏறினார். இவ் விமானம் இத்தாலிய ரோம் நகரில் இருந்து ஜப்பானின் டோக்கியோ நகரை நோக்கி சுமார் 300 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்தது. விமானம் தரையில் இருந்து சுமார் 35000அடி உயரத்தில் பறந்துக் கொண்டிருந்த போது சேப்பால தனது திட்டத்தை செயல்படுத்த

தொடங்கினார். இதனடிப்படையில் அவரின் கோரிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை பிரதான விமானிக்கு சமர்ப்பித்தார். அக் கடிதத்தின் அடிப்படையில் விமானம் தாய்லாந்தில் உள்ள பெங்கொக் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட வேண்டும் என்பது முதல் கோரிக்கை ஆகும். அதேவேளை தனது மனைவி மற்றும் குழந்தையுடன் மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்களையும் குறித்த விமான நிலையத்தில் தன்னிடம் ஒப்படைக்குமாறும் கோரியிருந்தார். மேலும் விமான நிலையத்தில் விமானம் தரையிங்கியதும் விமானத்தின் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டே இருக்க வேண்டும். கோரிக்கைகள் யாவும் கூடிய விரைவில் பெங்கொக் மற்றும் இத்தாலிய அதிகாரிகளுக்கு

அறிவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தகவல்கள் யாவும் ரேடியோ மெசேஜ் மூலம் மட்டுமே செயல்படுத்த வேண்டும். தற்போது எங்களிடம் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அதி நவீன ரக வெடிகுண்டுகள் கைவசம்உள்ளதாகவும். நாங்கள் ஏமாற்றப்படும் பட்சத்தில் விமானத்தின் உள்ளேயும் இத்தாலிய மொடெனா உள்ளிட்ட வேறு சில நகரிலும் வெடிகுண்டுகள் வெடிக்க கூடும் எனவும் கூறிப்பிடப்பட்டிருந்தது.

அக் கடிதத்தை வாசித்த விமானி ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் அதன் அழிவை ஓரளவாவது குறைக்கும் என்ற ஒரு நம்பிக்கையில் உடனடியாக விமானத்தை சுமார் 25000 அடி உயரத்திற்கு கீழே இறக்கினார். மேலும் சேப்பாலவின் வேண்டுகோளுக்கு இணங்க தொழில்நுட்ப கோளாறு காரணமாக பெங்கொக் விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்படுவதாக பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டு Bangkok Don Muang International airportஇல் தரையிறக்கபட்டது. விமான நிலைய தற்போதைய நிலைமை யாவும் தனக்கு சாதகமான முறையில் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதை அறிந்த சேப்பால முதலில் இலங்கையில் உள்ள இத்தாலிய தூதரகத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தன்னை சங்கடப்படுத்திய அதிகாரியிடம் "நான் சொன்னதைச் செய்துவிட்டேன்" என கூறியதாகவும் சொல்லப்படுகின்றது.

சுமார் 30 மணிநேரம் கடந்து சேப்பாலவின் மனைவியும் மூன்றே வயதான குழந்தையும் இத்தாலியில் இருந்து பெங்கொக் விமான நிலையத்தை வந்தடைந்தனர். அதனைத் தொடர்ந்து பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க சேப்பால இணக்கம் தெரிவித்தார். தனது கோரிக்கைகள் யாவும் எதுவிதமான பிரச்சினைகளும் இன்றி நிறைவேற்றப்பட்ட போதிலும் மீட்டெடுத்த மனைவி மகனுடன் மற்றும் பணத்துடன் அவர் எங்கு எப்படி வாழப் போகிறார் என்ற பிரச்சினை மேலெழுந்தது. இச் சந்தர்ப்பத்தில் தாய்லாந்துக்கான இலங்கை தூதுவராக கடமையாற்றிய மானெல் அபேசேகர எவ்வித பிரச்சனையும் இல்லாமல் நீங்கள் இலங்கைக்கு சென்று குடியேற அனுமதிப்பதாக சேப்பாலவிடம் உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து எல்லாவற்றையும் வென்றெடுத்த ஒரு மாபெரும் வீரனாக இலங்கை விமானநிலையத்தில் மக்களால் வரவேற்கப் படுகின்றார். அவ்வாறு வந்தவர் இரண்டு மூன்று தினங்கள்

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர் சொந்த ஊருக்கு செல்ல தீர்மானித்தார்.

எனினும் இச் செயலுக்கு இத்தாலிய அரசிடம் இருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் சேப்பாலவை கைது செய்து இத்தாலியிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்தனர். எனினும் அப் போதைய இலங்கை சட்ட

புத்தக சட்டக் கோவையில் இத்தகைய குற்றங்களுக்கு எவ்வாறான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்று சட்டப் பிரகாரம் குறிப்பிடபட்டு இருக்கவில்லை என்பதால் இலங்கை அரசு பாரிய சிக்கலை எதிர் கொண்டது. இத்தாலியின் கடும் அழுத்தங்கள் காரணமாக விமான கடத்தலுக்கு எதிரான புதிய சட்டம் இலங்கை

பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்படுகிறது. இதனடிப்படையில் அவரது சொந்த ஊரான மாத்தறைக்கு செல்லும் வழியில் இறுதியில் காலி பொலிசாரால் சேப்பாலவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகிறார். இதன் போது இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. எனினும் மேன்முறையீட்டின் மூலம் அந்த தண்டனை ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.அதன் அடிப்படையில் ஐந்து வருட சிறை தண்டனை பெற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றதும் அவரது மனைவி மற்றும் மகன் இருவரும் மீண்டும் இத்தாலிக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

1987ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலையான சேப்பால சில காலம் கழித்து யசாங்கனி மதுபாலி என்ற ஆங்கில ஆசிரியை ஒருவரை திருமணம் செய்து கொண்டார்.

அவருக்கு விராம் ஏக்கநாயக்க என்றொரு மகனும் மற்றும் சேலி ஏக்கநாயக்க என்றொரு மகளும் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் தற்போது வெளிநாட்டில் (பிரான்ஸ்) வசித்து வருவதாக அறியக் கிடைக்கின்றது. முன்னாள் மனைவி அன்னா அல்ட்ரோவாண்டி இத்தாலிய சட்டத்தின் மூலம் சேப்பாலவிடம் இருந்து விவாகரத்து பெற்றதுடன் மகனின் முழுப் பெயரான ஃப்ரீரி ஏக்கநாயக்க என்பதை ஃப்ரீரி அல்ட்ரோவாண்டி என அவரது குடும்ப பெயரில் பெயர்மாற்றம் செய்ய முற்பட்டார் எனினும் மகனின் எதிர்ப்பால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

# செல்ஃபி உலா



நிருபன், நிசா
சிறுபிட்டி, நீர்வேலி,
யாழ்ப்பாணம்



Siyan



Sham



Kalavarshny Kanagaratnam



Abilash and Dhanesan



vijay



எஸ்.வீ. விநோதன்



கலைஞர் ஞானம் பாஸ்கரன்



R. Pradeesha K. F. Diabetes Center..



மலீஸ் அமீன் மருதமுனை



Abthul Kalan NM



வேனிஷாமிர்தா,
பிரவினாமிர்தா. வத்தேகம

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்



## 06 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



apple



I'm a fruit.
I'm sweet.
I have black seed in the middle.
I'm white inside and red or green outside.
Who am I?

## நான் ரொம்ப பிஸி...



# 'இணையத் தமிழன்' விருதை வென்ற ஜனூஸ் சம்சுதீன்

பல்வேறு துறைகளில் கனதியான சாதனை படைத்த ஆளுமை மிக்க சான்றோரை பாராட்டும் "தமிழ்மகன் விருது2022" விழாவின் போது இணைய வெளி நவீன சமூக ஊடக பரப்பில் ஆக்கபூர்வமான திறன்களை வெளிப்படுத்தியமைக்காக' இணையத் தமிழன்' விருதினை வியூகம் ஊடக வலையமைப்பின் பிரதானியும், இலங்கையின் தேசிய வானொலி மற்றும் தேசிய தொலைக்காட்சியின் அறிவிப்பாளரும், கவிஞருமான ஜனூஸ் சம்சுதீன் பெற்றுக் கொண்டார்.

கட்டாரில் அல்அரப் ஸ்டேடியத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்ற இவ்விருது விழாவில், கட்டார் வாழ் அரபுலக பிரமுகர்கள், தென்னிந்திய சினிமா கலை நட்சத்திரங்கள், பல்துறை சார் ஆளுமைகள், கட்டார் வாழ் புலம்பெயர் மக்கள் என பெரும் திரளானோர் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது எனும் ஊரரைச் சேர்ந்த ஜனூஸ்




சம்சுதீன், இலங்கையின் தேசிய வானொலியாம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், மற்றும் தேசிய தொலைக்காட்சியாம் ரூபவாஹினி நேத்ரா டீவியின் பகுதி நேர அறிவிப்பாளராகவும் மேலும், கவிஞர், எழுத்தாளர், இயக்குனர், நடிகர், சுயாதீன ஊடகவியலாளர், சமூக ஊடக செயல்பாட்டாளர் என பல்வேறு தளங்களில், தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார்.

'தாக்கத்தி' மற்றும் 'மூசாப்பும் ஒரு முழ வெயிலும்' என இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

இணைய, சமூக ஊடக அன்பர்களை கருத்திற் கொண்டு 'குரலாகி' எனும் பெயரில் கவிதை ஒலி ஒளி இறுவட்டினை வெளியிட்டுள்ளார்.

கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் சக்தி எப்.எம் இல் 2005 2009 வரை ஒலி பரப்பாளராகவும், பிரதி எழுத்தாளராகவும் மற்றும் சுடர் ஒளி பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பணி புரிந்துள்ளார்.

2009 ஆம் ஆண்டில் சுனாமியைச் சித்தரிக்கும் ஆவணத் திரைப்படமான 'பெத்தம்மா' வையும் மற்றும் 'பதியம்', 'வைதிஸ் கொல வெறி' போன்ற குறுந்திரைப் படங்களையும் வெளியிட்டுள்ளதோடு, தேசிய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பான பல தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துள்ளார். அத்துடன் தேசிய தொலைக்காட்சிகள், வானொலிகளில் நிறைய நாடகப் பிரதிகளையும் எழுதியுள்ளார்.




மிக இளம் வயதில் கலை, இலக்கியம், ஊடகம், சமூக சார்ந்த செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்துக் கொண்டிருக்கும் இவர், இலங்கையின் சமூக ஊடக செயற்பாடுகளில் யாரும் வெளிப்படுத்தாத காத்திரமான சமூக ஊடக புரட்சியினை ஏற்படுத்தியுள்ளார்.

2016 ஆம் ஆண்டில் முகநூல் தளத்தில் குரலற்ற மக்களின் குரல் எனும் மகுட வாசகத்தில் 'வியூகம் TV' எனும் பெயரில் ஒரு முகநூல் தொலைக்காட்சியினை நிறுவி, அதனூடாக சமூக ஊடக பரப்பில் புத்தெழுச்சியான ஊடக கலாசாரத்தினை தோற்றுவித்தார். இவரின் முதன் முதலான முன்மாதிரியான சமூக ஊடக பயணத்தின் எழுச்சியில் ஈர்க்கப்பட்டு தற்போது இலங்கையில் பல சமூக ஊடக சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வியூகம் இலங்கையில் மாத்திரம் அல்ல, சர்வதேசங்களிலும் மக்களால் அதிகம் விரும்பப்படும் ஒரு சமூக ஊடகமாய் திகழ்கிறது. சர்வதேசம் எங்கும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் உறவுகள் வியூகம் முகநூல் நேரலை தொலைக் காட்சியினை பின் தொடர்ந்து வருகின்றனர்.

வியூகம் இலங்கையின் அரச உயர் தலைவர் முதல்அடித்தட்டு பாமர



மகன் வரை நேர்காணல்களை செய்துள்ளது.

அரசியல், கல்வி, சமூகம், சமயம், கலை, இலக்கியம், மக்களின் பிரச்சினைகள், தீர்வுகள் என பல்வேறு தலைப்புகளில் இது வரை ஆயிரக்கணக்கான காணொளி நிகழ்ச்சிகளைப் படைத்துள்ளது.

குறிப்பாக தேசிய ஊடகங்களில் வெளிக்கொணரப்படாத வெகு மக்களின் பிரச்சினைகள், எளிய மக்களின் உள்ளத்து உணர்வுகள், சமுதாயம் சார் எதிர்பார்ப்புகளை சர்வதேசம் எங்கும் வெளிச்சம் போட்டு காட்டியதில் வியூகம் ஊடகத்தின் பங்களிப்பு கனதியானது.

ஏனைய ஊடகங்கள் தொடத் தயங்கிய நூற்றுக்கணக்கான பொதுச் சமூகத்தின் அவலங்களை வியூகம் ஊடகமயப்படுத்தி இருக்கிறது.

இலங்கையில் மாத்திரம் முடங்கி விடாமல் வெளிநாடுகளுக்கும் சென்று வியூகம் தனது சமூக ஊடக பயணத்தினை விஸ்தரித்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியா, கட்டார், துபாய் போன்ற தேசங்களுக்கு ஜனூஸ் சம்சுதீன் தலைமையிலான வியூகம் குழுமத்தினர் பயணித்து அங்கிருந்து பற்பல சமூக பெறுமானம் மிக்க நிகழ்ச்சிகள், வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகத்தினை உள்ளங்கையில் உள்ளடக்கும் இணையத்தினையும், நவீன ஊடக செல்நெறிகளையும் தேசம் தழுவிய தமிழ் மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டு சேர்த்ததில் ஜனூஸ் சம்சுதீன் வகிபாகமும் குறிப்பிடத்தக்கது.


Mojo எனப்படும் குறுகிய தொழில் நுட்ப வளங்களை கொண்டதான தனது ஊடக நகர்வுகளின் ஊடாக பாரிய சமூக மாற்றங்களை ஜனூஸ் சம்சுதீன் நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

தேசிய ஊடகங்கள், சமூக மற்றும் இணைய ஊடகங்கள் மூலமாக தமிழுக்கும், தமிழ் சமூகத்திற்கும் ஜனூஸ் சம்சுதீன் தன்னால் இயன்ற பங்களிப்பினை நல்கிக் கொண்டிருக்கின்றார். அதன் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இவர் பல்வேறு விருதுகள், பாராட்டு சான்றிதழ்கள், சான்றோரின் வாழ்த்துரைகள் பெற்றுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை வாழ் இலக்கிய சமூகம் இவரது அயராத சேவைகளைப் பாராட்டி மகிழ்கிறது.

எம்.எஸ்.எம்.ஸாகிர்...

# எல்லாவற்றையும் எழுத்தாய் மாற்றி: அ.மார்க்ஸ்



பேராசிரியர் அ.மார்க்ஸ் உலகளவில் அறியப்பட்ட தமிழ் நாமம். இலக்கியப்புலத்திலும், சமூக, அரசியல் களத்திலும் தொடர் செயற்பாட்டு வடிவமாகத் திகழ்பவர். அதிகார மையங்களுக்கு எதிரான குரல் இவருடையது. இவரது செயற்படு பாதை, பயணத்தின் நீட்சி; நடையின் இலக்குக் குறித்தெல்லாம் 'எல்லாவற்றையும் உரையாடல்களாய் மாற்றி..'' என்கிற இவரது நேர்காணல்களின் தொகுப்பு வெளிப்படுத்துகிறது.

பேராசிரியர் மார்க்ஸ் நீண்டகாலமாக அதிகமாக எழுதிவருபவர். இவரது எழுத்துக்களின் அதிர்வு காலத்தின் பிரதானம். இவரது இயங்கு நிலை சமூக ஓட்டத்தின் அதிர்வு.

அரை நூற்றாண்டுக்கு மேலாக சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் தொடங்கிய எழுத்தின் பயணம், மார்க்ஸியம், சமூகப் பண்பாட்டு ஆய்வுகள், தலித்தியம், பின் நவீன அரசியல், கல்வி, அரசியல், மருத்துவம், பெண்ணியம் இன்ன பிற துறையின் மாற்றங்கள் குறித்து செயற்திறனுடன் எழுதுபவர் மார்க்ஸ். மனித உரிமை சார் குரலுடையவர். உலக இயங்கு நிலை குறித்த ஆழ்ந்த பார்வையுடன் எழுதுபவர்;. பேச்சாளர், கலந்துரையாடலாளர், செயல்படு ஆளுமை பேராசிரியர் அவர்கள்.

எல்லாவற்றையும் சமூக நிகழ்நிலையிலும், விமர்சன நிலை சார்ந்து நின்று எதிர்க்குரல் எழுப்பவல்ல மார்க்ஸ் எல்லாவற்றையும் எழுத்துக்களாக மாற்றுபவர். இயற்பியல் பேராசிரியராகப் பணிசெய்து ஓய்ந்த பின்னும் ஓயாது இயங்கிக் கொண்டிருப்பவர். புத்தகம் நிறைந்த தோள்களுடன் ஊரூராக அலைந்து கொண்டிருப்பவர். கருத்தரங்கு, பேச்சு, கலந்துரையாடல், விமர்சனம் எனப் பல்தளத்தில் பயணிப்பவர் பேராசிரியர் அ.மார்க்ஸ்.

'எல்லாவற்றையும் உரையாடல்களாய் மாற்றி' என்ற மார்க்ஸின் நேர்காணல்களின் தொகுப்பு ஓடை பொ.துரை அரசனால் தொகுக்கப்பட்டது. 'மாற்று கலாசார குழுக்கள் நம்பிக்கையளிக்கின்றன' என்ற நேர்காணலில் தொடங்கி 'தயவு செய்து என் எழுத்துக்களை இன்னொரு முறை படித்துவிட்டு இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்' என்பது வரையான பதினெட்டு நேர்காணல்கள் இந்நூலில் இடம்கொள்கின்றன. மார்க்ஸின் ஆழ்ந்த அறிவும் சமூக நோக்கும் பல்துறை தேடலும் இந் நேர்காணல்கள் வழியே பிரிகின்றன. முதல் நேர்காணலில் டானியல், அம்பேக்கர், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், பாலகுமாரன் ஆகியோர் குறித்த அவரது சமூகவியல் பார்வை வெளிப்படுகிறது. மற்றும் சிறுசஞ்சிகைச் சூழல் அதன் சமூகப் பண்பாட்டு அடையாளங்கள் அல்லது போக்குகள் குறித்த பார்வை கனதியானது. தலித்தியம், நவீனம், பின்நவீனம், மாற்றுக்கலாசாரம் குறித்தும் அலசுகிறார். ஏகாதிபத்தியம், மார்ச்சிஸம், சோசலிசம் குறித்தெல்லாம் தனது பார்வையை விசாலிக்கிறார்.

பேராசிரியர் அ.மார்க்ஸின் நேர்காணல்கள் எல்லாவற்றையும் உரையாடல்களாய் மாற்றி தந்துள்ளது. இந் நேர்முகம் மார்க்ஸின் வெட்டு முகமும் ஆகும்.

# எழுத்துரையாடல்





இலக்கியத்தில் அல்லது இயங்கு துறைகளில் உரையாடல் பெறும் முக்கியத்துவம் சாதாரணமானதல்ல. துறைசார் உரையாடலென்பது அத்துறை மீது ஒளி பாய்ச்சும் செயல்திறனையாகும். உரையாடலென்பது மானுடத் தொடர்பாடலின் ஆதி காலத்திலேயே தொடக்கம்பெற்று செழுமையடைந்து வந்துள்ளது. உரையாடலுக்குள் ஊடுபரவி நிற்கும் வினா விடை என்கிற வினையாற்றுகை காத்திரமான கதையாடல் வெளிகளைத் திறந்து விடவும் வல்லது. ஒலியுரையாடல், காட்சியுரையாடல், பின்நூலுரையாடல் என்பவற்றுக்கு அப்பால் எழுத்துரையாடல் வீறுடையது. வாசிப்பினூடாக அனுபவத்தை சுவாரசியத்துடன் பகிரவல்லது. இலக்கியப் புலத்தில் உரையாடலும் இன்று ஒரு படைப்பாக்கமாகவே நோக்கப்படுகிறது. கவிதையில் உரையாடலைக் காணுகிறோம். சிறுகதையில் உரையாடல், பாத்திர நகர்வுச்சுட்டியாகி நிற்கிறது. நாவலிலும் தொடர் உரையாடல்களூடாகச் சம்பவங்களின் கோர்வையைக் காணுகிறோம் என்பது போல் உரையாடல் என்கிற நேர்முகமும் ஒரு வகைக் கலை வடிவமாகிறது.

ஆளுமையின் அனுபவவெளியை உரையாடல் முன்னெடுக்கும்பாங்கு, வினாத்தொடுக்கும் விதம், கருத்துக்களை உணர்வு பூர்வமாய் முன்வைக்கும்பாங்கு, குரல்மொழி, உடல்மொழி, மென் எழுத்துரையாடல் என்பன இலக்கியப் பெறுமதியாகிறது. உலக இலக்கிய வெளியில் எல்லா மொழிகளிலும் எழுத்தாளுமைகளின் எழுத்துரையாடல்களைக் காண்கிறோம்.

பத்திரிகைகள், இதழ்கள், சிறுசஞ்சிகைகள், மலர்கள், சிறப்பிதழ்கள் என உரையாடல்களுக்கென பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. அவ்வப்போது எழுதப்பட்ட அல்லது கதையாடப்பட்ட தொகுப்பு நூல்கள் இலக்கியங்களிலும் மிகக் காத்திரமான இடம் பிடித்துள்ளன. மூத்த ஆளுமைகளின் அனுபவங்களைப் படித்தறியவும் இலக்கியப் போக்கு நிலை பற்றி உணரவும் எழுத்துரையாடல்கள் பெரிதும் உதவுகின்றன என்பதனால் எழுத்துரையாடல்கள் வாசிப்பு ஈடுபாட்டிற்கான இன்னொரு ஊக்கியுமாகும். இத்தகைய ஆரோக்கியமான களம் எழுத்துரையாடல்களின் மீது ஒளி பாய்ச்சி நிற்கிறது எனலாம்.

# ஒளவன் கவிதை

## வாழ்தலின் புதிரில் நீ கரையும் நான்



சலனங்களின் இரவிலிருந்து
வழிகிறது முதல் துளி
கண்ணீராலிருந்தது காலடியில்
வீழ்ந்திற்றுக்கனம்

சலனமற்ற
சிறு பொழுதொன்றின் தேடலில்
அலைகிறது காலம்

மீளவும் சலனங்களின்
இரவிலிருந்து வழிகிறது
வேர்வை
ரத்தம் சீழ்
நீளும் ராவின் பயங்கரத்தில்
அசையும் ஓவியமெங்கும்
கால்கள் நீ
சலனமற்ற
சிறு பொழுதொன்றில் ஆவல் பூத்த
மனசிலொரு பன்னீர்த்துளி
வாழ்தலின் விம்பம் கரைந்த
மென் மழையின்
ஆயிரத்தோராவது
துளியிலொரு புலர் பொழுது
காலடியை எடுத்து வைக்கையில்
ஆயிரம் இரவுகளை முறித்த திமிரில்
சலனமற்று உறைகிறேன்

உன்கால்களின் கீழ்
பன்னீர் வாசம் பூப்பதாய்
ஓவியம் நீள்கிறது

# ஊமைக்காட்சி 03



எல்லா ஊர்களிலும் எடிசன்கள் செத்துப் போயிருக்கிறார்கள். எங்கட ஊரிலும் செத்தார்கள்தான். ரீச்சர்மார், சேர்மார் இவன/ இவள வச்சு மேய்க்க எங்களால ஏலா. இது எருமை மாடு மாதிரி வகுப்புக்குள்ள வந்தாலே குழப்பம். இதுவென்டா விடியாத மூஞ்சி. மூஞ்சி கழுவாமல்தான் வாற. இந்தா இதுக்கு ஆனாவும் தெரியா, ஆவண்ணாவும் வராது. இதுகள வச்சு மேய்க்க எங்களால் முடியாது...... 'இதுகளுக்கு ஸ்கூல் சரிவராது. வீட்டோட வச்சு மேய்ங்க...'' உம்மா, வாப்பாமாருக்கு ஏச்சும் உபதேசமுமாக இருக்கும் குழந்தை மனமும் உளவியலும் தெரியாத ஆசான்கள் வாழும் ஊர்களில் எடிசன்கள் செத்துத்தானே ஆக வேண்டும்.

உம்மா, வாப்பாமாரும் லேசுப்பட்டவர்களா? அவர்களும் ஒருபடி மேலே போய், 'நீ எருமை மாட்ட விட மோசம். ஏன்தான் பிறந்தியோ. உனக்குப் படிப்பு சரிவராது. ரீச்சரே சொல்லிட்டா. நீ கழுதை மேய்...'' என்ற அமுத வாசகங்களோடு பாடசாலை வாசலுக்குப் பூட்டும் போடுவார்கள்.

'எனக்கும் தெரியும். பாடசாலை இளங்காலத்தில் நேசத்துக்குரிய இடமாக, விருப்பத்தோடு சென்று ஆடிப்பாடி, விளையாடி, சமவயதுக் குழுவோடு இடையாடி வளர வேண்டிய கவின் களம் என்பது...'' ஆனால்..... என்னோடு ஆண்டொன்றில் படித்தவர்கள் எத்தனை பேர். எத்தனை பேர்? ஓஎல்லுக்கும், ஏஎல்லுக்கும் வந்தார்கள்?

ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் பாதிக்கப்பட்டு தம் எதிர்காலத்தைச் சூன்யச் சுழிக்குள் அமிழ்த்தியிருக்கிறார்கள்.

'ஒன்றுக்கும் உதவாதவர்களென்று இந்த உலகத்தில் ஒருத்தருமில்லை''. ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு விதமானவர்கள். தனியாள் வேறுபாடு கொண்டவர்கள். தனித்தனி விருப்பு, வெறுப்பு, ஆற்றல் மற்றும் செயல்பாடும் மிக்கவர்கள்.

குழந்தைகள் குழந்தை உளவியலூடு ஆற்றுப்படுத்தப்படுவார்களாயின் ஆற்றல் மிளிரும் சமூகம் உருவாகி விடும். சிந்தனையாளர்களும், கண்டுபிடிப்பாளர்களும், புத்தாக்குனர்களும் இந்த உலகின் எழுச்சிக்கு வித்தாவார்கள்.

தோமஸ் அல்வா எடிசனுக்கு என்ன நடந்தது. அவரது ஆசிரியர் எடிசனின் தாயாருக்குக் கடிதமொன்றைக் கொடுத்தனுப்புகிறார். அந்தக் கடிதத்தை எடிசனுக்கு முன்னாலே அவனது தாயார் உரத்து வாசிக்கிறார். 'உங்கள் மகன் மிகவும் திறமைசாலியாக இருக்கிறான். அவனது திறமைக்கு எங்களால் ஈடுகொடுத்துக் கற்பிக்க முடியவில்லை. எனவே அவனை இனிப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டியதில்லை. வீட்டில் வைத்துக் கொள்ளவும்...'' அன்றிலிருந்து எடிசன் பாடசாலைக்கு அனுப்பப்படவில்லை. அவனைத் தாயாரே வீட்டில் வைத்து ஆற்றுப்படுத்தினாள்.

காலம் நகர்ந்தது. எடிசனின் தாயாரும் மரித்து விட்டாள். எடிசன் பெரும் சிந்தனையாளனானார். கண்டுபிடிப்பாளனானார். ஒளிவிளக்கு காட்டினான். ஒலிவரைவி, திரைப்படக்கருவி, திரள்உற்பத்தி எனக் கண்டுபிடித்தார். இவர் மிகச் சிறந்த தொழில் அதிபராகத் திகழ்ந்தார்.

ஒருநாள் தோமஸ் அல்வா எடிசன் தன் பழைய அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அவனது கையில் ஒரு கடிதம் கசங்கிய நிலையில் கிடைத்தது. அது தன் ஆசிரியரால் தன் கையில் தாயாரிடம் ஒப்படைக்குமாறு கொடுத்த கடிதம்தான். அதனை எடுத்து தாயினதும், ஆசிரியர்களதும் நினைவுகளோடு வாசித்தான். 'உங்களது மகன் திறமையற்றவனாக இருக்கிறான். கற்பிப்பதை விளங்கிக் கொள்கிறானில்லை. அவனுக்குப் படிப்பு ஏறாது.

இனி எங்களால் அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க முடியாது. எனவே இனி எடிசனைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்...'' தனது தாயாரால் வாசிக்கப்பட்ட விதத்தால் சிந்தனைவாதியாக மாறியவர், ஆசிரியர்களால் குழந்தைமைக்காலத்தில் ஒதுக்கப்பட்ட சிறுவன் தோமஸ் அல்வா எடிசன். உண்மையில் ஊர்களில் எத்தனை எத்தனையோ தோமஸ் அல்வா எடிசன்கள் செத்துப்போயிருப்பார்கள். எடிசனின் தாயாருக்கு வரலாற்றிலென்றுமொரு மரியாதையுண்டு.







# ஏறாவூர் அறபிக் கலாசாலையின் பட்டமளிப்பு விழா

(ஏறாவூர் நிருபர் **நாஸர்**)

மட்டக்களப்பு ஏறாவூர் மஆனீமுல் முஸ்தபா அறபிக் கலாசாலையின் 16 ஆவது பட்டமளிப்பு மற்றும் 17 ஆவது தலைப்பாகை சூட்டுதல் ஆகிய நிகழ்வுகள் அடங்கிய விழா அண்மையில் நடைபெற்றது.

வருடந்தோறும் நடைபெறும் இவ்விழா நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மூன்று வருடங்களின் பின்னர் இம்முறை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா அந்தரத்தீவு மௌலானா மௌலவி பீஏ. முஹம்மது சைபுத்தீன் ஆலிம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கல்லூரி அதிபர் ஏ. நாகூர் மீரான் ஆலிம் பிரதம அதிதியாகவும் மௌலானா மௌலவி எம்.ஏ.எஸ். அபூபக்கர் ஹம்மாது ஆலிம் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானா ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

2020 ஆண்டில் கல்வியைப் பூர்த்தி செய்த ஆறு பேரும் 2021 ஆம் ஆண்டில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த நான்கு பேரும் இவ்வருடம் கற்கை நெறியைப்பூர்த்தி செய்துள்ள நான்கு பேரும் முஸ்தபிகளாக மௌலவி பட்டம் பெற்றுக்கொண்டனர். இதேநேரம் இவ்வாண்டில் நான்கு மாணவர்களுக்கு தலைப்பாகை சூடப்பட்டது.

மேலும் விரிவுரையாளர் மற்றும் பணியாளர்களும் இதன்போது நினைவுப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.











# இலங்கை வானொலி கலைஞர் சின்னையா நடராஜசிவம்



**சின்னையா நடராஜசிவம் என்ற எஸ். நடராஜசிவம், 1946இல் பிறந்தார். ஜுன் 24,2020இல் தனது 74வது அகவையில் அமரரானார். இவர் இலங்கை வானொலியின் மூத்த அறிவிப்பாளர்களில் ஒருவரும், திறமை வாய்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்பட, மேடை நடிகருமாவார்.**

நீண்டகாலம் இலங்கை வானொலியில் பணியாற்றிய பின்னர் சூரியன் எஃப். எம். வானொலியில் நிகழ்ச்சிப் பணிப்பாளராகப் பணியாற்றினார். இவரது மனைவி புவனலோஜினியும் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றியவர். இவர் கடந்த 2022 மே மாதம் 03 திகதி காலமானார். நடராஜசிவம் கொழும்பு புனித ஜோஸப் கல்லூரியில் கல்வி கற்றவர்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராஜசிவத்தின் தந்தை சின்னையா கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றியவர். தாயார் திருகோணமலையைச் சேர்ந்தவர். நடராஜசிவம் இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் பங்குபற்றித் தனது திறமையை வளர்த்துக் கொண்டார். பின்னர் அறிவிப்பாளராகப் பயிற்சி எடுத்து வர்த்தக ஒலிபரப்பில் அறிவிப்பாளராக இணைந்து 35 ஆண்டுகள் வரை அங்கு பணியாற்றினார். இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றிய புவனோஜினி வேலுப்பிள்ளையைத் திருமணம் புரிந்தார். "ஒதெல்லோ", "நத்தையும் ஆமையும்" முதலான பல வானொலி நாடகங்களில் நடித்ததோடு, ஒலிச்சித்திரங்களிலும் பங்குபற்றியிருக்கிறார்.

## மேடை நாடகங்கள்:

*'Those who sow thw wind'* (காற்றை விதைதவர்கள்) ஆங்கில நாடகம்

## தொலைக்காட்சி:

ரூபவாகினியில் தயாரிக்கப்பட்ட முதலாவது தொலைக்காட்சி நாடகம் என்ற பெருமையைப் பெற்ற, மருத்துவர் ஜே. ஜெயமோகன் எழுதிய 'கற்பனைகள் கலைவதில்லை' என்ற நாடகத்தில் கதாநாயகனாக நடித்தவர். தொடர்ந்து

'லாஹிரு தகசக் (ரூபவாஹினியில் சிங்களத் தொடர் நாடகம் 1985), 'யசோராவய' (சிங்களத் தொடர் நாடகம்), 'அவசந்த' (சிங்களத் தொடர் நாடகம்), 'வனஸபந்து (சிங்களத் தொடர் நாடகம்), 'யுக விலக்துவ' (சிங்களத் தொடர் நாடகம்), தென்னிந்திய நடிகை ராதிகா தயாரித்த, மனோபாலா இயக்கிய 'மீண்டும் மீண்டும் நான்' பல சிங்களத் தொடர் நாடகங்களில் நடித்தவர்.

## திரைப்படங்கள்:

இந்தியக் கலைஞர்களும் இணந்து நடித்த பாதை மாறிய பருவங்கள், புலம் பெயர்ந்தவர்களால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'காதல் கடிதம்', 'திரிசூல', 'யுக கினிமத்த', 'திகவி' ஆகிய சிங்களத் திரைப்படங்களில் நடித்தவர்.

நடராஜசிவம் சுகவீனமுற்ற நிலையில் 2020 ஜூன் 24 புதனிரவு கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் தனது 74வது அகவையில் காலமானார்.

இவரது மனைவி புவனலோஜினி 2022 மே 3 இல் அவரது சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் காலமானார்.



**ஆக்கம்:எஸ். கணேசன்**
**ஆச்சாரி சதீஷ் கம்பளை**



மட்டு அம்பாறை வீரமுனை ஸ்ரீசிந்தா யாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான நவகுண்ட கும்பாபிஷேகம் பிரதம குரு சர்வ தேச இந்துமத குருபீடாதிபதி மஹாராஜ ராஜகுரு ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. சர்வசாதக சக்கரவர்த்தி சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சார்யார், பிரசாந்தக் குருக்கள் உட்பட சிவாச்சார்யார்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.